வெளியீடு 23-8-2000

Issued 23-8-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, நவம்பர் 19, 1999 - தொகுதி 85 - எண் 1

Friday the 19th November, 1999 - Volume 85 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 2.00]

V2 4, 3 N 99
N99. 85-1.
2,21,204

**19-11-1999**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | xi-xiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* **அறிவிப்புகள்--** | |
| (அ) தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுத்துக்கொள்ள பேரவையை ஒத்திவைத்தல் | 1 |
| (ஆ) பேரவை அலுவல் | 412 |
| *2.* **வினாக்கள்-விடைகள்--** | 2-345 |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-52 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 9 வரை) | 52-345 |
| *3.* **தகவல் கோரல்--** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 346 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. சிறப்புக் கவன ஈர்ப்பு-- | 347-384 |
| (அ) திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலையத்தின் மீது நடைபெற்ற தாக்குதல் | |
| திரு. க. மணிவர்மா | 347-351,352 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 352-355 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 355-359,360 |
| திரு. ஜி.கே. மணி | 360-361 |
| *திரு. ஏ.வி.ஏ. நாசர் | 361-362 |
| *திரு. லா. சந்தானம் | 362-363 |
| திரு. டி. மணி | 364-366 |
| திரு. சி. வேலாயுதன் | 366-367 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 367-369 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 369-371 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 360,371-384 |
| (ஆ) பணி நீக்கம் செய்யப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே அளித்த உறுதிமொழி அடிப்படையில் பணி நியமனம் கோரி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் உண்ணாவிரதம் | 384-386 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 385 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 385-386 |
| 5. அறிக்கைகள் அளித்தல்-- | |
| மனுக்கள் குழு | 386 |


2,21,2014

[redacted]




| | பக்கங்கள் |
|---|---|
| அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-- | 386-389 |
| (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 386-387 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 387-388 |
| (இ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 388 |
| (ஈ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 | 389 |
| 7. மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1999-2000 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1998-99 அளித்தலும், அவற்றின் மீது விவாதமும்--தொடர்ச்சி | 390-411 |
| திரு. சி. ஞானசேகரன் | 390-391, 392-393, 395,396,397-400,401-403 |
| *மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 392,397,398, 400,401 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 393,394,396 |
| திரு. ஏ. ராசேந்திரன் | 395,403-406 |
| திரு. இரா. விசுவநாதன் | 406-411 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 412-414 |




V 21,31'N 99
N99.851

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.*

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
*தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**
*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.*

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
*நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி :**<br>*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.* |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**<br>*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.* |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**<br>*கால்நடை பராமரிப்பு.* |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**<br>*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.* |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**<br>*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.* |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**<br>*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.* |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**<br>*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.* |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**<br>*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.* |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**<br>Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan :**<br>Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**<br>Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**<br>Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko.Si. Mani :**<br>Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water-Supply. |

6. **Minister for Agriculture** - **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** - **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** - **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** - **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** - **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** - **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** - **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** - **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** - **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** - **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** - **The Hon. Thiru M. R. K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** - **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** - **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** - **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| **20. Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. [illegible]. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ. , பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல் | - சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | - தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்., | - தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ., | - தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | - சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி சி. கஸ்தூரி, பி.ஏ., பிஜி.எல். | - சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | - அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | - மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | - கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | - தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | - சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. வ. | - செய்யார் |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 14. | ஆசையன், திரு. பெ. | - ஆண்டிப்பட்டி |
| 15. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - பவானிசாகர் |
| 16. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | - வில்லிவாக்கம் |
| 17. | ஆலடி அருணா, திரு. | - ஆலங்குளம் |
| 18. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 19. | ஆறுமுகம், திரு. தி.ப. | - திருச்செங்கோடு |
| 20. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |

21. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
22. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
23. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
24. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
25. இராசன், திரு. வி. பி. - ராஜபாளையம் (செ.வ.)
26. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. - ஆண்டிமடம்
27. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
28. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
29. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
31. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
32. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
33. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
34. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். - பள்ளிப்பட்டு
35. இராமஜெயம், திரு. ந.பூ. - மயிலாப்பூர்
36. இராஜ ரெட்டி, திரு. ச. - தளி
37. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
38. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)
39. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
40. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
41. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
42. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
43. கணேசன், திரு. கே. சி. - ஜெயங்கொண்டம்
44. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
45. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
46. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
47. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
48. கன்னையன், திரு. க. - தொட்டியம்
49. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
50. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
51. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
52. கிருஷ்ணன், திரு. எஸ். வி. - நாங்குநேரி
53. கிருஷ்ணன், திரு. சீ. வெ. - வேடசந்தூர்
54. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
55. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
56. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
57. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
58. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
59. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
60. கோபால், திரு. பா. - மேட்டூர்
61. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
62. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
63. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
64. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
65. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்

66. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
67. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
68. சண்முகம், திரு. ம. - திணத்துக்கடவு
69. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
70. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
71. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
72. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
73. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
74. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
75. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
76. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
77. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
78. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
79. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
80. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
81. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
84. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
85. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
86. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
87. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்



88. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
89. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
90. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
91. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
92. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
93. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
94. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
95. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
96. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
97. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
98. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
99. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
100. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
101. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
102. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
103. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)
104. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
105. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
106. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
107. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
108. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
109. சொக்கலிங்கம், திரு. ஜி. - திருப்போரூர் (செ.வ.)

110. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்
111. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
112. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
113. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
114. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
115. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
116. தங்கவேல், திரு. அ. ல. - சேலம்-2
117. தண்டபாணி, திரு. சி. டி. - கோயம்புத்தூர் மேற்கு
118. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
119. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
120. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
121. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
122. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
123. தனபால், திரு. வி. ஜி. - குடியாத்தம்
124. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
125. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
126. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
127. திருவேங்கடம், திரு. பெ. சு. - கலசப்பாக்கம்
128. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
129. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
132. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
133. நடராசன், திரு. ஆ. - பேரூர்



134. நடராஜன், திரு. த. - செஞ்சி
135. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
136. நன்னன், திரு. கொ. வீ. - செங்கம் (செ.வ.)
137. நாகரத்தினம், திரு.ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
138. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
139. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
140. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
141. நேரு, திரு. கா.நா. - லால்குடி
142. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
143. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
144. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
146. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
147. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
148. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
149. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
150. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
151. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
152. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
153. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
154. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
155. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
156. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)

157. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
158. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
159. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
160. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
161. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
162. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
163. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
164. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
167. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
168. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
169. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
170. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
171. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
172. மணி, திரு. டி. - விளவங்கோடு
173. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
174. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
175. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
176. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
177. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
178. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)



179. மனோகரன், திரு. கு. - தருமபுரி
180. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
181. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
182. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
183. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். - அரவக்குறிச்சி
184. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
185. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
186. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
187. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
188. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
189. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
191. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
192. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
193. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
194. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
195. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
196. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
197. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
198. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
199. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
200. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
201. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 202. ராமசாமி, திரு. ஏ.எம். | - | ஆத்தூர் |
| 203. ராமச்சந்திரன், திரு. செ. | - | திருப்பரங்குன்றம் |
| 204. ராஜு, திரு. எஸ். | - | பொள்ளாச்சி |
| 205. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | - | சத்தியமங்கலம் |
| 206. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | - | காங்கேயம் |
| 207. லட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 208. வல்லரசு, திரு. பி. என். | - | உசிலம்பட்டி |
| 209. வாசுகி முருகேசன், திருமதி | - | கரூர் |
| 210. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 211. விஜயகுமார், திரு. கே.எம். | - | சாத்தூர் |
| 212. விஜயன், திரு. டி.சி. | - | திருவொற்றியூர் |
| 213. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - | வீரபாண்டி |
| 214. வீரப்பன், திரு. கே.கே. | - | கபிலர்மலை |
| 215. வெங்கடசாமி, திரு. பி. | - | ஓசூர் |
| 216. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 217. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | - | பாலக்கோடு |
| 218. வெங்கடேசன், திரு. ச.க. | - | மதுராந்தகம் |
| 219. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | - | காவேரிப்பட்டினம் |
| 220. வெங்கிடு, திரு. ஜி. பி. | - | கோபிச்செட்டிப் பாளையம் |
| 221. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | - | அரூர் (செ.வ.) |
| 222. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 223. வேலாயுதன், திரு. சி. | - | பத்மநாபபுரம் |



| | | |
|---|---|---|
| 224. வேலுசாமி, திரு. வ. | - | மதுரை கிழக்கு |
| 225. வேல்சாமி, திரு. க. | - | நாமக்கல் (செ.வ.) |
| 226. வேல்துரை, திரு. பா. | - | சேரன்மகாதேவி |
| 227. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 228. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | - | திருச்செந்தூர் |
| 229. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | - | முசிறி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 232. வெற்றிடம் | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 233. வெற்றிடம் | - | அறந்தாங்கி |
| 234. வெற்றிடம் | - | நெல்லிக்குப்பம் |
| 235. ஆன் 'டி' மான்டி, திருமதி | - | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**கார்த்திகை 3, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 நவம்பர் 19, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. பரிதி இளம்வழுதி** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்."*

*ஆராய்ந்து பார்க்காமல் ஒருவரைத் துணையாகத் தேர்வு செய்து அமர்த்திக் கொண்டால் அவரால் வருங்காலத் தலைமுறையினருக்கும் நீங்காத துன்பம் விளையும்.*

### 1. அறிவிப்புகள்

### (அ) தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுத்துக்கொள்ள பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று, 19-11-1999 காலை 11-00 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலக பிரதான கட்டடத்திற்கு மேற்கேயுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியைச் செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெறும். பேரவை மீண்டும் 11-15 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. வினாக்கள் -விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

1—

### புதிய பாடத் திட்டங்கள்

***23519—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் புதிய பாடத் திட்டங்கள் தொடங்கிட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) புதிய பாடத் திட்டங்கள் இவ்வாண்டு தொடங்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதி நிலை காரணமாக, தொடங்கிட வாய்ப்பு இல்லாமல் உள்ளது.

(இ) 1999-2000 ஆண்டு பகுதி இரண்டாம் திட்டத்திலும் இதற்கென்று நிதி ஒதுக்கீடு இன்மையால் புதிய பாடங்கள் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. குழந்தை தமிழரசன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அறிவுக் கண்ணைத் திறந்தார் தந்தை பெரியார் அவர்கள். இன்று அறிவியலின் முன்னேற்றத்திற்கு மிக அடிப்படையாக





இருக்கின்ற Computer கண்ணை தமிழகத்திலே இருக்கின்ற கல்விக் கூடங்களிலே நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து தமிழக மாணவர்களுடைய ஏக்கத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். அதற்குப் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் அடுத்த நூற்றாண்டுக்கு, உலகக் கல்வித் தரத்திற்கு ஏற்ப தமிழக மாணவர்களைத் தயார் செய்கின்ற விதத்திலே விருத்தாசலம் அரசுக் கலைக் கல்லூரியில் B.Sc. Chemistry, அந்தப் பகுதியிலே தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினால் Industrial Chemistry படிப்பு Master of Computer Applications என்று சொல்லக்கூடிய படிப்பு ஆகியவற்றை நிதிநிலை காரணமாக திறப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், நிதிநிலை இடம் கொடுக்கின்ற நேரத்திலே முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் அடிப்படையாகவுள்ள இன்றியமையாத பணிகளை நிறைவேற்றுவதில் மிகத் தீவிரமாகச் செயல்பட வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக, தொடக்கக் கல்வி முதலாக மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் முடிய கல்வியைப் பரவலாகக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு அவசியத்தால் நாம் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கிற அடிப்படையில் அதற்கான நிதி மிக அதிகமாகச் செலவழிக்கப்பட வேண்டிய நிலை இப்போது அவசியமாக இருக்கிறது. அதேபோல, கணிப்பொறிக் கல்வியினுடைய இன்றியமையாத தேவையை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 112 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஏறத்தாழ 100-க்கு 55 பள்ளிகளில் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுவிட்டது. மீதியுள்ள பள்ளிகளில் வருமாண்டில் தொடங்கப்படும். கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில், கல்லூரிக் கல்வியில் புதிய, புதிய பாடத் திட்டங்கள் எது வேண்டுமானாலும் கேட்கப்படக்கூடிய வாய்ப்புண்டு. ஆனால் புதிது புதிதாக ஆசிரியர்கள் நியமனம் என்பது மிகப் பெரிய நிதிச் சுமையாக இருக்கின்ற காரணத்தினால் அந்தந்தக் கல்லூரிகளில் ஏற்கெனவே உள்ள ஆசிரியர்களைக்கொண்டோ அல்லது அந்தத் துறையிலே வேறு இடத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வேலை குறைவாக இருக்குமானால் அவர்களை அங்கே மாற்றியமைப்பதன் மூலமாகவோ புதிய ஆசிரியர் நியமனம் உடனடித் தேவை என்ற ஒரு நிலைமை இல்லாமல் தொடங்கக்கூடிய வகுப்புகளைப் பற்றித்தான் அரசு அவ்வப்போது கருதி வருகிறது. அதையும் கடந்து அவசியம் என்று

[1999 நவம்பர் 19

கருதுகிற இடத்தில் சுயநிதி அடிப்படையில் அந்த வகுப்புகளை நடத்த முன்வருவார்களேயானால், கல்லூரி முதல்வர்கள் அதற்கு ஏற்பு அளித்து, அவ்வாறு அந்தக் கல்லூரியில் நடத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிப்பார்களேயானால், அதை அரசு கருதுகிறது. ஆனால், பல்கலைக் கழகம் அந்த முறையை ஏற்றுக் கொள்ளவில்லை.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண மக்களுக்கும் கல்விக் கண்ணைத் திறந்தவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். தற்போது புதிய, புதிய பாடங்கள் உருவாகி இருப்பதால், தனியார் கல்லூரிகளில் பல்லாயிரக்கணக்கில் ரூபாய் கொடுத்து B.Sc. (Computer), M.C.A. போன்ற உயர் படிப்புகள் படிப்பதற்கு சாதாரண மக்களால் முடியவில்லை. ஆகவே, அந்த வாய்ப்பை அரசுக் கல்லூரிகளிலும், அரசு பள்ளிகளிலும்தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிவதோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் Computer வகுப்புகள் தொடங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தார்கள். 666 மேல்நிலைப் பள்ளிகளில்தான் அந்த Computer வகுப்புகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன; மீதியுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் அவை எப்போது தொடங்கப்படும் என்பதையும் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண மக்களும் உயர் கல்வி பெறுவது என்பது இந்தக் காலத்தில் ஒரு நடைமுறையாக ஆகிவருகிறது என்பதும், சாதாரண மக்களுக்குக்கூட, நடுத்தர மக்களுக்குக்கூட வருமானம் அதிகமாகி, வீண் செலவிலே ஈடுபடக்கூடிய அளவிற்கு இப்போது தயாராகி விட்டார்கள் என்பதும் திரு. அப்பாவு அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அளவு சாதாரணமாக மக்களிடத்திலே பழகுவதற்கு வசதிகள் தேவைப்பட்டதோ, அதைப்போல, இப்போது இரு மடங்கு, மூன்று மடங்கு அல்ல (குறுக்கீடு) பத்து மடங்கு வசதிகள் தேவைப்படுகிற நிலைமையை அவரே அறிவார். எனவே, நிலைமைகள் மாறி வருகின்றன.



1999 நவம்பர் 19]

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே priority தரப்பட வேண்டியது தொடக்கக் கல்வி. அதிலே நாம் அதிகக் கவனம் செலுத்தி கடந்த இரண்டு ஆண்டுகளில் 700 பள்ளிக்கூடங்களும், கடந்த 3½ ஆண்டுகளில் ஏறத்தாழ 850 பள்ளிக்கூடங்களும் தொடக்கக் கல்விக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கல்லூரிக் கல்வியில், நம்முடைய அரசுக் கல்லூரிகளில் படிக்க வேண்டியவர்கள் என்று நாம் கருதுகிறவர்கள்கூட, தனியார் நடத்தும் கல்லூரிகளிலே படிப்பதிலே அதிக அக்கறை காட்டுகிறார்கள்; செலவு ஆனாலும்கூட, அவர்கள் விரும்புகிற வகுப்போ, கல்வியோ கிடைக்கிறது என்ற நோக்கத்தில் அங்கே சேர விரும்புகிறார்கள். அரசுக் கல்லூரியிலே தொடங்க வேண்டுமானால், முதல் வாய்ப்பில் B.Com. வகுப்பு எல்லா இடங்களிலும் ஏற்படுத்தி, அதற்குப் பின்னர் M.Com. வகுப்பு ஏற்படுத்தி, அதற்குப் பின்னர் M.B.A. வகுப்பு ஏற்படுத்தி, அதற்குப் பின்னர் M.C.A. பற்றிக் கருத வேண்டும். ஆனால், வெளியிலே பேசப்படுகிற பேச்சை வைத்து, எடுத்தவுடனே M.C.A. வேண்டுமென்று கேட்டால் அதை வழங்குவது முறையல்ல; ஒரு சார்பு, சூழ்நிலை எல்லாம் இருக்கிற கல்லூரியிலேதான் வழங்க முடியும். இன்னும் சொல்லப்போனால், தனியாக M.C.A. மட்டும் தொடங்குவதற்கு யாருக்கும் அனுமதி கொடுப்பதில்லை; அதாவது தனிப்பட்ட முறையில் அந்தக் கல்வி நிலையம் செம்மையாக இயங்க முடியாது என்பது உயர் கல்வி ஆய்வு மன்றத்தினுடைய கருத்து. ஆகவே, இந்த தொடர் அடிப்படையில் B.Com. வகுப்பு தொடங்குவதற்கும், அதற்கு பின்னர் M.Com. வகுப்பு தொடங்குவதற்கும், அல்லது M.B.A. வகுப்பு தொடங்குவதற்கும் படிப்படியாக ஆண்டுதோறும் முயற்சி செய்யப்படும். எல்லா இடங்களிலேயும், எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

மற்றொன்று, இந்த ஆண்டு கணிப்பொறி 650 பள்ளிக்கூடங்களுக்கு வழங்க tender கேட்கப்பட்டது; ஏனென்றால், அரசே இவற்றையெல்லாம் செய்கிறபோது, கணிப்பொறி வாங்கி வழங்குவது, அதற்கு ஏற்பாடு செய்வது, அதிலே பழுது வந்தால் சரி செய்வது என்பதில் குறை ஏற்படும். இடையிலே ஒரு வழக்கு வந்த காரணத்தினாலேயும் சற்று கால தாமதமாகியது; கணிப்பொறியை அரசே வாங்கி வைப்பது என்றால் ஐந்தாண்டுகள் கழித்து அந்தக் கணிப்பொறி out-dated, அதாவது பழையதாக ஆகிறபோது, அவற்றை உடனுக்குடன் மாற்றுவதையெல்லாம் அவ்வளவு சீராகச் செய்வது என்பது அரசு

இயந்திரத்திற்குக் கடினம். ஆகவே, இதை ஒப்பந்த முறையில் எந்தெந்தப் பெரிய கணினி நிறுவனங்கள் ஏற்பாடு செய்ய முன்வருகின்றனவோ, அவர்களுக்கு வழங்குவதாக அறிவித்து, பள்ளிகளுடைய மொத்தப் பட்டியல் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் ஏற்றுக்கொள்கிற பட்டியல் கேட்கப்பட்டபோது 650 அல்லது 660 பள்ளிகளுக்குத்தான் அவர்கள் ஏற்பு அளித்தார்கள். அந்த tender finalise ஆவதற்கே ஏறத்தாழ இரண்டு மாதங்கள் ஆயின. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வழங்கிய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து ஒரு பங்கு, அந்தந்தத் தொகுதியிலே 3 பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடம் கட்ட வழங்கப்பட்டு, அவையும் கட்டப்பட்டு இருக்கின்றன. மிச்சம் இருக்கிற பள்ளிகளுக்கு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் tender கேட்பது முறையாகாது. ஏனென்றால், அப்புறம் ஜனவரியில்தான் வரும்; அது ஒரு ஆண்டுக்கணக்கில் வராது. ஆகவே, வருகிற ஆண்டுக்கு மறுபடியும் tender கேட்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, மிச்சம் இருக்கிற அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலேயும் கணிப்பொறி வகுப்புகள் தொடங்குவதற்கு அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

முற்பகல் 9-40

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கலைக் கல்லூரிகளில் புதிய பாடத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கு இதுவரையிலே போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று அறிகிறேன். அதேபோல, செங்கற்பட்டு கலைக் கல்லூரியில் இன்னும் 7 ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்ற ஒரு தகவல் இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்தக் குறை நிவர்த்தி செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து அவர்களுடைய பட்டியல் பெறப்பட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத்தான் நியமிக்கப்படுகிறார்கள். ஆசிரியர் தேர்வு வாரியம் எவ்வளவு சீக்கிரமாகச் செய்வதாக இருந்தாலும்கூட, இந்த விண்ணப்பங்களைப் பெறுவதற்கு முன்னர் கல்லூரியைப் பொறுத்தவரையில் அவர்கள், qualification test எழுத வேண்டியிருக்கிறது. தகுதிச் சான்று பெறுவதற்கான பல்கலைக்



கழகத் தேர்வு ஒன்று மறுபடியும் எழுத வேண்டியிருக்கின்றது; U.G.C.-யினுடைய கட்டளையின்படி. அந்தத் தேர்வு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு, அந்தத் தேர்வு எழுதியவர்களுக்கு இந்தத் தேர்வு நடத்தப்படுகிறது. அந்தத் தேர்வு இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதாக நான் நினைவிலேயிருந்து சொல்கிறேன். அந்தத் தேர்வு முடிந்தவுடனே அந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். கல்லூரிகளிலே பாடம் நடத்துவதற்குப் போதுமான அளவில் ஆசிரியர்கள் இல்லாத குறையைப் போக்குவதற்காக சில ஆண்டுகளாகவே Guest Lecturer என்ற முறையில் ஆசிரியர்களை, ஆங்காங்கே அவர்களுடைய விண்ணப்பங்களைப் பெற்று தற்காலிகமாக நியமித்துக்கொள்ள அனுமதித்திருக்கிறோம். 'ஏன் விதி 10(a) (1)-ன் கீழ் ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது', என்று யாராவது கேட்பார்களேயானால், விதி 10(a) (1)-ன் கீழ் ஆசிரியர்களை நியமிக்கும் முறையை அரசாங்கம் கைவிட்டுவிட்டது. ஏனென்றால் தற்காலிகமாக அவர்கள் நியமிக்கப்பட்டு அதன் மூலமாகவே அவர்கள் நிரந்தர வேலைக்கு வந்துவிடுகிறார்கள். அது சமூகநீதி அடிப்படையிலே பலருக்கும் கிடைக்கிற வேலை வாய்ப்பைத் தடுக்கிறது என்ற காரணத்தால் அந்த முறை கைவிடப்பட்டது. எனவே, Guest Lecturer என்ற முறையில், ஏறத்தாழ 400, 450 ஆசிரியர்கள் ஆங்காங்கேயுள்ள கல்லூரிகளில் எந்தெந்தப் பாடங்களுக்குத் தேவையோ அந்தந்தப் பாடங்களுக்கான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்திருந்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த முறை கடந்த 2 மாதங்களாக செயல்பட்டு, தொடர்ந்து அவர்களும் பணியாற்றுகிற ஒரு நிலைமையும் இருக்கிறது. குறைகளைப் போக்க அரசு தொடர்ந்து முயற்சிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே புதிதாக ஆசிரியர்களை நியமிக்க இயலாத நிலை, நிதிநெருக்கடி என்ற காரணத்தால், இருக்கிறது என்பதால், தனியார் கல்லூரிகளிலே சுயநிதி அடிப்படையிலே புதிய வகுப்புகள் தொடங்கப்படுகின்றன என்ற யதார்த்த நிலையை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம். இருந்தாலும், இதனால் வசதியில்லாத ஏழ்மை நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி, சிறப்புப் பாடங்களில் பயில முடியாத ஒரு நிலை இருக்கிறது. இதை மாற்றுவதற்குக் கண்டிப்பாக ஒரு முயற்சி எடுக்க வேண்டும். அரசுக் கல்லூரிகளிலே இதுபோன்ற

[1999 நவம்பர் 19

பாடத் திட்டங்களை ஆரம்பித்து, ஆசிரியர் சம்பளப் பளுவை ஏதாவது தொழில் நிறுவனங்கள் தாங்கிக் கொள்ள முன்வருமேயானால், இந்தப் பாடத் திட்டங்களை அரசுக் கல்லூரிகளில் ஆரம்பிக்கலாம். இதைக் கண்டிப்பாக ஆரம்பிக்க வேண்டும். ஆகவே, இதுபோன்ற முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மேற்கொள்வார்களேயானால், சிவகாசியிலிருந்து தொழில் நிறுவனங்கள் மூலமாக ஏதாவது ஒன்றிரண்டு கல்லூரிகளின் சம்பளச் செலவை ஏற்றுக்கொள்ள நான் முயற்சி செய்து பார்க்கின்றேன். முதலமைச்சர் நினைத்தால் கண்டிப்பாக 20 கல்லூரிகளிலாவது இதுமாதிரியான புதுத் திட்டத்தினைத் தொடங்க முடியும். அவர் கேட்டால் பல தொழில் நிறுவனங்கள் சம்பளப் பணத்தைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால் தர்மத்திலேயே பெரிய தர்மம் கல்வி தர்மம்தான். அதைச் செய்யத் தயாராக இருக்கின்றார்கள். அதை முறைப்படி செய்ய வேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். ஆகவே, இதுபோன்ற முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் மேற்கொள்ள முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொக்கர் அவர்களுக்கு எப்போதும் உயர்ந்த நோக்கம்தான். எனவே, அந்த உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் கல்வியினுடைய அவசியத்தைக் கூறி, அதற்காகத் தனியார் உதவி செய்ய முன்வருவார்களேயானால் தொடங்கக் கூடாதா எனவும் கேட்டார். இப்போதேகூடக் கல்லூரிகளிலே, சுயநிதி அடிப்படையில் தொடங்குவதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். சுயநிதி என்றால் அந்த வகுப்பை நடத்துவதற்கு என்ன செலவாகுமோ அதனை அந்த மாணவர்களோ, அவர்கள் பெற்றோர்களோ ஏற்றுக் கொள்வதை அல்லது ஒரு கட்டணம் செலுத்திப் படிக்கிற முறையை, சில சிறப்பு வகுப்புகளுக்கு நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பல்கலைக் கழகங்களின் கருத்தின்படி அரசுக் கல்லூரிகளில் இப்படித் தனிப்பட்ட முறையிலான நிதியைக் கொண்டு வகுப்பு நடத்துவது முறையல்ல என்ற ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே, சொக்கர் அவர்கள் சொல்வதைப்போல, தனியார் எவரும் Endowment ஏற்படுத்தி அந்த interest-ஐக் கொண்டு அதை நடத்தும் வகையில் அதாவது அதற்கு என்ன செலவு ஆகுமோ, அதற்கு ஏற்ப ஒரு Endowment வைத்துவிடுவார்களேயானால், புதிய



1999 நவம்பர் 19]

பாடத் துறைகள் தொடங்கலாம்—ஒருவேளை, ஓர் ஆண்டிற்கு செலவிற்காகக் கொடுப்பது என்றால் 3 இலட்சம் கொடுத்தால் போதும்—Endowment வைப்பதாக இருந்தால் 30 இலட்சமோ, 25 இலட்சமோ ஒதுக்கி வைக்க வேண்டும். அப்படிப்பட்ட தொகையை Endowment வைக்க முன்வருவார்களேயானால், அதை நிச்சயமாக, எந்தக் கல்லூரிக்கு என்று அவர்கள் பெயரில் வழங்குகிறார்களோ அந்த Endowment-ஐ ஏற்றுக் கொள்ள அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

முற்பகல் 9-45

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின் அடிப்படையில், தற்போது விருத்தாசலம் அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியில் B.Sc. Computer வகுப்பு தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. எனவே M.C.A. படிப்புத் தொடங்குகின்றபோது, புதிய ஆசிரியர்களை நியமிக்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே எழ வாய்ப்பு இல்லை. எனவே, அந்த அடிப்படையில் M.C.A. படிப்பு அங்கே தொடங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா, வரும் ஆண்டில் தொடங்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, M.C.A. படிப்பை நாம் விரும்புகிற கல்லூரிகளிலேயெல்லாம் தொடங்குவதை உயர் கல்வி ஆய்வு மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். தொடர்ச்சியான வேறுபல படிப்புப் பின்னணி இருக்கிற இடத்திலேதான் M.C.A. படிப்புப் படிப்பது சிறப்பாக இருக்கும் என்று ஒரு கருத்து உள்ளது. அப்படி நம்முடைய கல்லூரிகளிலே தொடங்க வேண்டுமானால், நிச்சயமாக அதுபற்றி உயர் கல்வி ஆய்வு மன்றத்தினுடைய கருத்தைக் கேட்டுப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 2, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1999 நவம்பர் 19

2—

### விஞ்ஞானக் காட்சியகம்

***25683—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் விஞ்ஞானக் காட்சியகம் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையில் கிண்டி, காந்தி மண்டபம் சாலையில் பி.எம். பிர்லா கோளரங்கத்தை உள்ளடக்கிய ஓர் அறிவியல் காட்சியகம் "பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம்" என்ற பெயரில் கடந்த 12 ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விஞ்ஞானக் காட்சியகத்திலே, விவசாயத் துறையிலே என்னென்ன முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதையெல்லாம் சிறப்பாக, சாதாரண விவசாயிகளும் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு சில விவசாய நுணுக்கங்கள் இந்த ஆராய்ச்சி மையத்திலே இருக்கின்றனவாயென்பதையும் இல்லையெனில், அதற்காக என்ன முயற்சி எடுத்துக்கொள்வீர்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். குறிப்பாக, நாங்கள் கோவை விவசாயக் கல்லூரிக்குச் சென்றிருந்தபோது, எங்களுக்குத் தெரிய வந்ததைச் சொல்கிறேன். அங்கே நிலக்கடலை குறித்து, கடந்த 10 ஆண்டுகளாக அங்குள்ள ஆராய்ச்சி மையத்தில் எதுவும் செய்யப்படவில்லை. பழைய காலத்தில் இருந்ததையே போட்டு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால், நல்ல yield கிடைப்பதில்லை. அதனால், விவசாயிகளுக்கு இந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படி முன்னேற்றம் அடைவதற்கான புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்து, எப்படியெப்படிச் செய்ய வேண்டும் என்பதெல்லாம் இந்தக் காட்சியகத்தில் சாதாரணமாக மனதில் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 நவம்பர் 19]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விஞ்ஞானக் காட்சியகம் என்பது—வேளாண்மையே விஞ்ஞான வழியிலே வளர்க்கப் பட்டாலும்கூட—அந்தவொரு துறை தவிர, பல்வேறு துறைகளைச் சார்ந்தது. மின்னணுவியல், பொறியியல் துறை, கட்டடவியல், புதிய புதிய விமான உதிரி பாகங்கள் செய்கின்ற முறை, இப்படிப் பல்வேறு துறைகளைப் பற்றி அரசு ஒத்துழைப்புடன் அந்தத் துறைகளுடைய ஒத்துழைப்போடு இந்தக் காட்சியகம் நடைபெறுகிறது. இதிலே மையமாக இருப்பது கோளரங்கம். வானியலைப் பற்றிய அறிவு மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைக்கக்கூடிய அளவிற்கு கோளரங்கம் நடைபெற்று, ஒரு நாளைக்கு இரண்டு காட்சி, மூன்று காட்சி என்று அந்தக் கோளரங்கக் காட்சி சாதாரணமாக நாம் ஒரு புத்தகத்தைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாத அடிப்படையான அண்டத்தைப் பற்றிய விரிவான செய்திகளை, யாரும் எளிதாக உணர்ந்துகொள்ளக்கூடிய அளவிற்கு சென்னையிலே பல ஆண்டுகளாக சிறப்பாக நடைபெறுகிறது. அண்மையிலே, ஆறு திங்களுக்குள்ளாக திருச்சியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, அங்கேயும் கோளரங்கம் இப்போது செயல்படத் தொடங்கியிருக்கிறது. அதையொட்டியும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள், அறிவியல் செய்திகளைக் குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரையில் புரிந்துகொள்ளும்படி, 7,8 கூடங்கள், சென்னையில் இருப்பதைபோல அங்கேயும் அமைப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. கோவையிலேயும் அமைப்பதற்கு நிலம் தரப்பட்டிருக்கிறது. மாநகராட்சி மன்றம் நன்கொடையாகவே, விலை இல்லாமலே வழங்கியிருக்கிறது. அப்படி வழங்கி இருக்கிற அந்த நிலத்தில், கோவையின், மையப் பகுதியில் கோளரங்கம் வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதற்கு இரண்டு, மூன்று, ஆண்டுகாலம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பயிலக அனுமதியிலே சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ஒற்றைச் சாளர முறை பின்பற்றியதன் மூலமாக போதிய...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது விஞ்ஞானக் காட்சியகம் அமைப்பது தொடர்பான கேள்வி. உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.

[1999 நவம்பர் 19

முற்பகல் 9-50

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவியல் உண்மைகள் ஒரு திசையிலே இருந்தாலும் மனிதனுடைய வாழ்க்கைப் பயணம் அதற்கு நேரெதிரான திசையில் அமைந்துவிடுகிறது. இவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக இதுவரையிலும் கண்டறியப்பட்டிருக்கிற அறிவியல் உண்மைகளை மக்களுக்குக் கொண்டு செல்வதில் அரசு வெற்றி பெற்றால்தான் மக்களை அறிவியல் ரீதியாக வழிநடத்த இயலும் என்பதால், எப்படிக் கத்தியைக் கூர் தீட்டுகின்ற சாணைக் கற்கள் உரியபடி கத்தியைக் கூர் தீட்டுகின்றனவோ அதுபோல மனிதர்களின் புத்தியைக் கூர் தீட்டுகின்ற சாணைக் கற்களாக இந்த விஞ்ஞானக் காட்சியகம் அமைய வேண்டுமென்பதால் எல்லா மாவட்டங்களிலேயும் இந்த அறிவியல் காட்சியகங்களைக் கொண்டு வர அரசு சிந்திக்க வேண்டும். ஏனென்றால் தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் தினசரி கோளரங்கத்தைப் பற்றியெல்லாம் வருவதாக நம்முடைய மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் கோளரங்கங்களைப் பற்றிய அறிவியல் உண்மைகள் இருந்தாலும் கூட சனிப் பெயர்ச்சியைப் பற்றியும், குருப் பெயர்ச்சியைப் பற்றியும்தான் இப்போது அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. இந்த நிர்மூடத்தனத்தையே பலமான ஆதாரமாக, பின்பலமாக, நிலைக்களனாகக் கொண்டு சில தீய சக்திகள் வளர்ந்துவிடுவதால் அவற்றின் பிடியிலேயிருந்து மக்களை விடுவிப்பதற்காக மாவட்டந்தோறும் அறிவியல் கண்காட்சியகங்களைக் கொண்டு வருவதற்கு மாநில அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் எப்பொழுதும் பாரதூரமான கேள்விகளைத்தான் கேட்பார்; இரண்டு எல்லைகளுக்குந்தான் போய் வருவார்கள். ஒன்று மக்களுடைய அறிவைத் தீட்டுவது. தீட்டுகிறவர்களுடைய அறிவை இன்னும் எங்களால் தீட்ட முடியவில்லை. எல்லா ஆசிரியர்களுமேகூட இந்தத் தெளிவான சிந்தனையோடு மாணவர்களுக்கு வகுப்பு நடத்தவில்லை. மக்களிடத்திலே போய்ச் சேர வேண்டிய செய்திகள், முன்னுரிமை பெற்ற செய்திகள் அவர்களுடைய அன்றாடத் தேவைகள், அன்றாடப் பிரச்சினைகள், அன்றாட அரசியல் இன்னும் சொல்லப்போனால் குழப்பவாதிகளால்



1999 நவம்பர் 19]

உருவாகின்ற அரசியல் இவற்றில் தெளிவடைவதுதான் மக்களுடைய முதல் வேலையாக இருக்கிறது. மக்களிடத்திலே போய்ச் சேரும் வெவ்வேறு செய்திகள் காரணமாக, தினந்தோறும், தொலைக்காட்சியிலோ, பத்திரிகையிலோ வருகிற முதன்மை பெறுகின்ற செய்திகளுடைய அளவை வைத்து நீங்கள் பார்ப்பீர்களேயானால் அறிவியல் செய்திகளுக்கு அதிக இடம் இல்லை. வேளாண்மைத் துறை செய்திகள்கூட வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ ஒரு 5 நிமிடம், 10 நிமிடம் கிடைத்தாலும்கூட மக்கள் அதிலே கவனம் செலுத்த முடியாத அளவுக்கு வேறு வேண்டாத, தேவையில்லாத, குழப்பத்தைத் தரக்கூடிய பல செய்திகளுக்கிடையில்தான் மக்கள் இருக்கிறார்கள். அரசியலிலே உள்ள நமக்குக்கூட சில செய்திகள் தெரியாமல் இருக்கின்ற காரணத்தினால்தான் தெளிவாக இருக்கின்றோம். ஆகவே நாட்டு மக்களுடைய மனதிலே அறிவியல் செய்திகள் சென்று சேர வேண்டும். ஆனால் அவர்களுடைய மனதிலே ஆழ்ந்து பதிந்துவிட்ட பலவகை நம்பிக்கைகளிலிருந்து அவர்கள் வெளி வருவது சற்றுக் கடினம். இருந்தாலும் தொடர் முயற்சி தேவை. சமூகத்தினுடைய மொத்த நன்மையைக் கருதி அறிவியல் அடிப்படையிலே கல்வி மேலும், மேலும் அதிக அளவுக்குப் பரவ வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவது அவர்களாகப் பார்த்துப் புரிந்துகொள்ள இப்படிப்பட்டக் கோளரங்கங்கள் பயன்படும். அடுத்து மதுரையிலேயும் மற்ற மாவட்டங்களிலேயும் அமைப்பதற்குத் தொடர் முயற்சி நடைபெற வேண்டும். இது 4,5 கோடி ரூபாய் முதலீடும் ஓர் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் செலவும் ஆகக்கூடிய ஒரு திட்டம் என்ற காரணத்தால் படிப்படியாகத்தான் செய்ய வேண்டும். இதில் திரு. சுப்பராயன் அவர்கள் கேட்டது போன்ற அதே அடிப்படையிலேதான், சமூகச் சீர்திருத்தம் என்பதே ஒரு துறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அது சமூகத்திலிருக்கின்ற சாதி வேற்றுமை, மத மாறுபாடு, வேறுவிதமான கசப்புணர்வு வளரும் நிலையைக் குறைக்கவும் மகளிர் உரிமையை வளர்க்கவும் சமூகச் சீர்திருத்தம் என்ற ஒரு துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பொறுப்பேற்றுக்கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு முயற்சி செய்தாலும் தேவையைக் கருதுகிறபோதும் அதன் அவசியத்தையும், அவசரத்தையும் கருதுகிறபோதும் இந்தப் பணிகளை அரசு மட்டுமே செய்ய முடியாது. எல்லா இயக்கங்களும், அவற்றினுடைய கொள்கை அடிப்படையில் மக்களை அணுகுகிறபோது சமுதாயச் சீர்திருத்த நோக்கத்தை

வலியுறுத்துகின்ற ஒரு நல்ல சூழ்நிலை உருவாகுமானால் அது ஓரளவிற்கு மக்களிடத்திலே போய்ச் சேரும். அறிவியல் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், மக்கள் தெளியும் வழியில் உச்சியை எட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 4.5 கோடி ரூபாய் செலவு செய்து இதுபோன்ற கோளரங்கங்களை அரசாங்கத்தால் எல்லா மாவட்டங்களிலும் உருவாக்க முடியாவிட்டாலும்கூட, சில வசதி படைத்த தனியார் நிறுவனங்களை— பிர்லா நிறுவனத்தைப் பற்றிக் கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுபோன்ற தனியார் நிறுவனங்களை— அரசு அணுகி எல்லா மாவட்டங்களிலும் நம்மிடமிருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குத் தானமாகக் கொடுத்து அந்த இடத்திலே இதுபோன்ற அரங்கங்களை உருவாக்கலாம். ஏனென்றால், ஒவ்வொரு காட்சிக்கும் அவர்கள் பணம் வசூலிக்க இருக்கிறார்கள். அதிலே அவர்கள் வசூலித்துக்கூட எடுத்துக்கொள்ளலாம். அந்த முறைப்படி, B.O.T. Scheme மூலமாவது அல்லது தனியார் துறையை அணுகியாவது இதுபோன்ற கோளரங்கங்களை எல்லா மாவட்டங்களிலும் வருகிற ஆண்டுகளில் அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால்— அதற்கான கருவிகள் அண்மைக் காலத்திலே ஜப்பானிலே புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே வந்த பழைய கருவிகளைத் தவிர, வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஓரளவிற்கு அவர்கள் இந்தியாவிற்கு, இந்த நாட்டிற்கு உதவுவதற்காக வழங்கிய கருவிகள் ஓரிடத்திலே இடம் பெற்றிருக்கின்றன. பிர்லா கோளரங்கத்திலேகூட, கட்டடம் கட்டுவதற்கு ஒன்றரை கோடி அல்லது ஒன்றே முக்கால் கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் நிதி வழங்கினார்கள். எந்த ஒரு மாவட்டத்தில், எந்த ஒரு பெரிய நிறுவனமோ அல்லது தனிப்பட்டவர்களோ, நாங்கள் கோளரங்கம் அமைக்கத் தயார் என்று சொன்னால், அரசு எல்லா வகைகளிலும் ஒத்துழைக்கும். ஏனென்றால், மூன்று அல்லது நான்கு கோடி ரூபாய் செலவாகும். பலரிடத்திலே



நன்கொடை வாங்கி, அதை அமைப்பது என்று சொன்னால், அதனுடைய முக்கியத்துவத்தைப் பலபேர் உணர்ந்து நன்கொடை வழங்குவது கடினம். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களால் தரப்படுகிற தொகுதி மேம்பாட்டு நிதிகூடப் பெருமளவுக்குப் பள்ளிக்கூடம், மருத்துவமனை போன்ற இன்றியமையாத பணிகளுக்கு, அவற்றின் கட்டடங்களுக்கு ஒதுக்கப்படுகிற சூழ்நிலையில், "கோவையிலே உள்ள கோளரங்கத்திற்குத் தேவைப்படக்கூடிய 3 கோடி ரூபாயை, நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலே இருந்து வசூலிக்கலாமா" என்று என்னைக் கேட்டபோது, "அதிலே இருந்து பெறக்கூடாது; அது பல்வேறு தொகுதிப் பணிகளுக்குச் செல்ல வேண்டியது; தனிப்பட்ட செல்வர்கள் யாரேனும்— கோவையிலே பல பெரிய முதலாளிகள் இருக்கிறார்கள்; யாரேனும் — தங்களுடைய குடும்பப் பெயரை வைக்கக்கூடிய அளவுக்கு ஒரு பெரிய நிதியைத் தருவார்களேயானால், ஏற்றுக் கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறேன். அப்படி எந்த ஒரு மாவட்டத்தில், எந்த ஒரு மையத்தில், முன்வந்தாலும், குறிப்பாக வேலூரில் நம்முடைய வழக்கறிஞர் திரு. ராஜசேகரன் அவர்கள் முன்வந்து—திரு. ஞானசேகரன் அவர்கள் முன்வந்து, ஞானமே எனக்கு விட்டுப் போகிறது. (சிரிப்பு) ஞானசேகரன் அவர்கள் முன்வந்து — அப்படி ஒரு நிதியை வழங்குகிறவர்களை அடையாளம் காட்டினால், நானும் வந்து அவர்களைப் பார்க்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 3, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**3—**

### வீட்டுமனைகள் விற்பனை

***15263—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகிலுள்ள இரயில்வேக்குச் சொந்தமான இடத்தை நகராட்சி வாங்கியிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை வீட்டுமனைகளாகப் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1999 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தை நகராட்சி வாங்கி வீட்டுமனைகளாக உட்பிரிவு செய்து, பொது மக்களுக்கு வழங்க நகராட்சியால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேசமயம், ஏறக்குறைய இரண்டாண்டு காலமாக அது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அதனை விரைந்து செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதையும், அந்த மனைகளைத் தவணை முறையில் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காலதாமதத்திற்குக் காரணம், நிதி வசதியின்மையே தவிர, வேறு எந்த நடவடிக்கையும் இதிலே குறுக்கிடவில்லை. இருந்தாலும் விரைவாக நிதியை ஒதுக்கீடு செய்து, அதற்கான நிலத்தைக் கிரயம் கொடுத்துப் பெற்று, பல வகைகளிலே பிரிவினை செய்வதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அண்மையிலேகூட, நகராட்சி மன்றத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில், துரிதப்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி இரயில்வே துறை மூலம் கையகப்படுத்தப்பட்டு, பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாத நிலங்கள் நிரம்ப உள்ளன. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே இருக்கிற குத்தாலம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் அதிகமான இடங்கள், அவர்களுக்கும் பயன்படாமல், நமக்கும் பயன்பட முடியாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். அதனைப் பெற்று, உழவர் சந்தை போன்றவற்றை



1999 நவம்பர் 19]

அமைக்கக்கூடிய வகையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூல வினா அரக்கோணத்தைப் பற்றியது. இருப்பினும், குத்தாலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கூறப்படுகிற அந்த நிலம், உழவர் சந்தைக்குப் போதுமானதாக நிச்சயம் இருக்காது. அந்த நிலத்தைப் பற்றி, அவர் சொன்னதைப்போல எனக்கும் தெரியும். அதற்கு வடக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் இரண்டு பிரிவுகளாக நிலங்கள் இருக்கின்றன. அதிலே ஒரு பிரிவான வடக்கே இருக்கும் நிலங்களில் அநேகமாக உழவர் சந்தையை வைக்கலாம் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், அதிலே சிறிது நிலம் கோயிலுக்குச் சொந்தமானதாகவும், ஒருசில சென்டுகள் இரயில்வேக்குச் சொந்தமானதாகவும் இருக்குமென்று கருதுகிறேன். ஏற்கெனவே ஒருமுறை வாரச் சந்தைக்காகக்கூட அதைக் கேட்டு, பிறகு கைவிடப்பட்டிருக்கிறது. அநேகமாக அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, அங்கே உழவர் சந்தை நடத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணப்படி, அங்கே இடம் கிடைக்குமானால்—அவர் மதுரையில் நடத்தியிருப்பதைப் பார்க்கும்போது, நிச்சயமாக இந்த இடம் மூன்றில் ஒரு பங்குகூடப் பெறாது; ஆனால், தேவையான இடம் இருக்கிறது அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சிப்பார்களேயானால், தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி எல்லைக்குள் உள்ள revenue புறம்போக்கானாலும் சரி, பொதுப் பணித் துறை புறம்போக்கானாலும் சரி, நெடுஞ்சாலைகள் துறை புறம்போக்கானாலும் சரி, ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு நிலத்தை, நகராட்சியின் வருமானத்தைப் பெருக்குவதற்காக, அந்த இடத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்; அதிலே கட்டடம் கட்ட வேண்டும்; வருமானத்தைப் பெருக்குவதற்கு taxi stand, auto stand வைக்க வேண்டும் Rickshaw stand வைக்க வேண்டும் என்று நகராட்சியில் தீர்மானம் போட்டுக் கொடுத்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்தோ, அல்லது Director of Municipality அலுவலகத்திலிருந்தோ எங்களுக்கு அனுமதி வருவதற்குக்

காலதாமதம் ஆகிறது. அதேமாதிரி, நகர எல்லைக்குள், உதாரணமாக ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் உழவர் சந்தை அமைப்பதற்கு ஓர் ஏக்கர் நிலம் அரசாங்கத்திலிருந்து கேட்கிறார்கள். revenue புறம்போக்கு இருக்கிறது. அதற்கு நாங்கள் தீர்மானம்கூடப் போட்டுக் கொடுத்து இருக்கிறோம். இன்னும் காலதாமதம் ஆகின்றது. இதனால் அரசாங்கத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குக் காலதாமதம் ஆவதைத் தடுப்பதற்கு, அரசு உடனுக்குடன் நகராட்சிப் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலங்களை, மற்ற இலாகா புறம்போக்கு நிலங்களை ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கையைத் துரிதப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக உழவர் சந்தையினுடைய நோக்கம் பற்றிச் சில மாதங்களுக்கு முன்னால்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உழவர் சந்தைக்காக அப்படிப்பட்ட நிலம் ஒப்படைப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. அப்படித் தகவல் கிடைக்குமானால், அதிலே—காலதாமதம் இருப்பதையும் தெரிவிப்பார்களானால்—உரிய நடவடிக்கையை விரைவாக நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்—இதற்கும் அந்த முறையைக் கையாள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண்.4, திரு. பால ஆனந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

4—

### பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

***26699—திரு. பால ஆனந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி நகரில் கூடுதல் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு புறம்போக்கு நிலம் ஒன்று தேர்வு செய்யப்பட்டு அதை நிலமாற்றம் செய்து பெறுவதற்கு நகராட்சியால் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்டவுடன் புதிய பேருந்து நிலையம் கட்டுவது குறித்து உரிய நடவடிக்கையை நகராட்சி மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 5, திரு. லா. சந்தானம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

5—

### கூட்டுறவுச் சங்க அலுவலகங்களுக்குக் கட்டடம்

***17642—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சங்க அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆம் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியென்றால், இந்த ஆண்டு, வேளாண்மைப் பொறியியல் சங்கங்களுக்கு எத்தனை கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றிற்கு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் தந்து உதவியுள்ளதோடு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழும் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக்

[1999 நவம்பர் 19

கழகம் மூலமாகவும் நிதி வழங்கி வருகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.2.2 இலட்சம் வீதம் நிதியுதவியுடன் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் 9 மையங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவை திருநாவலூர், கண்டமங்கலம், விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், திருக்கோவிலூர், மயிலம், கள்ளக்குறிச்சி மற்றும் சின்னசேலம். அதைப்போலவே, கடலூர் மாவட்டத்திலும் 8 மையங்கள்; மேல்புவனகிரி, விருத்தாசலம், கம்மாபுரம், மங்களூர், நெல்லிக்குப்பம், நல்லூர் போன்றவை அவை. தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி; தருமபுரி மாவட்டத்தில் தளி மற்றும் தருமபுரி ஆகிய வேளாண்மை பொறியியல் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு நிதி உதவியுடன் கட்டப்பட்டவையாகும். ஒவ்வொரு மையத்திற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டும் அரசு பரிசீலித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலம் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை வைத்து கட்டடம் கட்டுவதற்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 6, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

6—

### காய்கறிகள் சாகுபடி

***24876—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், திருவாரூர் மாவட்ட புன்செய் நிலங்களில் காய்கறிகள் சாகுபடி செய்ய சிறப்புக் கவனம் செலுத்தி விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காய்கறி சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், தரமான உயர் விளைச்சல் காய்கறி விதைகள் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. மைய அரசின் காய்கறி உற்பத்தித் திட்டத்தின்கீழ் 0.1 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்வதற்குத்



1999 நவம்பர் 19]

தேவையான வீரிய மற்றும் உயர்விளைச்சல் ரகக் காய்கறி விதைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், சாகுபடி நுட்பச் சிறு கையேடு அடங்கிய சிறுதழைகள், ஒவ்வொன்றும் ரூ.150 மதிப்பில் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளிடம் ரூ. 10 மட்டுமே அடையாளத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-05

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் புஞ்சை நிலங்களிலே காய்கறிகளைச் சாகுபடி செய்வதற்கான அரசினுடைய திட்டங்களைப் பற்றி விளக்கியிருக்கிறார்கள். அதோடு நான் கேட்டிருப்பது இந்தப் புஞ்சை நிலங்களிலே காய்கறிகளைச் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பினை தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலேயும் விஸ்தரிப்பு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? குறிப்பாக, நம்முடைய வேளாண்மை மானியக் கோரிக்கையில் மணற்பகுதிகளுக்கும் இன்னும் சில, அதிகமான புஞ்சை நிலங்களைக் கொண்டிருக்கின்ற மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக, குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதாக அறிகிறேன். இந்தப் பகுதிகள், நெல் சாகுபடி அதிகமாக இருக்கிற பகுதிகள் என்று சொன்னாலும்கூட, தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களிலேயும் பாசனம் பெறாத நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படிப் பாசனம் கிடைக்காத சூழ்நிலையிலே வேறு சில பாதிப்புகள் ஏற்படுகின்ற காரணத்தாலே, அந்தப் புஞ்சை நிலங்களிலே காய்கறிகளைச் சாகுபடி செய்வதன் மூலமாக அந்தப் பகுதியினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். காய்கறி விலை பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை காய்கறியினுடைய விலை உயர்ந்துவிடுகிறது. சமீபத்திலேகூட டீசல் விலை உயர்வு காரணமாகக்கூட விலை உயர்வுப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், அந்தந்தப் பகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வாய்ப்பாக இருக்கும் என்கின்ற காரணத்தினாலே, அந்தத் தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களிலே, புஞ்சைப் பகுதிகளிலே காய்கறிகளைச் சாகுபடி செய்வதற்கான சிறப்புத் திட்டத்தை நம்முடைய தமிழக அரசு அறிவிக்குமா, அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் 196 எக்டேரிலும், திருவாரூரில் 143 எக்டேரிலும், கூடுதலாக உயர் விளைச்சல் காய்கறி பரப்பு கொண்டு வரப்பட்டு, முறையே ரூபாய் 95,000 மற்றும் ரூபாய் 55,500 மானியம் வழங்கப்பட்டு உள்ளது. நடப்பு ஆண்டில் 1999-2000 ஆண்டிற்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போலவே, தஞ்சையில் 500 எக்டேரிலும் திருவாரூர் மாவட்டத்தில் 350 எக்டேரிலும் உயர் விளைச்சல் காய்கறி சாகுபடிப் பரப்பை அதிகரிக்க முறையே ரூபாய் 1.70 இலட்சமும், ரூபாய் 2.43 இலட்சமும் நிதிக் குறியீட்டுடன் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 125 சிறுதழைகளும்—அதன் மதிப்பு ரூபாய் 18,750— வழங்கப்பட்டிருக்கின்றன. திருவாரூர் மாவட்டத்தில் 75 சிறுதழைகளும், அதன் மதிப்பு ரூபாய் 11,250— விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, தஞ்சாவூர் மாவட்டத்திலே மொத்தம் 483 எக்டேரிலும், திருவாரூர் மாவட்டத்திலே 39 எக்டேரிலும் மொத்தம் 522 எக்டேரிலே, இந்தக் காய்கறி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்குத் தோட்டக் கலைத் துறை மூலம் மானிய விலையிலே விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசானது விவசாயிகள் பயனடைகின்ற வகையிலே காய்கறிகள், பழவகைகளைப் பயிரிடுவதை ஊக்கப்படுத்தி வருகிறது. இப்படிப் பயிரிடுகிறபோது அவர்களுக்கு முழுப் பாதுகாப்புக் கிடைக்க வேண்டுமானால், அதற்கு அவசியமாகக் குளிர்சாதனக் கிடங்கு வசதிகள் தேவைப்படும். இடைத்தரகர்களுடைய இடையூறின்றி விவசாயிகள் நேரிடையாகப் பயன்பெறுவதற்காக அரசானது உழவர் சந்தை போன்ற திட்டங்களையெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கின்ற காரணத்தினாலே, காய்கறி பழவகைகளைப் பயிரிடுகிற விவசாயிகள், தாங்கள் பயிரிடுகின்ற உற்பத்திப் பொருளை முறையாக விற்பனை செய்வதற்குரிய வகையில் அவற்றைப் பாதுகாக்கின்ற விதத்திலே குளிர்சாதனக் கிடங்கு வசதியை, குறைந்தபட்சம் விவசாயப்பகுதிகளிலோ



1999 நவம்பர் 19]

அல்லது உழவர் சந்தைப் பகுதிகளிலோ ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும்; அந்த உணவுப் பொருளை, காய்கறிகளை வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் நியாயமான விலையிலே அவை கிடைக்க வேண்டும்; இதில் இடைத்தரகர்கள் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது என்ற அந்த நல்ல நோக்கத்தோடுதான் தமிழகத்திலே உழவர் சந்தையைத் தொடங்க வேண்டுமென்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதன் முதற்கட்டமாக மதுரையிலே தொடங்கப்பட்டு, பொது மக்கள் மத்தியிலும், விவசாயிகள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 100 உழவர் சந்தைகள் தொடங்கிவிட்ட பிறகு, தொடர்ந்து எங்கெங்கு வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இதுபோன்ற உழவர் சந்தைகளைத் தொடங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொண்டிருப்பதோடு, TANCOF மூலம் கூட நடவடிக்கையை நாம் எடுத்து வருகின்றோம். அரசாங்கமே, காய்கறிகளைக் கொள்முதல் செய்து நுகர்வோர்களுக்குக் கட்டுப்படியான விலையிலே கொடுக்க வேண்டும் என்று எண்ணி அதற்கான நடவடிக்கையை இப்போது எடுத்து வருகிறோம். ஆகவே, குளிர்சாதனக் கிடங்கு எங்கே தேவைப்படுகிறது என்பதை இந்த அரசு பரிசீலித்துக் கொண்டு, அந்த இடங்களிலே குளிர்சாதனக் கிடங்குகள் கட்டலாம் என்ற ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாக நான் இதைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றேன். என்னுடைய பகுதி அதிகமாக விவசாயிகள் நிறைந்த பகுதி. ஏராளமான காய்கறிகள் அங்கே விளைந்து கொண்டிருக்கின்றன. ஒரு குளிர்பதனக் கிடங்கு வேண்டுமென்று நான் ஒவ்வொரு முறையும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். இந்த ஆண்டாவது அந்தக் குளிர்பதனக் கிடங்கை

அமைத்துத் தருவதோடு, அந்த உழவர் சந்தையையும் எங்கள் பகுதிக்குக் கொடுக்க வேண்டும். காரணம், நீண்ட தூரம் திருப்பூருக்கு வந்து காய்கறிகளை விற்க வேண்டிய துர்பாக்கிய நிலை இருக்கிறது. எனவே தயவுசெய்து, குளிர்பதனக் கிடங்கோடு, உழவர் சந்தை வசதியையும் என்னுடைய தொகுதியிலே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காய்கறிகள் உற்பத்தி ஆவதைப்போல, பணம் உற்பத்தி ஆவதில்லை. கந்தசாமி மனது வைத்து பணமும் அப்படி உற்பத்தியானால், அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்க, ஒத்திவைக்கப்படுகிறது.

வினா எண் 8, திரு. செங்கை சிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**8—**

**போக்குவரத்து நெரிசல்**

***23613—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புதிய திட்டம் செயல்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு 366 கோடி ரூபாய்க்கான புதிய போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்த, ஏற்கெனவே அரசு ஆணை எண் 301 (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை) நாள் 4-9-1997-ல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நகரின்





முக்கிய மற்றும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் சிறிய மேம்பாலங்கள் அமைத்தல், தேவையான இடங்களில் சுரங்கப்பாதை அமைத்தல், சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல், சாலைகளை விரிவுபடுத்துதல் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கோயம்பேட்டில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கும் பணி எந்த நிலையில் இருக்கிறது? அப்பணி எப்போது முடிவு அடையும்? அதனுடைய மதிப்பீடு என்ன? சென்னை நகரைப் பிற நகரங்களோடு இணைப்பதற்கு ஆரச்சாலைகள் அமைக்கும் திட்டம் உள்ளதா? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு அதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அதை 25 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 92 கோடி செலவிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதிலே 275 பேருந்துகள் வந்து செல்ல இடவசதிகள் உருவாக்கப்பட்டு, அப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2001-க்குள்ளாக அந்தப் பேருந்து நிலையம் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்த ஆரச்சாலைகளுக்கு, முக்கிய சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 212.54 கோடி ரூபாய் செலவிலே அனுமதி அளிக்கப்பட்டு 250 கிலோ மீட்டர் நீளத்திற்குத் திட்டமிடப்பட்டு அந்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டப் பணிகள் எல்லாம் விரைவிலே துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அவை மட்டுமின்றி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாக சென்னை நகரத்தினுடைய போக்குவரத்தைக் கட்டுபடுத்துகின்ற வகையில் 10 புதிய பாலங்கள் கட்டுகின்ற பணியை வணக்கத்திற்குரிய மேயரும், சென்னை மாநகராட்சியும் விரைவுபடுத்தி அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

துரித இரயில் திட்டத்தின் மூலமாக, M.R.T.S. மூலமாக ரூ.260 கோடி செலவில் மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்திய போதிலும், அதற்கான நிலத்தினையும் பாதிச் செலவினையும் தமிழக அரசு அளித்து, இரண்டாவது கட்டமாக 10.6 கிலோ மீட்டர் தூரத்திற்கு

[1999 நவம்பர் 19

திருமயிலை முதல் வேளச்சேரி வரை துரித இரயில் போக்குவரத்திற்கான கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, துரித இரயில் திட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது சென்னை நகரத்தினுடைய போக்குவரத்து நெரிசல் குறைவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.

அவை மட்டுமின்றி, மவுண்ட்-பூந்தமல்லி சாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக 10.8 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணிகள் ரூ.13.3 கோடி செலவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட ரூ.48 கோடி செலவிலே தேசிய புறவழிச் சாலைப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி Outer Ring Road என்ற வெளி வட்டச் சாலையும் 62 கிலோ மீட்டர் அளவிற்கு அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எண்ணூரைச் சுற்றி சாலை மேம்பாட்டுத் திட்டமும் நடைபெற இருக்கிறது, ரூ.118.5 கோடி செலவிலே. ஆகவே சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், சாலைகளை விரிவுபடுத்துவதன் மூலமாகவும், பாலங்களை உருவாக்குவதன் மூலமாகவும் இந்த மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சென்னை மாநகராட்சியும், அதேபோல சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினுடைய துணையோடு நெடுஞ்சாலைத் துறையும் சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக தற்போது பாலங்கள் கட்டப்பட்டு வருவதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பாலங்களின் பணி எப்போது நிறைவுபெறும்? இன்னும் புதியதாகப் பாலங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 பாலங்களுக்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் நன்கு அறிவார்கள். அவை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே முடிவடைவதற்கான அனைத்துப் பணிகளையும் மாநகராட்சி விரைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.



1999 நவம்பர் 19]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இந்தப் புதிய திட்டங்களுக்கு ரூ. 300 கோடிக்கு மேலே நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த நிதியிலே ஐக்கிய நாடுகள் ஏதாவது நிதியுதவி அளிக்கிறதா? மத்திய மாநில அரசுகள் இந்த நிதியுதவியில் பங்கேற்கிறதா என்பதையும், அது எவ்வளவு என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை போன்றவை நிறைவேற்றினாலும்கூட, அவற்றுக்கிடையிலே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்தான் நிதிகளைப் பெற்றுத் தருகிறது. அவ்வப்போது ஏற்படுகிற தேவைகளுக்கேற்ப பல்வேறு வங்கிகளின் மூலமாக இந்த நிதிகளைப் பெற்றுத் தருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரினுடைய கோடம்பாக்கம் ஆற்காடு சாலைச் சந்திப்பு - 100 அடி ரோடு சந்திப்பிலே தினசரி இலட்சக்கணக்கான மக்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் போக்குவரத்து நெரிசலை நிவர்த்தி செய்வதற்கு மேம்பாலங்கள் ஏதாவது கட்டுகின்ற பணி அரசினுடைய ஆய்வில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள், அரசு சார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள், காவல் துறை மற்றும் அரசுத் துறை இவற்றோடு கலந்து ஆய்ந்துதான் இதுபோன்ற பாலங்களை எங்கெங்கே கட்ட வேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறது. அதற்காக ஒரு குழுவேகூட நியமிக்கப்பட்டு, சென்னை நகரத்தினுடைய வருங்காலத் தேவைகளை அறிந்து, எந்தெந்த இடங்களில் பாலங்கள் கட்ட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மேலும் 9 சிறு மேம்பாலங்கள் உட்பட பல்வேறு பணிகளை ரூ. 89.5 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொடங்கவும், ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், 7 சிறு மேம்பாலங்கள் உட்பட கூடுதலான பணிகள் விரைவில்

தொடங்கப்பட உள்ளன. அதிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 9, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**9—**

### பேருந்துகளைச் சீர் செய்தல்

***23752—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து இயக்கப்படும் நகர அரசுப் பேருந்துகளில் பெரும்பாலானவை மோசமான நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் சீர்செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனியில் இயங்கும் நகரப் பேருந்துகளின் சராசரி வயது 5 வருடங்களாக உள்ளது. விதிகளின்படி வருடம் ஒரு முறை தகுதிச் சான்றிதழ் பெறப்பட்டும், அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில், அந்த மாவட்டத்தில் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் என்று தொடங்கப்பட்டபோது தமிழ்நாட்டிலுள்ள மிக பலஹீனமான பேருந்துகளே, பழனி நகரப் பேருந்துகளாக அன்றைக்கு ஒதுக்கப்பட்டன. அதை இதுவரைக்கும் மாற்றவில்லை. அதுபோன்று நீண்டகாலமாக பழனி-சென்னை அரசு விரைவுப் பேருந்து 20 ஆண்டுகாலமாக ஓடிக்கொண்டிருந்ததாகும். தற்போது 15 தினங்களாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனித்து உடனடியாக அந்தப் பேருந்தை



இயக்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழனி நகரத்தைப் பொறுத்தவரையில், அங்கே இயங்கிக் கொண்டிருக்கும் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை 33. அந்த நகரப் பேருந்துகளுக்கு ஈடுகட்டுவதற்காக 5 புதிய பேருந்துகள் சென்ற ஆண்டு வழங்கப்பட்டன. மொத்தம் 40 புதிய பேருந்துகள் Replacement என்ற வகையில் அங்கே வழங்கப்பட்டு இருக்கின்றன. அவற்றிலே நகரப் பேருந்துகளுக்காக ஐந்தும், மற்ற வழித்தடங்களுக்காக 35 பேருந்துகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், புதிதாக பேருந்துகளை மாற்றுவதில்லை. மற்ற வழித்தடங்களிலே 5 ஆண்டுகள் ஓடிய பேருந்துகளைத்தான் நகரப் பேருந்துகளாக மாற்றிவிட்டு புதிய பேருந்துகளை அந்தத் தடங்களில் மட்டுமே இயக்குவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, நகரப் பேருந்துகளிலேயும் சில புதிய பேருந்துகளை இயக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழனியிலேயிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த துரிதப் பேருந்து பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். துரிதப் பேருந்தைப் பொறுத்தவரையில், 400 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்பட்டவற்றை மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டும்; மற்றவற்றை அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களே இயக்க வேண்டுமென்று, அதிலே நிர்வாக மேம்பாட்டைக் கருதி சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. துரிதப் பேருந்துகள் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இயக்கப்பட்டாலும் அல்லது அந்தப் பகுதியிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக இயக்கப்பட்டாலும் நிச்சயமாக போக்குவரத்துத் தடைபடாமல் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையிலே சில குழுக்களிலே இடம் பெறுகின்ற எங்களைப் போன்ற உறுப்பினர்கள், வெளி மாநிலங்களுக்குச்

செல்கின்ற நேரத்தில் அங்கே இயக்கப்படுகின்ற பேருந்துகளைப் பார்க்கின்றபோது அவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவிலேயே தலைவர் கலைஞர் ஆட்சி நடக்கும் தமிழகத்தில்தான் 90% பேருந்துகள் நல்ல வசதியான பேருந்துகளாக இயங்குகின்றன என்பதும் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்தில் இயங்குகின்றபோதுகூட போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் திறம் மிக்க நிர்வாகத்தால் பெரும்பான்மையான பேருந்துகள் சிறப்பாக இயங்குவதை மனம் திறந்து பாராட்டுகின்றேன். எனது குளத்தூர் தொகுதியினுடைய தலைமையிடமாக விளங்குகின்ற கீரனூரிலிருந்து கிட்டத்தட்ட 30-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயங்குகின்றன. ஆனால், போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக ஓர் இடம் வாங்கப்பட்டு போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகளும் தொடங்கப்பட்டு, நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி இப்போது அந்தப் பணிமனை அமைக்கும் வேலை தடைபட்டு நிற்கிறது. இதனால், ஒரு நாளைக்கு 30-க்கும் மேற்பட்ட பேருந்துகள் கீரனூரிலேயே தங்கி பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலைமை மாறி புதுக்கோட்டைக்கு வந்துபோக வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால் ஒரு நாளைக்கு ஆயிரம் கிலோமீட்டருக்குத் தேவையான டீசல் வீண் விரயம் ஆகின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வி பழனியைப் பற்றியது. இதற்குத் தனி வினா கேளுங்கள்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம்; அந்த வீண் விரயத்தைத் தவிர்க்கின்ற வகையிலும், பொதுமக்கள் வசதியைக் கருதியும் கீரனூரில் தொடங்கப்பட்டிருக்கின்ற பணிமனையை அமைப்பதற்கான வேலை துரிதப்படுத்தப்பட்டு மிக விரைவிலே பணிமனை அமைய அரசு ஆவன செய்யுமா என்று பணிவோடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்குமே நிதிநிலைமையைப் பற்றி நன்றாகத் தெரியும். அந்த நிதிநிலையை உயர்த்துவதற்காக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உளப்பூர்வமாக ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன். அவை தொடர்ந்து செயல்படுகிறபோது, நிச்சயமாக நிதிநிலையைச் சீர் செய்து இதுபோன்ற புதிய பேருந்துகள் மட்டுமல்ல; அவர்கள் கோருகின்ற பேருந்துகளுக்கான பணிமனைகள்கூட சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 10, திரு. வெ. சின்னய்யா, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**10—**

## பயணிகள் தங்கும் விடுதி

***18215—திரு. வெ. சின்னய்யா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலாத் தலமான திருமயத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பயணிகள் தங்கும் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரே வார்த்தையில் இல்லை என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அரசு அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்புகிற பதிலில் நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் அடுத்த கட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று அனுப்புவது வழக்கமாக இருக்கிறது. அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து இல்லை என்று சொல்லாமல் ஒரு தொகுதியினுடைய தலைமையிடம், புதுக்கோட்டை மாவட்டத்தின் திருத்தலமாக விளங்குகின்ற பல்லவர் கோயில் இருக்கின்ற இடம், இராமேஸ்வரம் செல்லுகின்ற பயணிகள், ஆந்திர மாநிலத்திலிருந்து வருகின்ற பயணிகள் வருடந்தோறும் வந்து செல்லும் இடம் என்பதால் அவர்கள் தங்கிச் செல்வதற்கு ஒரு விடுதி இல்லை. ஆகவே, நெடுஞ்சாலைத் துறை மூலம் சுற்றுலாப் பயணிகள் தங்குமிடம் அமைக்க முடியவில்லை என்றாலும்கூட சட்டமன்ற உறுப்பினர் தருகின்ற நிதியிலிருந்தாவது நீங்கள் பயணியர் தங்கும் விடுதி கட்டித் தருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 நவம்பர் 19

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயணியர் விடுதி தற்போது கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன். தலைவர் கலைஞருடைய ஆட்சியில் மிக அத்தியாவசியத் தேவைகளான சாலைப் போக்குவரத்து, குடிநீர்த் திட்டம், பள்ளிக்கூடம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று முடிவெடுத்து அந்த அடிப்படையில் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் கிராம இணைப்புச் சாலைகள் போடுகிற அந்தத் திட்டத்திற்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பயணியர் விடுதி கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க முடியாது. நிதி ஆதாரம் கிடைக்கிறபோது அந்தத் திட்டங்களைச் செய்யலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. சின்னய்யா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கொடுக்கிறேன், அதைக் கட்டித்தர முடியுமா என்று கேட்டார்கள். பணம் கிடைக்கிறபோது நாங்கள் கட்டித்தர முடியாது என்று சொல்ல முடியாது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து பயணியர் விடுதி கட்டுவதற்குப் பணம் கொடுக்க முடியுமா, அதற்கு விதி அனுமதிக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 11, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

11—

## மேம்பாலம் அமைத்தல்

***25302—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஒட்டியம்பாக்கம் ஓடையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



1999 நவம்பர் 19]

(அ) ஆம்.

(ஆ) வினாவில் கண்டுள்ள பாலப்பணியானது NABARD நிதி உதவியுடன் R.I.D.F. (3) திட்டத்தில் ரூ. 75.47 இலட்ச மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வாயிலாகப் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டியம்பாக்கம் கிராம மக்களுடைய 30 ஆண்டுகாலக் கனவை நனவாக்கியிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்தப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. அதற்காக அளிக்கப்பட்டிருக்கிற அவகாசம் எவ்வளவு? அவகாச காலத்திற்குள் அது முடிக்கப்படுமா என்பதனை மாண்புமிகு அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம், 75 இலட்சம் ரூபாயில் கட்டப்படுகிற பாலம்தான். சிறிய பாலம்தான் என்றாலும்கூட, அந்த ஓடையில் எப்போதும் தண்ணீர் போய்க்கொண்டேயிருக்கிறது. சிறு மழை பெய்தால்கூட அதிலே ஏராளமான தண்ணீர் வருகிறது. ஆகையினாலே, அந்தப் பணியை மேற்கொள்வதிலே சற்று இடைஞ்சல் ஏற்பட்டு இருக்கிறது. அதுதானே தவிர, ஆமை வேகத்தில் நடக்கிறது என்று சொல்ல முடியாது. மார்ச் மாதத்திற்குள்ளாக இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவும் நடைபெறும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அதற்குத் தலைமை தாங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 12, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

12—

## பட்டயப் படிப்புகளைப் பட்டப் படிப்பாக்குதல்

***11746—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

(அ) ஏழிசைமணி, நாதஸ்வரம், தவில், பரதநாட்டியம் மற்றும் மிருதங்கம் ஆகிய பட்டயப் படிப்புகளை ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்பாக மாற்றும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஏழிசைமணி, நாதஸ்வரம், தவில், பரதநாட்டியம் மற்றும் மிருதங்கப் பட்டயப் படிப்பு வகுப்புகளை ஒருங்கிணைந்த ஐந்தாண்டுப் பட்டப் படிப்பாக மாற்றும் செயல் திட்டம் அரசிடம் இல்லை.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் திருவையாறு அரசர் கல்லூரியில் இசைத் துறையில் பட்ட வகுப்புகளாக இயங்கி வந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் துறையை தமிழ்நாடு இசைக் கல்லூரியாக அறிவித்துத் தொடங்கப்பட்டவுடன் பட்டப் படிப்புகள் பட்டயப் படிப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. மீண்டும் அந்த இசைக் கல்லூரியில் பட்ட வகுப்புகள் இசைத் துறையில் தொடங்கப்படுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னையிலும், கோவையிலும், மதுரையிலும் அரசின் சார்பாக இசைக் கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. அவை அனைத்திலும் பட்டயப் படிப்புகள்தான் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக இந்த மூன்று கல்லூரிகளிலும் 3 ஆண்டுகாலத்திற்கான பட்டய வகுப்புகள் மட்டும்தான் நடைபெறுகின்றன. ஆனால், அதேநேரத்தில் திருவையாறு அரசர் கல்லூரி ஏற்கெனவே வடமொழியும் தமிழும் இணைந்த கூட்டுநிலைக் கல்லூரியாக இருந்தது. தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் வாயிலாக வடமொழிக் கல்லூரியைத் தனியாகப் பிரித்து, தமிழிசைக் கல்லூரியைத் தனியாகப் பிரித்து, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கல்லூரியோடு இணைவிக்கப்பெற்றது என்றாலும் அந்தக் கல்லூரியில் இன்னொரு சிக்கல் இருக்கிறது. நம்முடைய அரசு இசைக் கல்லூரிகள் மூன்றும் முழுக்க முழுக்கத் தமிழக அரசினுடைய



1999 நவம்பர் 19]

நேரடி மேற்பார்வையில் உள்ளன. ஆனால், திருவையாறு அரசர் கல்லூரி மட்டும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைவிக்கப்பெற்ற ஒரு தனிக் கல்லூரியாக இருக்கிறது. எனவே, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட பட்டங்களும் இருக்கின்றன; நாம் தருகின்ற பட்டயங்களும் இருக்கின்றன என்று இரண்டு நிலை அந்தக் கல்லூரியில் மட்டும் இருக்கிறது. அதனாலேதான் அங்கு தரப்படுகிற பட்டத்தை, ஏற்கெனவே சங்கீத சிரோன்மணி என்ற பட்டத்தை, ஏழிசைமணி என்று மாற்றி இப்போது நான்கு ஆண்டுப் பட்டய வகுப்புகளாகத் தந்திருக்கிறோம். எனவே, அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் இதுதான் நிலை. பட்டய வகுப்புகளை பட்ட வகுப்புகளாக மாற்றுவதால் தனிப் பயன் ஏதும் இல்லை. இப்போது இருக்கிற நிலையிலேயே பயில்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தரப்படுகின்றன. குறிப்பாக, 15 இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டு ஏறத்தாழ ஒவ்வொரு பள்ளியிலும் 6 பேர் என்ற அளவுக்கு 90 பேர்களுக்கு, அங்கு பயின்றவர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 13, திரு. ம. சண்முகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**13—**

### சார்பு நீதிமன்றம்

***25507—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதால் இந்த நிதியாண்டில் நீதிமன்றம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தற்போது உடுமலைப்பேட்டையில் சார்பு நீதிமன்றத்திலே பதிவாகின்ற வழக்குகளிலே கிட்டத்தட்ட 65 சதவீதத்திற்கு மேல் வழக்குகள் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை ஆகிய பகுதிகளிலேயிருந்துதான் பதிவாகின்றன. ஆகவே, வழக்கு மன்றத்திற்குச் செல்கின்ற பொதுமக்கள் 50-லிருந்து 90 கிலோமீட்டர் வரை பயணம் செய்யவேண்டியிருக்கிறது. உயர் நீதிமன்றம் அதற்கான அனுமதியை அளித்துள்ளது. இந்த ஆண்டிலே பகுதி-2 திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்படவிருந்த அத்திட்டமானது நிதி நிலை காரணமாக எடுத்துக்கொள்ளப்படாத நிலையுள்ளதாக அறிகிறேன். ஆகவே, அரசு இந்த ஆண்டு மீண்டும் பரிசீலனை செய்து சார்பு நீதிமன்றம் பொள்ளாச்சியில் அமைக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டுபட்ட கருத்து இல்லை. உயர் நீதிமன்றமும் அதற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று பகுதி-2 திட்டத்திலே இணைப்பதற்கு முயற்சித்தபோது நிதித் துறை நிதி இல்லாத காரணத்தால் ஏற்க இயலவில்லை என்பதைத் தெரிவித்திருக்கிறது. என்றாலும், இந்த வேண்டுகோள் கருவிலே இருக்கிறது. காலம் கனியும்போது, நிதி பெருகும்போது, அது உருவாகி திருவாகும் என்பதை எடுத்துச் சொல்லி, எதிர்காலத்திலே இது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.



1999 நவம்பர் 19]

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டையிலே இருக்கக்கூடிய சார்பு நீதிமன்றத்திலேதான் எங்களுடைய வால்பாறை தாலுகாவைச் சேர்ந்த அனைத்து பொதுமக்களும், அதைப்போல பொள்ளாச்சி, கிணத்துக்கடவு ஆகிய பகுதிகளிலே வசிக்கக்கூடிய மக்களும் தங்களுடைய நியாயங்களுக்காகப் போராடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. உட்கோட்டத்தினுடைய கோட்டாட்சியர் அலுவலகத்தினுடைய தலைமை இடமும் பொள்ளாச்சியிலேதான் இருக்கிறது. தெரிந்தோ, தெரியாமலோ கடந்த காலத்திலே உடுமலைப்பேட்டையிலே அந்தச் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுவிட்டது. இருந்தபோதிலும், நாங்கள் உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தை எங்களுடைய பொள்ளாச்சிப் பகுதிக்கு மாற்றித்தர வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால், பொள்ளாச்சியிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகள் அடங்கியிருக்கக்கூடிய பல்வேறு வழக்குகளைக் கவனிப்பதற்கு பொள்ளாச்சிக்கு நீங்கள் கண்டிப்பாக சார்பு நீதிமன்றத்தை அமைத்துத் தரவேண்டும். அமைத்துத் தருவீர்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடே இல்லை. கண்டிப்பாக அங்கே சார்பு நீதிமன்றம் தொடங்கப்படும் என்பதைக் கொள்கை ரீதியாக ஒத்துக்கொள்கிறேன். 1998-99-ல் 27 நீதிமன்றங்களுக்கு அனுமதியை அளித்தோம். கடந்த ஆண்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக 3 நீதிமன்றங்களுக்குத்தான் அனுமதி அளிக்க முடிந்தது. இனி நிதி நிலைமை ஓரளவிற்குச் சீராகும்போது நிச்சயமாக பொள்ளாச்சியில் சார்பு நீதிமன்றம் அமைக்க முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய திண்டுக்கல் மாவட்டத்திலே, கொடைக்கானலிலே ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கவிருப்பதாகவும் அங்கே இடம் எல்லாம் பார்த்ததாகவும் சொல்லப்படுகிறது. அங்கே

[1999 நவம்பர் 19

அப்படிச் சார்பு நீதிமன்றம் அமைத்தால் கீழே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், பாதிக்கக்கூடிய மக்கள் கொடைக்கானலுக்குச் சென்று தங்கி வக்கீல்களை அழைத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு வாதாடச் செல்லமுடியாத சூழ்நிலை இருக்கும் என்ற காரணத்தாலே திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வக்கீல்கள் அத்தனைபேரும் உண்ணாவிரதம் இருந்தார்கள். இந்தச் சார்பு நீதிமன்றம் கொடைக்கானலிலே அமைக்கப்படக்கூடாது. அங்கே அமைக்கப்பட்டால் மக்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கும் என்று சொல்லி, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்திலே நிலக்கோட்டையிலே ஒரு District Munsiff Court அமைக்கப்பட்டு அதுவும் நல்லமுறையிலே நடந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த நீதிமன்றத்தை நிலக்கோட்டையிலே ஆரம்பிப்பதற்கான முயற்சியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான எந்தக் குறிப்பும் தற்போது என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வி கோவை மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி சம்பந்தப்பட்டது. நீங்கள் கேட்டீர்களே என்று அனுமதி கொடுத்தேன். அதைத் தாறுமாறாகப் பயன்படுத்தாதீர்கள். ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி அவர்கள் பேசியது அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 14, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

திரு. தாமரைக்கனி, உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை நீங்கள் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1999 நவம்பர் 19]

**14—**

**மூலிகை மரங்கள்**

***22537—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி நகராட்சிக்கு அருகிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் மூலிகை மரங்கள் வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்தை வனத் துறையும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்படுத்த அரசு அனுமதிக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தேனி நகராட்சிக்கு அருகில் உள்ள வன நிலங்கள் . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்தியதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். மீண்டும் இப்படியே செய்துகொண்டிருந்தால், அவையிலிருந்து நீக்க வேண்டிவரும். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** துணைத் தலைவர் அவர்களே,

(அ) தேனி நகராட்சிக்கு அருகில் உள்ள வன நிலங்கள் (குறுக்கீடு) வறட்சியாக சரளைக்கல் கலந்த மண் வகையாக அமைந்துள்ளதால், வறட்சியான நிலத்தில் வளரக்கூடிய சில மூலிகைச் செடிகள் மட்டுமே வளர்க்க (குறுக்கீடு) முடியும் என்பதால், மூலிகை மரங்கள் அப்பகுதியில் (குறுக்கீடு) வளர்க்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதில் எனக்குச் சரியாகக்

கேட்கவில்லை. திரு. தாமரைக்கனி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார். தயவுசெய்து இன்னொரு தடவை பதிலைச் சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் முதலில். இன்னும் பதினொரு நிமிடம்தான் இருக்கிறது. இடைவெளி விட வேண்டும். இந்த மாதிரி பண்ணாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாமல், நீண்டகாலப் பிரச்சினையாக இருக்கின்ற ஒன்றை — அவருடைய தொகுதி பற்றியதாக இருந்தாலும்கூட, மூலக் கேள்வியோடு நேரடித் தொடர்பு இல்லாததைக் — கேட்கிறார். முன்னாலே சட்ட அமைச்சர் சொன்னதைப்போல, இதற்கும் எந்த பதிலும் சொல்லக்கூடிய வாய்ப்பு அவருக்கு இருக்காது. ஆகவே மூலக் கேள்வியோடு தொடர்பில்லாத கேள்வியைத் தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அடுத்து வாய்ப்புக் கிடைக்கிறபோது அவர் எழுப்பும் கேள்விக்குப் பதில் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது மட்டுமல்ல, ஏற்கெனவே ஒரு துணைக் கேள்விக்கும் அனுமதி தந்தேன். இங்கே என்னுடைய மேசையருகில் வந்து மீண்டும் கேட்டுக்கொண்டார் என்பதற்காக இரண்டாவது முறையும் அனுமதி தந்தேன். அதை அவர் தவறாகப் பயன்படுத்திக் கொண்டார். மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) தேனி நகராட்சிக்கு அருகில் உள்ள வன நிலங்கள் வறட்சியாக சரளைக்கல் கலந்த மண் வகையாக அமைந்துள்ளதால், வறட்சியான நிலத்தில் வளரக்கூடிய சில மூலிகைச் செடிகள் மட்டுமே வளர்க்க முடியும் என்பதால், மூலிகை மரங்கள் அப்பகுதியில் வளர்க்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி அருகில் உள்ள அந்த வனப் பகுதி கிட்டத்தட்ட



350 ஏக்கருக்கு மேலாக உள்ள வனப் பகுதி. தேனிப் பகுதியானது மாவட்டம் முழுவதும் ஆண்டுதோறும் ஓரளவு சம சீதோஷ்ணத்தோடு இருக்கக்கூடிய பகுதியாகும். கடந்த நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால்வரை கூட சில நல்ல மூலிகைகள் அந்தப் பகுதியில் வளர்க்கப்பட்டதாகவும், இருந்துவந்ததாகவும் சில பெரியோர்கள் எல்லாம் சொல்லியிருந்தார்கள். இப்போது மீண்டும் அதைப் பரிசீலிக்கக்கூடிய வாய்ப்பு அரசுக்கு இருக்கிறது. பக்கத்திலே பெரியாறு ஓடுகிறது. தண்ணீர்ப் பஞ்சம் இருப்பதற்கும் வாய்ப்பு இல்லை. ஆகவே அங்கே நல்ல மரங்களையாவது வளர்ப்பதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்வதோடு, அங்கே பல நல்லார்வத் தொண்டு நிறுவனங்கள் அதிலே ஆர்வமாக இருக்கின்ற காரணத்தாலே, அந்த நிறுவனங்களையும் இந்தத் திட்டத்தோடு சேர்த்துக் கொள்ளலாம். வனத் துறையோடு அங்கேயிருக்கக்கூடிய மாணவர்களையும் அதிலே சேர்த்துக் கொள்ளலாம். ஏனென்றால் அவர்களும் மரங்களை நடுவதற்கு விருப்பமாக இருக்கிறார்கள். அரசு அனுமதி அளித்தால் அவற்றை நிறுவுவதற்கு, நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு வனத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் தீட்டி, இப்போது இருக்கின்ற அல்லது அழிந்து வருகின்ற அரிய மூலிகைச் செடிகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதுவரை 1759 வகையான மூலிகை இனங்கள் கண்டறியப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள மரபு சார்ந்த மூலிகைச் செடிகள் பாதுகாப்புத் திட்டம் FRLHD என்ற டென்மார்க் நாட்டு நிறுவனத்தோடு கூட்டாகத் தமிழகமெங்கும் மூலிகைச் செடிகளைக் கண்டறிதல், பெருக்குதல், வளர்த்தல் போன்ற பணிகளைச் செய்துவருகிறது. தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, நாகப்பட்டினம் மாவட்டத்தில் கோடியக்கரை, விழுப்புரம் மாவட்டத்தில் குரும்பரம், விருதுநகர் மாவட்டத்தில் தனிப்பாறை, திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம் மற்றும் முண்டந்துறை, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, மதுரை மாவட்டத்தில் அழகர்கோயில், திண்டுக்கல்லில் பேரிஜம், வேலூர் மாவட்டத்தில் தென்மலை, கோவை மாவட்டத்தில் டாப்சிலிப் ஆகிய இடங்களில் மூலிகைச் செடிகள் உள்ள இடங்கள் கண்டறியப்பட்டு சுமார் 2056 எக்டேர் நிலங்களில் பாதுகாக்கப்பட்டு

வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாகச் சில செடிகளைப் பற்றிச் சொன்னால், இந்தத் துறையின் மூலமாக அவற்றைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

15—

### அண்ணாவின் படைப்புகள்

***13829—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா சதுக்கத்தில் கட்டத் திட்டமிட்டுள்ள அருங்காட்சியகத்தில் அண்ணாவின் வரலாறு, நாடக புத்தகங்கள், உரையின் ஒலி நாடா ஆகியவற்றை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) அறிஞர் அண்ணா நினைவிடமான அண்ணா சதுக்கத்தில் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா சதுக்கத்தில் தனியாக அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா புத்தக விற்பனை நிலையத்தில் பேரறிஞர் அண்ணாவின் புத்தகங்கள் மற்றும் பேரறிஞர் அண்ணா பற்றிய புத்தகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் உரைகளை, ஒலிநாடாக்களாக விற்பனை செய்யும் வகையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உரையில் 5 பொருள் பற்றி C-60



Audio Cassette-லும், 1 பொருள் பற்றி C-45 Audio Cassette-லும் Master Cassette செய்து, 100 பிரதிகள் வீதம் 600 Cassettes பிரதிகள் விற்பனை செய்ய, தரமிக்க Audio Cassettes எடுக்க ரூ.13,950, இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு ஒப்பளிப்புச் செய்து ஆணையிடப்பட்டு, தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, சென்னை அவர்களிடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 1999, முதல் தேதியிலிருந்து ஒலி நாடாக்கள் வெளியிடப்பட்டு, விற்பனை செய்யப்பட உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த உலகத்திற்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை உணர்த்திய உத்தமர். அண்ணா அவர்களின் உரையினுடைய ஒலி நாடாக்கள் மிக விரைவிலே பொதுமக்களுக்குக் கிடைக்க இந்த அரசு விரைவான நடவடிக்கையை எடுக்குமா? அதேபோல, அண்ணாவினுடைய அருங்காட்சியகத்தை இன்னும் சிறப்பான முறையில், உலக நாடுகளே கண்டு, பெருமைப்படக்கூடிய வகையிலே, இன்னும் சிறப்பான முறையிலே அமைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அருங்காட்சியகம் 29 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரிய யோசனையோடு அரிய பல புகைப்படங்களும், இதுவரையில் யாரும் பார்க்க முடியாதவை, அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, அண்ணா அவர்களுடைய பேச்சுகள் ஒலி நாடாக்களாக டிசம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து வெளியிடப்பட இருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 'அண்ணா வாழ்கின்றார்' என்ற பெயரில் 20 நிமிடங்கள் ஓடக்கூடிய செய்தி மலர் தயாரிக்கப்பட்டு 200 நகல்கள் தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் திரையரங்குகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக, இந்த ஆண்டு அந்தப் படத்திற்கு இந்திய அரசினுடைய தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 16, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**திரு. ஐ. கணேசன்:** இன்னொரு துணைக் கேள்விக்கு அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையை ஒத்திவைக்க இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. இன்னும் ஆறு வினாக்கள் பாக்கி இருக்கின்றன. போதும், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**16—**

**கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்**

***29426—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக உயர்த்த அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆடுதுறை கால்நடை மருந்தகத்திற்கு அன்றாடம் நூற்றுக்கணக்கான கால்நடைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, 1997-98 ஆம் ஆண்டில் இதுபற்றி அரசிடம் செயற்குறிப்பு இருந்தது.



எனவே, அதை அவசியம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆடுதுறை கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. மேலும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்கள் முறையே, திருவிடைமருதூர், நரசிங்கன்பேட்டை, நாச்சியார்கோவில் ஆகிய ஊர்களிலும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக, கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அக் கால்நடை மருந்தகங்களில் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேல் இருப்பின், பகுதி-2 திட்டத்தின்கீழ், தகுதி மற்றும் நிதி நிலைமையின் அடிப்படையில் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில், ஆடுதுறை கால்நடை மருந்தகத்திற்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டும், அரசின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டும், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 17, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**17—**

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

***14959—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் தற்போது மாநிலம் முழுவதும் 431 திட்டங்கள் மூலமாக 29 ஆயிரத்திற்கும் மேற்பட்ட

அங்கன்வாடி மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது 29,000 மையங்களில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை நாம் மாநிலம் முழுவதும் அமல்படுத்துவோமேயானால்—நிலக்கோட்டை குறித்து மட்டும் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். I.C.D.S. திட்டத்தின் மூலமாக 136 அங்கன்வாடி அமைப்பாளர்கள், 136 ஆயாக்கள், 136 குழந்தைகளைக் கூட்டி வரக்கூடிய சமையல் செய்யக் கூடியவர்கள், இப்படி அங்கே மட்டும் 408 பேர் வேலை செய்கிறார்கள். அதுமாதிரி இதனை மாநிலம் முழுவதும் அமல்படுத்துவோமேயானால்— நிறைய படித்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான ஒரு சூழ்நிலை உருவாகாதா? ஆகையினால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை, ஏற்கெனவே அறிவித்தவாறு தற்போது ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் முற்பகல் 11-15 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை முழுமையாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். I.C.D.S. திட்டம் மூலம் 408 பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு நிதி உதவி இருக்கிறது. ஆகையினால், மாநிலம் முழுவதும் அந்தத் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் 113 இடங்களில் செயல்பட்டு வந்தன. 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட அங்கன்வாடி மையங்கள், ஊட்டச் சத்துத் திட்டம் என்ற வகையில் செயல்பட்டு வந்தன. 318 வட்டாரங்களில் இந்த மையங்களின் பணி நடைபெற்று வந்தன. இது தற்போது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமாக மாற்றப்பட்டு மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடர்ந்து மாநில அரசு 431 மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சில நகராட்சிப் பகுதிகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்டிருக்கிறது. அந்த நகராட்சிப் பகுதிகளிலும் மற்றும் விடுபட்ட இடங்களிலும் தொடர்ந்து இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 18, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

18—

## வீட்டுமனைப் பட்டா

***16020—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி, சொக்கத்தேவன்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், செல்லம்பட்டி, சொக்கத்தேவன்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வாலாந்தூர் கிராமத்தில் 1.95 ஏக்கர் புன்செய் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால் இந்நில

உரிமையாளர்கள் இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். வழக்குகள் நிலுவையில் உள்ளன.

(ஆ) நீதிப் பேராணை மனுக்களின்பேரில் தீர்ப்புரை வழங்கப்பட்ட பின்னர் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் செல்லம்பட்டி, சொக்கத்தேவன்பட்டியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் தொடர்ந்து இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, பலவிதமான போராட்டங்களை நடத்தியும் இன்னும் வீட்டுமனை பட்டா கிடைக்காத நிலை இருக்கிறது. அந்த ஊரிலே வாழ்கின்ற ** ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் ஆதிதிராவிட மக்களுக்கு அங்கு இடம் கிடைக்காத அளவுக்குச் செய்து வந்த காரணத்தால் இன்னும் தொடர்ந்து கேட்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களும் பல முறை எடுத்துக் கூறியும், அந்த இடத்தைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஒரு மாற்று இடம் அளிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து அந்த ஏழை, எளிய ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு கேள்வி எழுப்பும்போது, குறிப்பிட்ட கட்சியினுடைய பெயரில் குற்றச்சாட்டு கூறியிருக்கிறார். பொதுவாக, கேள்வி நேரத்தில் குறிப்பிட்ட யார் மீதும் குற்றச்சாட்டு கூறி கேள்வி கேட்கக் கூடாது என்ற ஒரு மரபு இருக்கிறது. ஆகவே அந்தக் கேள்வியிலே அவர் குறிப்பிட்ட ** என்ற பகுதியை நீக்கிவிட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற பகுதி நீக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்று பதிவு செய்யப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாலாந்தூரில் வசிக்கின்ற 51

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்று, மாற்றப்பெற்றது.





ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு அடிமனை பட்டா வழங்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நில உரிமையாளர்கள் இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள். இரண்டு தடவை அவர்களுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டது. மீண்டும் ஒரு தடவை அந்த இடத்தில் கட்டடம் கட்ட முயற்சித்தபோது, அரசு எதிர் மனு தாக்கல் செய்த நேரத்தில் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தினால் தற்போது அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. நிலுவையில் இருக்கும் வழக்கில் தீர்ப்பு வந்த பிறகு, உறுதியாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். ஆனால் மாற்று இடம் ஒன்று தேர்வு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாற்று இடத்திற்கு உரிய முன்மொழிவினை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அனுப்பினால் அதை அரசு விரைந்து பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 19, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**19—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

***23040—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம் கணக்கு சர்வே எண் 33 பூமியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1999 நவம்பர் 19

(அ) மற்றும் (ஆ) ஆம். ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம், கணக்கு சர்வே எண் 33/1பி1, 29/ஏ3பி மற்றும் கணக்கு சர்வே எண் 34/ஏ1 ஆகிய புலங்களில் மொத்தம் 1.92.0 எக்டேர் அல்லது 4.75 ஏக்கர் நிலம், ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க பரிவர்த்தனை அடிப்படையில், நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நிலமெடுப்பு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டு, விரைவில் வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் வினாவில் எழுப்பப்பட்டுள்ள கணக்கு சர்வே எண் 33 என்கிற பூமியை நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு அங்குள்ள பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது. பிறகு வேறு இடம் கொடுப்பதாக அவர்களிடமிருந்து பட்டாக்கள் திரும்பப் பெறப்பட்டன. ஆனால், இதுவரை வேறு இடத்திலும் பட்டா வழங்கப்படவில்லை அல்லது கையகப்படுத்தப்பட்ட இடத்திலாவது பட்டா வழங்கியிருந்தால்கூட அந்தப் பயனாளிகள் முழுப் பயன் அடைந்திருப்பார்கள். மாற்று இடத்திலோ, கையகப்படுத்தப்பட்ட இடத்திலோ விரைவில் பட்டா வழங்க வேண்டும். அந்தப் பட்டாவிற்காக ஏறத்தாழ 100 ஏழை ஆதிதிராவிட மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைந்து அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கச்சேரிவலசி என்ற பகுதியில் 113 ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதற்காக மத்திய நில எடுப்புச் சட்டத்தின்மூலம் இந்த நிலம் எடுக்கப்பட்டது. இப்போது அதனுடைய உரிமையாளர், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். நீதிமன்றத்தில் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்துவிட்டது. ஆனால், நில உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் அந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு, நான் மாற்று இடம் கொடுக்கிறேன் என்று கூறிய காரணத்தினால், அதுவும் மனமொத்துக் கொடுக்கின்ற காரணத்தினால், அதற்குப் பதிலாக வேறு இடம் எடுக்கப்பட வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்பட்டு, அரசு கடந்த



1999 நவம்பர் 19]

முறை ஆணையிட்டிருக்கிறது. இப்போதும் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால் மாற்று இடத்திற்கு அருமைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் முன்மொழிவு அனுப்புவார்களேயானால் விரைந்து தகுந்த நடவடிக்கை எடுத்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 20, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**20—**

## சுற்றுலாத் துறை இரயில்

***26333—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் குழந்தைகள் விளையாட சுற்றுலாத் துறை மூலமாக இரயில் விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் குழந்தைகள் விளையாடும் இரயில் விட அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அந்தச் செயற்குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே இப்போது சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே குழந்தைகள் விளையாடுவதற்கான இரயில் விடுவதற்கு ஏற்பாடு செய்வீர்களேயானால், அதன் மூலமாக ஏராளமான சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு வாய்ப்பாக அமையும். அதற்காகவே பல்வேறுபட்ட ஊர்களிலிருந்து அங்கே சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். சண்டிகார் போன்ற நகரங்களிலேகூட, அங்கே நாங்கள் சென்றிருந்தபோது பார்த்தோம். அங்கே குழந்தைகள் விளையாடும் இரயில் உள்ளதால் ஏராளமான குழந்தைகள் வருகிறார்கள். அதேபோல,

இங்கேயும் வருவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகாரைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் துறைக்கு என்று வேறு இடங்கள் இல்லாத காரணத்தினால் அந்தப் பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அதற்குத் தகுதியான இடத்தைக் கையகப்படுத்தித் தருகின்றபோது மேற்படி முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @

## ஆறாம் பட்டியல்

**1—**

### விளையாட்டு அரங்கம் மேம்படுத்துதல்

**வினா 10219—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் உள்ள விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளது.

(ஆ) சேலம் விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்த கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:—

---

@ உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1. பழுதடைந்த கழிவறைகளை மாற்றியமைத்தல்.
2. ஜிம்னாசியம் அறையின் தரையினைப் புதுப்பித்தல்.
3. பழுதடைந்த அலுவலக அறையின் அடைப்பினை மாற்றுதல்.
4. குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.
5. ஆடு தளத்தில் வடிகால் வசதி ஏற்படுத்துதல்.

மேற்படி பணிகளுக்கு உத்தேசமாக ரூ.5 00 இலட்சம் செலவாகும். 1999-2000- ஆண்டிற்காக பகுதி-2 திட்டத்தின்கீழ் சேலம் மாவட்ட விளையாட்டுத் திடலை மேம்படுத்த அரசு தலா ரூ.20.00 இலட்சம் அனுமதித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய மேற்படி பணிகளுடன், இதர அத்தியாவசியப் பணிகளும் இத்தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்டு இந்நிதியாண்டில் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2—**

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

**வினா 15509—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட சம்பந்தப்பட்ட பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[1999 நவம்பர் 19

3—

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வசதி

**வினா 19090—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கிளாமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடமும் ஆய்வுக் கூடமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கிளாமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 506, பள்ளிக் கல்வி, நாள் 15-12-1997-லும், ஆய்வுக்கூட வசதி அரசாணை (நிலை) எண் 355, பள்ளிக் கல்வி, நாள் 22-9-1998-லும் நிதி ஒதுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4—

### விளையாட்டுத் துறை மூலம் தத்து எடுத்தல்

**வினா 21666—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலிருந்து எத்தனை நபர்கள் விளையாட்டுத் துறை மூலம் தத்து எடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்பொழுது விளையாட்டுத் துறை மூலம் தத்து எடுத்து பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறையில் இல்லை. தத்து எடுத்து விளையாட்டில் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்குப் பதிலாக, விளையாட்டில் மிகச் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கு, "விளையாட்டு ஊக்க உதவித்தொகை" வழங்கும் திட்டமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்படி 1997-98-ம் கல்வி ஆண்டில்



1999 நவம்பர் 19]

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த கீழ்க்காணும் நபர்களை அவர்களின் விளையாட்டுத் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து, விளையாட்டு ஊக்க உதவித் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது :

| வ.எண் | பெயர்/விலாசம் | உயர்நிலைப்/ மேல்நிலைப் பள்ளி மாணவ/ மாணவியர்க்கு ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் | கல்லூரி/ பல்கலைக் கழக மாணவ/ மாணவியர்க்கு ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் |
|---|---|---|---|
| 1. | செல்வி ஏ. ஜோதி, சாரதா வித்யாலயா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சேலம். | ரூ.5000 | .. |
| 2 | செல்வன் ஜே. விவேகானந்த், மான்ட்போர்ட் மேல்நிலைப் பள்ளி, சேலம். | ரூ5000 | - |
| 3 | செல்வி பி. கவிதா, சாரதா கல்லூரி, சேலம் | - | ரூ6,500 |
| 4 | செல்வி ஏ. கிருஷ்ணவேணி, சாரதா கல்லூரி, சேலம். | - | ரூ6,500 |

5—

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா 21821—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, செட்டிமாங்குறிச்சியில் கிளை நூல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செட்டிமாங்குறிச்சியின் மக்கள்தொகை 7,145. மக்கள் தொகை அடிப்படையில் நூலகம் திறக்க செட்டிமாங்குறிச்சி தகுதி பெற்றுள்ளது.

எனினும் நூலகம் திறப்பதற்குரிய நிபந்தனைகள் எதுவும் செட்டிமாங்குறிச்சி கிராம மக்களால் நிறைவு செய்யப்படாததால் அங்கு தற்போது கிளை நூலகம் திறப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

6—

**விருது வழங்குதல்**

**வினா 21995—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணுகுண்டு சோதனை வெற்றிகரமாக நடைபெற காரணமாக இருந்த தமிழக விஞ்ஞானிகளான திரு. அப்துல்கலாம் மற்றும் திரு. சிதம்பரம் ஆகிய இருவருக்கும் தமிழக அரசின் சார்பில் அவர்களைப் பாராட்டி, விருது வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

**அரசு நூலகங்கள் கட்டடங்கள் விவரம்**

**வினா 24142—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை அரசு நூலகங்கள் இயங்கி வருகின்றன?

(ஆ) எத்தனை அரசு நூலகங்கள் அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(இ) எத்தனை தனியார் (வாடகை) கட்டடத்தில் இயங்கி வருகின்றன?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 90 அரசு நூலகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) அரசு கட்டடத்தில் 34 நூலகங்கள் (1 மைய நூலகம், 32 கிளை நூலகம், 1 ஊர்ப்புற நூலகம்) இயங்கி வருகின்றன.

(இ) 14 நூலகங்கள் (கிளை நூலகங்கள்) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 42 நூலகங்களில் 41 இலவசக் கட்டடங்களிலும் ஒன்று நடமாடும் நூலகமாகவும் செயல்படுகின்றன.

8—

**பொது நூலகமாக்குதல்**

**வினா 24542—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சியில் உள்ள மன்னர் சரபோசி காலத்து பழங்கால புராதன சின்னமான உப்பரிகை மண்டபத்தைச் சீரமைத்து பொது நூலகமாக ஆக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சியிலுள்ள மன்னர் சரபோசி காலத்து பழங்கால சின்னமான உப்பரிகை மண்டபம், மிகவும் பழமை வாய்ந்த தொன்மைக் கட்டடம் ஆகும். இது மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளதால், இதனைச் சீர்ப்பணி செய்ய அதிக செலவாகும். மேலும் நூலகம் நடத்த இடவசதியில்லை. நூலகம் நடத்த தகுதி இல்லாத கட்டடம் என்பதாலும், ஊராட்சி பராமரிப்பில் உள்ள கட்டடத்தை பொது நூலகத் துறை எடுத்து, சீர்ப்பணி செய்ய அதிக செலவாகும் என்பதாலும், இக்கட்டடம் ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் இருப்பதாலும் இவ்வுப்பரிகை மண்டபத்தை சீரமைத்து பொது நூலகமாக ஆக்கித்தர இயலாது.

9— [1999 நவம்பர் 19

**தேர்வு மையங்கள்**

**வினா 24662—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நடைபெறும் ப்ளஸ் 2, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையங்களில் 100-க்கு அதிகமாக மாணவ/மாணவிகள் தேர்வு எழுதும் மையங்கள் எத்தனை?

(ஆ) 100-க்குக் குறைவாக மாணவ/மாணவிகள் தேர்வு எழுதும் மையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மேல்நிலைத் தேர்வைப் பொறுத்தவரையில் மொத்தம் உள்ள 1300 தேர்வு மையங்களில் சுமார் 1200 தேர்வு மையங்களில் 100-க்கும் அதிகமான மாணவ/மாணவிகள் தேர்வெழுதுகின்றனர். அதே போன்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பொறுத்தவரை மொத்தம் உள்ள 1920 மையங்களில் சுமார் 1800 மையங்களில் 100-க்கும் அதிகமான மாணவ/மாணவிகள் தேர்வெழுதுகின்றனர்.

(ஆ) 100-க்கும் குறைவான எண்ணிக்கையில் மாணவ/மாணவிகள் தேர்வெழுதும் தேர்வு மையங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| மேல்நிலைத் தேர்வு | .. | 100 மையங்கள் |
| எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு | .. | 120 மையங்கள் |

10—

**விளையாட்டு ஊக்க உதவித்தொகை**

**வினா 25556—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஊக்க உதவித்தொகை 1997-98-ல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?



1999 நவம்பர் 19]

(ஆ) இதை அதிகப்படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகள் கல்லூரி/பல்கலைக் கழகத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் மொத்தம் 102 பேருக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதை அதிகப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

**நூலகக் கட்டடம் கட்டும் திட்டம்**

**வினா 26522—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சி கிளை நூலகத்திற்கு நூலகக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சி கிளை நூலகத்திற்குக் காலி மனை பத்திரப் பதிவு செய்து பெறப்பட்டுள்ளது. இந் நூலகத்திற்குக் கட்டடம் கட்ட தற்போது நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. மாவட்ட நூலக ஆணைக்குழுவின் நிதிநிலைமை ஓரளவு சீரடைந்ததும் மேற்படி கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்டப்படும்.

12—

**24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

**வினா 11929—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

சேலம் மாவட்டத்தில் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 70 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இதில் 20 வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகும். இவற்றில் 12 வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரம் ஆரம்ப சுகாதார நிலையங்களாகச் செயல்படுகின்றன.

13—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 18780—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டத்தில் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 250 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 12 ஆரம்ப சுகாதார நிலையங்களும், நாமக்கல் மாவட்டத்தில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்குகின்றன.



14—

### மகப்பேறு மருத்துவமனை திறத்தல்

**வினா 20145—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பேரூராட்சிக்குட்பட்ட புவியூரில் தற்போது பூட்டிக் கிடக்கும் மகப்பேறு மருத்துவமனையை நடப்பாண்டில் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பேரூராட்சிக்குட்பட்ட புவியூர் துணை சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்திற்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. சிற்சில பழுதுகள் நிவர்த்தி செய்ய வேண்டியிருந்ததால் கிராம சுகாதார செவிலியர் வெளியிடத்தில் தங்கி தாய்சேய் நலப்பணிகள் செய்து வந்தார். தற்போது இக்கட்டடத்தின் மின்னிணைப்பு மற்றும் இதர பழுதுகள் சரிசெய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. புவியூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியர் அந்த துணை சுகாதார நிலையத்திலேயே தங்கி பணிபுரிந்து வருகிறார்.

15—

### காமராஜர் மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

**வினா 21236—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அரசு காமராஜர் மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் மற்றும் வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 58 படுக்கைகள் கொண்ட பேராவூரணி அரசு காமராஜர் மருத்துவமனையில் 6 மருத்துவர்கள் மற்றும் 5 செவிலியர்கள், பல் மருத்துவர் 1 உள்ளிட்ட 38 ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போதுள்ள உள்/வெளி நோயாளிகளின் வருகைக்கு இந்த ஊழியர்கள் போதுமானது.

**16—**

**மின் கம்பங்களை மாற்றி அமைத்தல்**

**வினா 24071—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்—பல்லடம் ரோட்டில்-ரோட்டிலேயே மின்கம்பங்கள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை ஓரமாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் — பல்லடம் சாலையில் மின் கம்பங்கள் சாலையின் ஓரமாகவே நடப்பட்டு, விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தன. தற்போது திருப்பூர் நகராட்சி சாலையின் ஓரத்திலிருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டது. ஆகவே இப்பொழுது சாலை மிகவும் அகலமாகவும் மின் கம்பங்கள் நடு ரோட்டில் இருப்பது போலவும் தோற்றமளிக்கிறது.

இந்த மின் கம்பங்களை நகர்த்தி சாலையின் ஓரத்தில் நடுவதற்கு திருப்பூர் நகராட்சியோ நெடுஞ்சாலைத் துறையோ இதுவரை மின்சார வாரியத்தை அணுகவில்லை. அப்படி அவர்கள் கேட்டுக்கொண்டு,



அதற்குண்டான செலவுத் தொகையையும் கட்ட சம்மதித்தால் மின் கம்பங்கள் சாலை ஓரமாக மாற்றி அமைக்கப்படும்.

**17—**

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா 26996—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி ஊராட்சி, கவுண்டனூர் கிராமம், சின்ன கவுண்டன் கொட்டாய் என்ற இடத்தில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சார அள்ளி ஊராட்சி, கவுண்டனூர் கிராமம், சின்ன கவுண்டன் கொட்டாய் குக்கிராமத்திலிருந்து தெரு விளக்குகள் அமைக்க வேண்டி விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் தெரு விளக்குகள் அமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18—**

**சீரான மின்சாரம் வழங்குதல்**

**வினா 27314—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பொம்மியம்பட்டி ஊராட்சிப் பகுதியில் குறைந்த அழுத்த மின்சார விநியோகத்தைச் சரிசெய்து சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பொம்மியம்பட்டி ஊராட்சிக்கு சுமார் 16 கி.மீ. தூரத்திலுள்ள தும்பிப்பாடி துணை மின் நிலையத்திலிருந்து தொப்பூர் 22 கி.வோ. உயர்மின் அழுத்த பாதையின் மூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதிக்கு இதுவரை கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறைந்த மின் அழுத்தம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

பொம்மியம்பட்டி ஊராட்சி பகுதியில் தற்போது 63 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று குடிநீர் தேக்க தொட்டிக்காக ரூ.2,15,880, மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு, மின்பாதை விஸ்தரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு, 63 கே.வி.ஏ. மின் மாற்றி 29-7-1999 அன்று செயலுக்கு கொண்டு வரப்பட்டது. இப்பொழுது குறைந்த மின் அழுத்தம் சரி செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

**19—**

**சீரான மின்சாரம் வழங்குதல்**

**வினா 27315—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் பெரும்பாலான பகுதிகளில் குறைந்த அழுத்த மின்சாரம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு சுமார் 10 கி.மீ.



1999 நவம்பர் 19]

தூரத்திலுள்ள தும்பிப்பாடி துணை மின் நிலையத்தில் இருந்து தொப்பூர் 22 கி.வோ. உயர் மின்னழுத்த பாதையின் மூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் 1997-98-ம் ஆண்டில் இருந்து இதுவரை கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறைந்த மின் அழுத்தம் சரி செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(1) காடையாம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கும்பி நாயக்கனூர் நடுப்பட்டி, எலத்தூர், தளவாய்ப்பட்டி, தாசசமுத்திரம் ஆகிய பகுதிகளில் 63 கே.வி.ஏ. மின் மாற்றிகள் ஆறு எண்ணிக்கைகள் ரூ.20,29,095 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, விவசாய பம்புசெட்டுகள் மற்றும் தொழில் மின் இணைப்புகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(2) காடையாம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ஜோடுகுழி நடுப்பட்டி ஆகிய பகுதிகளில் 63 கே.வி.ஏ. மின் மாற்றிகள் இரண்டும், 100 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்றும் மற்றும் தீவட்டிப்பட்டியில் 100 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்றும் ரூ.10,51,740 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, தொழில் முறை மற்றும் விவசாய மின் இணைப்புகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(3) தீவட்டிப்பட்டியில் 200 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று ரூ.2,97,510 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, தொழில்முறை மின் இணைப்பிற்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(4) டேனிஸ்பேட்டை பகுதியில் 63 கே.வி.ஏ. மின்மாற்றி ஒன்று ரூ.2,19,985 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் டேனிஸ்பேட்டை பகுதியில் புதிய 63 கே.வி.ஏ. மின்மாற்றி ஒன்று ரூ. 2,47,060 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு அப்பகுதிக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**20—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 27367—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

சேலம் மாவட்டத்தில் கோவில் மடங்கள் நிலங்களை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மின்சார பம்புசெட்டுகள் மூலம் 1998 நவம்பர் மாதம் முடிய எவ்வளவு நபர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டத்தில் சேலம் மின் பகிர்மான வட்டத்தில் கோயில் மடங்கள் நிலங்கள் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மின்சார பம்புசெட்டுகள் மூலம் 1998 நவம்பர் மாதம் முடிய 22 நபர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**21—**

**மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள்**

**வினா 27701—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த நிதியாண்டில் தமிழ்நாட்டில் எத்தனை அரசு மருத்துவ மனைகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்?

(ஆ) அதன் விரிவாக்கத்திற்காகச் செலவிடப்படும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இந்த நிதியாண்டில் (1999-2000) தமிழ்நாட்டில் 9 அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

(ஆ) அதன் விரிவாக்கத்திற்காகச் செலவிடப்படும் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 564.30 இலட்சம் ஆகும்.



1999 நவம்பர் 19]

**22—**

**புதிய அனல் மின் திட்டம்**

**வினா 27958—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனல் மின் திட்டம் எத்தனை இடங்களில் செயல்படுகிறது?

(ஆ) புதிய அனல் மின் திட்டங்களின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் எண்ணூர், தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை ஆகிய நான்கு இடங்களில் அனல் மின் திட்டம் செயல்படுகிறது.

(ஆ) எண்ணூரில் 1000 மெ.வா. மின் உற்பத்திக்கான ஒப்பந்தம் 29-10-1998 அன்று கொடுக்கப்பட்டது. செயலாக்க அறிக்கை குறித்த வாரியத்தின் முடிவான குறிப்புகள் செயலாக்க அறிக்கையில் இணைப்பதற்காக ஆலோசகர்களிடம் அனுப்பப்பட்டுள்ளன. விரிவான திட்ட அறிக்கையை ஆலோசகர்கள் எட்டு வாரங்களில் சமர்ப்பிப்பார்கள். தூத்துக்குடியில் 500 மெகா வாட்டுக்கான ஒப்பந்தம் தேசிய அனல் மின் கழகத்திடம் 21-1-1999 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. செயலாக்க அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**23—**

**குதிரை சக்தி 250 ஆக உயர்த்துதல்**

**வினா 28900—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்தும் விதத்தில் அதிக பட்ச குதிரை சக்தி 150 என்று இருப்பதை மீண்டும் மறுபரிசீலனை செய்து 250 ஆக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சாரவாரியம் கூடுதல் செலவை ஏற்று அதிக பளு மின் மாற்றி அமைக்கும் நிலையில் இல்லை. அதிக குதிரை திறன் 150-ல் இருந்து 250 ஆக உயர்த்துவதால் திறன் கூறு (Power factor) குறைகிறது. மின் கம்பிகளினால் ஏற்படும் மின் நஷ்டம் அதிகமாகும் (line loss) எனவே இப்பொழுது இருக்கும் குதிரை திறன் 150-ஐ உயர்த்துவது இயலாது.

24—

## காற்றாலை அமைக்கும் திட்டம்

**வினா 29014—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்ணீர் இறைக்கும் காற்றாலை அமைக்க மத்திய, மாநில அரசு வழங்கும் மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) இதுவரை எவ்வளவு தண்ணீர் இறைக்கும் காற்றாலை நிறுவப்பட்டுள்ளது?

(இ) அதன் செயல்பாடு திருப்தி அளிக்கும் வகையில் உள்ளதா?

(ஈ) மேலும் அத்திட்டத்தைப் பிரபலப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மைய அரசு, எவி.55 ரக நீர் இறைக்கும் காற்றாலை அமைக்க ரூ.45,000-மும் கியர் ரக நீர் இறைக்கும் காற்றாலை அமைக்க ரூ.30,000-மும் மானியமாக வழங்குகிறது. மாநில அரசு நீர் இறைக்கும் காற்றாலை அமைக்க ரூ.20,000-மும் மானியமாக வழங்குகிறது.

(ஆ) தமிழ்நாடு முழுவதும் இதுவரை மொத்தம் 865 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டு உள்ளன.



1999 நவம்பர் 19]

(இ) காற்றாலைகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளன.

(ஈ) நீர் இறைக்கும் காற்றாலை அமைக்க தகுதி வாய்ந்த தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

25—

## வருவாய் அலுவலர் அலுவலகம் தொடங்குதல்

**வினா 27214—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, கருவாக்குறிச்சி கிராமத்தில் (திருவாரூர் மாவட்டம்) வருவாய் அலுவலர் அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு தொகுதியில் உள்ள கருவாக்குறிச்சி கிராமம் உள்ளிக்கோட்டை சரகத்திற்கு உட்பட்டதாகும். எனவே, இக்கிராமத்திற்கு தனியாக வருவாய் அலுவலர் அலுவலகம் இல்லை. மேலும், இது சரகத்தின் மையப் பகுதியாக இல்லாததால் உள்ளிக்கோட்டை சரக தலைமையிடத்தை கருவாக்குறிச்சிக்கு மாற்ற இயலாது. எனவே, கருவாக்குறிச்சி கிராமத்தில் வருவாய் அலுவலர் அலுவலகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

## உள்ளாட்சி அமைப்புகள் வருமானம்

**வினா 12914—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநிலங்களைப் போல் தமிழ்நாட்டிலும் உள்ளாட்சி அமைப்புகளின் வருமானத்தை அதிகரிக்க மாநில அரசு ஏதாவது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைத்துள்ளதா?

[1999 நவம்பர் 19

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று தலவரி முழுவதும் ஊராட்சிகளுக்கு அளிக்கப்படுகிறது. கேளிக்கை வரி மொத்த வருவாயில் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் இடையே 30:70 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. கனிம வளங்கள் தொடர்பாக உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வீட்டுவரி வசூலுக்கு இரண்டு ரூபாய் ஊக்க மானியமாக 1997-98-ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. மேலும் மாநில நிதிக்குழுவின் மான்யமும் சமன்பாடு மற்றும் ஊக்கநிதியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் பத்தாவது நிதிக்குழு மான்யம் மூலம் ஊரக உள்ளாட்சிகளில் மூலதனப்பணிகளை மேற்கொள்ளவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.

**27—**

## ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 17536—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, வவ்வான்தோப்பூரில் உள்ள ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1999-2000 ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் மேற்படி பள்ளிக் கட்டடத்தை எடுத்துச் செய்ய முன்மொழிவு அனுப்ப மேச்சேரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



1999 நவம்பர் 19]

**28—**

## தனி ஊராட்சி மன்றமாகப் பிரித்தல்

**வினா 20009—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், அய்யம்பட்டியைத் தனியாக ஊராட்சி மன்றமாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், அய்யம்பட்டியைத் தனி ஊராட்சி மன்றமாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**29—**

## ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 21358—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் ஒன்றியம் பிள்ளையார்பட்டி ஊராட்சி, மேலவன்தாசாவடி ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்பட்டி ஊராட்சி, மேலவன்தாசாவடி ஊராட்சி

[1999 நவம்பர் 19

ஒன்றிய பள்ளியில் தற்போது 102 குழந்தைகள் பதிவில் உள்ளார்கள். இப்பள்ளியில் தற்போதுள்ள இடவசதி 111 குழந்தைகளுக்குப் போதுமானது. தற்போதுள்ள நிலையில் கூடுதல் கட்டடம் கட்ட அவசியமில்லை. குழந்தைகளின் பதிவு அதிகரிக்கப்படின், கூடுதல் இடவசதி தேவைப்படின், முன்னுரிமை அடிப்படையில் ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**30—**

**ஜீவன்தாரா கிணறு திட்டம்**

**வினா 21787—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் ஜீவன்தாரா கிணறு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் எத்தனை ஆதிதிராவிடர்கள் பயனடைந்தனர்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1997-98-ம் ஆண்டிற்கு பத்து இலட்சம் கிணறுகள் திட்டத்தின் கீழ் ரூ.1.71 கோடி ஒதுக்கீடாகப் பெறப்பட்டு ஜீவன்தாரா கிணறுகள் 90-க்கு கிணறு ஒன்றுக்கு ரூ.42,000 வீதம் மொத்தம் ரூ.37,80,000 செலவு செய்யப்பட்டது. மேலும், நீராதார திட்டப் பணிகள் (Water Harvesting Structure) 55-ம் ரூ. 1.34 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டது.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட 60 கிணறுகளில் 41 ஆதிதிராவிடர் இனத்தவரும் 19 பழங்குடி இனத்தவரும் பயனடைந்துள்ளனர்.



1999 நவம்பர் 19]

**31—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 22117—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கட்டுவான்பிறை கிராமத்தில் 25 தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கட்டுவான்பிறை கிராமத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டு திட்ட வரைமுறைக்குட்பட்டு நிதி நிலைமைக்கு ஏற்ப தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**32—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 22198—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், வள்ளிபுரம் கிராமம், முத்துநகரில் கடும் குடிநீர் பஞ்சம் நிலவுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்போது குடிநீர் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வள்ளிபுரம் ஊராட்சியைச் சேர்ந்த முத்துநகர் குடியிருப்பில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) மின்விசைத் திட்டம்

நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தின் நீராதாரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 12/1999-ல் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ.7.00 இலட்சம் ஆகும்.

33.—

**பள்ளிக்கூடம் செப்பனிடல்**

**வினா 22437—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, கறம்பக் குடி ஒன்றியம், குளந்திரான்பட்டு ஊராட்சியைச் சார்ந்த, கட்டுவான்பிறை கிராமத்திலுள்ள பள்ளிக்கூடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், குளந்திரான்பட்டு ஊராட்சியைச் சார்ந்த கட்டுவான்பிறை கிராமத்திலுள்ள பள்ளிக்கூடம் பழுதடைந்துள்ளதை ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து செப்பனிடுவதற்கு கறம்பக்குடி, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

34—

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 23285—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, பஞ்சப்பாண்டியூர் கிராமத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி பழுதடைந்துள்ளதால் புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, பஞ்சப்பாண்டியூர் கிராமத்தில் பழுதடைந்துள்ள மேல்நிலைத் தொட்டி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்பொழுது பயனில் இருந்து வருகிறது. மேலும் நடப்பாண்டில் (1999-2000) புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான நீராதாரம் தோற்றுவிக்க ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

35—

**குடிநீர் வழங்குதல்**

**வினா 23288—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சி, பகுதி ராயப்ப நாடாரூர் கிராமத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சி, பகுதி ராயப்ப நாடாரூர்

[1999 நவம்பர் 19

கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) நீராதாரம் உருவாக்கி உயர் மட்ட தொட்டி மற்றும் பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் வழங்கப்பட உள்ளது. இதற்கான நீராதாரம் தோற்றுவிக்க புவியியல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**36—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 23291—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி மூன்று வாய்க்கால் கிராமத்தில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக்கொண்டு செங்கோட்டை வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் புதூர் கிராம பேரூராட்சியின் அனைத்துப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளது.

**37—**

### மேல் நிலை குடிநீர்த் தொட்டி அமைத்தல்

**வினா 24403—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சி, ராஜாளி விடுதி கிராம கிழக்குப் பகுதி மக்களின் 600 பேரின் குடிநீர் பிரச்சினையைப் போக்க ஒரு சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, திருவோணம் ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சி, ராஜாளி விடுதி கிராமத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் (1999-2000) புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

**38—**

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித் தருதல்

**வினா 24420—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மணிக்கிரன்விடுதி, அம்பலக்காரத்தெரு, மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மணிக்கிரண் விடுதி, அம்பலக்காரத்தெரு குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மின் இணைப்பு மட்டும் பெற வேண்டியுள்ளது. விரைவில் மின் இணைப்பு பெற்று திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**39—**

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா 24421—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

தஞ்சாவூர் மாவட்டம், ஆழிவாய்க்கால் ஊராட்சி, தெற்கு நத்தம் கிராமம், நடுத்தெரு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஆழிவாய்க்கால் ஊராட்சி, தெற்கு நத்தம் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நீர் ஆதாரம் ஏற்படுத்தப்பட்டு ரூ. 6.65 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட்டு நடப்பு நிதியாண்டில் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

40—

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா 24423—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கோட்டைக்காடு கிராமம், ஆதிதிராவிடர் தெரு காலனிக்குக் கூடுதலாக ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கோட்டைக்காடு கிராமம், வெங்கரை ஆதிதிராவிட தெருவிற்கு நடப்பு நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மின் இணைப்பு மட்டும் பெற வேண்டியுள்ளது. விரைவில் மின் இணைப்பு பெற்று திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.



1999 நவம்பர் 19]

41—

### பூங்கா அமைத்தல்

**வினா 25506—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகூர் கடற்கரைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதால் அங்கு பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகூர் கடற்கரைக்கு அருகே ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மூலமாக பூங்கா அமைத்துக் கொடுக்கத் திட்டம் உள்ளது.

42—

### புதிய வகுப்பறைகள் கட்டித் தருதல்

**வினா 25740—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முத்தாரம்பாளையம் ஊராட்சி, செட்டிப்பாளையம் முத்தாரம்பளையம் தொடக்கப் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) எப்போது புதிய வகுப்பறைகள் கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் முத்தாரம்பாளையம் ஊராட்சி, செட்டிப்பாளையம் முத்தாரம்பாளையம் தொடக்கப் பள்ளிகளில் போதுமான வகுப்பறைகள் கட்டும் பணி, ஜவஹர் வேலைவாய்ப்புத்

[1999 நவம்பர் 19

திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 1999-2000-ம் ஆண்டில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

43—

**தொடக்கப் பள்ளிக் கட்டடம் செப்பனிடல்**

**வினா 25864—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை தெற்கு ஊராட்சி, அனந்தகோபாலபுரம் தென்பாதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை தெற்கு ஊராட்சி, அனந்தகோபாலபுரம் தென்பாதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி கட்டடத்தை பழுதுபார்க்கும் பணியினை 1999-2000 ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க சம்பந்தபட்ட வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அறிவுரை வழங்குமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

44—

**குடிநீர் வழங்குதல்**

**வினா 26067—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, ஆணையப்பபுரம், புதுக்குறிச்சி, கீரன்குளம் மற்றும் திருமலாபுரம் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆணையப்பபுரம், புதுக்குறிச்சி ஆகியவற்றிற்கு இத்திட்டம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படவில்லை. வரும் நிதியாண்டில் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

*கீரன்குளம்:* நடப்பு நிதியாண்டில் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீராதாரம் தோற்றுவிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நீராதாரம் தோற்றுவித்ததுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

*திருமலாபுரம்:* நடப்பு நிதியாண்டில் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வசதி செய்து தருவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.

45—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 26071—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், புளிமாந்தாங்கல் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1999 நவம்பர் 19

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசை திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

**46—**

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா 26479—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காவாளிப்பட்டி ஊராட்சி, மணிக்கிரான்விடுதி ஆதிதிராவிடர் தெரு மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு சிறிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காவாளிப்பட்டி ஊராட்சி, மணிக்கிரான்விடுதி ஆதிதிராவிடர் தெரு குடியிருப்புக்கு நடப்பு நிதி ஆண்டில் (1999-2000) புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

**47—**

### தொடக்கப் பள்ளிக் கட்டடம் செப்பனிடல்

**வினா 26890—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கருப்பட்டிபட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கருப்பட்டிபட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தை நடப்பு நிதியாண்டில் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**48—**

### கூடுதலாக மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 26899—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், தெற்கு நத்தம் கிராமத்திற்குக் கூடுதலாக ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சியில் உள்ள தெற்கு நத்தம் (புதியது) கிராமத்தின் தற்போதைய மக்கட் தொகை 500 ஆகும். நத்தம் குடியிருப்பில் பயனில் உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து தற்போது தெற்கு நத்தம் குடியிருப்புப் பகுதிக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. ஆனால், குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. நடப்பு நிதியாண்டில் (1999-2000) தெற்கு நத்தம் புதிய குடியிருப்புகளுக்கு தனி மின்விசை திட்டம் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட உள்ளது. ரூ.6.65 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட உள்ளது. விரைவில் திட்டம் செயலாக்கப்படும்.

[1999 நவம்பர் 19

**49—**

## சிவகாமிபுரத்தில் மேல் நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 26900—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் ஒன்றியம், வண்ணாரப்பேட்டை ஊராட்சி, சிவகாமிபுரத்தில் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் ஒன்றியம், வண்ணாரப்பேட்டை ஊராட்சி, சிவகாமிபுரத்தில் தற்போதைய மக்கட் தொகை 1300 ஆகும். தன்னிறைவு திட்டத்தின்கீழ் ஒரு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு 1998-99 ஆம் ஆண்டு ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு உள்ளது. தற்சமயம் வழங்கும் குடிநீரின் அளவு 40 எல்.பி.சி.டி. ஆகும். மேற்கண்ட திட்டத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. எனவே, மேலும் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டத் தேவையில்லை.

**50—**

## மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 27274—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, வல்லம் பேரூராட்சி, ரெட்டிப்பாளையம் மற்றும் பெரியார் நகர் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஆழ்குழாய் கிணறு மூலம் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

| வரிசை எண் (1) | வாகன எண் (2) | உரிமம் பெற்றவர்களின் பெயரும், முகவரியும் (திருவாளர்கள்) (3) | வழித்தடம் (முதல்) (4) | (வரை) |
|---|---|---|---|---|
| 71 | TN 28 S 1604 | எம். அன்பழகன், ராசிபுரம் | ஒ. சௌதா புரம் | - குபிச்சி பாளையம் |
| 72 | TN 591B 9239 | வி.ஆர். சண்முகம், நாமக்கல் | பாலபட்டி உயர்நிலைப் பள்ளி | - மூன்றுசாலை |
| 73 | TN 28 E 7977 | ஆர்.கே. அன்பழகன், நாமக்கல் | புதன் சந்தை கேட் | - துத்திகுளம் |
| 74 | TN 27 V 5344 | கே. கருப்பணன், சங்கரி, நாமக்கல் | முதலை பழையூர் | - சங்கரிசாலை குமாரபாளையம் ராஜம் திரையரங்கம் |
| 75 | KA 01 A 4277 | ஆர். ரவிச்சந்திரன், நாமக்கல் | நாமக்கல் பேருந்து நிலையம் | - ராமு உதயம் |
| 76 | KL 10 D 1711 | டி. ஈஸ்வரகுமாரி, நாமக்கல் | கீரையூர் | - தட்டிப்பாளையம் |
| 77 | TN 33 B 3366 | சீ. தங்கவேலு, நாமக்கல் | நாமக்கல் பேருந்து நிலையம் | - கரடிபட்டி |
| 78 | TN 28 E 8363 | எஸ். பாலசுப்பிரமணி, நாமக்கல் | மோசனூர் அண்ணாசிலை | - கருக்கமடை |
| 79 | KL 10 C 2679 | ஆர். கவிதா, நாமக்கல் | நாமக்கல் பேருந்து நிலையம் | - பெருமாபட்டி |
| 80 | TN 28 8929 | ஆர். சுலோசனா, ராசிபுரம் | ராசிபுரம் | - குள்ளாண்டிகாடு அருந்ததியர் குடியிருப்பு |
| 81 | TDW 606 | எஸ். முகமதுஹபீப், நாமக்கல் | நாமக்கல் பேருந்து நிலையம் | - இராமுடையனூர் |



2,21,204

| வரிசை எண் (1) | வாகன எண் (2) | உரிமம் பெற்றவர்களின் பெயரும், முகவரியும் (3) (திருவாளர்கள்) | வழித்தடம் (முதல்) (4) | (வரை) |
|---|---|---|---|---|
| 82 | TN 28S 951 | கே.பி. இராமசாமி, ராசிபுரம் | நாமகிரி பேட்டை | —ராசிபுரம் பேருந்துநிலையம் |
| 83 | TN 41 8259 | எ. மன்சூரலி, நாமக்கல் | நாமக்கல் பேருந்து நிலையம் | - கே.கே.பி. ஸ்பின்னிங் மில் |
| 84 | TN 28E 6841 | எம். அபுசலாகி, நாமக்கல் | பண்ணைக் காரன் பட்டி கோம்பை | - வலையபட்டி |
| 85 | KL 10D 3384 | பி. செல்வராஜ், ராசிபுரம் | ராசிபுரம் | —பிள்ளநல்லூர் |
| 86 | KA 19 1696 | எஸ். மோகன், நாமக்கல் | திருச்செங்கோடு குமாரபுரம் | -உஜ்ஜன்னகாளி |
| 87 | TCM 8809 | எஸ். பழனிச்சாமி, திருச்செங்கோடு | வையப்பமலை | - சௌதாபுரம் |
| 88 | TN 36C 5655 | எஸ்.பி.வி. நடராஜன், நாமக்கல் | குமாரபாளையம் பழைய பேருந்து நிலையம் | - இளயம்பாளையம் |
| 89 | KL 11A 9558 | எம். அபுசலாகி, நாமக்கல் | எருமைபட்டி மாரியம்மன் கோவில் | —கெட்டிமேடு |
| 90 | KA 19 1741 | ஆர். தனலட்சுமி, திருச்செங்கோடு | இறச்சி பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் | —எட்டிமடை - |
| 91 | KL 11A 4410 | பி. சண்முகசுந்தரம், ராசிபுரம் | கண்ணலை பட்டி | - ஒண்டிகடை |
| 92 | TN 28R 2075 | எஸ். செந்தில்குமார், திருச்செங்கோடு | எரப்பநாய்க்கன் பாளையம் பிரிவு | -திருச்செங்கோடு |
| 93 | TN 28R 1525 | எ. இரகுநாதன், திருச்செங்கோடு | தொக்கவடி முனியப்பன் கோவில் | —திருச்செங்கோடு |
| 94 | TN 28R 1719 | டி.எல். ஜெகதீசன், திருச்செங்கோடு | திருச்செங் கோடு டி.சி.எம்.எஸ். | —அனிமூர் |



| வரிசை எண் (1) | வாகன எண் (2) | உரிமம் பெற்றவர்களின் பெயரும், முகவரியும் (3) (திருவாளர்கள்) | வழித்தடம் (முதல்) (4) | (வரை) |
|---|---|---|---|---|
| 95 | TN 29X 2303 | கே.பி. இராமசாமி, ராசிபுரம் | நாமகிரி பேட்டை | —சிங்களந்தைபுரம் அரசுப்பள்ளி |
| 96 | TN 28R 3153 | டி. தனலட்சுமி, திருச்செங்கோடு | ஆவரங்காடு அக்னி மாரியம்மன் கோவில் | —பள்ளிப்பட்டு |
| 97 | TN 28R 0895 | கே. கலைமதி, ராசிபுரம் | சீரப்பள்ளி | —கேடமலை (புதுப்பட்டி) |
| 98 | TN 28V 9097 | என். சுரேஷ், திருச்செங்கோடு, | மொலசி | —கண்டம் பாளையம் |
| 99 | TN 39F 4555 | எஸ். பழனியப்பன், திருச்செங்கோடு | எஸ்.பி.பி. குடியிருப்பு | —பள்ளக்க பாளையம் |
| 100 | TN 27V 7167 | கே. கருப்பண்ணா, சங்கரி | முதலைப் பள்ளையூர் | —பள்ளிப்பாளையம் மீனா திரையரங்கம் |
| 101 | TN 67V 7166 | கே. கருப்பண்ணா, சங்கரி | பள்ளிப் பாளையம் மீனா திரையரங்கம் | —முதலைபள்ளையூர் |
| 102 | TN 28S 1438 | மோகனசுந்தரம், நாமக்கல் | மாவூர் | —முள்ளுகுறிச்சி |
| 103 | TN 27D 5522 | எம். ஜகமேல் ஆனந்தர், நாமக்கல் | வெங்கமேடு பிள்ளையார் கோவில் | —வசந்தபுரம் |
| 104 | TN 28R 1839 | எ. ஆதப்பன், திருச்செங்கோடு | சங்கரி ஆர்.எஸ். (அஞ்சலகம்) | —குமாரமங்கலம் |
| 105 | TN 31A 6147 | பி. குமார், ராசிபுரம் | முள்ளுகுறிச்சி (மலைவாழ் மக்கள்) | —வரகூர் கோப்பை |
| 106 | TN 28R 2248 | எஸ். தங்கம்மாள், திருச்செங்கோடு | பாப்பம் பாளையம் | —அய்யா கவுண்டர் |
| 107 | TDY 7345 | எஸ்.ஆர். முருகேசன், ராசிபுரம் | ராசிபுரம் பேருந்து நிலையம் | —அய்யக்கவுண்டம் பாளையம் பிரிவு |
| 108 | TDM 6131 | பி. செல்வராஜ், ராசிபுரம் | ராசிபுரம் சாமுண்டி | —போத்தமலை அடிவாரம் |

[1999 நவம்பர் 19

| *வரிசை எண் (1)* | *வாகன எண் (2)* | *உரிமம் பெற்றவர்களின் பெயரும், முகவரியும் (3) (திருவாளர்கள்)* | *வழித்தடம் (முதல்)* | *(வரை) (4)* |
|---|---|---|---|---|
| | | | | திரையரங்கம் |
| 109 | TN 27 6878 | கெ. கலாமதி, ராசிபுரம் | மங்களாபுரம் சந்தை | —கணவை |
| 110 | TN 27 6979 | பி. கந்தசாமி, ராசிபுரம் | ஓரம்பு | —மதுருட்டு |
| 111 | TN 07Y 2116 | பி. கந்தசாமி, ராசிபுரம் | மங்காபுரம் தக்காளி சந்தை | —கோம்பை கணவை |
| 112 | TN 39C 5337 | என். பழனிச்சாமி, திருச்செங்கோடு | பள்ளிப் பாளையம் பேருந்து நிலையம் | —பாரதி நகர் |
| 113 | KL 10D 4435 | கே.வி. இராமசாமி, திருச்செங்கோடு | வையப்பமலை | —கூத்தாண்டர் |
| 114 | TN 28R 891 | கே.பி. இராமசாமி, ராசிபுரம் | நாமகிரிப் பேட்டை | —குறையாறு |
| 115 | TN 28Z 4181 | பி. குமார், ராசிபுரம் | மேத்தலா | —நரைக்கிணறு |

| | |
|---|---|
| வழங்கப்பட்ட மொத்த உரிமம் | 115 |
| திரும்ப ஒப்படைக்கப்பட்ட உரிமம் | 5 |
| தற்போது இயங்கும் சிற்றூந்துகள் | 110 |

**64—**

### பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா 26472—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி - தளவாய்புரம் (வழி) சங்கரன் கோவில் தென்மலை, இனாம்கோவில்பட்டி சென்று வந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில், கரிவளம் வந்தநல்லூர், தென்மலை, இனாம்கோவில்பட்டி வழியாக தளவாய்புரத்திற்கு பரீட்சார்த்தமாக இயக்கப்பட்ட பேருந்தை அப்பகுதிகளிலிருந்து திருநெல்வேலிக்கு நேரடிப் பயணிகள் பயன்படுத்தாததாலும், பயணிகள் போதிய அளவு இல்லாதிருந்ததாலும், குறைந்த வருவாய் ஈட்டியதாலும் இப்பேருந்து 4 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும், இப்பேருந்து இயக்கப்பட்ட வழித்தடத்தில் பகுதி பகுதியாக தற்போது கீழ்க்கண்டவாறு பேருந்து வசதிகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி-கரிவலம் வந்தநல்லூர் | .. 100 க்கு மேற்பட்ட சுற்றுக்கள். |
| 2. | கரிவலம்-தென்மலை (வழி) பருவக்குடி விளக்கு | 16 சுற்றுக்கள். |
| 3. | கரிவலம்-துரைசாமிபுரம் | .. 24 சுற்றுக்கள் |
| 4. | தென்மலை-தளவாய்புரம் | .. 8 சுற்றுக்கள் |
| 5. | இனாம் கோவில்பட்டி-தளவாய்புரம் | .. 18 சுற்றுக்கள் |

எனவே, திருநெல்வேலியிலிருந்து சங்கரன்கோவில், கரிவளம், வந்தநல்லூர், தென்மலை, இனாம்கோவில்பட்டி வழியாக தளவாய்புரத்திற்கு, இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

**65—**

### சாலை விதிகள்

**வினா 27941—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுமக்கள் சாலை விதிகளைப் பேணி நடக்க அரசு சார்பில் எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுநர்கள், இருசக்கர வாகன ஓட்டுநர்கள் மற்றும் பிற வாகன ஓட்டுநர்கள் கடைப் பிடிக்க வேண்டிய சாலை விதிகளையும், இவ்விதிகளை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தும் வகையிலும், சாலைப் பாதுகாப்பை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் துண்டு பிரசுரங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மூலம் (Through Sponsers) அச்சிட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. சாலை விதிகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் வீடியோ படங்கள், வேன்களின் மூலம் நகரில் பல பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களுக்கு காட்டப்படுகிறது. சாலைப் பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. அப்போது சாலைப் பாதுகாப்பைப் பற்றிய கருத்தரங்கம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு மேற்கண்ட தலைப்பில் பேச்சு, வினா விடை போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. சாலை விதிகளை மீறுபவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும், பள்ளி மாணவர்கள் போக்குவரத்து வளாகத்திலுள்ள குழந்தைகள் போக்குவரத்து பூங்காவிற்கு அழைத்து வரப்பட்டு போக்குவரத்து விதிகளைப் பற்றியும் போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் போதிக்கப்படுகிறார்கள்.

66—

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா 7243—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஞ்சாம்பாளையம் மூலக்கடையிலிருந்து கல்வடங்கம், பூலாம்பட்டியில் இருந்து குமாரபாளையம் ஆகிய இடங்களுக்கு போகும் பாதைகளில் இருபுறங்களிலும் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குஞ்சாம்பாளையம் மூலக்கடையிலிருந்து, கல்வடங்கம் பூலாம்பட்டியில் இருந்து குமாரபாளையம் ஆகிய இடங்களுக்கு போகும் பாதையில் இரு புறங்களிலும் இருந்த ஆக்கிரமிப்புகள் கடந்த வருடம் 15-5-1998 அன்று அகற்றப்பட்டுவிட்டன.

67—

## சாலை செப்பனிடல்

**வினா 19796—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கம்பம் தொகுதியைச் சேர்ந்த கம்பமெட்டு சாலை தமிழக வியாபார மக்கள் கேரளாவிற்கு சென்று வரும் இந்த சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால், அதனைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கம்பம்-கம்பமெட்டு சாலையானது 12.80 கி.மீ. நீளமுடைய பெரிய மாவட்டச் சாலையாகும். மேற்படி சாலையில் கி.மீ.0/0-4/0 வரையுள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள கி.மீ.4/0-12/0 வரையுள்ள பகுதிகளை மேம்பாடு செய்ய ரூ.25.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. மேற்படி சாலைப் பகுதி மேம்பாடு பணிகள் நிதி ஒதுக்கீடு பற்றாக்குறை காரணமாக சென்ற நிதியாண்டில் செயல்படுத்த தாமதமானது. நடப்பு நிதியாண்டில் மேற்படிப் பணிகளை துரிதமாக முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு சாலை நல்ல முறையில் பராமரிக்கப்படும். கி.மீ.12/0-12/8 நீளத்திற்கு சாலையில் அவ்வப்போது தார் நொடிகள் போடப்பட்டு

பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியை (0.8 கி.மீ) மேம்பாடு செய்ய ரூ.3.00 இலட்சம் தேவை. நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணி எடுத்துக் கொள்ள வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

**68—**

### தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா 23930—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உபகோட்டம், சிவநாடானூர் கி.மீ.0/2, 1/6 காசிமேஜர்புரம் குத்துக்கல்வலசை சாலையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடுப்புச்சுவர் கட்ட கோரியுள்ள இடம் சிவநாடானூர் சாலை கி.மீ.0/0-2/4-ல் உள்ள இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/2-ல் 50 மீட்டர் நீளத்திற்கும் கி.மீ.1/6-ல் ஓடையுடன் இருபுறமும், 100 மீட்டர் நீளத்திற்கும் தடுப்புச்சுவர் கட்ட ரூ.3.00 லட்சம் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) தேவைப்படும் இந்நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

**69—**

### தார்ச்சாலை அமைத்தல்

**வினா 23946—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம் கீழஇலஞ்சி முதல் பெரிய சாலை வரையிலான சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலமாக கிராமச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக மாற்றியமைத்து செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீழஇலஞ்சி பெரிய சாலை கி.மீ. 0/0-1/0 இலஞ்சி பேரூராட்சி பராமரிப்பின்கீழ் உள்ள சாலையாகும். தற்போது இச்சாலை இலஞ்சி பேரூராட்சி மூலம் தார்ச்சாலையாக மாற்றப்பட்டு உள்ளது.

**70—**

### இணைப்புச் சாலை அமைத்தல்

**வினா 23952—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி-செங்கோட்டைக்கு இலஞ்சி வழியாக செல்லும் சாலையிலிருந்து தென்காசி பேருந்து நிலையம் அருகே உள்ள சீவலப்பேரி குளத்தின் கரை வழியாக இணைப்புச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி மாநிலச் சாலையான திருநெல்வேலி - செங்கோட்டை—கொல்லம் சாலை கி.மீ.54/4-ல் பிரிந்து தென்காசி இணைப்புச் சாலையில் கி.மீ.0/4-ல் இணையும் பகுதியாகும். இச்சாலையின் நீளம் 800 மீட்டர் ஆகும். இப்பகுதி முழுவதும் தனியார் விளை நிலங்கள் மற்றும் நகரின் முக்கிய குடியிருப்புகள் அமைந்துள்ளன. எனவே, இந்த இடத்தில் நிலத்தை கையகப்படுத்துவது இயலாது. எனவே, சீவலப்பேரி குளத்தின் கரை வழியாக இணைப்புச் சாலை அமைக்க வாய்ப்புகள் இல்லை.

[1999 நவம்பர் 19

71—

## சாலையில் மரங்கள்

**வினா 23953—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி-அம்பாசமுத்திரம் சாலையில் தென்காசி உபகோட்டத்திற்கு உட்பட்ட சாலையில் இருபுறமும் மரக்கன்றுகளை நடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாநிலச் சாலையாக திருச்செந்தூர்—பாளையங்கோட்டை அம்பாசமுத்திரம் - தென்காசி - செங்கோட்டை சாலை கி.மீ.115/0—123/8 வரையுள்ள சாலையாகும். இச்சாலையில் இருபுறமும் அதிக அகலமுள்ள இடங்களில் மரக்கன்றுகளை இந்நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து நடப்படும்.

72—

## சாலை புதுப்பித்தல்

**வினா 23954—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி, திருநெல்வேலி, செங்கோட்டை-கொல்லம் சாலையில் (T.T.S.Q. Road) கி.மீ. 120/0 லிருந்து கி.மீ.120/4 வரை கி.மீ. 121/6-லிருந்து கி.மீ.122/0 வரை கி.மீ. 113/0-லிருந்து கி.மீ. 114/0 வரை செங்கோட்டை—கொல்லம் சாலையிலிருந்து கற்குடி செல்லும் சாலை கி.மீ. 0/0-லிருந்து கி.மீ. 2/2 வரையிலான சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலை மற்றும் இச்சாலையில் பிரிந்து கற்குடி செல்லும் சாலையினை மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.15.50 இலட்சம் தேவைப்படும் ஆண்டுதோறும் சாலை பராமரிப்புக்கு என ஒதுக்கப்படும் நிதியிலிருந்து நிதி நிலைக்கேற்ப பகுதி பகுதியாக புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கிடையில் சாலையில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர்செய்து போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

73—

## பாலம் அமைத்தல்

**வினா 23959—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தென்காசி சாலையில் கி.மீ. 31/0-ல் உள்ள பாலம் கி.மீ. 26/0 திரவியநகர் அருகேயுள்ள பாலம் கி.மீ. 31/8-ல் பாலம் வெள்ளத்தினால் பாதிப்பு அடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதியதாக அவ்விடங்களில் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம்-தென்காசி சாலையில் கி.மீ. 31/0-ல் உள்ள பாலத்தினை ஆர்.சி.சி. பாலமாக கட்ட ரூ.18.00 இலட்சமும் கி.மீ. 26.0 திரவியநகர் அருகே உள்ள பாலத்தினை 7.00 மீ. கண்கொண்ட ஒரே பாலமாகக்கட்ட ரூ.14.00 இலட்சமும் கி.மீ. 31/8 உள்ள பாலத்தினை 15 மீ. கண்கொண்ட ஒரே பாலமாகக் கட்ட ரூ.60.00 இலட்சங்களும் தேவைப்படும். ஆண்டுதோறும் பகுதி-2 திட்டங்களுக்கு குறைந்தளவே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் இப்பணியை அண்மைக்காலங்களில் எடுத்து செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

**வேகத்தடை அமைத்தல்**

**வினா 23962—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை-பாவூர்சத்திரம் நெடுஞ்சாலையில் குழந்தை ஏசு மழலையர் பள்ளி அருகே வேகத்தடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேகத்தடை அமைக்கக் கோரியுள்ள இடம் பாவூர்சத்திரம் வெள்ளக்கால் சுரண்டை சாலையில் (அரசு பெரிய மாவட்டச் சாலை) கி.மீ.0/4-ல் உள்ளது. அரசு சாலைகளில் வேகத்தடை அமைக்கத் தடையுள்ளதால் இவ்விடத்தில் வேகத்தடை அமைக்க இயலாது. இருப்பினும், வேகத்தடைக்குப் பதிலாக "பள்ளிப் பகுதி - வாகனங்கள் மெதுவாகச் செல்லவும்" என்று எச்சரிக்கைப் பலகை வைக்கவும் சாலையின் குறுக்கே வெள்ளை வண்ணக் குறுக்குக் கோடுகள் போட்டுத்தரவும் (Zebra lines) நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

75—

**சாலைகளை கிராம நெடுஞ்சாலைத் துறையில் சேர்த்தல்**

**வினா 28860—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மறுகால்குறிச்சிக்கு தேசிய நெடுஞ்சாலை என்.எச். 7 ரோட்டில் இருந்து செல்லும் சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாக உள்ளதை கிராம நெடுஞ்சாலைத் துறையில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்ட சாலை மதுரை-கன்னியாகுமரி (என்.எச்.7) சாலையிலிருந்து பிரிந்து, மறுகால்குறிச்சி செல்லும் சாலை என்பதாகும். இச்சாலையின் மொத்த நீளம் 2.00 கி.மீ. ஆகும். இச்சாலை நாங்குநேரி ஊராட்சி ஒன்றிய பராமரிப்பின் கீழ் உள்ள ஒன்றிய தார்ச்சாலையாகும். ஊராட்சி ஒன்றியத்தினால் ஏற்கெனவே தார்ச்சாலையாக மாற்றப்பட்ட இச்சாலையை மீண்டும் தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய கிராமச்சாலைத் துறை விதிமுறைகளின்படி வழிவகை இல்லை.

76—

**கோவில் நிலங்கள்**

**வினா 22732—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை கையகப்படுத்தி அரசுத்துறைக்குத் தேவையான கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோவில் நிலங்களை கையகப்படுத்தி அரசுத்துறைக்குத் தேவையான கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

77—

**குளம் பாதுகாத்தல்**

**வினா 23365—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு ஒன்றியம், கீழ்வலசை கிராமத்தில் பாழடைந்து தூர்ந்து கிடக்கும் அரிய சிற்பங்கள் காணப்படும் குளத்தை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இரண்டு வீரர்களின் சிற்பங்கள் மட்டும் காணப்படும் இக்குளம் அண்மைக் காலத்தைச் சேர்ந்தது. எனவே, பழங்கால நினைவுச் சின்னமாகப் பாதுகாக்க இக்குளம் ஏற்றதாக இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**78—**

### தொழிற்சாலைகளை இயக்குதல்

**வினா 22699—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பி.ஐ.எப்.ஆர். யூனிட்டாக உள்ள தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றை சிக்கலில்லாமல் இயங்க வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1985-ம் வருட நலிவடைந்த நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 29-7-1999 அன்றுள்ள நிலவரப்படி பி.ஐ.எப்.ஆர். யூனிட்டாக பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள் 224 ஆகும்.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள எந்த நிறுவனத்தையும் அரசு பி.ஐ.எப்.ஆர்.-க்கு அனுப்பவில்லை. ஒரு நிறுவனம் நலிவடைந்து, புனரமைப்பு செய்ய எத்தனிக்கும் பட்சத்தில் அந்த நிறுவனத்தின் நிர்வாகம் புனரமைப்பு வாரியத்திற்கு (பி.ஐ.எப்.ஆர்) Sick Industries Companies (Special provisions) Act, 1985-ன்கீழ் மனு செய்யும். அவ்வாறு செய்யப்படும் மனுவுடன் நிர்வாகம் தனியாகவோ அல்லது வேறு ஒருதொழில் முனைவோருடன் இணைந்தோ புனரமைப்புத் திட்டம் ஒன்றைப் புனரமைப்பு வாரியத்தின் (பி.ஐ.எப்.ஆர்) பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கும். அந்தத் திட்டத்தை புனரமைப்பு வாரியம் பரிசீலித்து தகுதியின் அடிப்படையில் திட்டத்தை ஏற்கவோ அல்லது திட்டத்தை மறுத்து Operating Agency மூலம் வேறு புனரமைப்புத் திட்டத்தை விருப்பமுள்ள வேறு பிற தொழில் முனைவோரிடமிருந்து கோரலாம். அவ்வாறு, வேறு தொழில் முனைவோர் எவரும் அக்கரை காட்டாமல் இருக்கும் பட்சத்தில் நிறுவனத்தை கலைத்திட பி.ஐ.எப்.ஆர். பரிந்துரைக்கும்.





மேற்கண்ட நடவடிக்கைகளில் (Procedure) அரசு தலையிட வழியில்லை. ஆனால், அந்நிறுவனத்தை அரசே ஏற்று நடத்த விரும்பினால் அந்நிலையில் மட்டும் அரசு பி.ஐ.எப்.ஆர். முன்பு Operating Agency மூலம் புனரமைப்புத் திட்டம் தாக்கல் செய்து அதற்கு பி.ஐ.எப்.ஆர் ஒப்புதல் அளித்தால், அந்நிறுவனத்தை அரசு இயக்க வாய்ப்புள்ளது. இது அரசுக் கொள்கை முடிவு பற்றியதாகும். தற்போது இத்துறை மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை ஏதுமில்லை.

**79—**

### விஸ்கோஸ் தொழிற்சாலை

**வினா 28621—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, சிறுமுகை விஸ்கோஸ் தொழிற்சாலை முறையாக இயங்கி வருகிறதா?

(ஆ) அவர்களது சுத்திகரிப்புப் பணி முடிந்து விட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை, சிறுமுகை விஸ்கோஸ் தொழிற்சாலை முறையாக இயங்கி வருகிறது.

[1999 நவம்பர் 19

(ஆ) சுத்திகரிப்பு பணி முடிந்து 4-6-1999 முதல் பல்ப் பிளான்ட் இயங்கி வருகிறது.

80—

**கள்ளச் சாராய விற்பனை**

**வினா 23869—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1-1-1998 முதல் 30-6-1998 முடிய தமிழ்நாட்டில் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபட்டவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டு உள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

1-1-1998 முதல் 30-6-1998 முடிய தமிழ்நாட்டில் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கள்ளச்சாராய விற்பனை செய்தமைக்காக கைது செய்யப்பட்டவர்கள் 284 பேர்கள் ஆகும். இதில் ஆண்கள் 194, பெண்கள் 90 பேர்களாகும்.

81—

**வட்ட முன்சீப் நீதிமன்றம் அமைத்தல்**

**வினா 25237—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் வட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.



1999 நவம்பர் 19]

82—

**மாவட்ட நீதிமன்றங்கள் தொடங்குதல்**

**வினா 27854—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிய மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படி தொடங்கப்படாத மாவட்டங்கள் எவை?

(இ) அவைகளில் மாவட்ட நீதிமன்றங்கள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு, மாவட்ட அமர்வு நீதிமன்றமும் ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதி தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் ஏற்படுத்தப்பட்டு அவை 27-4-1999 முதல் செயல்பட்டு வருகின்றன. திருவள்ளூர், திருவாரூர், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய நான்கு புதிய மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்துவதற்காக செயற்குறிப்புகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

83—

**விளம்பரங்கள் செய்தல்**

**வினா 28283—திரு. ஜி.கே மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கிராம மக்கள் அரசு இலவச சட்ட உதவியைத் தெரிந்துகொள்ள உதவியாக விளம்பரங்கள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இலவச சட்ட உதவியைப் பற்றி கிராம மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தற்போது மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவால் கிராமப்புறங்களில் சட்ட உதவி முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு நீதிமன்ற வளாகத்திலும் சட்ட உதவிக்குழு இயங்குகிறது. நீதிமன்றம் இல்லாத இடங்களில் சமரச மையங்கள் மற்றும் ஆலோசனை மையங்கள் இயங்கி வருகின்றன. அரசுத் துறைகளிலும், நீதி மன்றங்களிலும் அறிவிப்பு கொடுக்கும்போது சம்பந்தப்பட்ட நபர் சட்ட உதவி தேவையானால் சட்டப்பணிக் குழுவை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மக்கள் நீதிமன்றம் மற்றும் இலவச சட்ட உதவி பற்றி அவ்வப்போது பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்படுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**84—**

**சிறைச்சாலையில் கமாண்டோக்கள் பாதுகாப்பு**

**வினா 29138—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) கோயம்புத்தூர் சிறைச்சாலையில் கமாண்டோக்கள் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.



1999 நவம்பர் 19]

**85—**

**கைத்தறித் துணி விற்பனை**

**வினா 24604—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு கைத்தறி துணி விற்பனைக்காக 20 சதவீதம் தள்ளுபடியில் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு மதிப்புள்ள துணிகள் கோ-ஆப்டெக்ஸ் தொடக்க கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

(ஆ) 30-10-1998 வரை 30 சதவீதம் தள்ளுபடியில் எவ்வளவு மதிப்புள்ள துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி சேலம் மாவட்டத்தில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.21,72,65,197.10 மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்துள்ளன. 1997-98-ம் நிதியாண்டில் கோ-ஆப்டெக்ஸ் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து 20 சதவீதம் தள்ளுபடி பெற்று, பின்னர்தான் விற்பனை மேற்கொண்டுள்ளது. எனவே, தனியாக விற்பனைத் தொகை எதுவும் பராமரிக்கப்படவில்லை.

(ஆ) 31-10-1998 முடிய 30 சதவீதம் தள்ளுபடியில் ரூ.59.73 கோடி மதிப்புள்ள துணிகள் கோ-ஆப்டெக்ஸ்ஸால் விற்பனை செய்யப்பட்டன.

**86—**

**நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா 26713—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அதிக இலாபத்தில் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் எது?

[1999 நவம்பர் 19

(ஆ) அதை மேம்படுத்த உதவி செய்யும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் அதிக இலாபத்தில் செயல்படும் சங்கம், சேலம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகும்.

(ஆ) இல்லை.

**87—**

**கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா 27463—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் எத்தனை இலாபத்தில் இயங்குகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 94, பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 4, ஆக மொத்தம் 98 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) அவற்றில் 40 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

**88—**

**கைத்தறி கூட்டுறவு சங்கங்கள்**

**வினா 27464—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 19]

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை செயல்படுகின்றன?

(ஆ) அதில் எத்தனை இலாபத்தில் இயங்குகின்றன.

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 72 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அவற்றில் 11 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

**89—**

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

**வினா 25485—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாசு கட்டுப்படுத்த மாதிரி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இதுவரை எத்தனை அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) ஒன்று.

(ஆ) சேலம் மாவட்டத்தில் அன்னதானப் பட்டியில் திருவாளர்கள் ராணி சேகோ பாக்டரி என்ற சவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரில் உள்ள மாசினைக் கட்டுப்படுத்த மாதிரி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. ரூ.8.94 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மாதிரி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையம் நாளொன்றுக்கு 75 கிலோ லிட்டர் செய்முறைக் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்டது.

[1999 நவம்பர் 19

90—

### வனத் துறை நிலங்களில் கோயில்

**வினா 29362—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் வனத் துறைக்குட்பட்ட நிலங்களில் கோயில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டத்தில் வனத் துறைக்குட்பட்ட நிலங்களில் கோயில் எதுவும் இல்லை.

91—

### பத்திரங்களைப் பதிவு செய்தல்

**வினா 28585—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரங்கள் அடுத்த மாநிலங்களில் பதிவு செய்யப்படுவதைத் தடை செய்யும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) தமிழகத்தில் எவ்வளவு நிலங்கள் 1998-99 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாமல் உள்ளது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள அசையாச் சொத்துக்கள் குறித்த ஆவணங்கள் வெளி மாநிலங்களில் பதிவு செய்தல் செல்லத்தக்கதல்ல



1999 நவம்பர் 19]

என்று 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டப் பிரிவு 28-க்குத் திருத்தம் செய்யப்பட்டு 29-3-1997 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தமிழகத்தில் உள்ள சொத்தினைப் பரிவர்த்தனை செய்யப்படும்போது மட்டுமே அந்த ஆவணம் பதிவு செய்யப்படுகிறது. அதே சொத்தினை ஒவ்வொரு முறை பரிவர்த்தனை செய்யும்போதும் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட வேண்டும். 1998-99 ஆம் ஆண்டில் எவ்வளவு நிலம் பதியப்படவில்லை என்பதற்கான விவரம் துறையில் இல்லை.

92—

### கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

**வினா 22601—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், கட்டளை குடியிருப்பில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது கட்டளைக் குடியிருப்பு கிராமத்திலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் செங்கோட்டையில் கால்நடை மருத்துவமனையும், புளியரை கிராமத்தில் கிளை நிலையமும் செயல்படுவதால், கட்டளைக் கிராமத்தில் தனியாக கிளை நிலையம் ஆரம்பிக்க தற்போது திட்டம் இல்லை. எனினும், தேவை மற்றும் நிதி நிலை அடிப்படையில் கட்டளைக் குடியிருப்பில் தனியாக கிளை நிலையம் அமைப்பது குறித்து உரிய தருணத்தில் பரிசீலனை செய்யப்படும்.

[1999 நவம்பர் 19

93—

### மருந்தகங்களை தரம் உயர்த்துதல்

**வினா 27918—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படவுள்ள மருந்தகங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நான்கு மருந்தகங்கள் உள்ளன. ஆனால், தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

94—

### தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா

**வினா 24084—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, சேவாக் கவுண்டனூர் பருவாச்சி, தளவாயப்பேட்டை, சின்னபெரிச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி வட்டம், பெரியபுலியூர் கிராமம், மஜரா சேவாக்கவுண்டனூர், ஆதிதிராவிடர் காலனியில் ரீ.ச. 371/1-ன் மொத்த விஸ்தீரணம் 0.62.5 ஹெக்டேர் ஆகும். இது கிராமக் கணக்குகளில் ஓடை எனத் தாக்கலாகியுள்ளது. இதில்



1999 நவம்பர் 19]

21 இந்து அருந்ததியர் குடியிருந்து வருகின்றனர். இப்புலத்தை நத்தமாக மாற்றம் செய்து வீட்டுமனை ஒப்படை வழங்கும் சாத்தியங்களை பொதுப் பணித் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை மற்றும் புல ஆய்வு செய்து அறிக்கை அனுப்புமாறு பவானி வருவாய் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். பவானி வட்டம், பருவாச்சி கிராமம், ரீ.ச.160/3 சாலையானது நெடுஞ்சாலைப் புறம்போக்கு ஆகும். இதில் 12 குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனவே, சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி பெற்று இவர்களுக்கு வீட்டு மனை ஒப்படை வழங்க இயலும். இருப்பினும், இவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் இதன் அருகிலேயே ரீ.ச. 136/6, 147/1, 147/3, 147/4, ஆகிய சாலைகளில் 2.27.0 ஹெக்டேர் பூமி நில எடுப்பு செய்து பட்டா வழங்க இத்துறையின் மூலம் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

பவானி வட்டம், ஐம்பை 'அ' கிராமம், மஜரா தளவாய்ப்பேட்டையில் புன்னம் மெயின் ரோட்டில் ரீ.ச. 560, 561, 563, ஆகிய சாலை புறம் போக்கில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இது நெடுஞ்சாலை புறம்போக்கு என்பதால் சம்மந்தப்பட்ட துறையின் ஒத்திசைவு பெற்று தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

பவானி வட்டம், வரகநல்லூர் கிராமம், சின்னபெரிச்சி பாளையத்தில் ரீ.ச.253/3 சாலையில் ஆதிதிராவிடர்கள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு நத்தம் நில அளவையில் பட்டா வழங்கப்பட்டு, தொகுப்பு வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது இவர்களது மக்களுக்கு பட்டா கோருகிறார்கள். இவர்களுக்கும் இதே ஊரில் ரீ.ச.275/1-ல் 0.95.0 ஹெக்டேர் பூமியினை இத்துறையின் மூலம் நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

95—

### மானியத் தொகை உயர்த்துதல்

**வினா 28443—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் வழங்கப்படும் கடன்களின் மானியத் தொகையை உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

[1999 நவம்பர் 19

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**96—**

### ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகள்

**வினா 28701—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கென 10 பள்ளிகளும் பழங்குடியினர்க்கென 47 உண்டி உறைவிடப் பள்ளிகளும் ஆக மொத்தம் 57 பள்ளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் நடத்தப்பட்டு வருகின்றன.

**97—**

### தாட்கோ மூலம் கடன் உதவி

**வினா 28705—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் தாட்கோ மூலம் கடன் உதவி கோரி 1998-99-ல் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?



1999 நவம்பர் 19]

(ஆ) இவற்றில் கடனுதவி பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதியில் தாட்கோ மூலம் கடனுதவி கோரி 1998-99-ல் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மொத்தம் 130 ஆகும்.

(ஆ) இவற்றில் கடனுதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 33 ஆகும். மீதமுள்ள 97 விண்ணப்பங்கள் வங்கியில் நிலுவையில் உள்ளன.

**98—**

### கட்டுமானப் பணிகள்

**வினா 29214—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

(ஆ) அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் ஐந்து ஆகும்.

(ஆ) அதன் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

| | கட்டுமானப்பணியின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, மேட்டூர் டவுன் | முதல் தளம் மேற்கூரை முடிவுற்றுள்ளது. |

[1999 நவம்பர் 19

| | | |
|---|---|---|
| 2. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, சாத்தபாடி. | அனைத்து பணிகளும் முடிவுற்றன. கட்டடத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதற் கான பணி நடைபெற்று வருகிறது. |
| 3. | ஆதிதிராவிடர் நல பள்ளி, டாக்டர் அம்பேத்கர் நகர். | முதல் தளம் மேற்கூரை முடிவுற்றுள்ளது. |
| 4. | உண்டி உறைவிட பள்ளி, ஓடைகாட்டுபுதூர். | அஸ்திவாரப் பணி முடிந்துள்ளது. |
| 5. | உண்டி உறைவிட பள்ளி, காரியகோவில்வலசு. | ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது. |

**99—**

**தேசிய ஆதிதிராவிடர் நிதி (ம) மேம்பாட்டுக் கழகம்**

**வினா 29372—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் என்னென்ன தொழில்களுக்கு கடன் வழங்கப்படுகிறது?

(ஆ) தமிழகத்தில் எத்தனை கோடி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்:**

(அ) தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் விவசாயம் மற்றும் விவசாயமல்லாத எல்லாத் தொழில்களுக்கும் கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) தமிழகத்தில் விவசாயம் மற்றும் விவசாய சார்பில்லாத தொழில்களுக்கு தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால் 1998-99 ஆம் ஆண்டு 194 நபர்களுக்கு ரூ.150.75 இலட்சமும், 1999-2000 ஆம் ஆண்டு 9 நபர்களுக்கு ரூ.58.10 இலட்சம் ஆக



1999 நவம்பர் 19]

மொத்தம் 203 நபர்களுக்கு ரூ.208.85 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில், 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் 75 பயனாளிகளுக்கு ரூ.61.90 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**100—**

**அந்நியச் செலாவணி விவரம்**

**வினா 15901—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு 1996-97 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு?

(ஆ) 1996-97-ல் கிடைத்த லாபம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டுக்கு தனியாக சுற்றுலாத் துறை மூலம் அந்நியச் செலாவணி ஈட்டிய விவரம் கணக்கிடப்படுவதில்லை. இந்திய அளவில் மட்டுமே கணக்கிடப்படுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.21.47 இலட்சம் அந்நியச் செலாவணியாக ஈட்டியுள்ளது.

இந்திய அரசு அளவில் சுற்றுலாத் துறையின் மூலம் 1997-98 ஆம் ஆண்டில் 10,800 கோடி ரூபாயும் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.12,603 கோடி ரூபாயும் அந்நியச் செலாவணியாக ஈட்டப்பட்டது.

(ஆ) சுற்றுலாத் துறை இலாபநோக்கின்றி சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக சேவை நோக்கோடு செயல்படுகின்ற அரசுத் துறை ஆகும். ஆகவே, வணிக ரீதியாக இலாபநட்டம் கணக்கிடப்படுவதில்லை. ஆயினும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.43.04 இலட்சத்தினை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

[1999 நவம்பர் 19

## ஏழாம் பட்டியல்

1—

### வங்கி அமைத்தல்

**வினா 21045—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், சி.சி.சி.குவாரி உள்ளடங்கிய கிராமங்கள் பயன்பெறும் வகையில் வங்கி (பாங்க்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாரத வங்கி மற்றும் இதர ஏழு வங்கிகளின் கிளைகள் இயங்கி வருகின்றன. மேலும், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் பாங்க் ஆப் மதுரா மற்றும் இதர ஐந்து வங்கிகளின் கிளைகள் இயங்கி வருகின்றன. பணிப்பகுதி அணுகு முறையின்கீழ் (Service Area Approach) வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 23 கிராமங்களும் குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 19 கிராமங்களும் தேவையான வங்கி வசதியினைப் பெற்று வருகின்ற நிலையில், கல்லுடைக்கும் (குவாரி) கிராமங்கள் பயன்பெற தனியே வங்கிக் கிளை அமைக்க வாய்ப்பு இல்லை.

2—

### ஜாதிய அமைப்புகளின் நடவடிக்கை

**வினா 22738—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜாதிய அமைப்புகளின் நடவடிக்கைகள் சமூகத்திற்குக் கேடு ஏற்படுத்தி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்கான வழிவகைகளைக் கண்டறியும் பொருட்டு அரசால் சென்னையில் 22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வன்முறையைத் தூண்டிவிடும் வண்ணம் செயல்படுகின்ற சாதிச் சங்கங்கள், சாதி அமைப்புகள் மற்றும் அவைகளின் தலைவர்கள் மீது சட்டப்படி அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சாதி மத உணர்வுகளைத் தூண்டக்கூடியதும் வன்முறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதுமான ஊர்வலங்களை நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் சாதி மத அடிப்படையில் வன்முறைகளைத் தூண்டும் சுவரொட்டிகளை ஒட்டுவதையும், சுவரில் எழுதுவதையும் அனைவரும் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டுமென்பதுடன் அத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றவர்கள்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. சாதி அமைப்புகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலோ அல்லது கூட்டங்களிலோ ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் கலந்துகொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே புதிய சிலைகளை நிறுவுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் அவற்றின் பராமரிப்புக்கு அதனை நிறுவியவர்களே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், மத நல்லிணக்கத்தையும், சமுதாய ஒற்றுமையையும் பேணிக்காக்கும் வகையில் கிராமந்தோறும் கிராம பஞ்சாயத்துத் தலைவரை தலைவராகக் கொண்டு அமைதிக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும் என்றும், இக்குழுக்கள் தீண்டாமையை அறவே ஒழிக்கப் பாடுபடும் என்றும், மேம்பட்ட வகையில் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திடும் வகையில் தென் மாவட்டங்களில் அதிக அளவில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆலோசனை தெரிவித்தும் சாதி மோதல்கள் மற்றும் வன்முறைகள் ஆகியன குறித்து மிகைப்படுத்தப்பட்ட வகையில் செய்திகள் வெளியிடுவதை பத்திரிக்கைகள் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்சொன்ன முடிவுகள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[1999 நவம்பர் 19

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவர் குரு பூஜையின்போது சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் எழலாம் என எதிர்பார்க்கப்பட்டு தேவர் குல கூட்டமைப்பின் தலைவர் திரு. சண்முகையா பாண்டியன், தேவர் ஜெயந்திக்கு முன்பாக 27-10-1998 அன்று கைது செய்யப்பட்டார். இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி உள்ளிட்ட அனைத்து குரு பூஜை நிகழ்ச்சிகளும் எவ்வித சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையும் இன்றி சுமூகமான முறையில் நடைபெற்றன.

விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் உறுப்பினர்கள், மாநில அமைப்பாளர் ஆர். திருமாவளவன் தலைமையில் 26-10-1998 அன்று கடலூரில் பேரணி நடத்த முடிவு செய்தனர். ஆனால், அப்பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அப்பேரணி முதலில் 16-11-1998 ஆம் தேதிக்கும், பின்னர் 6-12-1998 ஆம் தேதிக்கும் தள்ளி வைக்கப்பட்டது. இப்பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்காக வன்முறையில் ஈடுபட்ட இந்த அமைப்பின் மாநில அரசியல் குழு உறுப்பினர் திரு. திருவள்ளுவன், 15-11-1998 அன்று கைது செய்யப்பட்டார். அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாக இப்பேரணி நடத்தப்படவில்லை.

மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் டாக்டர் சேதுராமன் 27-1-1999 அன்று காவல் துறையினர் அனுமதியளிக்க மறுத்ததையும் மீறி சென்னையில் ஊர்வலம் நடத்த முயற்சி செய்தபோது கைது செய்யப்பட்டு 1-2-1999 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அனைத்து சமுதாயத்தினரும் ஒருங்கிணைந்த நல்லிணக்கத்துடன் வாழ்ந்திட அனைத்து மாவட்டங்களிலும் சமத்துவபுரங்களை அரசு ஏற்படுத்தி வருகின்றது.

அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு உறுதியான நடவடிக்கைகளினால் மாநிலத்தில் சாதிப் பிரச்சினைகள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, தற்போது முழு அமைதி நிலவுகிறது.

3—

**சாதிக் கலவரத்தால் உயிரிழந்தோர் விவரம்**

**வினா 22898—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 19]

(அ) தமிழ் நாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த சாதிக் கலவரத்தினால் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) எவ்வளவு மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ளன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 6 நபர்கள்

(ஆ) 5 நபர்கள்

(இ) ரூ. 55,47,980 மதிப்புள்ள சொத்துக்கள்.

4—

**மாணவர் விடுதி சரி செய்தல்**

**வினா 14031—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் உள்ள மாணவர் விடுதி மிகவும் மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சரி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) விடுதி பழுதுபார்க்க வேண்டியிருந்தது.

(ஆ) சமூகரெங்கபுரம் அரசு ஆண்கள் பயிற்சி நிறுவனத்தில் ரூ.1,63,000 செலவில் விடுதி பழுது பார்க்கப்பட்டும், ரூ.30,000 செலவில் மின் பணி, பழுது பார்க்கப்பட்டும் தற்போது விடுதி நல்ல நிலையில் உள்ளது.

[1999 நவம்பர் 19

5—

## நூலகப் பணியாளர்கள்

**வினா 14989—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் இயங்கி வரும் நகர நூலகம் பணியாளர்கள் இல்லாததால் முழு அளவில் செயல்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்திலுள்ள எடப்பாடி கிளை நூலகம் 22,700 நூல்களைக் கொண்ட ஒரு 'பி' கிரேடு நூலகமாகும். இந்நூலகத்திற்கு அரசாணை (நிலை) எண் 1630, கல்வித் துறை, நாள் 26-8-1983-ன்படி கீழ்க்கண்ட நான்கு பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| இரண்டாம் நிலை நூலகர் | .. | 1 |
| பதிவறை எழுத்தர் | .. | 1 |
| அலுவலக உதவியாளர் | .. | 1 |
| காவலர் | .. | 1 |

அரசு அனுமதித்துள்ள இரண்டாம் நிலை நூலகர் மற்றும் அலுவலக உதவியாளர் தொடர்ந்து முறையாகப் பணியாற்றி வருகின்றனர். இந்நூலகத்தில் பணியாற்றிய பதிவறை எழுத்தர் 10-8-1985 அன்று இறந்து விட்டதாலும், போதிய பதிவுரு எழுத்தர்கள் இல்லாத காரணத்தாலும், சில நிர்வாகக் காரணங்களாலும் இப்பணியிடத்தை உடனே நிரப்ப இயலவில்லை. மேலும், 5-9-1992-ல் காவலர் காலமாகிவிட்ட காரணத்தினால் அருகாமையில் உள்ள கொங்கணாபுரம் கிளை நூலகத்தில் பணியாற்றிய நபர் மாறுதல் மூலம் இங்கு பணி அமர்த்தப்பட்டுள்ளார். இதைத் தவிர, மூன்றாம் நிலை நூலகர் ஒருவரும் கொங்கணாபுரம் கிளை நூலகத்திலிருந்து மாற்றுப் பணியில் பணிபுரிந்து



1999 நவம்பர் 19]

வருகிறார். எனவே, எடப்பாடி கிளை நூலகம் முழுநேர நூலகமாகத் தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

6—

## ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் கூடம்

**வினா 19097—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல்கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது வேதியல் ஆய்வுக்கூடம் உள்ளது. இந்நிலையில் கூடுதல் ஆய்வுக்கூடம் வழங்கப்படுவது குறித்த கேள்விக்கு இடமில்லை.

7—

## ஆசிரியர்கள் பணி நியமனம்

**வினா 25837—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வரும் கல்வியாண்டில் (1999-2000 ஆம் ஆண்டில்) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எவ்வளவு பட்டதாரி (பி.டி.) ஆசிரியர்களை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழகத்தில் 1999-2000 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 587 பட்டதாரி ஆசிரியர்களையும், 34 சிறுபான்மை மொழிப் பட்டதாரி ஆசிரியர்களையும் புதிதாகப் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

[1999 நவம்பர் 19

8—

### தமிழாசிரியர்கள் புதிதாகப் பணி நியமனம்

**வினா 25838—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1999-2000 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எவ்வளவு தமிழாசிரியர்களைப் புதிதாகப் பணி நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழகத்தில் 1999-2000 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 649 தமிழ் ஆசிரியர்களைப் புதிதாகப் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

9—

### கிளை நூலகங்கள் விவரம்

**வினா 26672—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் இயங்கும் கிளை நூலகங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் இயங்காமல் உள்ள கிளை நூலகங்கள் எத்தனை உள்ளன?

(இ) அது பற்றிய விவரங்களை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் ஒரே ஒரு கிளை நூலகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) இயங்காமல் எந்த நூலகமும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1999 நவம்பர் 19]

10—

### சுயநிதி விவசாய மின் இணைப்பு

**வினா 23769—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் சுயநிதி விவசாய மின் இணைப்பு பெற விரும்புவோரின் விண்ணப்பங்கள் எப்போதும் பதிவு செய்துகொள்ள அனுமதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் திருத்தப்பட்ட சுயநிதித் திட்டத்தின்படி கீழ்கண்ட இரண்டு வகைகளில் மின் இணைப்பு பெற இயலும்:

**(1)** முதல் வகை:

மின் இணைப்பு வழங்க ஆகும் செலவு ரூபாய் 50,000-க்குள் இருப்பின், விவசாயி ரூ.10,000 மட்டும் செலுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே ரூ.500 முன்பணம் செலுத்தி பதிவு செய்துள்ளவர்களுக்கு இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்கப்படும். விண்ணப்பங்கள் இலக்கீட்டிற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் ஏற்கெனவே விவசாய விண்ணப்பங்களை சாதாரண முன்னுரிமையின்கீழ் பதிவு செய்துள்ளவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி அவர்கள் இந்தப் பிரிவின்கீழ் மின் இணைப்பு பெற சம்மதித்தால் மின் இணைப்பு வழங்கப்படும்.

மின் இணைப்பு பெற கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் எப்பொழுது விண்ணப்பங்கள் கேட்கப்படுகிறதோ, அப்போது இந்தப் பிரிவின்கீழ் பதிவு செய்ய வேண்டும்.

[1999 நவம்பர் 19

மின் இணைப்பு வழங்க ஆகும் செலவு ரூ.50,000-க்குள் இருப்பின், விண்ணப்பதாரர் தாமாகவே முன்வந்து ரூபாய் 25,000 கட்ட சம்மதித்தால் அவர்களுக்கு, பிரிவு (1)-ல் உள்ளவர்களுக்கு மேலாக முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பு வழங்கப்படும். இந்தப் பிரிவில் மின் இணைப்பு பெற எப்போது வேண்டுமானாலும் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

**(2)** இரண்டாம் வகை:

மின் இணைப்பு வழங்க ஆகும் செலவு ரூ.50,000-க்கு மேல் இருப்பின் விண்ணப்பதாரர் மின் இணைப்பு வழங்க ஆகும் முழு தொகையையும் செலுத்த் வேண்டும். இவர்களுக்கு பிரிவு (1)-ன்கீழ் உள்ளவர்களைவிட முன்னுரிமை கொடுத்து துரிதமாக மின் இணைப்பு வழங்கப்படும். இந்தப் பிரிவின்கீழ் மின் இணைப்பு பெற எப்போது வேண்டுமானாலும் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

இம்முறையே தமிழ்நாடு மின் வாரியத்தின் எல்லா அலுவலகங்களிலும் பின்பற்றப்படுகிறது.

**11—**

### வேப்ப மரங்களை வளர்த்தல்

**வினா 25987—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்ப மரத்தின் மருத்துவ குணங்களைக் கவனத்தில் கொண்டு அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அம்மரங்களை வளர்க்க வேண்டும் என்று உத்தரவிடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது இருக்கும் அரசு மருத்துவமனைகள் பலவற்றில் வேப்ப மரங்கள் உள்ளன. மருத்துவமனைகளைச் சுற்றி விசாலமான இடவசதி இருக்கும் மருத்துவமனைகளில் இம்மரம் வளர்க்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசுக் கட்டடங்களில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நிழல் தரும் மரங்கள், குறிப்பாக வேப்ப மரங்களை வளர்க்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**12—**

### ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டம்

**வினா 24089—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரிலும், கவுந்தப்பாடியிலும் சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி நகரிலும் கவுந்தப்பாடியிலும் சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய்த் துறையின் மூலம் நில அளவை செய்யப்பட்டு வருகிறது. நில அளவை முடிந்தவுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கிடையில் மேட்டூர் சாலை, அந்தியூர் சாலைகள் இணையும் சந்திப்பில் சாலை ஆக்கிரமிப்பு செய்திருந்த திரு. பெருமாள் என்பவர் தொடுத்திருந்த நீதிமன்ற வழக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு நெடுஞ்சாலைத் துறைக்குச் சாதகமாக

[1999 நவம்பர் 19

தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு வழக்குரைஞரின் கருத்துரையின் பேரில், 28-3-1999 மற்றும் 29-3-1999 அன்று ஆக்கிரமிப்புகள் வருவாய்த் துறை, காவல் துறை, மின் வாரியம், தொலை தொடர்புத் துறை ஆகியோரின் உதவியோடு அகற்றப்பட்டன. இதன் காரணமாக சில ஆக்கிரமிப்புதாரர்கள் மறு நில அளவை செய்வதற்கு நீதிமன்றத்தை நாடியதால் வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்கு முடிந்தவுடன் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

## இலவச வீட்டுமனை

**வினா 27414—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் 1996-97 முதல் 1998-99 முடிய எத்தனை பேருக்கு இலவச வீட்டு மனையிடம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இவைகளின் மூலம் வழங்கப்பட்ட மனையிடப் பரப்பளவும், விலைமதிப்பும் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் 1996-97 முதல் 1998-99 முடிய அளிக்கப்பட்ட இலவச வீட்டு மனைகள் பரப்பளவு மற்றும் விலைமதிப்பு விவரங்கள் கீழ்க்கண்டவாறு:—

| வருடம் | பட்டாக்களின் எண்ணிக்கை | மனையிடப் பரப்பளவு (எக்டேரில்) | விலை மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1996-97 | 436 | 4.36.0 | 3,27,000.00 |
| 1997-98 | 223 | 2.23.0 | 2,45,300.00 |
| 1998-99 | 205 | 2.05.0 | 1,53,750.00 |



1999 நவம்பர் 19]

14—

## தொடக்கப்பள்ளிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 6613—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், குமரானந்தபுரம் தொடக்கப்பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் சார்பில் அரசுக்கு முறையீடு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் குமரானந்தபுரம் தொடக்கப்பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் அரசுக்கு முறையீடு வரவில்லை. திருப்பூர் குமரானந்தபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளி தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. பொதுமக்கள், நகரமன்ற உறுப்பினர், பெற்றோர் ஆசிரியர் கழகம், நகராட்சி ஆணையர் ஆகியோரின் முயற்சியால் அப்பகுதி மக்களே இப்பள்ளிக்காக ந.எண் 27/3-ல் 32 சென்ட் இடத்தை கிரயம் பெற்று, 10-6-1999 அன்று தானமாக நகராட்சிக்கு ஒப்படை செய்துள்ளனர். மேலும் பொது மக்களிடம் நிதியுதவி பெற்று அந்த இடத்தில் மூன்று வகுப்பறைகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

15—

## குடிநீர் வசதி செய்தல்

**வினா 12917—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மொத்த கிராமங்கள் எத்தனை?

[1999 நவம்பர் 19

(ஆ) அவற்றில் குடிநீர் வசதி பெறாதவை எத்தனை?

(இ) அவற்றிற்கு எப்போது குடிநீர் வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வின்படி திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 190 கிராமங்கள் உள்ளன. 1992 ஆம் ஆண்டு மறு ஆய்விற்குப் பிறகு திருப்பூர் நகரத்தை ஒட்டிய ஊராட்சிகளில் மேலும் புதியதாக உருவாகிய 126 குடியிருப்புகள் 1997-98 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டன.

(ஆ) 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வில் இடம் பெற்றுள்ள 190 குடியிருப்புகளில், தற்போது குடிநீர் வசதி பெறாதவை 36 குடியிருப்புகள் ஆகும். 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வில் இடம் பெறாமல் 1997-98 ஆம் ஆண்டு புதியதாக உருவாகிய 126 குடியிருப்புகளில் தற்போது 118 குடியிருப்புகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறாதவை.

(இ) 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வில் இடம் பெற்றுள்ள 190 குடியிருப்புகளுள், 149 கிராமங்களில் திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 5 கிராமங்களுக்குத் தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 36 குடியிருப்புகளுக்குத் தனி மின் விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, அவற்றில் நீராதாரப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. அனைத்து திட்டப் பணிகளும் 3/2000-க்குள் முடிக்கப்பட்டு மக்கட் பயனுக்குக் கொண்டு வரப்படும். 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வில் இடம் பெறாத புதிய 126 குடியிருப்புகளுள், சென்ற நிதியாண்டில் (1998-99) 8 குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 47 குடியிருப்புகளுக்கு நடப்பு ஆண்டில் (1999-2000) குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கட் பயனுக்குக் கொண்டுவரப்படும். எஞ்சியுள்ள 71 குடியிருப்புகளில் வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.



1999 நவம்பர் 19]

16—

**குழாய்கள் பதித்தல்**

**வினா 17501—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி—ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எடப்பாடி நகரில் 1-வது வார்டு, நாச்சியம்பாளையம் மற்றும் முண்டாச்சியூர் போன்ற பல பகுதிகளில் இன்னும் குழாய்கள் பதிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குழாய்கள் பதிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி—ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் எடப்பாடி நகரில் 1-வது வார்டு, நாச்சியம் பாளையத்திற்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு அப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மேலும் எடப்பாடி நகராட்சி, முண்டாச்சியூர் குடியிருப்பு, பூமரத்துகொட்டாயிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்தேக்கத் தொட்டியிலிருந்து 850 மீ. தொலைவிலுள்ளது. பூமரத்துக்கொட்டாய் மேல்நிலைத் தொட்டியிலிருந்து முண்டாச்சியூருக்கு குழாய்பாதை தனியார்களின் நிலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். எனவே, தனியார்களின் நிலத்தின் வழியாக 850 மீ. நீளத்திற்குக் குழாய் பதிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் குடிநீர் வழங்க ஆவன செய்யப்படும்.

17—

**பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தொகுப்பு விடுகள்**

**வினா 20530—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

தொகுப்பு வீடுகளை அதிக எண்ணிக்கையில் கட்டி சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்க நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டில் 60,000 வீடுகள் கட்டிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் நிலையில் 28,545 வீடுகளும், இரண்டாம் நிலையில் 12,000 வீடுகளும் மற்றும் மூன்றாம் நிலையில் 19,455 வீடுகளும் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, முதலில் இருநிலைகள் வரையில் அதாவது 40,545 வீடுகள் கட்டி முடிக்கலாம் என்றும், நிதி நிலைமையைப் பொறுத்து மூன்றாம் நிலையில் 19,455 வீடுகள் கட்டுவது பற்றிக் கருதலாம் என்றும் அரசாணை (நிலை) எண் 93, ஊரக வளர்ச்சி (ம.தி.2) துறை, நாள் 19-5-1998-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் பிற இனத்தவருக்கு (பிற்படுத்தப்பட்டவர்களுக்கு) மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு வழங்கப்படுகிறது. எனவே இந்த விகிதத்தை மேலும் உயர்த்திக் கொடுக்க வாய்ப்பில்லை.

**18—**

## சேமநல திட்டம்

**வினா 20553—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சிப் பணியாளர்கள் அனைவருக்கும் சேமநலத் திட்டம் அமல் படுத்த நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சிப் பணியாளர்களின் பணி, பகுதிநேரப் பணி ஆகும். மேலும் இவர்களுக்கு ஊராட்சி நிதியிலிருந்து தொகுப்பூதியம்/மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, விதிகளின்படி இவர்களுக்கு சேமநலத் திட்டம் அமல்படுத்த வழிவகையில்லை. இருப்பினும் அரசின் 23-6-1997 தேதிய (நிதி) 326-வது எண் ஆணையின்படி ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள், பகுதி நேர எழுத்தர்கள், பகுதி நேர மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் மின்மோட்டார்கள் இயக்குபவர்கள், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டம் 1-7-1997 முதல் செயல்படுத்தப்படுகிறது.



**19—**

## தொடக்கப் பள்ளிக்கு மாற்று இடம்

**வினா 20747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், மன்னரை ஊராட்சி, பாரதி வித்யாலயம் தொடக்கப் பள்ளியில் பாழடைந்து விழும் நிலையிலுள்ள கட்டடமே வகுப்பறையாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாற்று இடம் தந்துதவ அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், மன்னரை ஊராட்சி பாரதி வித்யாலயா பள்ளிக் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் மேற்படி இடத்திற்கு அருகில் உள்ள கோவில் கட்டடத்தில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இது தனியாருக்குச் சொந்தமான பள்ளியாதலால் அரசு நிதி மூலம் எவ்விதப் பணிகளும் செய்ய வழிவகை இல்லை.

**20—**

## குடிநீர் வழங்குதல்

**வினா 22199—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

(அ) திருப்பூர், தொறவலூர் ஊராட்சி, புதுவளவுப் பொதுமக்களுக்கு குடிக்க தண்ணீருக்கு வழியற்ற நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடிநீர் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தொறவலூர் ஊராட்சியைச் சேர்ந்த புதுவளவு, முத்து நகர் குடியிருப்பினை ஒட்டிய ஒரு பகுதியாகும். முத்து நகர் குடியிருப்பில் நடப்பு நிதியாண்டில் (1999-2000) மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின் நீராதாரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 12/99-ல் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் புதுவளவுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

**21—**

### குடிநீர் விநியோகம் செய்தல்

**வினா 22201—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், கணக்கம்பாளையம் ஊராட்சி கடுமையான குடிநீர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது கணக்கம்பாளையம் ஊராட்சி, குடிநீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்படவில்லை. கணக்கம்பாளையம்



1999 நவம்பர் 19]

ஊராட்சியைச் சேர்ந்த கணக்கம்பாளையம், ஆண்டிப்பாளையம் காலனி, ஆண்டிப்பாளையம், அய்யம்பாளையம் மற்றும் நாதம்பாளையம் ஆகிய குடியிருப்புகள் திருப்பூர் மற்றும் 412 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 4/99 முதல் குடிநீர் விநியோகம் பெற்று வருகின்றன. இத்திட்டம் 3/99-ல் முடிக்கப்பட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. எனவே, கணக்கம்பாளையம் ஊராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை இல்லை.

**22—**

### தொடக்கப் பள்ளி மைதானம்

**வினா 22413—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், தொறவலூர் தொடக்கப் பள்ளி மைதானம் பொதுக் கழிப்பிடமாகப் பயன்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், தொறவலூர் தொடக்கப் பள்ளி மைதானம் கழிப்பிடமாகப் பயன்படுத்தப்படவில்லை.

**23—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 23268—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வடுகமங்கலம் கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வடுகமங்கலம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம், வரும் நிதியாண்டில் (2000-2001) முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

24—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 23271—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், விளாநல்லூர் ஆதிதிராவிடர் குடியிருப்பில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், விளாநல்லூர் ஆதிதிராவிடர் காலனி குடியிருப்பின் மக்கட் தொகை மற்றும் குடிநீர் நிலை 1992-ம் ஆண்டு மறு ஆய்வின்படி 500 மற்றும் 30-40 எல்.பி.சி.டி. ஆகும். இங்கு 2 கையிறைப்பான்கள் உள்ளன. மேலும் தேசூர் தெள்ளாற் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து பகிர்மானக் குழாய் விஸ்தரிப்பு செய்து, இக்குடியிருப்புக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது இக்குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.



25—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி

**வினா 23273—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், நம்பேடு ஊராட்சியில் இராமநாதபுரம், மேட்டுக்குடிசை ஆதிதிராவிடர் குடியிருப்புக்களை இணைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், நம்பேடு ஊராட்சியில் இராமநாதபுரம், மேட்டுக்குடிசை, ஆதிதிராவிடர் குடியிருப்புகளை இணைத்து, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க நடப்பு நிதி ஆண்டில் திட்டம் எதுவும் இல்லை. வரும் நிதியாண்டில் (2000-2001)-ல் திட்டம் நிறைவேற ஆவன செய்யப்படும்.

26—

### மஞ்சனூருக்குக் குடிநீர் வசதி

**வினா 23277—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், மஞ்சனூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) திட்டம் மேற்கொள்ளப்படும்.

**27—**

**நடுநிலைப் பள்ளிக் கட்டடம் சீர்செய்தல்**

**வினா 24559—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட ஆலப்பாக்கம் நடுநிலைப் பள்ளியின் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட ஆலப்பாக்கம் நடுநிலைப் பள்ளிக் கட்டடத்தை ஆய்வு செய்து, ஊராட்சி ஒன்றியப் பொது நிதி அல்லது கல்வி நிதியிலிருந்து நடப்பாண்டில் பழுது பார்க்க, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குத் தக்க அறிவுரை வழங்கும்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**28—**

**ஆரம்பப் பள்ளிக்கு அரசு நிதி ஒதுக்கீடு**

**வினா 25584—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 19]

(அ) 1996-97-ல் ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைப் பராமரிக்க எடப்பாடி தொகுதியிலுள்ள ஆரம்ப பள்ளிகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதில் செலவு செய்யப்பட்டது எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**29—**

**கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 26294—திரு. பால ஆனந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) ஆம் எனில், இதில் அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வந்தவாசி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் அரசு ஆணை எண் 271/ஊவ/நாள்: 31-12-96 மூலம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. நீர் உறிஞ்சி குழாய்க் கிணறு, தளமட்ட நீர்த்தொட்டி, மோட்டார் அறைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மின் இயந்திரம் பொருத்தும் பணி நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணிகள் விரைவாக நடந்து வருகிறன்றன. 10 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணிகளுக்கு, தரமான ஒப்பந்தக்காரர் பணியை ஒப்புக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டதால் குறிப்பிட்ட காலத்தில் பணியை ஆரம்பிக்க இயலவில்லை. ஆதலால் மாற்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் முடிவு செய்து, மேல்நிலைத் தொட்டிப் பணிகள்

[1999 நவம்பர் 19

தற்போது விரைவாக நடந்து வருகின்றன. கற்காரை தூண்கள் தரைமட்டம்வரை எழுப்பப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில் பணிகள் முடிவுற்று, பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**30—**

### கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 26642—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கஞ்சல் நத்தம் ஊராட்சி, ஏரியூரில் போதுமான குடிநீர் வசதிகள் இல்லாமல் இருப்பதால், இங்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கஞ்சல் நத்தம் ஊராட்சி, ஏரியூரில் 1987-88 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப் பம்புத் திட்டம் இயங்கி வருகிறது. இதிலிருந்து கிடைக்கும் குடிநீர் விநியோகம் தற்போதைய மக்கட் தொகையான 4000-த்திற்குப் போதுமானதாக இல்லாததால், கூடுதலாக 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்புத் திட்டம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) கூடுதல் மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் (1999-2000)-ல் மேற்கொள்ளப்பட்டு, ஏப்ரல் 2000-தில் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயனுக்கு கொண்டுவரப்படும்.



1999 நவம்பர் 19]

**31—**

### தொடக்கப்பள்ளி பழுது பார்த்தல்

**வினா 26856—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 15-வேலம்பாளையம், காவிலிப்பாளையம் புதூர் தொடக்கப்பள்ளி மிகவும் பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுது பார்த்து முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் 15-வேலம்பாளையம் காவிலிப்பாளையம்புதூர் தொடக்கப்பள்ளி கட்டடத்தை ஊராட்சி ஒன்றிய பொது நிதி/கல்வி நிதியிலிருந்து பழுது பார்க்க சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிவுரைகள் வழங்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**32—**

### கட்டடம் பழுது பார்த்தல்

**வினா 26884—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பத்துப்புளி விடுதி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக் கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பத்துப்புளி விடுதி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக் கட்டடத்தைப் பழுது பார்க்கும்

பணியினை நடப்பு ஆண்டில் எடுத்துச் செய்ய சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

33—

## தொடக்கப் பள்ளிக் கட்டடம் செப்பனிடல்

**வினா 26895—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் கிழக்கு ஊராட்சி, நாகப்புடையான்பட்டி கிராமத்திலுள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடத்தை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் கிழக்கு ஊராட்சி, நாகப்புடையான்பட்டி கிராமத்திலுள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடத்தைச் செப்பனிடும் பணியினை நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளும்படி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

34—

## குடிதண்ணீர் வழங்குதல்

**வினா 26977—திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம்-பெருந்துறை பேரூராட்சி—சென்னியவலசு பகுதியில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதில்லை என்ற முறையீடு அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) சென்னிமலை பேரூராட்சி, அதன் வழியோர பேரூராட்சி மற்றும் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சென்னியவலசு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்டத்திற்கான முன்னோடித் திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. நிர்வாக ஒப்புதல் பெற்றதும் பணிகள் தொடங்கப்படும்.

35—

## குடிநீர் வசதி செய்தல்

**வினா 26986—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சூரப்பள்ளி கிராமம், குப்பம்பட்டி ஆதிதிராவிடர் பகுதிக்கு குடிநீர் வசதி உடனடியாக செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஒன்றியம், குப்பம்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பின் மக்கட்தொகை 900 மற்றும் தற்பொழுது நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 22 ஆயிரம் லிட்டர். இக்குடியிருப்புக்கு ஏற்கெனவே நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் மூலம் ஆழ்துளைக் கிணறு அமைத்து தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்பொழுது ஆழ்துளைக் கிணற்றில் நீர்வரத்து வெகுவாகக் குறைந்துவிட்டதால் மாற்று ஆழ்துளைக் கிணறு மற்றும் நீர் மின் இறைப்பான் பொருத்தும் பணி ஊராட்சி மூலம் நடைபெற உள்ளது. மேலும், இக்குடியிருப்புக்கு, பெருகிவரும் மக்கட்தொகையின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள குடிநீர்த் திட்டம் போதுமானதாக

இல்லாத காரணத்தால் நடப்பு நிதியாண்டில் 1999-2000-ல் வாரியம் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் காவிரி குடிநீர் வழங்கிட, ஏற்கெனவே உள்ள நீர்த்தேக்கத் தொட்டியை கணக்கில் எடுத்துக் கொண்டு புதிதாக 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுவருகிறது.

**36—**

### குடிநீர் வழங்குதல்

**வினா 27574—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பாப்பிசெட்டிப்பட்டி காலனி, மகுண்டம்பட்டி, ராக்கியாம்பட்டி பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தின் மேற்குறிப்பிட்டுள்ள மூன்று குடியிருப்புகளில் ராக்கியாம்பட்டி குடியிருப்பு மட்டும் ஃபுளோரைடு திட்டத்தின்கீழ் உள்ள காடையாம்பட்டி மற்றும் 136 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம், மதிப்பீடுகள் தயாரித்தபின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மார்ச் 2001-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்ற குடியிருப்புகளான, பாப்பிசெட்டிப்பட்டி காலனி மற்றும் மகுண்டம்பட்டி கிராமங்களுக்கான தனித்தனி குடிநீர்த் திட்டங்கள் இந்த ஆண்டு கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.



**37—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா 27575—திரு. ஆர். ஆர். சேகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி ஊராட்சியிலுள்ள கந்தசாமிகோயில் மற்றும் காளிமேட்டூர், சின்னதிருப்பதி, திருமங்கலம் ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி ஊராட்சியிலுள்ள கந்தசாமிகோயில் மற்றும் காளிமேட்டூர் குடியிருப்புகளுக்கு காவரி நீர் வசதியளிக்க ஓமலூர், மேச்சேரி காடையாம்பட்டி மற்றும் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 136 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும். தற்போது ஆலோசகர் மூலம் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி ஊராட்சியிலுள்ள சின்னதிருப்பதி கிராமம் நடப்பு நிதியாண்டில் (1999-2000) கிராமக் குடிநீர்த் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி ஊராட்சியிள்ள திருமங்கலம் குடியிருப்பு, புதிய குடியிருப்பாக சேர்க்கப்பட்டு, வரும் நிதியாண்டில் (2000-2001) கிராமக் குடிநீர்த் திட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

[1999 நவம்பர் 19

**38—**

**டால்மியா திட்ட குடிநீர் கிடைக்கச் செய்தல்**

**வினா 27597— திரு. ஆர். ஆர். சேகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சங்கீதப்பட்டி ஊராட்சியிலுள்ள வெங்காயனூர் அரிசன காலனி, இரயில்வே லைன் அருந்ததியர் காலனி, ஊமையனூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு டால்மியா திட்ட குடிநீர் கிடைக்க அத்திட்டம் விஸ்தரிப்பு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சங்கீதப்பட்டி ஊராட்சியிலுள்ள ஊமையனூர் குடியிருப்புக்கு டால்மியா குடிநீர்த் திட்டத்தின்மூலம் சங்கீதப்பட்டியில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வெங்காயனூர் அரிசன காலனி குடியிருப்புக்கு டால்மியா குடிநீர்த் திட்டத்தின்மூலம் வெற்றிலைக்காரனூரில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இரயில்வே லைன் அருந்ததியர் காலனி குடியிருப்பு ஒரு புதிய குடியிருப்பாகும். இக்குடியிருப்பு இரயில்வே லைனிலிருந்து 150 கி.மீ. தூரம் தள்ளி உள்ளது. இப்புதிய குடியிருப்புக்கு தற்போது பராமரிக்கப்பட்டுவரும் வெள்ளாளப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க 150 கி.மீ. நீளம் குழாய்கள் பதிக்கப்படவேண்டும். இக்குடியிருப்பு நடப்பாண்டுத் திட்டத்தில் இடம் பெறவில்லை. எனினும், வரும் நிதியாண்டுகளில் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1999 நவம்பர் 19]

**39—**

**குடிநீர் விநியோகம் செய்தல்**

**வினா 27641—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்ட மாரியம்மன் கோயில் ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு எதிரே உள்ள ஆழ்துளைக் கிணற்றின் நீரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றிய அலுவலகம் அமைந்துள்ள பகுதி இந்திரா நகர் குடியிருப்பு ஆகும். இக்குடியிருப்பின் மக்கள் தொகை 175 ஆகும். தற்பொழுது இக்குடியிருப்பிற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 20 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு எதிரில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறு மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைதது இந்திரா நகர் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படும்.

**40—**

**குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்**

**வினா 27644—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பி. நல்லாக்கவுண்டம்பட்டி ஆதிதிராவிடர் புது காலனியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பி. நல்லாக்கவுண்டம்பட்டி ஆதிதிராவிடர் புது காலனி குடியிருப்பிற்கு 10,000 லிட்டர்

[1999 நவம்பர் 19

கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பு ஆண்டில் (1999-2000) செயல்படுத்தப்படும்.

41—

### நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா 27645— திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மாங்குப்பை ஊராட்சி 2வது வார்டு பழையூர் சத்திரம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மாங்குப்பை ஊராட்சியைச் சேர்ந்த பழையூர் சத்திரம் குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதி ஆண்டில் (2000-2001) எடுத்துக்கொள்ளப்படும்.

42—

### கிராமங்களுக்குக் குடிநீர் வசதி

**வினா 27647—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கொங்குப்பட்டி ஊராட்சியில் மூங்கிலேரிப்பட்டி, கொத்தப்புலியனூர், நல்லூர், காட்டுவளவு, மோட்டூர், பள்ளக்காடு, ஏறப்பரெட்டியூர், செட்டூர் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த மூங்கிலேரிப்பட்டி, மோட்டூர், பள்ளக்காடு, ஏறப்பரெட்டியூர் மற்றும் கொத்தப்புலியனூர் குடியிருப்புகளுக்கு சேலம் மாவட்டத்தில் 138 புளோரைடு குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்கப்பட உள்ளது. நல்லூர், காட்டுவளவு மற்றும் செட்டூர் குடியிருப்புகளுக்கு மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து 30,000 லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் (2000-2001) நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

43—

### பூசாரிப்பட்டி கேட் பகுதிக்குக் குடிநீர் வசதி

**வினா 27650—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாராபுரம் ஊராட்சிக்குட்பட்ட பூசாரிப்பட்டி கேட் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், தாராபுரம் ஊராட்சி, பூசாரிப்பட்டி கேட் குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பு நிதி ஆண்டில் (1999-2000) செயல்படுத்தப்பட உள்ளது.

[1999 நவம்பர் 19

44—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 27571—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த உடைந்த பாலம் பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சியிலுள்ள உடைந்த பாலம் குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதி ஆண்டில் (2000-2001) எடுத்துக்கொள்ளப்படும்.

45—

### தருமபுரியில் குடிநீர் வசதி

**வினா 27652—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சி 9-வது வார்டு, தருமபுரி மெயின் ரோடில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சியிலுள்ள சேலத்தான் குடியிருப்பு 9-வது வார்டு தருமபுரி மெயின்ரோடு குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்



1999 நவம்பர் 19]

தொட்டி அமைத்து சேலம் மாவட்டத்தில் 554 குடியிருப்புகளுக்காக காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படும்.

46—

### குடிநீர் வசதி செய்தல்

**வினா 27653—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சி, பிள்ளையார்கோயில் வட்டம், போயர் குடியிருப்பு பழைய ஆதிதிராவிடர் காலனி, ஆர்.சி. செட்டிப்பட்டி, காட்டுவளவு குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கமலாபுரம் ஊராட்சியிலுள்ள சேவிக்காடு குடியிருப்பின் பகுதியாக பிள்ளையார்கோயில் வட்டம் மற்றும் போயர் குடியிருப்பு உள்ளது. இக்குடியிருப்பின் மக்கள் தொகை 550. தற்போது நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 15 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்புக்கு தனி குடிநீர்த் திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட்ட உள்ளது. பழைய ஆதிதிராவிடர் காலனி (கமலாபுரம்-H) குடியிருப்பின் மக்கள் தொகை 210 ஆகும். இக்குடியிருப்பில் தற்போது நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 15 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பு சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி, நங்கவள்ளி, மேச்சேரி ஒன்றியங்களுக்கான 136 புளோரைடு குடியிருப்புக்களுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின் பணிகள் மேற்கொள்ளப்படும். தற்போது ஆலோசகர் மூலம் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆர்.சி. செட்டிப்பட்டி, காட்டு வளவு குடியிருப்பின் மக்கள் தொகை 150. இக்குடியிருப்பில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 12 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

47—

### குடிநீர் கிடைக்கச் செய்தல்

**வினா 27659—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுக்கல் ஊராட்சி, பையூரான் கொட்டாய் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மேல் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுக்கல் ஊராட்சி, பையூரான் கொட்டாய் குடியிருப்புக்கு காவிரி நீர் பெறும் வகையில் காடையாம்பட்டி, மேச்சேரி, ஓமலூர், நங்கவள்ளி மற்றும் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 554 குடியிருப்புக்களுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்படும்.

48—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 28420—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சோமனஅள்ளி ஊராட்சி, குப்பு செடப்பட்டி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1999-2000) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

49—

### மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா 28428—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் அரிசிப்பாளையத்தில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்திலுள்ள அரிசிப்பாளையம் குடியிருப்புக்கு நடப்பு நிதி ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப்படும்.

50—

### பழச் செடிகள் விநியோகம்

**வினா 18628—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1996, 1997, 1998 வரை வேளாண்மைத் துறை மூலம் கூடுதல் தரம் வாய்ந்த பழச் செடிகள் விநியோகம் செய்தது எவ்வளவு?

[1999 நவம்பர் 19

(ஆ) அதில் பயன்பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில், விவசாயி ஒருவருக்கு 1 எக்டேருக்கு மிகாமல் பழச் செடிகள் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மலைவாழ் பழங்குடி மக்களுக்கு தனி நபர் தோட்டங்கள் அமைக்க பழச் செடிகள் முழு மானியத்தில் வழங்கப்படுகின்றன. மேற்கண்ட திட்டங்களின் மூலமாக. 1995-96 ஆம் ஆண்டில் 19,53,278 பழச் செடிகளும், 1996-97 ஆம் ஆண்டில் 22,72,005 பழச் செடிகளும் 1997-98 ஆம் ஆண்டில் 20,92,064 பழச் செடிகளும் விநியோகிக்கப்பட்டன.

(ஆ) 1995-96 ஆம் ஆண்டில் 22,340 உழவர்களும், 1996-97 ஆம் ஆண்டில் 20,865 உழவர்களும், 1997-98 ஆம் ஆண்டில் 17,088 உழவர்களும் பயனடைந்துள்ளனர்.

**51—**

## உர மானியம்

**வினா 26142—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு மாவட்டவாரியாக மத்திய அரசு 1998-99 ஆம் ஆண்டுக்கு வழங்கிய உர மானியம் எவ்வளவு?

(ஆ) அதில் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்கியது எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு மத்திய அரசு மாவட்ட வாரியாக உர மானியம் ஏதும் நேரடியாக வழங்கவில்லை. மாறாக



1999 நவம்பர் 19]

மத்திய அரசு விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட டி.ஏ.பி., எம்.ஓ.பி., எஸ்.எஸ்.பி. போன்ற கூட்டு உரங்களுக்கு 1992-93 ராபி பருவம் முதல் சலுகைத் தொகையினை வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் அடிப்படையில் உரத் தயாரிப்பு நிறுவனங்கள், தயாரிப்புச் செலவில் இச் சலுகைத் தொகையினை நீக்கி விவசாயிகளுக்கு கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்களை விற்பனை செய்கின்றன. இதனால் ஏற்படும் இழப்பினை மத்திய அரசு வழங்கும் சலுகைத் தொகை மூலம் உரத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றது. இச்சலுகைத் தொகையினைப் பெற உரத் தயாரிப்பு நிறுவனங்களின் விற்பனை அளவின் அடிப்படையில் மாநில அரசால் கோரிக்கைகள் (Claims) மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு நிறுவனங்களுக்குச் சலுகைத் தொகை மீள வழங்கப்படுகின்றது. அவ்வாறு டிசம்பர் 1998 முடிய மாநில அரசால் மாவட்டவாரியாக கீழ்க்கண்டவாறு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:

| வரிசை எண் | மாவட்டம் | டிசம்பர் 1998 முடிய சிபாரிசு செய்த உரச் சலுகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | காஞ்சிபுரம் | 4.64 |
| 2 | திருவள்ளூர் | 4.71 |
| 3 | கடலூர் | 6.80 |
| 4 | விழுப்புரம் | 9.00 |
| 5 | வேலூர் | 5.20 |
| 6 | திருவண்ணாமலை | 5.81 |
| 7 | சேலம் | 6.32 |
| 8 | நாமக்கல் | 1.39 |
| 9 | தருமபுரி | 2.70 |
| 10 | கோயம்புத்தூர் | 10.70 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 11 | ஈரோடு | 11.01 |
| 12 | திருச்சி | 10.82 |
| 13 | பெரம்பலூர் | 3.30 |
| 14 | கரூர் | 1.53 |
| 15 | புதுக்கோட்டை | 12.21 |
| 16 | தஞ்சாவூர் | 5.05 |
| 17 | நாகப்பட்டினம் | 2.37 |
| 18 | திருவாரூர் | 4.49 |
| 19 | மதுரை | 8.21 |
| 20 | தேனி | 3.35 |
| 21 | திண்டுக்கல் | 5.79 |
| 22 | இராமநாதபுரம் | 1.52 |
| 23 | சிவகங்கை | 1.49 |
| 24 | விருதுநகர் | 2.75 |
| 25 | திருநெல்வேலி | 8.00 |
| 26 | தூத்துக்குடி | 3.23 |
| 27 | கன்னியாகுமரி | 1.42 |
| 28 | நீலகிரி | 1.86 |
| 29 | டான்பெட், டி.சி.எம்.எப்.என்.சி.எம்.எஸ், மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்டவை | 45.55 |
| | டிசம்பர் 1998 முடிய மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்ட தொகை. | 19.87 |

ஜனவரி 1999 முதல் மார்ச் 1999 வரை உள்ள காலத்திற்கான உர நிறுவனங்களின் சலுகைத் தொகைக் கோரிக்கைகள் ஆய்வு நிலையில் உள்ளன. தற்போது மாநில அரசு உரச் சலுகை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.





**52—**

## குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

**வினா 26437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலை உற்பத்திப் பொருட்கள் உபரியாக இருக்கின்ற காலத்தில் அவற்றைச் சேமித்து வைத்து, நியாயமான விலை பெறுவதற்கு ஏதுவாக குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் சேலத்தில் எப்பொழுது கட்ட அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசு, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை, விற்பனையைச் சிறப்புக் கவனமாகக் கொண்டு மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்ற உத்தேசித்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தில் தமிழ்நாட்டில், பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யவும், பதப்படுத்தவும் மற்றும் பழுக்க வைப்பதற்குமான மையங்கள், தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ளன. இதற்காக அரசு தன்னுடைய பங்குத்தொகை ரூ.188.00 இலட்சம் மேற்படி நிறுவனத்திற்கு 16-12-1998 நாளிட்ட வேளாண்மைத் துறையின் அரசாணை எண் 532-ல் வழங்கியுள்ளது. இவ்விற்பனை மையங்கள் முதலில் சென்னை, திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 470.00 இலட்சமாகும். இதில் சேலத்தில் 12 விற்பனை மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக குளிர்பதன கொள்முதல் மையம் ஒன்றும் சேலத்தில் அமைக்கப்படவுள்ளது. இதைத்தவிர தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் தமிழ்நாட்டில் அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. மேலும் முதலீட்டாளர்கள் குளிர் சாதனக் கிடங்கு அமைத்திட, தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மானிய உதவியினைப் பெற்று பயனடையலாம். ஒரு டன் கொள்ளளவிற்கு (120 கன அடி) மானியம் ரூ.1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் அதிகபட்சம் கட்டுமான செலவில் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது.

[1999 நவம்பர் 19

53—

### ஏலத் தொகை விவரம்

**வினா 18056—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு வாகனங்களில் பயனற்றது என (condemned) செய்யப்பட்டவைகளை உடனுக்குடன் ஏலம் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்டதன் மூலம் கிடைத்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசுத்துறை ஊர்திகள் மோட்டார் வாகன பராமரிப்புத் துறையால் கழிவு செய்யப்பட்டு தேவையான வாகனங்கள் சேர்ந்தவுடன் ஒவ்வொரு காலண்டிலும் பொது ஏலம் மூலம் அவ்வப்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் 820 அரசு ஊர்திகள் விற்பனை செய்யப்பட்டு, விற்பனைத் தொகையாக ரூ.3,01,88,941 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

54—

### புதிய பேருந்து விடுதல்

**வினா 20463—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் பணிமனை 86வது நகரப் பேருந்து மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 86-ல் இயக்கப்படும் பேருந்து டி.எண்.27/எண் 0614 நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருவதால் அதனை தற்போது மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

55—

### பேருந்தை நீட்டித்து இயக்குதல்

**வினா 23763—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் - தாசம்பட்டி செல்லும் நகரப் பேருந்து எண் 1-ஐ மருக்காரம்பட்டி வரை நீட்டிக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் - தாசம்பட்டி செல்லும் நகரப் பேருந்து எண் 1, மருக்காரம்பட்டி வரை, 8-6-1999 முதல் நீட்டித்து இயக்கப்படுகின்றது.

56—

### புதிய பேருந்துகள் இயக்குதல்

**வினா 24925—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பேராவூரணியிலிருந்து நெய்வேலி கறம்பக்குடி, திருவோணம், ஒரத்தநாடு வழியாக தஞ்சாவூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 நவம்பர் 19

விடை —

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணி - தஞ்சாவூர் (வழி) நெய்வேலி, கறம்பக்குடி, திருவோணம், ஒரத்தநாடு தடத்தின் நீளம் 93 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது:

| | நடைகள் |
|---|---|
| **பேராவூரணி-கறம்பக்குடி:** | |
| தடம் எண் 489 பேராவூரணி-கறம்பக்குடி (வழி) இடையாத்தி, நெய்வேலி | 10 |
| **கறம்பக்குடி - திருவோணம்:** | |
| தடம் எண் 25 கறம்பக்குடி-பட்டுக்கோட்டை (வழி) திருவோணம் | 2 |
| தடம் எண் 493 பட்டுக்கோட்டை-கறம்பக்குடி (வழி) திருவோணம் | 8 |
| **திருவோணம் - ஒரத்தநாடு:** | |
| தனியார் புறநகர் பேருந்துகள் | 12 |
| கழக புறநகர் பேருந்துகள் | 6 |
| **ஒரத்தநாடு - தஞ்சாவூர்:** | |
| பட்டுக்கோட்டை - தஞ்சாவூர் (வழி) ஒரத்தநாடு | 177 |
| தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை (வழி) ஒரத்தநாடு | 201 |
| | **378** |

கோரிக்கை தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. இது ஒரு சுற்று வழித்தடமாதலால் நேரடிப் பயணிகள் அடர்வு போதுமான அளவு இருக்காது; எனவே, பிரத்யேக நேரடிப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.



1999 நவம்பர் 19]

**57—**

## நகரப் பேருந்துகளை நீட்டித்து இயக்குதல்

**வினா 24981—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து மருத்துவக் கல்லூரி வரை செல்லும் நகரப் பேருந்தினை வல்லம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் ஏ47, ஏ63, ஏ30, ஏ37, ஏ57 மற்றும் ஏ41 ஆகிய பேருந்துகள் தஞ்சாவூர்-மருத்துவக் கல்லூரி, வல்லம் வழியாக வல்லம் புதூர், செல்லப்பன் பேட்டை, டி.பி. சானிடோரியம், கோட்டரப்பட்டி முதலிய ஊர்களுக்கு தினசரி 80 நடைகள் இயக்கப்படுகின்றன. இவை தவிர தனியார் நகரப் பேருந்து தட எண் 11, தஞ்சாவூர் - வல்லம் தடத்தில் மருத்துவக் கல்லூரி (வழி) இயக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-1) நகரப் பேருந்துகள் தடம் எண் ஏ50 தஞ்சை-மருத்துவக் கல்லூரி வல்லம், ஆலங்குடி, பூதலூர் தடத்தில் தினசரி 12 நடைகளும், தட எண். ஏ49 தஞ்சை-மருத்துவக் கல்லூரி வல்லம், குருக்குளம் தடத்தில் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. தஞ்சையிலிருந்து மருத்துவக் கல்லூரி வல்லம் வழியாக போதிய அளவு நகரப் பேருந்து வசதி இருப்பதால் மருத்துவக் கல்லூரி செல்லும் நகரப் பேருந்துகளை வல்லம் வரை நீட்டிக்க சாத்தியக்கூறு இல்லை.

**58—**

## தோரணமலை முருகன் திருக்கோவிலுக்கு பேருந்து வசதி

**வினா 25006—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் அருகே உள்ள தோரணமலை முருகன் திருக்கோவிலுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1999 நவம்பர் 19

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசியிலிருந்து அம்பாசமுத்திரத்திற்கு வரும் பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் உட்புறமாக தோரணமலை முருகன் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலுக்கு விழாக் காலங்களில் மட்டும் சிறப்புப் பேருந்து இயக்கப்படுகிறது. சாதாரண தினங்களில் தினசரி பேருந்து இயக்கும் அளவிற்கு பயணிகள் கூட்டம் இல்லாததால், இக்கோவிலுக்கு நிரந்தரமாக பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**59—**

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா 25007—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து வல்லம் காட்டுப்பள்ளிவாசலுக்கு இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வல்லம் காட்டுப்பள்ளிவாசலுக்கு நிரந்தரமாக பேருந்து ஏதும் இயக்கப்படவில்லை. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தென்காசியிலிருந்து வல்லம் காட்டுப்பள்ளிவாசலுக்கு விழாக் காலங்களில் கூட்டத்தை அனுசரித்து சிறப்புப் பேருந்து இயக்கப்பட்டது. பின்னர் வேன்களைப் பயன்படுத்தி பயணிகள் வல்லம் காட்டுப்பள்ளிவாசலுக்கு சென்று வந்ததால், சிறப்புப் பேருந்துகளுக்கு போதுமான பயணிகள் ஆதரவு இல்லாத காரணத்தினால் விழாக் காலங்களிலும் பேருந்து இயக்கப்படவில்லை. தென்காசியிலிருந்து



1999 நவம்பர் 19]

வல்லத்திற்கு தற்போது அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 80-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. காட்டுப்பள்ளிவாசலில் குடியிருப்பு பகுதி இல்லை. மேலும், வல்லத்திலிருந்து காட்டுப்பள்ளிவாசல் வரை உள்ள 3.2 கி.மீ. சாலை மிகவும் மோசமாக உள்ளது. எனவே, வல்லம் காட்டுப்பள்ளிவாசலுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டிய தேவை எழவில்லை.

**60—**

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா 25008—திரு. கே. ரவிஅருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், புளியரையிலிருந்து திருநெல்வேலிக்கு இயக்கப்பட்ட தடம் எண் 210 பேருந்தையும், புளியரையிலிருந்து கோவில்பட்டிக்கு இயக்கப்பட்ட தடம் எண் 163டி பேருந்தையும் மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

புளியரையிலிருந்து செங்கோட்டை, தென்காசி வழியாக திருநெல்வேலிக்கு பரிட்சார்த்தமாக இயக்கப்பட்ட தடம் எண் 210 பேருந்தில் பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாக இருந்ததால் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, இப்பேருந்தை மீண்டும் இயக்கும் உத்தேசம் ஏதும் இல்லை. மேலும், தடம் எண் 163டி புளியரையிலிருந்து செங்கோட்டை, தென்காசி வழியாக கோவில்பட்டிக்கு இயக்கப்பட்டு வந்தபோது நேரடி பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததினால் தடச் சீரமைப்பில் இப்பேருந்து தற்போது செங்கோட்டையிலிருந்து கோவில்பட்டிக்கு இயக்கப்பட்டு வருகிறது. மேலும் கோரிக்கை தடத்தில் பகுதி பகுதியாக போதுமான அளவு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, வினாவில் கேட்டுள்ளபடி தடம் எண் 210 மற்றும் 163டி-ஐ புளியரையிலிருந்து மீண்டும் இயக்க தேவை ஏதும் எழவில்லை.

**61—**

### புதிய பேருந்து வசதி

**வினா 25032—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு பேருந்து போக்குவரத்து மிகவும் குறைவாக உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதிகளுக்கு புதிய பேருந்து எப்போது விடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குபட்டிக்கு தினசரி எஸ் 1 தடப் பேருந்து மூலம் 8 நடைகளும், 99 தடப் பேருந்து மூலம் 12 நடைகளும், ஓ13 தடப் பேருந்து மூலம் 4 நடைகளும் மொத்தம் 24 நடைகள் இயக்கப்பட்டு, கொங்குப்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் போதுமான போக்குவரத்து வசதியை பெற்று வருகின்றனர். எனவே, புதிய பேருந்து விடும் சாத்தியக்கூறு இல்லை.

**62—**

### புதிய வழித் தடத்தில் பேருந்து

**வினா 25040—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து நாலுகால்பாலம், தின்னப்பட்டி, பண்ணப்பட்டி வழியாக ஜோடுகுளிக்கு புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூரிலிருந்து நாலுகால்பாலம், தின்னப்பட்டி, பண்ணப்பட்டிக்கு தடம் எண் 80 மற்றும் தடம் எண் 63 ஆகியவற்றின் மூலம் 122





நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் மூலம் நேர்வழி தடத்திற்கு வந்தடைந்த ஜோடுகுளி செல்லும் பயணிகள் பயன்பெற்று வருகிறார்கள். இப்பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் 68 சதவீதமே உள்ளது. எனவே, கோரிக்கையில் தெரிவித்துள்ளவாறு புதிய வழித்தட பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**63—**

### கூடுதல் பேருந்து இயக்குதல்

**வினா 25107—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி, குட்லாடம்பட்டி தாடகநாச்சியம்மன் அருவிக்கு மதுரை பெரியார் நிலையத்திலிருந்து கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி அருகில் குட்லாடம்பட்டி என்ற கிராமத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் தாடகநாச்சியம்மன் அருவி உள்ளது. அருவியின் அருகில் குடியிருப்புகள் ஏதுமில்லை. நீர் விழும் காலங்களில் மட்டும் அருவிக்கு மக்கள் சென்று வருகிறார்கள். அருவி வரை செல்லும் சாலை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து குட்லாடம்பட்டி வரை 9 தனிச் சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. எனவே, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து தாடகநாச்சியம்மன் அருவி வரை பேருந்து இயக்கும் அளவிற்கு தேவை எழவில்லை.

**64—**

### புதிய பேருந்து இயக்குதல்

**வினா 25112—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, பரவாக்கோட்டையிலிருந்து மேலநத்தம் வழியாக திருமக்கோட்டை எளவனூர் வரை புதிய நகரப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரவாக்கோட்டை முதல் கீழக்குறிச்சி வரையிலான தடம் மன்னார்குடி மதுக்கூர் பட்டுக்கோட்டை பிரதான சாலையில் அமைந்துள்ளது. இதில் போக்குவரத்துக் கழக மற்றும் தனியார் புறநகரப் பேருந்துகள் சேர்த்து நாள் ஒன்றுக்கு 154 நடைகள் இயக்கப்படுகின்றன. அவை அனைத்தும் நகர பேருந்தைப்போல அனைத்து நிறுத்தங்களிலும் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. கீழக்குறிச்சி-திருமக்கோட்டை வரை பட்டுக்கோட்டை நகரப் பேருந்து மற்றும் தனியார் பேருந்து சேர்த்து 30 நடைகள் இயக்கப்படுகின்றன. திருமக்கோட்டை-எளவனூர் வழித் தடத்தில் நாள் ஒன்றுக்கு மன்னார்குடி நகரப் பேருந்து 10 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் கோரிக்கை தடத்தில் பகுதிவாரியாக போதிய அளவு பேருந்து வசதி உள்ளதாலும், தனிப் பேருந்து இயக்கும் அளவிற்கு போதிய பயணிகள் அடர்வு இல்லாததாலும், புதிய நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**65—**

### புதிய பேருந்து

**வினா 26202—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து, ஒரத்தநாடு-திருமலைசமுத்திரத்திற்கு ஒரத்தநாடு, சோழபுரம், ஈச்சங்கோட்டை, மருங்குளம், வல்லம், திருமலைசமுத்திரம் வரை புதிய பேருந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தின் நீளம் 41 கி.மீ. ஆகும். இத்தடத்தின் இருமுனைகளிலோ அல்லது வழியிலோ கழகப் பணிமனை கிடையாது. இத்தடத்தில் ஒரத்தநாடு முதல் ஏழுப்பட்டி வரை பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. நால்ரோடு முதல் திருமலைசமுத்திரம் வரை பகுதியாக பேருந்து வசதி உள்ளது. ஏழுப்பட்டி முதல் நால்ரோடு வரையிலான 3 கி.மீ. தூரப் பகுதியில் ஊர்கள் ஏதும் இல்லை. மக்கள் தொகையும் இல்லை. ஆயினும் ஏழுப்பட்டியிலிருந்து தோழகிரிப்பட்டி சர்க்கரை ஆலை வழியாக தஞ்சாவூர்-கந்தர்வக்கோட்டை பிரதான சாலைக்கு பேருந்து வசதி உள்ளது. ஒரத்தநாட்டிலிருந்து மருங்குளம் (வழி) சோழபுரம், ஈச்சங்கோட்டை தட எண் 75 பேருந்து மூலம் 4 நடைகள் இயக்கப்படுகின்றன. திருக்கானூர்பட்டி - வல்லம் தடத்தில் தட எண் ஏ 49 நகர் பேருந்து மூலம் 6 நடைகள் இயக்கப்படுகின்றன. வல்லம்-திருமலைசமுத்திரம் தடத்தில் போதிய அளவு நகர் மற்றும் புறநகர் பேருந்து வசதி உள்ளது. ஒரத்தநாட்டிலிருந்து திருமலைசமுத்திரம் செல்லும் பயணிகள் நேர்வழி தஞ்சாவூர் வந்தடைந்து அங்கிருந்து திருமலைசமுத்திரம் செல்கிறார்கள். கோரிக்கை வழித் தடத்தில் புதிய பேருந்து இயக்கினால் போதிய அளவு மக்களுக்குப் பயன்பாடு கிட்டாது. எனவே, புதிய வழித் தடம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

**66—**

### பேருந்து வசதி செய்தல்

**வினா 26218—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள அனைத்து எஸ்டேட்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) எப்போது முழுமையாகப் பேருந்து வசதி செய்து தரப்படும்?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை பகுதியில் பேருந்து இயக்கத்திற்கு ஏற்ற சாலை வசதிகள் உள்ள அனைத்து எஸ்டேட்கட்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மூலமாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) சின்கோனா எஸ்டேட் 7வது பிரிவு முருகன் எஸ்டேட் மற்றும் சக்தி தலைநகர் எஸ்டேட் ஆகியன சாலை வசதியின்மை காரணமாக பேருந்து வசதியின்றி உள்ளன. இதில் சின்கோனா மற்றும் முருகன் எஸ்டேட் சாலைகள் தனியாருக்குச் சொந்தமானதாகும். சக்தி தலைநகர் எஸ்டேட் சாலை மட்டுமே பொதுச் சாலையாகும். சாலைகள் பேருந்து இயக்கத்திற்கு ஏற்ப செப்பனிடப்பட்ட பின்னர், திரும்ப ஆய்வுகள் மேற்கொண்டு, அப்பகுதிவாழ் பயணிகளது அடர்வினையும் கருத்திற்கொண்டு வருங்காலங்களில் புதிய வழித் தடங்கள் இயக்கும்போது இதுகுறித்து திரும்பப் பரிசீலிக்க இயலும்.

**67—**

### ஈ.ஐ.சி.டி. கல்லூரி முன்பு பேருந்து நிறுத்தம்

**வினா 26259—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம்-ஈரோடு திருப்பூர் ஊத்துக்குளி வழியாக இயக்கப்படும் பேருந்துகள் ஈ.ஐ.சி.டி. கல்லூரி முன்பு நின்று செல்லும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு-திருப்பூர் (வழி) ஊத்துக்குளி வழித் தடத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு பேருந்துகள் ஈ.ஐ.சி.டி. கல்லூரி முன்பு நின்று செல்ல 26-5-1999 தேதியன்று சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டு பேருந்துகள் நின்று செல்லும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன.



1999 நவம்பர் 19]

**68—**

### பேருந்தை சரிவர இயக்குதல்

**வினா 26271—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து காக்கங்கரைக்கு கந்திலி, பள்ளத்தூர், பெரிய கண்ணராப்பட்டி, ராஜாவூர் வழியாகச் செல்லும் பேருந்து சரிவர ஓடுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித் தடத்தில் நகரப் பேருந்து தடம் எண் டி29 ஒன்றின் மூலம் மட்டும் நாளொன்றுக்கு 4 நடைகள் வீதம் திருப்பத்தூர் சுந்தரம்பள்ளி (வழி) கந்திலி, பள்ளத்தூர் கொட்டாவூர், கிழக்கு பதனவாடி, ராஜாவூர் காக்கங்கரை வழியாக இயக்கப்பட வேண்டும். ஆனால், கடந்த 31-7-1996 முதல் கிழக்கு பதனவாடி முதல் ராஜாவூர் வரை உள்ள சாலை 3.2 கி.மீ. தூரத்திற்கு மண்சாலையாகவும் சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாகவும் இல்லாத காரணத்தினால் மேற்படி நகரப் பேருந்து தடம் எண் டி.29 மூலம் நிர்ணயிக்கப்பட்ட 4 நடைகள் திருப்பத்தூரிலிருந்து கிழக்கு பதனவாடி வரை மட்டும் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்கக் கோரி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) கோட்டம் (2) லிட். வேலூர் மூலம் கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை மற்றும் கிராமிய பணித் துறை வேலூர் அவர்களுக்கு கடிதங்கள் எழுதப்பட்டு உள்ளது. எனவே, மேற்படி சாலை சரியில்லாத பகுதி, தார்ச் சாலையாக மாற்றியமைக்கப்பட்ட பின்பு நகரப் பேருந்து தடம் எண் டி.29 வழக்கம்போல் அனுமதிக்கப்பட்ட தடத்தில் தொடர்ந்து இயக்கப்படும்.

[1999 நவம்பர் 19

69—

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 26272—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி கருமாபாளையம் ஊராட்சி, கருமாபாளையம், செம்மாண்டம்பாளையம், பாரதி நகர் ஆகிய ஊர்களுக்கு அவினாசியிலிருந்து நகரப் பேருந்து இயக்குமாறு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். கருமாபாளையம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மூலம் கோரிக்கை பெறப்பட்டது.

(ஆ) அவினாசியிலிருந்து கருமாபாளையம் செல்லும் சாலை பேருந்து இயக்கத்திற்கு உகந்த வகையில் சீர் செய்த பின்னரே புதிய வழித் தடப் பேருந்து இயக்கிட பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. சாலையை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்ற வகையில் மாற்றிய பின்னர் புதிய வழித் தடப் பேருந்து இயக்கிட, சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால், மேற்படி சாலை, மினிப் பேருந்து இயக்கத்திற்கு மட்டுமே ஏற்றது என தெரிவித்து தற்போது மினிப் பேருந்து விட தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டு, பேருந்து இயக்கப்படுவதன் மூலம் அப்பகுதி பேருந்து வசதி பெற்றுள்ளது.

70—

## கூடுதல் பேருந்து வசதி

**வினா 26468—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி முதல் பவானி வரை (வழி) கோனேரிப்பட்டி சித்தூர் என்ற வழித் தடத்தில் மிகக் குறைவான அளவு பேருந்து



1999 நவம்பர் 19]

உள்ளதால், அந்த வழித் தடத்தில் மேலும் சில நடைகள் எடப்பாடி கிளையிலிருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி முதல் பவானி வரை கோனேரிப்பட்டி, சித்தூர் வழியாக தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மூலம் ஒரு நகரப் பேருந்து நாளொன்றுக்கு 12 நடைகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், எடப்பாடியிலிருந்து ஈரோடு வரை இதே வழியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம், ஒரு புறநகர் பேருந்தை நாளொன்றுக்கு 6 நடைகளுடன் இயக்கி வருகிறது. எனவே, மேற்கூறியபடி கோரிக்கை வழித் தடத்தில் போதுமான பேருந்து வசதி இருப்பதால் மேலும் கூடுதல் நடைகளை இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

71—

## பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துதல்

**வினா 26477—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருக்கானூர்பட்டி 33 கே.வி. துணை மின் நிலையம் அருகில் நகரப் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருக்கானூர்பட்டி 33 கே.வி. துணை மின் நிலையம் வழியாக செல்லும் நகரப் பேருந்துகள் மேற்படி நிலையம் முன்பு நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நகரப் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் சென்று வருகிறதா என்றும் கழக போக்குவரத்து ஆய்வாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 14-6-1999 முதல் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது.

72— [1999 நவம்பர் 19

**பேருந்து நேரம் மாற்றுதல்**

**வினா 26490—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் சாமத்தான் நகரப் பேருந்து, சத்தியநாதபுரம் ஊராட்சி, ஆணைக்கல்லானூர், மோட்டுப்பட்டி வழியாகச் செல்ல நேரம் மாறுதல் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேருந்து வசதி பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 35 கிலோமீட்டர் தூரம் வரை நகரப் பேருந்து இயக்க இயலும். கோரிக்கை வழித் தடம் 36.5 கி.மீ. தூரம் வருவதால் பெண்ணாகரத்திலிருந்து சாமத்தான் செல்லும் நகரப் பேருந்து தடம் எம் 3-ஐ ஆணைக்கல்லானூர், மோட்டுப்பட்டி வழியாக மாற்றி இயக்க இயலாது. மேலும் பெண்ணாகரத்திலிருந்து ஆணைக்கல்லானூர், மோட்டுப்பட்டி வழியாக புதுப்பட்டி வரை தடம் எண் 6 மற்றும் 9-ன் மூலம் 4 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுவதால் அக்கிராமங்கள் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளன.

73—

**நாகமரை வரை பேருந்து செல்லுதல்**

**வினா 26494—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து நாகமரை வரை செல்லும் எஸ்.ஏ.எம்.எஸ். என்ற தனியார் பேருந்து நாகமரை செல்லாமல் நெருப்பூரிலேயே திரும்பிவிடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனால் பொதுமக்களின் பாதிப்பை உணர்ந்து நாகமரை வரை செல்ல ஆவன செய்யப்படுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட தனியார் பேருந்து எண் என்.டி 29-4545 தற்பொழுது அனுமதி வழங்கியுள்ளவாறு நாகமரை வரை சென்று வருகிறது.

74—

**வைகை ஆற்றின் குறுக்கே பாலம்**

**வினா 2344—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரெங்கப்பநாயக்கன்பட்டி—ராமநாயக்கன்பட்டியை இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ரெங்கப்பநாயக்கன்பட்டி-ராமநாயக்கன்பட்டியை இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான திட்டம் தற்போது ஏதும் இல்லை.

75—

**பாலத்தை அகலப்படுத்துதல்**

**வினா 19592—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகூர் வெட்டாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்தி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டினன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை மேம்பாட்டுப் பணியானது தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் குழுமம் இரண்டாம் கட்ட திட்டத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதில் நாகப்பட்டினத்திலிருந்து புறவழிச்சாலை அமைப்பதும், நாகூர்-காரைக்கால் சாலை கி.மீ. 7/4-ல் உள்ள பாலத்தை அகலப்படுத்தி புதிதாக கட்டவும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் குழுமம் இரண்டாம் கட்ட திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் குழுமம் இரண்டாம் கட்ட திட்டத்தில் செயலாக்கப்படும்பொழுது நாகூர் வெட்டாற்றில் பாலம் பணியும், புறவழிப் பாதை அமைக்கும் பணியும் செயல்படுத்தப்படும்.

76—

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா 23325—திரு. கே. ரவி அருணன்**: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம்-தென்காசி வட்டம் சுந்தரபாண்டியம்—சுரண்டை-திருச்சிற்றம்பலம் வழியாக செல்லும் நெடுஞ்சாலையைப் பழுது நீக்கம் செய்து புதிய தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இச்சாலையானது, பாவூர்ச்சத்திரம் வெள்ளக்கால் சுரண்டை சாலையிலிருந்து திருச்சிற்றம்பலம் சாலை கி.மீ. 0/0—2/4 மற்றும் திருச்சிற்றம்பலம் சாலை கி.மீ. 0/0—1/6 எனும் இரண்டு இதர மாவட்டச் சாலைகளாகும்.





4. கி.மீ. உள்ள இச்சாலையினைச் சீர் செய்ய ரூ.16 இலட்சம் தேவைப்படும். எனவே, இப்பணியினை நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பழுதுபார்க்க நிதி ஆதாரத்தைப் பொறுத்து வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

77—

### தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா 23947—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி பேரூராட்சி, இலஞ்சியிலிருந்து ஐந்தருவி செல்லும் பேரூராட்சி சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலமாக கிராமச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாற்றியமைத்து செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலஞ்சி—ஐந்தருவி சாலை (புறவழிச்சாலை) கி.மீ. 0/0—5/0 தென்காசி ஒன்றியம் இலஞ்சி பேரூராட்சி பராமரிப்பில் உள்ள சாலையாகும். இதன் மேற்பரப்பு கி.மீ. 0/0—3/0 வரையுள்ள பகுதிகள் தார்ச் சாலையாக இருப்பினும் தற்சமயம் சாலை மிகவும் மோசமான சூழ்நிலையில் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. இச்சாலை பேரூராட்சி பராமரிப்பிலுள்ள சாலை என்பதால், கிராமச்சாலைத் துறை மூலம் மேம்பாடு செய்ய சாத்தியமில்லை.

78—

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா 23948—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சி, சுரண்டையிலிருந்து சேந்தமரம் செல்லும் சாலை கி.மீ. 3/4 ஆலடிப்பட்டி

[1999 நவம்பர் 19

வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலமாக கிராமச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாற்றியமைத்து செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட இச்சாலையின் பெயர் சுரண்டை சேந்தமரம் சாலை, கி.மீ. 3/4-ல் பிரிந்து ஆலடிப்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0—1/8 என்பதாகும். இச்சாலை சுரண்டை மற்றும் ஆலடிப்பட்டி கிராமங்களை வாடியூர் கிராமத்துடன் இணைக்கும் கற்தளம் கொண்ட பேருந்து தடச் சாலையாகும். இச்சாலையை அரசின் நிதிநிலைக்கேற்ப இனிவரும் காலங்களில் நபார்டு திட்டத்தில் எடுத்துச் செய்ய பரிந்துரை செய்யப்படும்.

**79—**

**தார்ச் சாலையாக மாற்றுதல்**

**வினா 23949—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சின்னத்தம்பி நாடானூர் சாலை மற்றும் மடத்தூரிலிருந்து முத்துமலைபுரம் செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலமாக கிராமச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாற்றியமைத்து செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சின்னத்தம்பி நாடானூர் சாலை கி.மீ. 0/0—1/6 வரை மேம்பாடு செய்யும் பணி நபார்டு திட்டம் 9-ல் பேருந்து தடச் சாலை திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு ரூ.11.64 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 26-3-1999 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டு ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தம் உடன்படிக்கை செயலாக்கப்பட்டதும் மேம்பாடு வேலை ஆரம்பிக்கப்படும். இன்னொரு சாலையான மடத்தூர் முத்துமலைபுரம் சாலை கி.மீ. 0/0—1/4 கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கற்சாலையாகும். இச்சாலையை அரசின் நிதிநிலைக்கு ஏற்ப வரும் நபார்டு திட்டத்தில் எடுத்துச் செய்ய பரிந்துரை செய்யப்படும்.

**80—**

**கருணை அடிப்படையில் பணி நியமனம்**

**வினா 23950—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யும்பொழுது நெடுஞ்சாலைத் துறையின் அரசு ஊழியர் இறந்த தேதியை வைத்து Seniority கடைப்பிடிக்காமல் கருத்துருக்கள் பெறும் தேதியை கணக்கில் வைத்து வேலைவாய்ப்பு வழங்கப்படுவதால் சிலர் வேலை வாய்ப்பில் பாதிப்பு அடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு ஊழியர் இறந்த தேதியை வைத்து கடைப்பிடிக்கப்படுமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையைப் பொறுத்தவரையில் வேலை நிதியில் ஊதியம் பெறும் நிறுவனத்தைச் சார்ந்த பணியாளர்கள் அதிக அளவில் உள்ளனர். கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி பெறப்படும் கருத்துருக்கள் அதிக அளவில் உள்ளன. இத்துறையைப் பொறுத்தவரை 7 பதவிகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய வாய்ப்பு உள்ளது. கருத்துருக்கள் பெறப்பட்டு வாரிசுதாரர்களின் கல்வி தகுதிக்கேற்ப ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாக முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பணி நியமனம் அளிக்கப்படுகிறது. இதன் காரணமாக கருத்துருக்கள் பெறப்படும் தேதியின் அடிப்படையிலேயே முதுநிலை அளிக்க முடியும். இறந்த தேதியின் அடிப்படையில் முதுநிலை அளிக்க இயலாது.

(ஆ) மேலே விவரிக்கப்பட்ட நிலையில் கருத்துருக்கள் பெறப்படும் தேதியின் அடிப்படையில் முதுநிலை வழங்கும் தற்போதைய நிலையை மாற்றும் உத்தேசம் எதுவும் இல்லை.

**81—**

## கோவில் சொத்து மதிப்பு

**வினா 18797—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள கோவில்களில் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கடைகளின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) கோவில்களில் கடைகளின் மதிப்பு மற்றும் எவ்வளவு பேர் வாடகைக்கு உள்ளனர்? வாடகை மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| வரிசை எண் | திருக்கோயில் களின் விவரம் | திருக் கோயில் நிலங் களின் மதிப்பு (ரூபாய் இலட் சத்தில்) | திருக் கோயில் கடை களின் மதிப்பு (ரூபாய் இலட் சத்தில்) | வாடகை தாரர் களின் எண் ணிக்கை | கடை களின் மூலம் கிடைக்கும் வருமானம் (ரூபாய் இலட் சத்தில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்கள் | 710.264 | 821.379 | 966 | 36.87 |
| 2 | பட்டியலில் சேராத திருக்கோயில்கள் | 533.850 | 45.00 | 329 | 2.40 |
| | | **1244.114** | **866.379** | **1,295** | **39.27** |

**82—**

## திருக்கோயில்களுக்குச் சொந்தமான குளங்கள்

**வினா 27032—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான குளங்கள் எத்தனை?

(ஆ) அந்தக் குளங்களைச் சுத்தப்படுத்தி நீர்வரத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள 12 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 12 திருக்குளங்கள் உள்ளன.

(ஆ) அவற்றில் 6 திருக்குளங்கள் தூர் எடுக்கப்பட்டுள்ளன. 2 திருக்குளங்களில் தூர் எடுக்கப்பட்டு வருகிறது. மீதம் உள்ள 4 திருக்குளங்களைச் சுத்தப்படுத்தி நீர்வரத்தை ஏற்படுத்திக் கொடுக்க மாவட்ட ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**83—**

**புதிய நியாய விலைக் கடைகள் தொடங்குதல்**

**வினா 20790—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எவ்வளவு புதிய நியாய விலைக் கடைகள் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பகுதி நேரக் கடைகளின் தற்போதைய நிலை, புதியதாக தொடங்கப்பட்ட/தொடங்கப்படவுள்ள பகுதிநேர நியாய விலைக் கடைகளின் கிராமங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | அருவாய்ப்பட்டி | 17-6-1999-ல் பகுதி நேரக் கடை திறக்கப்பட்டு விட்டது. |
| 2. | வீரப்பன்பாளையம் | சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் 25-2-1999 அன்று அனுமதி அளித்துள்ளார். விரைவில் நியாயவிலைக் கடையைத் தொடங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 3. | வெடிக்காரம்பாளையம் | 21-4-1999-ல் தொடங்கப்பட்டுள்ளது |
| 4. | புதூர் | 21-4-1999-ல் தொடங்கப்பட்டுள்ளது. |
| 5. | சிலுவம்பாளையம் | 23-11-1998-ல் தொடங்கப்பட்டுள்ளது. |
| 6. | ஆவணியூர் | தற்போது எடப்பாடி பொன்னி கடை எண் 2 மற்றும் 10-ல் உள்ள ஆவணியூர் காக்கயன்காடு மற்றும் ரெட்டித்தெருவில் உள்ள 295 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஆவணியூரில் பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க சேலம் இணைப் பதிவாளர் அவர்களால் முன்மொழிவு 12-7-1999 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |



1999 நவம்பர் 19]

**84—**

**அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 23067—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், தெற்கு கோட்டை கிராமத்திலுள்ள அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெற்கு கோட்டை ஊராட்சி, யோகநாயகிபுரம் நியாயவிலை அங்காடிக்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1.45 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

[1999 நவம்பர் 19

**85—**

**அமுதம் அங்காடி**

**வினா 24007—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் 1-வது வார்டில் ஒரு அமுதம் அங்காடி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் உள்ள மூன்று நியாய விலைக் கடைகளில் 01-07-1999-ல் கீழ்க்கண்டவாறு குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன:

| | அங்காடி விவரம் | குடும்ப அட்டைகள் |
|---|---|---|
| 1 | வல்லம் தெற்கு | 1401 |
| 2 | தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கிளை—1 | 953 |
| 3 | தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கிளை—2 | 794 |
| | மொத்தம் | **3,148** |

வார்டு (ward) எண் 1 வல்லம் பேரூராட்சியின் கடை எல்லையில் (fag end) அமைந்துள்ளது. மத்திய பகுதியில் இவ்வார்டு இல்லாததால் இப்பகுதியில் மற்ற பகுதி மக்களின் குடும்ப அட்டைகளையும் இணைத்து ஒரு முழு நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை. ஆயினும், தற்போது வல்லத்தில் செயல்படும் மூன்று அங்காடிகளிலும் உள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து வல்லத்தின் மத்திய பகுதியில் 4-வது முழு நேர நியாய விலைக் கடை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திறக்கப்படவிருக்கும் புதிய அங்காடியினால் வல்லம் வார்டு எண் 1-ல் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுவார்கள்.



1999 நவம்பர் 19]

**86—**

**அங்காடிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 24011—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சியில் மானோஜிப்பட்டி பொது விநியோக அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சி மானோஜிப்பட்டி அங்காடிக்குக் கட்டடம் கட்ட தேவையான இடம் இருப்பின் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித் தரக் கோரி தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்கு வரும் நிதியாண்டில் (2000-2001) பரிந்துரை செய்திட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**87—**

**நியாயவிலைக் கடையைத் திறத்தல்**

**வினா 24697—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி போடி நாயக்கன்பட்டியில் கட்டிமுடிக்கப்பட்ட நியாய விலைக் கடை திறக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நியாயவிலைக் கடையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி போடிநாயக்கன்பட்டி பொன்னி கூட்டுறவுச் சிறப்பங்காடி புதிய கட்டடத்தில் 21-8-1999 முதல் இயங்கி வருகிறது.

**88—**

**கூட்டுறவு விவசாய விற்பனைச் சந்தை**

**வினா 26146—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், இராமமூர்த்தி நகரில் உள்ள கூட்டுறவு விவசாய விற்பனைச் சந்தைக்கு சிமெண்ட் தளம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் ஓமலூர் வட்டம், இராமமூர்த்தி நகரில் ஒவ்வொரு வருடமும் பருத்தி அறுவடை காலங்களில் மட்டும் பருத்தி டெண்டர் நடைபெற்று வருகின்றது. சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு இராமமூர்த்தி நகரில் சொந்த நிலம் இல்லாததால், அந்த ஊர் மாரியம்மன் கோவில் நிலத்தில் வருட வாடகையாக ரூ.1300-க்கு ஒப்பந்தம் ஏற்படுத்தி டெண்டர் நடத்தப்படுகிறது. சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கென சொந்தமாக நிலம் வாங்கி விற்பனைத் திடல் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது காடையாம்பட்டி ஒன்றியம் இராமமூர்த்தி நகரில் அரசு நிதியுதவியுடன் தளம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**89—**

**மருந்தாளுநர், பட்டயதாரர்களுக்கு வேலைவாய்ப்பு**

**வினா 27109—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 19]

(அ) வேலை கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் காத்திருப்போர் பட்டியலில், தமிழகம் முழுவதும் உள்ள மருந்தாளுநர், பட்டயதாரர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அதில் சேலம் மாவட்டத்தில் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) அவர்களுக்கு வேலைவாய்ப்பு தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகம் முழுவதும் 30-6-1999 அன்றைய தேதியில் 9,151 மருந்தாளுநர் பட்டயம் பெற்றோர் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலை வேண்டி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 30-6-1999 அன்று 408 மருந்தாளுநர் பட்டயம் பெற்றோர் வேலைவாய்ப்பு வேண்டி காத்துள்ளனர்.

(இ) மைய மற்றும் மாநில அரசின் மருத்துவத் துறைகளிலும் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும், மருந்தாளுநர் பட்டயம் பெற்றோர் பணி காலியிடத்தை வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கும்போது அக்காலியிட அறிவிப்பின்படி மருந்தாளுநர்கள் அவர்களுக்குரிய பதிவு மூப்பு, வயது அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

**90—**

**பட்டு வளர்ச்சித் துறையை சிறப்பாகச் செயல்படுத்துதல்**

**வினா 25205—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பட்டு வளர்ச்சித் துறை மூடப்படும் என்று சொல்லப்படுவது உண்மையா?

[1999 நவம்பர் 19

(ஆ) ஆம் எனில், அந்தத் துறையை சிறப்பாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**91—**

## அதியமான் ஔவைக் கோட்டம்

**வினா 23102—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி தொகுதியில் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட அதியமான் ஔவைக் கோட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) இக்கோட்டம் கட்டும் பணியை விரைவுபடுத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரியில் அதியமான் கோட்டம் அமைக்க வேறு இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**92—**

## கோழிகளுக்கு தடுப்பூசி மற்றும் மருந்துகள்

**வினா 24169—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 19]

நாமக்கல் மாவட்டம், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் நாட்டுக்கோழிகளுக்கு வெள்ளைக் கழிசல் நோயைத் தடுக்கும் வகையில் எவ்வளவு கோழிகளுக்கு தடுப்பூசி மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் நாட்டுக்கோழிகளுக்கு வெள்ளைக் கழிசல் நோயைத் தடுக்கும் வகையில் 2,71,697 தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. இதற்காக 1,500 குப்பிகள் (200 டோஸ்) மருந்துகள் இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திலிருந்து பெறப்பட்டு உபயோகிக்கப்பட்டன.

**93—**

## கால்நடை மருந்தகம் தொடங்குதல்

**வினா 24265—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, தொண்ராம்பட்டு (தஞ்சாவூர் மாவட்டம்), எடகிழையூர் (திருவாரூர் மாவட்டம்) ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**94—**

## கால்நடை மருந்தகங்களை மருத்துவமனையாக்குதல்

**வினா 26383—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடை மருந்தகங்களை, மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு பரிசீலிக்கும் வரைமுறை என்ன என்பதைத் தெரிவிக்குமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை மருந்தகங்களை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு கீழ்க்கண்டவாறு வரையறுத்துள்ளது:-

(1) பொதுவாக ஓரிடத்தில் கால்நடை மருந்தகம் இருந்து அக்கால்நடை மருந்தகத்திற்கு சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் தினசரி சராசரி எண்ணிக்கை 40-க்கு மேல் இருக்க வேண்டும்.

(2) கால்நடை மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படும் கால்நடை மருந்தகம் அரசு சொந்த கட்டடத்தில் இயங்க வேண்டும்.

(3) கால்நடை மருத்துவமனையாக பிற்காலத்தில் விரிவுபடுத்த கால்நடை மருந்தகத்தைச் சுற்றி போதிய இடவசதியும், திறந்தவெளி காலியிடமும் இருக்க வேண்டும்.

(4) சிகிச்சைக்காக வரும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க உள்நோயாளிக் கொட்டகை வசதி, அறுவை சிகிச்சைக்கூடம் போன்ற வசதிகள் இருக்க வேண்டும்.

(5) கால்நடை மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதிகள் இருத்தல் வேண்டும்.

(6) கால்நடை மருத்துவமனைக்குத் தேவையான தண்ணீர் வசதி இருக்க வேண்டும்.

(7) கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகளை வைத்துக்கொள்ள அலுவலகக் கட்டடம், முன்பகுதி வராண்டாவில் ஒரு அறையும், அலுவலக அறை, மருந்துக் கிடங்கு மற்றும் சிகிச்சை அறைகள் இருத்தல் வேண்டும்.

(8) உள் நோயாளி கொட்டகை டிரவில் மற்றும் காயடிக்கும் கருவி போன்றவை இருத்தல் வேண்டும்.

(9) நல்ல குடிதண்ணீருடன் கூடிய கிணறு மற்றும் தண்ணீரை மேல்நிலைத் தொட்டியில் சேமித்து வைக்க மோட்டார் கிணற்றுடன் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.



1999 நவம்பர் 19]

**95—**

## மயானம் அமைத்தல்

**வினா 13022—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம் பூசாரிப்பட்டியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று மயானம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

பூசாரிப்பட்டி கிராமம், ஆதிதிராவிட மக்களுக்கு பூசாரிப்பட்டி கிராமம் சர்வே நெ. 73/3 “தீர்வை ஏற்படாதத் தரிசு” அரசுப் புறம்போக்கு நிலம் மயானம் மற்றும் மயானப்பாதைக்காக 19-01-1996-ல் நில எடுப்புச் செய்யப்பட்டுள்ளது. அருந்ததியர் மக்களுக்குத் தனியாக மயானம் தேவையென கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, ஏற்கெனவே ஆதிதிராவிடர்களுக்கென, மயானத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதிக்கு முன்புறம் சுமார் 0.25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அருந்ததியர்கள் அவர்களுக்கென தனியாக மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்துக் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டு தனித்தனியே மயானம் அமைத்துக் கொடுக்கப்பட்டுவிட்டது.

**96—**

## நாமக்கல் மாவட்டத்தில் கட்டுமானப் பணிகள்

**வினா 28456—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகச் செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

[1999 நவம்பர் 19

(ஆ) அதன் தற்போதைய முன்னேற்ற விவரம் பற்றி அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக ஏழு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) அவற்றின் தற்போதைய முன்னேற்ற விவரம் கீழ்வருமாறு:—

| | கட்டுமானப் பணியின் விவரம் (1) | தற்போதைய நிலை (2) |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி. | கட்டடத்தின் முக்கிய பணிகள் முடிவுற்று கட்டடத்தினை ஒப்படைக்கும் நிலையில் தயாராக உள்ளது. |
| 2 | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, கோட்டப்பாளையம். | பணி ஆணை வழங்கப் பட்டுள்ளது. பணித்தளம் தேர்வு செய்து ஒப்படைக்கப்பட வேண்டும். |
| 3 | ஆதிதிராவிடர் நலப்பள்ளி, பாலப்பட்டி. | முதல் தளம் செங்கல் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. |
| 4 | ஆதிதிராவிடர் நலப்பள்ளி, செங்கரை. | பணித்தளம் ஒப்படைக்கப்பட வேண்டும். |
| 5 | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி, வாழவந்திநாடு. | தரைத்தளம் செங்கல் கட்டும் பணி ஜன்னல் மட்டம் வரை நடைபெற்றுள்ளது. |
| 6 | குசவன்பட்டி சமுதாயக்கூடம். | கட்டடப் பணி ஆரம்பிக்கப்பட உள்ளது. |
| 7 | செங்கரை ஆசிரியர் குடியிருப்பு | அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. |



1999 நவம்பர் 19]

**97—**

## கதர்த் தொழில் வாரியத்திற்கு மானியத் தொகை

**வினா 21557—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கதர்த் தொழில் வாரியத்திற்கு 1992-1996 வரை எவ்வளவு மானியத் தொகை வழங்க வேண்டும்?

(ஆ) இன்னும் வழங்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர்க் கிராமத் தொழில் வாரியத்திற்கு அரசால் 1991-92 முதல் 1995-96 முடிய வழங்கப்பட வேண்டிய மானியத் தொகை அனைத்தும் அரசால் வழங்கப்பட்டுவிட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு கொடுக்கப்படுகிறது:-

| வருடம் (1) | நிகர மானியத் தொகை (2) | தணிக்கை கட்டண மானியம் (3) | தள்ளுபடி மானியம் (4) | இதர திட்டங்கள் மானியம் (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1991-92 | 429.83 | 60.00 | 350.00 | 39.95 |
| 1992-93 | 473.94 | 40.00 | 450.00 | 62.75 |
| 1993-94 | 504.76 | 75.00 | 450.00 | 82.32 |
| 1994-95 | 550.00 | 75.00 | 487.80 | 89.64 |
| 1995-96 | 550.00 | 75.00 | 500.00 | 140.97 |

1992-93 ஆம் ஆண்டு முதல் 1995-96 வரையிலான காலத்திற்குரிய நிலுவை நிகர மானியமும் 1997-98-ல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை.

98—

## கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி

**வினா 25242—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்குவதில் புதிய நிபந்தனைகளை மத்திய கதர் ஆணைக் குழு விதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்குவதில் புதிய நிபந்தனைகளை மத்திய கதர் ஆணைக் குழு விதிக்கவில்லை.

99—

## சேவைக் கட்டணம் வசூல்

**வினா 26416—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் வாரியத்திற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து சேவைக் கட்டணமாக வசூல் செய்ய வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு?

(ஆ) அதை வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) எவ்வளவு காலத்திற்குள் வசூல் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கதர் வாரியத்திற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டிய சேவைக் கட்டணம் முன்நிலுவையாக ரூ.56.59 இலட்சமும், நடப்பு நிலுவையாக ரூ.0.79 இலட்சமும் 31-05-1999 வரை வசூல் செய்யப்பட வேண்டியுள்ளது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் மீது குற்றப்புலனாய்வுத் துறை விசாரணை நடவடிக்கைகளும் தண்டத் தீர்வை நடவடிக்கைகளும்



நிலுவையிலுள்ளதால், விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சேவைக் கட்டண முன்நிலுவைத் தொகையான ரூ.56.59 இலட்சம் வசூல் செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடப்பு சேவைக் கட்டண நிலுவைத் தொகை ரூ.0.79 இலட்சம் உடனுக்குடன் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

(இ) குற்றப்புலனாய்வுத் துறை மற்றும் கூட்டுறவுச் சங்க வழக்குகள் முடிவடைந்தவுடன் சேவைக் கட்டண முன்நிலுவை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

100—

## கொதிகலன்கள்

**வினா 26419—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்க் கிராமத் தொழில் வாரியம், திருக்கழுக்குன்றம் குளியல் சோப்பு அலகில் நீராவி கொதிகலன்களை வாங்கி 15 மாதங்கள் ஆகியும் நிறுவப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதனால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருக்கழுக்குன்றம் குளியல் சோப்பு அலகிற்கு நீராவி கொதிகலன் இயந்திரம் 22-08-1997 அன்றும், தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் 15-07-1998 அன்றும் கொள்முதல் செய்யப்பட்டு, 10-02-1999 முதல் மேற்படி அலகு செயல்பட்டு வருகிறது.

(இ) கொதிகலன்களைப் பொருத்துவதற்குத் தேவையான நடவடிக்கை, அதாவது தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வாங்க வேண்டியிருந்ததால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டதாகக் கருத முடியாது.

## எட்டாம் பட்டியல்

1—

### பல்லடுக்கு விருந்தினர் மாளிகை

**வினா 11141—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பழைய அரசு விருந்தினர் மாளிகையை முழுவதுமாக இடித்துவிட்டு அதே இடத்தில் நவீன வசதிகளுடன் ஒரு பல்லடுக்கு விருந்தினர் மாளிகையாகக் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

2—

### விற்பனை வரியை ரத்து செய்தல்

**வினா 16643—திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மருந்து வணிகர்கள் சங்கத்திடமிருந்து மருந்துகளுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

3—

### வரி அதிகரித்தல்

**வினா 22589—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மக்கள் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் சிகரெட், பான்மசாலா, மதுவகைகள் ஆகியவற்றுக்கு 10 சதவிகிதம் வரி அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1-4-1999 சிகரெட் மீது ஆடம்பர வரியாக 5 விழுக்காடு விதிக்கப்பட சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. பான்மசாலா மீது விதிக்கப்படும் வரி 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. மதுவகைகள் மீது உயர்ந்தபட்ச வரியாக 70 விழுக்காடு ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ளது.

4—

### உயர்மட்டக் குழு

**வினா 22593—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனை வரி வசூலில் நடைபெறும் முறைகேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) விற்பனை வரி வசூலில் முறைகேடுகள் விதியை மீறி ஏதும் நடைபெறுமானால் அதற்கு துறை தணிக்கைக் குழு தனியாகவும், மாநிலக் கணக்காயர் தணிக்கை தனியாகவும் தணிக்கை செய்யப்படுவதனால் அவை தடுக்கப்பட்டுவிடும். மேலும் விற்பனை வரி விதிப்பில் முறைகேடுகள் இருப்பின் மேல்முறையீடுகளில் சரிசெய்து கொள்ளலாம். விற்பனை வரி அதிகாரிகள் முறைகேடாக நடந்து கொண்டால் சட்டமன்ற உறுப்பினரே சம்பந்தப்பட்ட எல்லைக்குட்பட்ட

[1999 நவம்பர் 19

வணிகவரி துணை ஆணையர் அல்லது சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை இயக்குநர் (நிருவாகம்) அவர்களுக்குப் புகார்மனு தந்தால் துறை உரிய நடவடிக்கை எடுக்கும். எனவே, தனியாக உயர் மட்டக்குழு அமைக்கத் தேவையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு விடையளிக்கும் அவசியம் எழவில்லை.

5—

## முழுமையான வரிவிலக்கு

**வினா 22595—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசைத் தொழிலாக செய்யும் ரொட்டி மற்றும் பண்டங்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

வணிகச் சின்னம் இடம் பெறாத குடிசைத் தொழிலாகச் செய்யப்படும் ரொட்டி மற்றும் பேக்கரி பொருட்களுக்கு ரூ.5 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் மொத்த விற்பனைத் தொகை இருந்தால் 1-4-1998 முதல் கிடையாது. இதனால், குடிசைத் தொழிலாக ரொட்டிப் பண்டங்கள் செய்யும் வணிகர்கள் பயன் அடைவார்கள். மொத்த விற்பனைத் தொகை ரூ. 5 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால், முழுமையான வரி விலக்கு கிடைக்கும் என்பதால் மற்றொரு ஆணை பிறப்பிக்கத் தேவையில்லை.

6—

## விற்பனை வரிவிலக்கு அளித்தல்

**வினா 22596—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைத் தொழிலாக உற்பத்தி செய்யும் கயிற்றுக்கு முழுமையாக விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க அரசு ஆவன செய்யுமா?



999 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேங்காய்நாரிலிருந்து தயாரிக்கப்படும் கயிற்றுக்கு 7-7-1996 முதல் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959-ன் மூன்றாவது அட்டவணை, பகுதி 'பி', வரிசை எண் 59-ன்படி ஏற்கெனவே முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

7—

## சிட்டா நூலுக்கு வரி ரத்து செய்தல்

**வினா 22599—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டு சதவீத வரியை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் சிட்டா நூலுக்கு இரண்டு சதவீத வரி விதிக்கப்படுகிறது. கேரள மாநிலத்தில் சிட்டா நூலுக்கு 2.5 சதவீதம் வரியும், கர்நாடகம் மற்றும் ஆந்திர பிரதேசம் மாநிலங்களில் இரண்டு சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. தமிழகத்தில் சிட்டா நூலுக்கு விதிக்கப்படுகிற வரி மிகவும் குறைவானதே ஆகும். வரி நீக்கம் செய்தால் அரசுக்கு ஆண்டுக்கு 22 முதல் 38 கோடி ரூபாய் வருவாய் இழப்பு நேரிடும். எனவே, இந்தக் கோரிக்கையை ஏற்க இயலாது.

8—

## வெளிநாட்டு மதுவகைகள்

**வினா 22635—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு மதுவகைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெளிநாட்டு மதுவகைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு ஏற்கெனவே எடுத்துள்ளது. 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை அரசு மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. மதுபாட்டில்களின்மீது ஒட்டப்படும் ஆயத்தீர்வை வில்லைகளில் பாதுகாப்பு ஹோலோகிராம்களை (Holograms) அறிமுகப்படுத்தியுள்ளது.

9—

### காலிப் பணியிடங்கள்.

**வினா 22899—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின் அரசுப் பணிகளில் காலியாக உள்ள பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவை எப்போது இட்டு நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்ட, பல்வேறு சார்நிலை மற்றும் மாநிலப் பணிகளில் மொத்தம் 8,726 பணியிடங்களுக்குக் காலி பணியிட மதிப்பீடுகள் துறைத் தலைவர்களால் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இப்பணியிடங்களில் 5,056 பணியிடங்களுக்குத் தேர்வாணையத்தின் மூலம் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டு விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணியும், முடிவுகளை அறிவிக்க மதிப்பெண்கள் மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது. 2,030 பணியிடங்களுக்குத் தேர்வாணையத்தின் மூலம் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன. மீதமுள்ள 1,640 பணியிடங்களுக்குத் தேர்வுகள் நடத்த அறிவிக்கைகள் வெளியிடுவது பற்றி துறைத் தலைவர்களிடம் தேர்வாணையம் விவரங்களைக் கேட்டுள்ளது.



10—

### மதுக்கடைகளில் அரசு நிர்ணய விலை

**வினா 23161—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் மதுக்கடைகளில் அரசு நிர்ணய விலையைவிட அதிக விலைக்கு விற்பதாக அரசுக்குப் புகார்கள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மது அருந்துவோர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டி இம்மாநிலத்தில் விற்பனை செய்யப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவற்றிற்கான உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலைகளை பாட்டில்களின்மீது ஒட்டப்பட்டுள்ள வணிக முகப்புச் சீட்டுகளின்மீது அச்சடிக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணை 1-12-1997 முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

11—

### கருணை அடிப்படையில் வேலை

**வினா 27851—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டு வரை எத்தனை காவலர்களின் குடும்பத்திற்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்கப்பட்டது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருணை அடிப்படைப் பணி நியமனத் திட்டம் தொடங்கிய நாள் முதல் 1998 ஆம் ஆண்டு முடிய காவல் துறையில் மொத்தம் 2,201 கருணை அடிப்படைப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**12—**

**பொது நூலகம் மேம்படுத்துதல்**

**வினா 18960—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பொது நூலகத்தை மேம்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை பொது நூலகங்களில் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள பொது நூலகங்களை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவற்றில் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன:

(1) நூலகங்களில் பொது மக்களின் பயனுக்காக ஆண்டுதோறும் நல்ல தரமுள்ள புதிய நூல்கள் சுமார் ரூ.2 கோடிக்கு வாங்கப்படுகின்றன.

(2) மேலும் வாசகர்கள் தாங்கள் படிக்கும் நூல்கள்/ பருவ இதழ்களில் தங்களுக்கு வேண்டிய பகுதிகளை உடனே ஒளிப்படம் எடுக்க வசதியாக சென்னை, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் பிற மாவட்டங்களின் மாவட்ட மைய நூலகங்களிலும் சென்னை கன்னிமாரா பொது நூலகத்திலும் ஒளிப்படக் கருவிகள் (போட்டோ காப்பியர்) வைக்கப்பட்டுள்ளன.



1999 நவம்பர் 19]

(3) வாசகர்கள் படிக்கும் பழக்கத்துடன் அன்றாடச் செய்திகள், விளையாட்டுகள் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை கண்டு களிக்கவும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் முதலான மாவட்ட மைய நூலகங்களிலும், சென்னை கன்னிமாரா பொது நூலகத்திலும் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வி.சி.ஆர். முதலியவை வாசகர்கள் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டு உள்ளன.

(4) சென்னை கன்னிமாரா பொது நூலகத்திலும் மற்றும் சென்னை தேவநேயப்பாவாணர் மாவட்ட மைய நூலகத்திலும் தேசிய தகவல் மையத்தின் (என்.ஐ.சி) உதவியுடன் கணிப்பொறிமூலம் தகவல் அறிய (ஜிஸ்னிக்) வசதி செய்யப்பட்டுள்ளது. வாசகர்கள் இதன் மூலம் மாவட்ட/மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், சுற்றுலா மையங்களிலும் மருத்துவமனை வசதிகள் பற்றிய விவரம் என ஏராளமான விவரங்களை அறிந்துகொள்ள இயலும்.

(5) வாசகர்கள் நல்ல காற்றோட்டமுள்ள இடங்களில் அமர்ந்து படிக்கும் பொருட்டு நூலகங்களுக்கென சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 780 நூலகங்கள் சொந்தக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

(6) நடப்பு ஆண்டில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் கணிப்பொறி அமைக்கவும், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாவட்ட நூலக ஆணைக் குழுக்களில் இயங்கும் நூலக வசதி அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இரயில்வே தேர்வாணையம், வங்கித் தேர்வுகள், தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளுக்கும் இதரப் போட்டித் தேர்வுகளுக்கும் பயனளிக்கும் நூல்கள் கொண்ட குடிமைப் பணி மையம் ஒன்று பொது நூலகங்களில் செயல்பட்டு வருகிறது. இது தவிர விலை உயர்ந்த பல குறிப்புதவி நூல்கள் இப்பகுதியில் வாங்கி வைக்கப்பட்டுள்ளன.

குடிமைப் பணி மையம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, நீலகிரி, வேலூர், செங்கல்பட்டு முதலான மாவட்ட மைய நூலகங்களிலும், சென்னை கன்னிமாரா

[1999 நவம்பர் 19

பொது நூலகத்திலும் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு பொது நூலகத் துறை சீரிய முறையில் நூலகப் பணி ஆற்றி வருகிறது.

13—

**விளையாட்டு மைதானங்கள்**

**வினா 25582—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான விளையாட்டு மைதானம் உள்ள பள்ளிகள் எத்தனை என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) அவை விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள மாவட்ட அளவிலான விளையாட்டு மைதானம் உள்ள பள்ளிகள் மொத்தம் 31 ஆகும்.

(ஆ) பள்ளிகள் விவரம் பின்வருமாறு:—

பள்ளிகளின் விவரம் குறித்த பட்டியல்—

*சேலம் கல்வி மாவட்டம்:*

1. அரசு மேல்நிலைப்பள்ளி, இளம்பிள்ளை
2. அரசு மேல்நிலைப்பள்ளி, காடையாம்பட்டி
3. அரசு மேல்நிலைப்பள்ளி, மல்லூர்
4. அரசு மேல்நிலைப்பள்ளி, வலசையூர்
5. அரசு மேல்நிலைப்பள்ளி, வாழப்பாடி
6. அரசு மேல்நிலைப்பள்ளி, பெத்தநாயக்கன் பாளையம்
7. அரசு மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்



1999 நவம்பர் 19]

8. அரசு மேல்நிலைப்பள்ளி, கீரிப்பட்டி
9. அரசு மேல்நிலைப்பள்ளி, தம்மம்பட்டி
10. அரசு மேல்நிலைப்பள்ளி, சாத்தப்பாடி
11. அரசு மேல்நிலைப்பள்ளி, கெங்கவல்லி
12. அரசு மேல்நிலைப்பள்ளி, சிறுமலர்
13. இராமகிருஷ்ணன் சாரதா மேல்நிலைப்பள்ளி, சேலம் மாவட்டம்
14. நீலம்பாள் மேல்நிலைப்பள்ளி, சேலம் மாவட்டம்
15. புனித பால் மேல்நிலைப்பள்ளி, சேலம் மாவட்டம்
16. புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, எஸ்.என். மங்களம்
17. அரசு மேல்நிலைப்பள்ளி, தேவியாக் குறிச்சி
18. புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, ஏற்காடு

*சங்ககிரி கல்வி மாவட்டம்:*

1. அரசு மேல்நிலைப்பள்ளி, மேட்டூர் அணை
2. அரசு மேல்நிலைப்பள்ளி, மேச்சேரி
3. அரசு மேல்நிலைப்பள்ளி, நடுப்பட்டி
4. அரசு மேல்நிலைப்பள்ளி, எடப்பாடி
5. அரசு மேல்நிலைப்பள்ளி, கொமரைப்பாளையம்
6. அரசு மேல்நிலைப்பள்ளி, கோளேரிப்பட்டி.
7. நிர்மலா மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர்
8. சங்கர் மேல்நிலைப்பள்ளி, சங்ககிரி
9. வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளி, ஓமலூர்
10. செங்குந்தர் மகாஜன மேல்நிலைப்பள்ளி, குருசாமிபாளையம்
11. அரசு மேல்நிலைப்பள்ளி, வனவாசி

12. அரசு மேல்நிலைப்பள்ளி, வையப்பமலை

13. வைத்தீஸ்வரர் மேல்நிலைப்பள்ளி, மேட்டூர்

14—

**கிளை நூலகங்கள்**

**வினா 26671—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இவ்வாண்டு தொடங்கப்படவுள்ள கிளை நூலகங்கள் எத்தனை என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆண்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்குமாகச் சேர்த்து 10 கிளை நூலகங்கள் திறக்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்பு, அவ்வூரின் மக்கட்தொகை, உள்ளூர் பிரமுகர்கள் வேண்டுகோள் முதலியவைகளைப் பரிசீலித்து அதனடிப்படையில் கிளை நூலகம் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி சேலம் மாவட்டத்தில் இவ்வாண்டில் 'இளம்பிள்ளை' என்ற இடத்தில் ஒரு கிளை நூலகம் திறக்கப்படவுள்ளது.

15—

**புதிய அவசர ஊர்தி வழங்குதல்**

**வினா 13719—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி ஆரம்ப சுகாதார நிலைய பழுதடைந்த அவசர ஊர்தியை மாற்றி புதிய ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் வளத்தி ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1997-98 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 1998-ல் பேற்பட்டி 24 மணி நேர சுகாதார நிலையத்திற்கு பதிவெண் டி.என். 32 ஜி 0136 கொண்ட அவசர கால ஊர்தியொன்று வாங்கி வழங்கப்பட்டுள்ளது. 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலைய திட்டத்தின்கீழ் புதியதாக வழங்கப்பட்ட அவசர கால ஊர்தி வளத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

16—

**நுண்கதிர் படப்பிடிப்பாளர்**

**வினா 18745—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவ மனையில் நீண்டகாலமாக காலி பணியிடமாக உள்ள பணியிடத்தில் நுண்கதிர் படப் பிடிப்பாளர் ஒருவரை நடப்பாண்டில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் அரசு மருத்துவமனைக்கு தற்போதுதான் புதிய கட்டடம் கட்டி, எக்ஸ்ரே சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. இங்கு நுண்கதிர் படப் பிடிப்பாளர் பணியிடம் 21-4-1999 முதல் நிரப்பப்பட்டுள்ளது.

[1999 நவம்பர் 19

17—

### கூடுதல் படுக்கை வசதி

**வினா 18754—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் கூடுதலாக படுக்கை வசதி நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், திருவரங்கம் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதிக்காக கட்டடம் கட்ட உரிய ஆணை ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. [அரசாணை நிலை எண் 688 (சுகாதாரம்) நாள் 23-12-1998.]

18—

### பொது மருத்துவமனை

**வினா 19631—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 நவம்பர் 19]

19—

### மருந்தாளுநர் பதவி

**வினா 23205—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் மருத்துவமனைகளில் மருந்தாளுநர் பதவி காலியாகவுள்ள பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவை எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மொத்த மருந்தாளுநர் பணியிடங்கள் 104. அவற்றின் விவரம் வருமாறு:

1. அரசு பொது மருத்துவமனைகளில் காலியாக உள்ளவை-78

2. மருத்துவக் கல்வி பிரிவு மருத்துவமனைகளில் காலியாக உள்ளவை-26

காலியாகவுள்ள இடங்களை விரைவில் நிரப்ப உரிய நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

20—

### மயக்க மருந்து மருத்துவர்

**வினா 24759—திரு அ. சுடலைமுத்து:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு "மயக்க மருந்து மருத்துவர்" புதிதாக நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் இதுவரை ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் மொத்தம் இரண்டு. அவற்றில் ஒன்று "குடும்ப நல மருத்துவர், மற்றொன்று பொது மருத்துவர்". புதிதாக மயக்க மருந்து மருத்துவர் பணியிடம் உருவாக்கும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், நிதிநிலைக்கேற்ப வருங்காலங்களில் இதனை அரசு கருத்தில் கொள்ளும்.

21—

**பேரூராட்சிக்கு மருத்துவமனை**

**வினா 27073—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிக்கு ஒரு அரசு மருத்துவமனை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) இல்லையெனில், அரசு மருத்துவமனை அருகில் இல்லாத பேரூராட்சி மக்கள் வசதிக்காக, ஊர்திகளில் மருத்துவர் சென்று வாரம் ஒருமுறை வைத்தியம் செய்ய அரசு ஆலோசிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) அரசு மருத்துவமனை அருகில் இல்லாத பேரூராட்சியில் மக்கள் வசதிக்காக நடமாடும் ஊர்திகளில் (Mobile Unit) மருத்துவர் சென்று சிறப்பு முகாம்கள் மூலம் மருத்துவ வசதி தரப்படுகிறது.



வட்டாரங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு, மருத்துவ வசதிகள் பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன.

22—

**பொறியாளர் அலுவலகங்களுக்கு கட்டடம்**

**வினா 27316—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தீவட்டிப்பட்டி, காருவள்ளி ஆகிய இடங்களிலுள்ள மின் துறை உதவிப் பொறியாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தீவட்டிப்பட்டி மற்றும் காருவள்ளி ஆகிய இடங்களில் பிரிவு அலுவலகம் கட்டுவதற்கு வாரிய இடம் இல்லாததினாலும், தற்போது வாரியத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்படும் செலவினங்கள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதாலும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

23—

**தொலைபேசி வசதி**

**வினா 28769—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி இல்லாததால் அதனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி அத்தியாவசியமாகும் என்பதைக் கருத்தில்கொண்டு அரசு முதற்கட்டமாக 387 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மற்றும் 37 சமுதாய நலக் கூடங்களுக்கும் சேர்த்து 424 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்வது ஏற்கெனவே அரசாணை எண் 181, மக்கள் நல்வாழ்வு, நாள் 6-5-1997-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

இவற்றில் 239 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி தொடர்பு பொருத்தப்பட்டுவிட்டது. மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்திட தொலைபேசி இலாகாவில் முன்பணம் கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் தொலைபேசி இணைப்புபெற நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

24—

### கூடுதலாக ஓமியோபதி மருத்துவர்கள் நியமனம்

**வினா 30749—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் கூடுதலாக ஓமியோபதி மருத்துவர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் கூடுதலாக ஓமியோபதி மருத்துவர்கள் நியமனம் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 நவம்பர் 19]

25—

### பட்டா வழங்குதல்

**வினா 29120—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மண்ணரையில் எஸ்.எப். 275/1பி2 ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் திருமண மண்டப அறக்கட்டளை சார்பில் அதற்கு பட்டா கோரி அரசிடம் முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் வட்டம், மண்ணரை கிராமம் புல எண் 275/1பி2-இல் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தின் பரப்பு 0.652 சதுர மீட்டர் ஆகும். இதில் 1130 சதுர அடி நிலப் பரப்புக்கு வீட்டுமனைப் பட்டா சேனா பண்ணாடி (கோயில்) பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதை உள்ளடக்கி ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் திருமண மண்டபம் அறக்கட்டளை என்ற பதிவு பெறாத அமைப்பு பட்டா கேட்டு திருப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மனு கொடுத்துள்ளது.

(ஆ) இந்த அறக்கட்டளை ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் அவர்களுக்கு நிலத்தை வழங்க வேண்டாம் என்று ஆட்சேபணை மனுவும் வரப்பெற்றுள்ளது. மேற்படியாளர் கல்யாண மண்டபம் கட்டி வணிக நோக்கத்திற்காக பட்டா கோருவதால், பிரஸ்தாப இடத்திற்கு பட்டா வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

### ஏரியில் தண்ணீர் எடுப்பதைத் தடுத்தல்

**வினா 14254—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சா் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether any representation has been received from the Ayacutar of Sivagangai Eri of Theppayapalli, Hosur Taluk regarding the lifting water

through Oil engines illegally by others depriving water to the Ayacutars; and

(b) If so, the action taken by the Government?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓசூர் தெப்பேபள்ளி கிராமத்தில் உள்ள சிவகங்கை ஏரியில் சட்டத்திற்கு புறம்பாக ஆயில் எஞ்சின் மூலம் தண்ணீர் எடுப்பதால் பாதிக்கப்படுவது தொடர்பாக ஆயக்கட்டுதாரர்களிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறவில்லை. இருப்பினும் 23-4-1999 அன்று சம்பந்தப்பட்ட இடத்தை பார்வையிட்டு ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**27—**

**ஆழ்துளைக் குழாய் கிணறு**

**வினா 17905—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்திரபாளையம், அக்கரைப்பட்டி, பூலாம்பட்டி ஆரம்பப்பள்ளிக்கு ஒரு ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்திரபாளையம் ஆரம்பப்பள்ளிக்கு மேல்நிலை தொட்டியிலிருந்து பைப்லைன் மூலமும், அக்கரைப்பட்டி ஆரம்பப்பள்ளிக்கு அருகில் உள்ள ஆழ்துளைக் குழாய் கிணறு மூலமும், பூலாம்பட்டி ஆரம்பப் பள்ளிக்கு அருகில் உள்ள பொதுக் குழாய் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.





**28—**

**குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி**

**வினா 21879—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திற்கு எவ்வளவு செலவில் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அதிகரிப்பு செய்யப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் ரூ. 1336.16 இலட்சம் செலவில் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

**29—**

**சாக்கடை கட்டும் பணி**

**வினா 23033—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் நடைபெற்றுள்ள சாக்கடை கட்டும் பணி தரமிழந்த நிலையில் உள்ளது என அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) முறையீடு ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

30—

**பிரானூர் கிராமத்திற்கு குடிநீர் வசதி**

**வினா 23279—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், பிரானூர் கிராமத்தில் உள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்க புதிய நீராதாரம் தோற்றுவித்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், பிரானூர் கிராமத்தில் உள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்க 1999-2000 நிதியாண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கூடுதல் நீராதாரம் உயர்மட்டத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் அமைக்க திட்டமிடப்பட்டு நீராதாரம் உருவாக்குவதற்கான புவியியல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

31—

**நீர்த்தேக்கத் தொட்டியைச் சீர்செய்தல்**

**வினா 23280—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழபடவூர் ஊராட்சி ஒன்றியம், திப்பணம்பட்டி ஊராட்சி மன்ற பகுதி வீரபுத்திரநாடானூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி செயல்படாமல் இருப்பதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், வீரபுத்திரநாடானூர், திப்பணம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த இக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத்தால் நிறுவப்பட்ட இந்த தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிக்கு திறந்தவெளி கிணற்றிலிருந்து, நிரேற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

32—

**புதிய நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 23282—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சி, சிவநாடானூர் கோயில் வடபுரம் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்து ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதை அப்புறப்படுத்தி, புதிய நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சியைச் சேர்ந்த சிவநாடானூர் கிராமத்தில் 1970 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியத்தால் ஒரு திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு கட்டப்பட்ட

[1999 நவம்பர் 19

10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இவ்வுயர்மட்ட தொட்டி நீராதாரம் இன்மையால் பயன்படுத்தப்படாமல் பல வருடங்களுக்கு முன்பே பழுதடைந்துவிட்டது. தற்போது பாதுகாப்பு கருதி ஊராட்சி நிர்வாகத்தால் பழுதடைந்த இத்தொட்டி இடித்து எடுக்கப்பட்டு வருகிறது. இக்கிராமத்திற்கு 1990ஆம் ஆண்டில் சம்பன் குளத்தில் உள்ள திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டி மற்றும் பகிர்மானக், குழாய் அமைப்புகளுடன் கூடிய திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு ஊராட்சி நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு நன்கு இயங்கி வருகிறது. ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய இத்திட்டம் நன்கு செயல்பட்டு வருவதால் பழுதடைந்த தொட்டிக்குப் பதில் வேறு புதிய உயர்மட்ட தொட்டி அமைக்கப்பட வேண்டியதில்லை.

(இ) எழாது.

**33—**

### நீராதாரம்

**வினா 23283—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, அரியப்பபுரம் ஊராட்சி பகுதி, சிவசைலனூர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, கிணற்றில் போதுமான நீராதாரம் கிடைக்காததால் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய நீராதாரம் தோற்றுவித்து நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, அரியப்பபுரம் ஊராட்சி பகுதி



1999 நவம்பர் 19]

சிவசைலனூர் கிராமத்தில் ஊராட்சி மூலம் அமைக்கப்பட்ட திறந்தவெளி கிணற்றில் போதுமான நீராதாரம் இல்லாததால் புதிய கூடுதல் நீராதாரம் அமைக்க ஊராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**34—**

### மின் விளக்குகள் அமைத்தல்

**வினா 24404—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், இராவுசாபட்டி கிராமத்திலிருந்து புதுக்கோட்டை சாலை வரை பாதுகாப்பு கருதி மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், இராவுசாபட்டி கிராமம் இலதுக்கான்பட்டி ஊராட்சியைச் சார்ந்ததாகும். இவ்வூராட்சியில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தெரு விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்ட பரவலாக்கத் திட்டத்தில் ஏழு பெட்டி சாலையில் 4 தெரு விளக்குகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன. இதைத் தவிர புதிதாக தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. 1999—2000 ஆண்டுக்கான சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ.73,4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து விளக்குகள் இடத்திற்கு தேவைக்கேற்ப மின் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**35—**

### காமராஜ் நகருக்கு அடிப்படை வசதிகள்

**வினா 24794—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரை ஊராட்சி, காமராஜ் நகருக்கு குடிநீர், சாலை மற்றும் தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புளியரை ஊராட்சி, காமராஜ் நகரில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் குடிநீர் இணைப்பு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மின் விளக்கு அமைக்க தேவையான நடவடிக்கைகள் ஊராட்சி மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சாலை வசதிக்காக 3 சென்ட் நிலம் பொதுமக்களால் வாங்கப்பட்டு ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையை 1999-2000 நிதியாண்டில் 70% வேலையில் எடுத்துச் செய்ய ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

36—

**சாலை செப்பனிடல்**

**வினா 24867—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி பேரூராட்சி, குலசேகரன் கோட்டையிலிருந்து துகல்காடு செல்லும் கூகை கரடு சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி பேரூராட்சி குலசேகரன் கோட்டையிலிருந்து கல்காடு செல்லும் கூகை கரடு சாலை 3.00 கி.மீ. தூரம் உள்ளது. இச்சாலையைச் செப்பனிட ரூ. 10.00 இலட்சம் தேவைப்படும். 1999-2000 ஆண்டு



1999 நவம்பர் 19]

சட்டமன்றப் பேரவை உறுப்பினர் (அல்லது) நாடாளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெற்று மார்ச் 2000-க்குள் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37—

**கடைகளை வாடகைக்கு விடுதல்**

**வினா 24872—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகராட்சியால் பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள பல கடைகள், வாடகைக்கு கொடுக்கப்படாமல் மூடப்பட்டுள்ள நிலையில் நீண்ட காலம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் பவானி நகராட்சிக்கு இதுவரை ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பவானி நகரில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 12.50 இலட்சம் மதிப்பில் பழைய பேருந்து நிலையத்தில் 12 கடைகள் மற்றும் பயணிகள் நிழற்கூடம் 1-ம் கட்டப்பட்டு ஒப்பந்தக்காரர்களால் நகராட்சிக்கு 9-5-1997-ல் ஒப்படைக்கப்பட்டது. கடைகள் முறையாக ஏலம் விடப்பட்டும். இரண்டு கடைகள் தவிர மீதம் பத்து கடைகளை எடுத்தவர்கள் கடைகளைப் பொறுப்பில் எடுத்துக்கொள்ளவில்லை. அவற்றை மறு ஏலத்தில் விட எடுக்கப்பட்ட நடவடிக்கையை எதிர்த்து அவர்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இடைக்கால தடையுத்தரவு பெற்றுள்ளனர்.

(ஆ) 1-4-1996 முதல் 30-6-1999 வரை வாடகை பாக்கி ரூ. 1,87,050 நிலுவை உள்ளது. இதனை இழப்பாகக் கருத இயலாது.

[1999 நவம்பர் 19

38—

### பேருந்து செல்லும் சாலையில் தெரு விளக்கு வசதி

**வினா 25054—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் தாலுக்கா, தஞ்சாவூர் ஒன்றியம், கொல்லங்கரை ஊராட்சி, சூரியம்பட்டியில் பேருந்து செல்லும் சாலையில் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் ஒன்றியம், கொல்லங்கரை ஊராட்சி, சூரியம்பட்டியில் பேருந்து செல்லும் சாலையில் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ. 33,600 தேவைப்படுகிறது. தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லை. இருப்பினும் நடப்பு நிதியாண்டில் அரசின் நிதி நிலையைப் பொறுத்து. மின் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

### திருவோணம் ஒன்றியத்தில் தெரு விளக்குகள்

**வினா 25869—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை ஊராட்சியில், வெங்கரை, வண்ணான்காடு, திப்பவிடுதி, மஞ்சக்காடு, கோட்டைக்காடு ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், வெங்கரை ஊராட்சியில் வெங்கரை, வண்ணான்காடு, திப்ப விடுதி, மஞ்சக்காடு, கோட்டைக்காடு ஆகிய கிராமங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவையாவும் நலிவுற்ற ஊராட்சிகளாக உள்ளதால் தற்போது புதியதாக தெரு விளக்குகள் அமைக்க இயலாத நிலையில் நிதிநிலை உள்ளது. இருப்பினும் 1999-2000 ஆண்டுக்கான சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ. 73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து மேற்படி கிராமங்களில் புதிய தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

40—

### குடியிருப்புக்கு குடிநீர் வசதி

**வினா 25883—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கோவில்கொல்லை கிராமத்தில் பைப்லைன் விஸ்தரிப்பு செய்து குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கோவில்கொல்லை குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) தனியாக மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 நவம்பர் 19

41—

### அம்மங்குடியில் குடிநீர்த் தொட்டி

**வினா 26885—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், சின்ன அம்மங்குடி கிராமத்தில் உள்ள மேல்நிலை குடிநீர்த்தொட்டி பழுதடைந்துள்ளதால், புதிய மேல்நிலை குடிநீர்த்தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அம்மங்குடி ஊராட்சியில் உள்ள சின்ன அம்மங்குடி கிராமத்தில் தற்போதைய மக்கட்தொகை 875 ஆகும். தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு 23 எல்.பி.சி.டி. 1999-2000 நிதியாண்டில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய ஒரு மின்விசைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

42—

### தில்லை நகரில் தெரு விளக்கு வசதி

**வினா 26108—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, தில்லை நகர் பகுதியில் தெரு விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர், புதுப்பட்டினம் ஊராட்சி, தில்லை நகர் பகுதியில் தெருவிளக்குகள் அமைக்க ஏதுவாக கம்பங்கள் ஊன்றியும், மின் கம்பிகள் இழுத்திடவும் 58 தெரு விளக்குகள் பொருத்த வேண்டியுள்ளது. இதற்காக சுமார் ரூ.2.50 இலட்சம் செலவாகும். இவ்வூராட்சியில் புதிய மின் விளக்குகள் அமைக்க போதிய நிதி வசதி இல்லை. மக்கள் வசிக்கும் பகுதிகளில் மட்டும் மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. 1999-2000-ம் தேவை ஆண்டில் முழுவதும் முழுமை பெறாத ஊராட்சி பகுதிகளுக்கான அரசு சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேலும் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

43—

### கைப்பம்பு அமைத்தல்

**வினா 26297—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சி, பொன்னையன் கொட்டாய், பரமசிவன் கொட்டாய் குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில், அங்கு ஒரு கைப்பம்பு (போர்வெல்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், அஜ்ஜன அள்ளி ஊராட்சி, பொன்னையன் கொட்டாய் மற்றும் பரமசிவன் கொட்டாய் ஆகிய கிராமங்களுக்கு (1999-2000) ஆண்டின் 10-வது நிதிக் குழு (ஊராட்சிக்கு ஒதுக்கப்படுவது) திட்டத்தின்கீழ் போதிய

கைப்பம்புகள் அமைத்து குடிநீர் வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

### கிராமங்களில் கைப்பம்பு

**வினா 26363—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பங்குநத்தம் ஊராட்சி, கண்ணம்மாள் கொட்டாய், ஒட்டப்பெருமாள் கோவில், கணபதிக் கொட்டாய் மற்றும் மொட்டையன் கொட்டாய் கிராமங்களுக்கு குடிநீர் வசதியில்லாமலிருப்பதால் இங்கு நடப்பாண்டில் கைப்பம்பு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பங்குநத்தம் ஊராட்சியில் உள்ள கண்ணம்மாள் கொட்டாய், ஒட்டப்பெருமாள் கோவில், கணபதிக் கொட்டாய் மற்றும் மொட்டையன் கொட்டாய் ஆகிய இடங்களில் உள்ள மக்கள் குடிநீருக்காக தனியார் கிணறுகளை பயன்படுத்தி வருகின்றனர். மேற்கண்ட இடங்களில் நடப்பு நிதியாண்டில் 10-வது நிதிக் குழு திட்டத்தில் கைப்பம்புகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

### குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல்

**வினா 26305—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் ஊராட்சி, ஆத்தூர் கொட்டாய், பழைய இண்டூர் காலனி, குயிலான்





தோப்பு, நத்த அள்ளி மற்றும் இ.கே. பூனூர் கிராமங்களில் கைப்பம்பு அமைத்து குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் ஊராட்சி, ஆத்தூர் கொட்டாய், குயிலான்தோப்பு கிராமங்களில் 1999-2000 நிதியாண்டு 10-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் இரண்டு கைப்பம்புகளும், நத்தஅள்ளி கிராமத்தில் ஏற்கெனவே உள்ள ஒரு கைப்பம்புடன் கூடுதலாக ஒரு கைப்பம்பு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கிராமத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இண்டூர் காலனி மற்றும் இ.கே.புதூர் ஆகிய கிராமங்களுக்கு ஏற்கெனவே போதுமான அளவு குடிநீர் வசதி உள்ளது. எனவே, புதிதாக கைப்பம்புகள் அமைக்கத் தேவையில்லை.

46—

### குடியிருப்பு கட்டடத்தைப் புதுப்பித்தல்

**வினா 23607—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் (சிவகங்கை மாவட்டம்) ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் தங்குவதற்கு கட்டப்பட்டிருந்த குடியிருப்பு கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது சமுதாய நல நிலையம் (Community Health Centre) என்ற பெயரில் திருப்புவனம் பேரூராட்சி மருத்துவமனையாகச் செயல்படுகிறது. இங்குள்ள மருத்துவர்கள் தங்குவதற்கான குடியிருப்பு கட்டடம் பொதுப்பணித் துறைக்கு சொந்தமானது. இக்கட்டடத்தை பயன்படுத்த இயலாது என பொதுப்பணித் துறை சான்று அளித்துள்ளது. எனவே, இக்கட்டடத்தை ஊராட்சி ஒன்றியம்மூலம் பழுது பார்க்க இயலாது.

47—

**குடிநீர் வசதி**

**வினா 26312—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் சினிமா தியேட்டர் அருகில் ஒரு கைப்பம்பு அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

48—

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா 26531—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சன்அள்ளி ஊராட்சி, தின்னூர் சின்னசாமி கொட்டாயில் குடிநீர் வசதிக்காக நடப்பாண்டில் கைப்பம்பு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சன்அள்ளி ஊராட்சி, தின்னூர் சின்னசாமி கொட்டாயில் மொத்தம் சுமார் 6 வீடுகள் மட்டுமே உள்ளதால் இங்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து கைப்பம்பு வசதி செய்ய இயலாத நிலை உள்ளது.

49—

**தர்மபுரி மாவட்டத்தில் தெரு விளக்கு வசதி**

**வினா 26546—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமி செட்டிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த பங்குநந்தம் கொட்டாய் கிராமத்தில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமி செட்டிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த பங்குநந்தம் கொட்டாய் கிராமத்தில் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் தலா 2 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் மேலும் 2 தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 நவம்பர் 19

50—

### பெண்ணாகரம் தொகுதியில் தெரு விளக்கு வசதி

**வினா 26547—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமி செட்டிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஜி. கே. எம். நகர் கிராமம், வடிவு வீட்டு பள்ளம் அருகில், முருகர் கோவில் அருகில் ஆகிய இடங்களில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமி செட்டிப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஜி.கே.எம். நகர் கிராமம், வடிவு வீட்டுப் பள்ளம் அருகில் முருகர் கோவில் ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கக்கூடிய அளவிற்கு தெருக்களாக குடியிருப்புகள் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சுமார் 10 வீடுகள் பரவலாக உள்ளதால் தெரு விளக்குகள் அமைக்க இயலாத நிலை உள்ளதாக தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

51—

### தெரு விளக்கு வசதி

**வினா 26551—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய் அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த தளவாய் அள்ளியில் போயர் தெரு, தோளன் வீதி, சின்னசாமி வீடு அருகில் ஆகிய இடங்களில் தெரு விளக்கு இல்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



1999 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு தெரு விளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய் அள்ளி ஊராட்சி, தளவாய் அள்ளியில் போயர் தெரு, தோளன் வீதியிலும், சின்ன சாமி வீடு அருகிலும் ஏற்கனவே தலா ஒரு தெரு விளக்கு அமைக்கப்பட்டுள்ளதாக தர்மபுரி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

52—

### தளவாய் அள்ளி ஊராட்சியில் தெரு விளக்கு வசதி

**வினா 26552—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய் அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பள்ளிப்பட்டிக் கிராமம், அரிச்சந்திரன் கொட்டாய் என்கிற இடங்களுக்கு தெரு விளக்கு அமைக்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தெரு விளக்கு அமைக்கப்படும்.

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தளவாய் அள்ளி ஊராட்சி, பள்ளிப்பட்டிக் கிராமத்தில் 10 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அரிச்சந்திரன் கொட்டாய் என்ற இடத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டில் அரசால் ஊராட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிதியிலிருந்து மேற்படி இடத்திற்கு

[1999 நவம்பர் 19

தேவைக்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

53—

**ஏலகிரி ஊராட்சியில் தெரு விளக்கு வசதி**

**வினா 26652—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் மற்றும் ஓமலநத்தம் நாகப்பன் கொட்டாய் அருகில் ஆகிய இடங்களில் நடப்பாண்டில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே ஒரு கைப்பம்பு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 1999-2000 ஆம் ஆண்டிற்கு சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக உள்ளாட்சிகளின் பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தேவைக்கேற்ப ஓமலநத்தம் மற்றும் நாகப்பன் கொட்டாய் ஆகிய இடங்களுக்கு கைப்பம்பு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

54—

**ஒரத்தநாடு ஒன்றியத்தில் குடிநீர் வசதி**

**வினா 26896—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சி பல்லவ நாட்டார் தெரு மக்களுக்கும்,



1999 நவம்பர் 19]

பள்ளி மாணவர்கள் 300 பேருக்கும் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 3000 ஆகும். தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு 40 லிட்டர் (எல்.பி.சி.டி.) இரண்டு ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு, 1 இலட்சம் லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து பல்லவ நாட்டார் தெரு மக்கட்கும், பள்ளி மாணவர்களுக்கும் குடிநீர் வசதி கடந்த ஜூலை மாதம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தாரால் செய்து தரப்பட்டு உள்ளது.

55—

**புதிய குடிநீர்த் திட்டம்**

**வினா 27237—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், சென்னிய விடுதி ஊராட்சிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், சென்னிய விடுதி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

56—

**தஞ்சாவூர் மாவட்டத்தில் தெரு விளக்கு வசதி**

**வினா 27238—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கரைமீண்டார்கள் கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட கலைஞர் நகர், அம்பலக்கார தெரு, செக்கடி தெரு, ஆற்றங்கரை செல்லும் சாலை, காட்டூர் செல்லும் ஆற்றங்கரை சாலை ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்த நாடு ஊராட்சி ஒன்றியம், கரைமீண்டார்கள் ஊராட்சி அம்பலக்கார தெரு, செக்கடி தெரு, கலைஞர் நகர், ஆற்றங்கரை சாலை ஆகிய பகுதிகளில் தற்போது மக்கள் வசிக்கும் பகுதிகளில் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர புதிதாக மின் விளக்குகள் அமைக்க ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. 1999-2000 ஆண்டுக்கான சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு பணிகளுக்கு ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து மேற்படி இடத்திற்கு தேவைக்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

**தஞ்சாவூர் மாவட்டத்தில் தெரு விளக்கு வசதி**

**வினா 27240—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தோப்பு விடுதி ஊராட்சிக்கு உட்பட்ட புதுத் தெரு, வண்ணான் தெரு, பத்துப்புளி விடுதி கிராமத்திற்கு



அருகில் உள்ள சிவக்கொல்லை கிராமம் ஆகிய இடங்களில் புதிய மின் கம்பம் நட்டு தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சிக்குட்பட்ட புதுத் தெரு, வண்ணான் தெரு, பத்துப்புளி விடுதி கிராமத்திற்கு அருகில் உள்ள சிவக்கொல்லை கிராமத்திற்கு அருகில் உள்ள இடங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. புதிதாக தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. தற்போது 1999-2000 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் 95 சதவீதம் சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 73.4633 கோடி அரசால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு அளிக்கப்படும் தொகையில் இப்பகுதிகளில் தேவைக்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

**தெருவிளக்கு புதிதாக விரிவுபடுத்துதல்**

**வினா 27243—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், அம்மங்குடி ஊராட்சியில் தெருவிளக்கு புதிதாக விரிவுபடுத்தி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அம்மங்குடி ஊராட்சியில் தற்போது மக்கள் புதிதாக வசிக்கும்

[1999 நவம்பர் 19

பகுதியில் மின்விளக்கு வசதிகள் செய்யப்பட்டு உள்ளது. தெருவிளக்குகள் விரிவுபடுத்திட ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. 1999-2000 ஆண்டுக்கான சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியில் இருந்து மேற்படி இடத்திற்கு தேவைக்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

**ஆதிதிராவிடர் தெருவில் தெரு விளக்குகள்**

**வினா 27261—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருக்கானூர்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆதிதிராவிடர் தெருவில் தெரு விளக்குகள் (10) அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஊராட்சி, தஞ்சாவூர் ஒன்றியம், திருக்கானூர்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஆதிதிராவிடர் தெருவில் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 15 தெரு விளக்குகள் மக்கள் வசிக்கும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர புதிதாக 10 தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சியில் நிதி வசதி இல்லை. எனவே, 1999-2000 ஆண்டுக்கான சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியில் இருந்து மேற்படி இடத்திற்கு தேவைக்கேற்ப தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



1999 நவம்பர் 19]

60—

**குடிநீர்த் தொட்டி கட்டுதல்**

**வினா 27262—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பொய்யுண்டார்கோட்டை கிராமத்தில் பழங்கொண்டார் குடிநாடு, வீரடிவாரி, மனவராச்சி தோப்பு ஆகிய இடங்களில் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பொய்யுண்டார் கோட்டை கிராமத்தில் பழங்கொண்டார் குடிநாடு, வீரடிவாரி, மனவராச்சி தோப்பு ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும் நடப்பு நிதியாண்டில் (1999-2000) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

61—

**கறம்பக்குடி ஒன்றியத்தில் குடிநீர்த் தொட்டி**

**வினா 27271—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, கறம்பக்குடி ஒன்றியம் ராங்கியன் விடுதி ஊராட்சி மேலத் தெருவில் ஆழ்குழாய் கிணறுமூலம் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், திருவோணம் சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், ராங்கியன் விடுதி ஊராட்சி, மேலத் தெரு, ஆதிதிராவிட காலனி குடியிருப்பிற்கு நடப்பு 1999-2000 நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசையிறைப்பான் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளது.

**62—**

**குடிநீர் வசதி**

**வினா 27272—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நாட்டரசன் கோட்டை பாலத்திற்கு அருகில் வசிக்கும் 50 குடும்பங்கட்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், நாட்டரசன் கோட்டை கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் பாலம் அருகில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**63—**

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

**வினா 27277—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, வல்லம் பேரூராட்சி 1-வது வார்டில் புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி ஒன்று கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, வல்லம் பேரூராட்சி 1-வது வார்டின் மக்கட்தொகை 2,000. இப்பகுதி நீர்த்தேக்கத் தொட்டி உள்ள இடத்தில் இருந்து சுமார் இரண்டு கி.மீ. தொலைவில் இருப்பதாலும், தரை மட்டத்தில் இருந்து சற்று உயரமாக இருப்பதாலும், நீர்தேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் பகிர்மானக் குழாயில் நீர் அழுத்தம் குறைவாக உள்ளதாலும், இப்பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக நடைபெறவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தின் அருகில் இருந்த நீர்த்தேக்கத் தொட்டிக்குச் செல்லும் நீரேற்றுக் குழாயிலிருந்து நேரிடையாக இப்பகுதிக்கு சுமார் ஒரு மணி நேரம் குடிநீர் விநியோகம் நடைபெறுவதால், இப்பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளது. குடிநீர் பற்றாக்குறையைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதிதாக நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் செயலில் இல்லை.

**64—**

**நீர்த்தேக்கத் தொட்டியை செப்பனிடுதல்**

**வினா 27279—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பின்னையூர் ஊராட்சி மேலத்தெருவில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பின்னையூர் ஊராட்சி மேலத்தெருவிலுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையிலிருப்பதால் அதற்கு பதிலாக ஒரு புதிய 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**65—**

## நெம்மேலியில் குடிநீர்த் தொட்டி

**வினா 27282—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெம்மேலி, திப்பியகுடி ஊராட்சிக்கு உட்பட்ட நெம்மேலி வடக்குத் தெரு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெம்மேலி, திப்பியகுடி ஊராட்சிக்கு உட்பட்ட நெம்மேலி வடக்குத் தெரு குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**66—**

## குடிநீர் பற்றாக்குறையைப் போக்குதல்

**வினா 27588—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கணவாய்ப்புதூர் ஊராட்சியிலுள்ள நாராயணபுரம் ஆதிதிராவிடர் காலனி, சேவக்கவுண்டர் நகர், கணவாய்புதூர் ஆதிதிராவிடர் காலனி, பிரகாஷ் நகர், சின்னம்மா ஜாலிக்காட்டுவளவு ஆகிய பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கணவாய்ப்புதூர் ஊராட்சியிலுள்ள நாராயணபுரம் ஆதிதிராவிடர் காலனியில் தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவு 30 லிட்டர்கள் ஆகும். கணவாய்புதூர் ஆதிதிராவிடர் காலனியில் 15 லிட்டர்களும், பிரகாஷ் நகர் குடியிருப்பில் தற்போது 18 லிட்டர்களும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பு காவிரி ஆற்றினை நீராதாரமாகக்கொண்டு காடயம்பட்டி, நங்கவள்ளி, தாரமங்கலம், மேச்சேரி மற்றும் ஓமலூர் ஒன்றியங்களில் உள்ள 554 ஊரகக் குடியிருப்புகளுக்காக மேற்கொள்ளப்பட உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சேவகவுண்டன் நகர் குடியிருப்பில் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 15 லிட்டர்கள் ஆகும். இக்குடியிருப்பு மற்றும் சின்னம்மா ஜாலிகாட்டுவளவு குடியிருப்புகளுக்கு புதிய திட்டம் வரும் நிதியாண்டில் (2000-2001)-ல் எடுத்துக்கொள்ளப்படும்.

[1999 நவம்பர் 19

67—

### பேடற அள்ளி ஊராட்சியில் தெரு விளக்கு

**வினா 28157—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பேடற அள்ளி ஊராட்சி, பேடற அள்ளி குரும்பர் தெருவிற்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பேடற அள்ளி ஊராட்சி, பேடற அள்ளி குரும்பர் தெருவில் 20 குடியிருப்புகள் உள்ளன. இதற்கு 2 தெரு விளக்குகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. இதுவே தற்போது போதுமானதாக உள்ளது.

68—

### குடிநீர் வசதி

**வினா 28429—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி, சின்னவெள்ளக்காடு, ஆனப்புளிக்காடு, ஊத்துக்குளி, கூடக்கல் வடக்கத்திக்காடு பூலாம்பட்டி அருந்ததியர் காலனி ஆகிய பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி சின்னவெள்ளக்காடு, ஆனப்புளிக்காடு, ஊத்துக்குளி, கூடக்கல் வடக்கத்திக்காடு பூலாம்பட்டி அருந்ததியர் காலனி ஆகிய பகுதிகளில் நடப்பு நிதி ஆண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப்படும்.

69—

### சோடியம் மின் விளக்குகள்

**வினா 28934—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், தஞ்சாவூர்–புதுக்கோட்டை சாலையில் திருக்கானூர்பட்டி கடைத் தெருவிலிருந்து திருக்கானூர்பட்டி துணை மின் நிலையம் (33 கே.வி) வரை சோடியம் மின்விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர்—புதுக்கோட்டை சாலையில் திருக்கானூர்பட்டி கடைத் தெருவிலிருந்து திருக்கானூர்பட்டி துணை மின் நிலையம் வரை தற்போது தேவையான மின்விளக்கு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. 1999-2000 ஆண்டுக்கான சமன்பாடு (மற்றும்) ஊக்க நிதியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ.73.4633 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து மேற்படி இடத்திற்கு தேவைக்கேற்ப சோடியம் மின் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**70—**

### நகராட்சியில் வரி வசூலிக்கும் பணியாளர்கள்

**வினா 29202—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியில் வரி வசூலிப்பதற்காக எத்தனை பணியாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்?

(ஆ) அவர்கள் எண்ணிக்கை போதுமானதாக இருக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வருவாய் அலுவலர்—1 நபர், வருவாய் ஆய்வாளர்—3 நபர்கள், வருவாய் உதவியாளர்கள்—22 நபர்கள்.

(ஆ) இல்லை; வரி விதிப்புகளும் வசூலிக்கப்பட வேண்டிய கேட்புகளும் அதிகமாக இருப்பதால், நகர்மன்றத் தீர்மானத்துடன் கூடுதலாக குறியீடு நிர்ணயம் செய்தபடி 31 வருவாய் உதவியாளர்கள் தேவைப்படுவதால் ஏற்கனவே உள்ள 22 நபர்கள் போக மேலும் 9 வருவாய் உதவியாளர்கள் பணியிடங்களைத் தோற்றுவிக்கக் கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையாளரின் பரிசிலனையில் உள்ளது.

**71—**

### ஊராட்சிமன்றங்களுக்கு சிறப்பு நிதி வசதி

**வினா 29970—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிமன்றத்தில், நிர்வாக செலவு மற்றும் குடிநீர் மோட்டார் மின் கட்டணம் போன்ற அடிப்படை தேவைக்குரிய நிதி கூட போதுமான அளவு இல்லாத ஊராட்சிமன்றங்களுக்கு சிறப்பு நிதி வசதி அளிக்க அரசு முன் வருமா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஆண்டு தோறும் ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து நலிவுற்ற ஊராட்சிகளுக்கு குடிநீர் கட்டணம், மின்கட்டணம் செலுத்தி 15 சதவீதம் சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக ஊராட்சிகளுக்கு அரசால் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 22-7-1999 நாளிட்ட அரசாணை எண் 151, ஊரக வளர்ச்சித்துறையில் போதிய நிதி வசதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**72—**

### பருத்தி விதையை மானியமாக கொடுத்தல்

**வினா 22060—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மழை பெய்யாத காலங்களில் வறட்சியை தாங்கி வளரக்கூடிய பருத்தி விதையை விவசாயிகளுக்கு மானியமாக கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் எல்.ஆர்.ஏ.5166 பருத்தி ஓரளவு வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ரகமாக பயிரிடப்பட்டு வருகிறது. தற்சமயம் நடைமுறையில் உள்ள மத்திய அரசின் குறிப்புப்படி (norms) எல்.ஆர்.ஏ. ரக 5166 பருத்தி வெளியிடப்பட்டு 15 வருடங்கள் ஆகிவிட்டபடியால் இந்த பருத்தி விதைக்கு மானியம் வழங்கப்படுவதில்லை.

[1999 நவம்பர் 19

73—

## தடுப்பு அணை மூலம் தண்ணீர் விடுதல்

**வினா 17276—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், வெள்ளகோவில் தொகுதியில் அமைந்துள்ள வட்டமலை ஓடை அணைக்கு அமராவதி ஆற்றில் இருந்து தடுப்பு அணை மூலம் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், வெள்ளகோவில் தொகுதியில் அமைந்துள்ள வட்டமலை ஓடை அணக்கு அமராவதி ஆற்றில் இருந்து தடுப்பு அணை மூலம் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் தற்பொழுது அரசிடம் ஏதுமில்லை.

74—

## பயணியர் விடுதி கட்டுதல்

**வினா 19791—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் பொதுப்பணித்துறை மூலம் பயணியர் விடுதி ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் பொதுப்பணித்துறை மூலம் பயணிகள் விடுதி கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 நவம்பர் 19]

75—

## ஏரியை மராமத்து செய்தல்

**வினா 27160—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி வடபாதி, தென்பாதி பெரிய ஏரியை மராமத்து பணி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியத்தில் உள்ள நெய்வேலி வடபாதியில் உள்ள பெரிய ஏரி மராமத்து பணி செய்ய முதலமைச்சர் 200 ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின் கீழ் பணிகள் 1997-98 கீழ் ரூ.10 லட்சத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தகாரர் நியமனம் செய்யப்பட்டு 60% பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். நெய்வேலி தென்பாதியில் உள்ள ஏரி தூர் எடுக்கும் பணி திட்டத்தில் இல்லை.

76—

## பயணியர் விடுதி சீரமைத்தல்

**வினா 28904—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் ஆய்க்குடி பேரூராட்சியில் பொதுப் பணித்துறைக்கு சொந்தமான பயணிகள் விடுதி மேற்பார்வை இல்லாமல் உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் ஆயக்குடி பேரூராட்சியில் உள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான முகாம் விடுதிக்கு சுற்றுச் சுவரும் தண்ணீர் வசதியும் இந்நிதியாண்டில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**77—**

**மினிபஸ் அனுமதி**

**வினா 26462—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் மற்றும் எடப்பாடி ஊராட்சி ஒன்றிய எல்லைகளில் மினிபஸ் அனுமதிக்கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 22 விண்ணப்பங்களில் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவை தடையாணை உள்ளமையால் நிலுவையில் உள்ளன.

**78—**

**தரைப்பாலம் அமைத்தல்**

**வினா 18213—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்குடி வட்டம் முட்டத்தையும், மயிலாடுதுறை வட்டம் பாப்பாகுடியையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கப்படுமா?



1999 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 1020 மீ. நீளத்திற்கு ஒரு உயர்மட்டப்பாலம் அமைப்பதற்கு தற்போதைய விலை விகிதப்படி ரூ.61.60 கோடி தேவைப்படும். நிதிப்பற்றாக்குறை காரணமாக அண்மைக் காலங்களில் இப்பணியினை செயற்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை. எதிர்காலங்களில் நபார்டு மற்றும் ஹட்கோ நிதி உதவியுடன் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகளும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**79—**

**சாலைகளை சீரமைத்தல்**

**வினா 25899—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், சிறுவரப்பூர் ஒட்டிமேடு பாலக்கொல்லை - முடப்புளி, சிறுவரப்பூர் - பெருவரப்பூர், முகாசாப்பரூர் - எழுமனூர், நாச்சியார்பேட்டை, முத்தனக்குப்பம், - பாலக்கொல்லை ஆகிய சாலைகளை சீரமைத்து புதுப்பித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட—

(1) சிறுவரப்பூர்-ஒட்டிமேடு சாலை மற்றும் சிறுவரப்பூர், பெருவரப்பூர் சாலை:

[1999 நவம்பர் 19

இச்சாலை மொத்த நீளம் 5.20 கி.மீ. இதில் கி.மீ. 10.4-11/4 வரையிலான சாலை 1998-99 இல் செப்பனிடப்பட்டுள்ளது. மேலும் கி.மீ. 12/100-13/4 மற்றும் 13/8-15/2 வரையிலான சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 2.30 கி.மீ. நீள சாலையினை ஒரு அடக்கு ஜல்லி பரத்தி தார்பரத்தன் செய்ய தோராயமாக ரூ.12.00 இலட்சம் தேவைப்படும்.

(2) பாலக்கொல்லை - முடப்பள்ளி சாலை—

இச்சாலையில் பழுதடைந்த பகுதிகள் செப்பனிடப்பட்டு வருகிறது. கி.மீ 1/4 2/8 மற்றும் 5/0 - 8/4 வரையிலான சாலையினை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 0/0-1/4 வரையிலான பழுதடைந்த சாலை பகுதியை சீரமைக்க தோராயமாக ரூ.7.5 இலட்சம் செலவாகும்.

(3) முகாசப்பரூர் சாலை—

கடலூர் (தெ) கோட்டத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இதர மாவட்ட சாலையான முகாசிப்பரூர் சாலை கி.மீ. 0/0-9/6 நபார்டு திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

(4) எருமனூர் - நாச்சியார்பேட்டை சாலை—

இச்சாலையில் கி.மீ. 0/0 - 0/5 மற்றும் கி.மீ. 1/100-1/6 வரை சென்ற ஆண்டில் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ. 0/5-1/100 வரையுள்ள 0/6 கி.மீ. நீளத்திற்கு சாலையை சீர்படுத்த சுமாராக ரூ.4 இலட்சம் தேவைப்படும்.

(5) முத்தனக்குப்பம் - பாலக்கொல்லை சாலை—

இச்சாலையில் கி.மீ. 0/0 - 10/0 வரையிலான சாலை நபார்டு திட்டத்தினால் பணி மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ. 10/0 - 19/5 வரையிலான பழுதடைந்த சாலைகள் நறுக்குகள் போட்டு சீரமைக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் 1998 மழையினாலும் கரும்பு ஏற்றி வரும் வாகனங்கள் போக்குவரத்தினாலும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனை ஓர் அடுக்கு ஜல்லி பரத்தி தார் தளம் அமைக்க தோராயமாக ரூ. 50 இலட்சம் தேவைப்படும்.



1999 நவம்பர் 19]

எனவே மேற்படி சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில் பழுதடைந்த பகுதிகளைச் சீரமைக்க மொத்தம் தோராயமாக ரூ.73.50 இலட்சம் தேவைப்படும். இச்சாலைப் பணிகள் பகுதி-2 திட்டத்தில் இடம் பெறவில்லை. நிதிப்பற்றாக்குறை காரணமாக நடப்பு நிதியாண்டில் மேற்கொள்வதற்கு வழிவகைகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**80—**

**மனுநீதி நாள்**

**வினா 27284—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறையிலுள்ள (கோயில்களில்) குறைகளைச் சொல்ல மனு நீதி நாளில் அதிகாரிகள் வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நடத்தப்படும் மக்கள் குறைதீர்க்கும் மனு நீதி நாளில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் மாவட்ட அலுவலர்களான உதவி ஆணையர்கள் கலந்து கொள்கின்றனர். உதவி ஆணையர்கள் கலந்து கொள்ள இயலாதபோது அச்சரகத்தில், ஆய்வர் நிலையிலுள்ள அலுவலர் அனுப்பப்பட்டு வருகின்றனர். மேலும், மாவட்ட ஆட்சியரின் அழைப்பின் பேரில் மண்டல இணை ஆணையர்களும் மனு நீதி நாளில் கலந்து கொண்டு வருகின்றனர்.

[1999 நவம்பர் 19

81—

## பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா 21664—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ராஜகொல்ல அள்ளி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து சின்னபங்குநத்தம் கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ராஜகொல்லஅள்ளி கிராமத்தில் மொத்தம் 597 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. சின்னபங்குநத்தம் கிராமத்தில் 122 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசாணை நிபந்தனைகளின்படி பகுதிநேரக் கடை தொடங்க 200 குடும்ப அட்டைகள் இல்லாததாலும் பகுதிநேரக் கடை திறந்த பின்பு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்பதாலும் சின்னபங்குநத்தத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பு இல்லை.

82—

## கிராம அங்காடிக்குக் கட்டடம்

**வினா 23062—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, சேதுராயன் குடிகாடு பிரதமக் கூட்டுறவு விவசாய சங்கக் கட்டுப்பாட்டிலுள்ள சோழபுரம்



1999 நவம்பர் 19]

கிராமத்தில் இயங்கி வரும் கிராம அங்காடிக்கும் உரக் கிடங்கிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேதுராயன் குடிகாடு பிரதமக் கூட்டுறவு விவசாய சங்கக் கட்டுப்பாட்டிலுள்ள சோழபுரம் கிராமத்தில் இயங்கி வரும் நியாயவிலை அங்காடிக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 107 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு கிடங்கு சேதுராயன் குடிகாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உள்ளதால் புதிதாக உரக் கிடங்கு கட்ட வாய்ப்பு இல்லை.

83—

## பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்குதல்

**வினா 23066—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், நெய்வேலி வடபாதி ஊராட்சியிலுள்ள 300 குடும்ப அட்டைகளுக்கும் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நெய்வேலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் நெய்வேலி வடக்கு மற்றும் தெற்கு என இரண்டு முழுநேர அங்காடிகள் செயல்பட்டு வந்தன. நெய்வேலி வடக்கு அங்காடியில் 1039 குடும்ப அட்டைகள் இருந்தமையால் 504 குடும்ப அட்டைகளைப் பிரித்து

[1999 நவம்பர் 19

நெய்வேலி வடக்கு-2 என்ற முழுநேர அங்காடி தொடங்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் 11-7-1998 அன்று அனுமதி அளிக்கப்பட்டு 12-10-1998 முதல் அவ்வங்காடி இயங்கி வருகிறது.

84—

### ஈச்சங்கோட்டை அங்காடிக்குக் கட்டடம்

**வினா 24010—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் ஈச்சங்கோட்டை கிராம அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆம் ஆண்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரால் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டப்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் 125 அங்காடிகளுக்குக் கட்டடம் கட்ட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஈச்சங்கோட்டை அங்காடிக்குக் கட்டடம் கட்டத் தேவையான இடம் இருப்பின் வரும் நிதியாண்டில் பரிந்துரை செய்யப்படும்.

85—

### கூட்டுறவு அங்காடிக்குக் கட்டடம்

**வினா 24491—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, சக்கரைகோட்டை கிராமத்தில் உள்ள கிராமக் கூட்டுறவு அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு தாலுகா, சக்கரைகோட்டை கிராம அங்காடிக்கு வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் நடப்பு நிதியாண்டில் (1999-2000) கட்டடம் கட்ட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

86—

### அமுதம் அங்காடிக்குக் கட்டடம்

**வினா 24494—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கீழவஸ்தா சாவடியில் உள்ள அமுதம் அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கிராமக் கூட்டுறவு அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித் தரும் பணி வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் (1999-2000) மேற்கண்ட திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட 125 அங்காடிகட்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில் கீழவஸ்தா சாவடியில் உள்ள அங்காடிக்குப் பரிந்துரைக்கவில்லை. வரும் நிதியாண்டில் (2000-2001) கீழவஸ்தா சாவடியில் உள்ள அங்காடிக்குக் கட்டடம் கட்ட பரிந்துரை செய்யப்பட உள்ளது.

[1999 நவம்பர் 19

**87—**

## பகுதிநேரக் கூட்டுறவுக் கடை

**வினா 27486—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி வட்டம், கோனையூர் கூட்டுறவுக் கடையைப் பிரித்து குடிசைக்கரையில் பகுதிநேரக் கூட்டுறவுக் கடை திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கோனையூர் கூட்டுறவு நியாயவிலைக் கடை 356 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் மதுரா குடிசைக்கரை கிராமத்தில் 130 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசு ஆணை (நிலை) எண் 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 15-10-1998-ன்படி பகுதிநேரக் கடையுடன் 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். மேலும், அரசாணை நிலை எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997-ன்படி புதிய பகுதிநேரக் கடை அமைத்த பின்னும் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளும் நிறைவு பெறாத நிலையில் குடிசைக்கரையில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**88—**

## ஓய்வூதிய உதவிகளை உடனடியாக வழங்குதல்

**வினா 22638—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, சாரம் கூட்டுறவு நூற்பாலையில் முப்பது ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற



1999 நவம்பர் 19]

தொழிலாளர்களின் வைப்புத் தொகை மற்றும் அனைத்துப் பிடித்தங்களும் போர்க்கால அடிப்படையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருச்சி துணை மண்டல வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த திண்டிவனம் தொகுதி சாரம் கூட்டுறவு நூற்பாலை, 1994 செப்டம்பர் முதல் வருங்கால வைப்பு நிதிக்கு சந்தா செலுத்தாத நிறுவனமாக இயங்கி வந்தது. திருச்சி துணை மண்டல அலுவலகம் வருங்கால வைப்பு நிதியினைப் பிடித்தம் செய்யும் நடவடிக்கையை எதிர்த்து மேற்கூறப்பட்ட நிறுவனமானது சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடை பெற்றுள்ளது.

2. 1994-97 ஆம் வருடங்களில் அந்நிறுவனத்தை விட்டு வெளியேறிய 44 உறுப்பினர்களுக்கு திண்டிவனம் தொகுதி சாரம் கூட்டுறவு நூற்பாலை 23-4-1999 அன்று ரூ. 7,01,446 (ரூபாய் ஏழு இலட்சத்து ஆயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) செலுத்தி உள்ளது. மேற்குறிப்பிட்ட 44 உறுப்பினர்களில் 5 உறுப்பினர்களுக்கு மட்டும் 1-7-1999 அன்று வருங்கால வைப்பு நிதி அளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட நிறுவனத் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏதும் திருச்சி வருங்கால வைப்பு நிதி ஆணையர் அலுவலகத்தில் நிலுவையில் இல்லை. மேலும், மேற்கூறப்பட்ட நூற்பாலைக்குத் தேவையான முதலீடு இல்லாததால் 14-1-1999 முதல் அந்நிறுவனம் இயங்கவில்லை.

3. ஆலைக்கு நடைமுறை மூலதனம் பெறுவதற்காக காசுக் கடன் நிலுவையை நீண்ட காலக் கடனாக மாற்றவும், புதிய காசுக் கடன் கோரியும் பிரேரணை மத்தியக் கூட்டுறவு வங்கியின் பரிந்துரையுடன் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் வழியாக "நபார்டு" வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது மேற்படி, "நபார்டு" வங்கியின் பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் விழுப்புரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் புதிய காசுக் கடன் வரவு-செலவு வைக்கப்பட்டு ஆலை திறந்து இயக்கப்பட்டு ஆலையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அனைத்துத் தொழிலாளர்களின் வைப்புத் தொகை மற்றும் அனைத்துப் பிடித்தங்களும் போர்க்கால அடிப்படையில்

[1999 நவம்பர் 19

வழங்க ஆவன செய்யப்படும். மேலும், அரசு சட்டப்பூர்வமான நிலுவைத் தொகை செலுத்துவதற்கு புனரமைப்பு திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ. 50.25 இலட்சத்தில் 41.02 இலட்சம் ரூபாய் தொழிலாளர் காப்புறுதித் திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**89—**

### தொழிற்சாலை சட்டங்கள்

**வினா 22677—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பல பஞ்சாலைகளில் தொழிற்சாலை சட்டங்கள் முறையாக அமலாக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பஞ்சாலை தொழிற்சாலைகளில் தொழிற்சாலை சட்டங்களும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் இத்துறை ஆய்வர்களால் சீரிய முறையில் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. 1995 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 262 புகார்கள் பெறப்பட்டு அதில் 253 புகார்கள் இது வரை விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு தொழில் நிறுவன (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம் 1981-ன்படி 1995 ஆம் ஆண்டில் 8012 தொழிலாளர்களும், 1996 ஆம் ஆண்டில் 7648 தொழிலாளர்களும், 1997 ஆம் ஆண்டில் 9458 தொழிலாளர்களும், 1998 ஆம் ஆண்டில் 6404 தொழிலாளர்களும் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் காணப்பட்ட



1999 நவம்பர் 19]

முரண்பாடுகளுக்கு வழக்குகள் தொடுக்கப்பட்டு, அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தாக்கல் செய்த வழக்குகளின் விவரங்களும், வசூலிக்கப்பட்ட அபராதத் தொகைகளும் பின்வருமாறு:

| ஆண்டு | பஞ்சாலைகள்மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை ரூபாய் | நீதிமன்றத்தில் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1995 | 162 | 1,40,175 |
| 1996 | 319 | 3,29,740 |
| 1997 | 210 | 2,13,200 |
| 1998 | 133 | 2,60,250 |

**90—**

### சுயமாக வேலை செய்ய அரசு உதவி

**வினா 29407—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, பயிற்சித் துறையைப் பொறுத்தமட்டில் படித்த இளைஞர்கள் சொந்தமாக தொழில் தொடங்கி வேலை செய்ய அரசு உதவியளிக்கும் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) தொழில் வணிகத் துறையில் இயங்கும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாகவும் பாரத பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் மூலமாகவும் தாட்கோ நிறுவனம் மூலமாகவும் படித்த இளைஞர்கள் சொந்தமான தொழில் தொடங்க நிதி உதவி அளிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

[1999 நவம்பர் 19

91—

**இரசாயன பாடப் பிரிவு தொடங்குதல்**

**வினா 29509—திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் ஐ.டி.ஐ.யில் இரசாயன பாடப் பிரிவு எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கடலூர் ஐ.டி.ஐ.யில் இரசாயன பாடப் பிரிவு தொடங்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

92—

**சார்பு நீதிமன்றம்**

**வினா 19703—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் எந்த ஒரு நீதிமன்றமும் இயங்கவில்லை. எனவே, அங்கு சார்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

93—

**கோட்டூரில் சார்பதிவாளர் அலுவலகம்**

**வினா 25801—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 19]

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூரில் சார்பதிவாளர் அலுவலகம் ஒன்று புதியதாக ஏற்படுத்தி தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூரில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

94—

**சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன்**

**வினா 26495—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய தமிழகத்தில் எத்தனை பேர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டில் 28-2-1999 வரை தமிழ்நாட்டில் 3,982 நபர்களுக்கு பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்டுள்ளது.

95—

**ஜவ்வரிசி ஆலைகள்**

**வினா 27054— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஜவ்வரிசி ஆலைகள் எத்தனை உள்ளன?

[1999 நவம்பர் 19

(ஆ) அதில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நடத்தப்படும் ஆலைகள் எத்தனை?

(இ) தனியார் நடத்தும் ஆலைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மொத்தம் 662 ஜவ்வரிசி ஆலைகள் உள்ளன.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஜவ்வரிசி ஆலைகள் எதுவும் நடத்தப்படவில்லை.

(இ) 662 ஆலைகளும் தனியார் நடத்தும் ஆலைகள் ஆகும்.

96—

**மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்**

**வினா 24171— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின்படி 1997-98 ஆம் ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) பயிற்சி முடித்து தொழில் தொடங்கியவர்கள் எத்தனை பெண்கள்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு, மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் செயல்படுத்தப்படவில்லை. 1998-99 ஆம் ஆண்டுதான் முதல் முறையாகத் தொடங்கப்பட்டது.

1998-99-ல்தான் முதல் முதலாக அந்நிறுவனம் அரசு ஒப்புதல் பெற்று தமிழ்நாடு தொழில் வணிகத் துறை இயக்குநரகத்துடன்



1999 நவம்பர் 19]

இணைந்து, சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களில் மகளிர் தொழில் முனைவோர் பயிற்சியை நடத்தியது. இதன் மூலம் 1998-99 ஆம் ஆண்டு 38 மகளிர் நிறைவுபயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி 23-4-1999-ல்தான் நிறைவு பெற்றதால் பயிற்சி பெற்ற மகளிர் சுய தொழில் தொடங்க தொழில் வணிகத் துறை இயக்ககத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) பயிற்சி முடித்தவர்களுள் சென்னையில் மட்டும் 7 மகளிர் சுய தொழில் தொடங்கியுள்ளனர்.

97—

**கட்டுமானப் பணிகள்**

**வினா 29217—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிட நலத் துறை மூலமாகச் செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

(ஆ) அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பன்னிரெண்டு கட்டுமானப் பணிகளாகும்.

(ஆ) அதன் தற்போதைய நிலை பின்வருமாறு:—

| கட்டுமானப் பணியின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|
| *மாணவியர் விடுதிகள்:* | |
| 1. தருமபுரி | குடிநீர் மற்றும் மின் இணைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 2. சிந்தல்பட்டி | மேற்கூரை வரை செங்கல் கட்டும் பணி முடிவுற்றுள்ளது. |
| 3. வேப்பம்பட்டி | குடிநீர் மற்றும் மின் இணைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

| கட்டுமானப் பணியின் விவரம். | தற்போதைய நிலை |
| --- | --- |
| 4. எஸ். புதுப்பட்டி | தரைத் தளம் முடிவு பெற்று சென்டரில் வேலை முன்னேற்றத்தில் உள்ளது. |
| 5. பொ. மல்லாபுரம் | குடிநீர் மற்றும் மின் இணைப்புப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 6. மெரப்பூர் | பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| பள்ளிகள்: | |
| 7. இராஜப்பேட்டை | ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது. |
| உண்டு உறைவிடப் பள்ளிகள்: | |
| 8. நாட்டன் வளைவு | பூமி தோண்டும் வேலை நடைபெறுகிறது. |
| 9. மாரியம்மன் கோயிலூர் | ஜன்னல் மட்டம்வரை முடிவுற்று அதன் மேல் செங்கல் கட்டும் வேலை நடைபெறுகிறது. |
| 10. எஸ். தாத்தன்பட்டி | கான்கிரீட், கூரை போடப்பட்டுள்ளது. பூச்சு வேலை தரைத்தளம் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு நடந்து வருகிறது. |
| 11. அரசு உண்டு உறை விடப் பள்ளி, வாழைத் தோட்டம் அரூர் வட்டம் | பேஸ்மென்ட் வரை பணி முடிந்துள்ளது. கான்கிரீட் சுவர் கான்கிரீட் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணி மூன்று மாதங்களுக்குள் முடிந்து விடும். |
| 12. ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி, மொண்டுக்குழி, அரூர் வட்டம். | கான்கிரீட் கூரை போடப்பட்டுள்ளது. பூச்சு வேலை முடிக்கப்பட்டுள்ளது. தளம், கதவு, ஜன்னல் ஆகிய வேலைகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணி இரண்டு மாதங்களுக்குள் முடிந்துவிடும். |

98—

## கதர்க் கிராமத் தொழிலகங்கள்

**வினா 29230—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கதர்க் கிராமத் தொழிலகங்கள் எத்தனை இயங்கி வருகின்றன?



(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் புதிதாகத் தொடங்கப்படவுள்ள தொழிலகங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கதர், பட்டு, சோப்பு அலகுகள், காலணி அலகுகள், தேனீ வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மண்பாண்டங்கள் போன்ற பல்வேறு கதர்க் கிராமத் தொழில் கூடங்கள் மொத்தம் 47 வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

(ஆ) இந்த நிதியாண்டில் புதிதாக தொழிலகங்கள் தொடங்கப்பட செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

99—

## குளிர்பதன நிலையம்

**வினா 29344—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான எண்ணூர் குளிர்பதன நிலையம் அரசின் பராமரிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான எண்ணூர் குளிர்பதன நிலையம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில்தான் உள்ளது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான எண்ணூரில் உள்ள குளிர்பதன நிலையம் இக்கழகத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையத்திலுள்ள இயந்திரங்கள் தற்பொழுது எம்.பி.இ.டா.-வின் (Marine Products Export Development Agency) நிர்ணயத்தின் தரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாததால் ஒருவரும் குத்தகைக்கு எடுத்து பயன்படுத்த முன்வரவில்லை. ஆதலால், இந்நிலையத்திலுள்ள பழைய இயந்திரங்களை பொது ஏலத்தில் விடுவதற்கு நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 நவம்பர் 19

100—

## இறால் பண்ணைகள் அமைத்தல்

**வினா 29345—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இறால் பண்ணைகள் அமைத்து நடத்த எத்தகைய விதிமுறைகளை அரசு நடைமுறைப்படுத்துகிறது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைப்பது மற்றும் ஒழுங்குமுறைப் படுத்துவது குறித்த உச்ச நீதிமன்றத்தின் 11-12-1996 அன்றைய இறுதி ஆணையின்படி சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ன் விதிகளின்படி நீர்வாழ் உயிரின குழுமம் அமைக்கப்பட்டது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் இக்குழுமம் மத்திய அரசின் இந்திய வேளாண்மைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் அவர்களை தலைவராகவும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, மாசுக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளின் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இக்குழுமம் இயங்கி வருகிறது. இந்திய வேளாண்மைத் துறை, வனம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளின் பிரதிநிதிகளும் இக்குழுமத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். மத்திய மீன்வள மேம்பாட்டு ஆணையர் திரு. ஒய்.எஸ். யாதவ் இக்குழுமத்தின் உறுப்பினர்-செயலாளராக உள்ளார்.

கடலோரப் பகுதிகளில் இறால் வளர்ப்பினால் ஏற்பட்ட நிலைமைகளை நெறிமுறைப்படுத்த இக்குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. "முன்னெச்சரிக்கை" மற்றும் "மாசுபடுத்துபவர் அதற்கு ஈடுசெய்தல் வேண்டும்" என்ற கொள்கைகளை இக்குழுமம் செயல்படுத்த வேண்டும்.

**இறால் வளர்ப்பில் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள்:**

1. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் மூலம் பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய முறைகளை இறால் வளர்ப்பு மேற்கொள்ள இருப்பவர்கள் அதற்கான படிவத்தில் (படிவம் 1) கடல்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.



1999 நவம்பர் 19]

2. வரையறுக்கப்பட்ட கடலோரப் பகுதிக்கு அப்பால் ஏற்கெனவே செயல்பட்டு வரும் இறால் பண்ணைகளும் புதியதாக அமையவிருக்கும் இறால் பண்ணைகளும் அதற்கான படிவத்தில் (படிவம் 3) கடல்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

3. இவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்களை (1 மற்றும் 3) பரிசீலனை செய்ய கடல்வாழ் உயிரினக் குழுமத்தின் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ்நாடு அரசு மாநில மற்றும் மாவட்ட அளவிலான இரு குழுக்களை (அரசாணை நிலை எண் 74, நாள் 21-4-1998) அமைத்துள்ளது. மாநில அளவிலான குழுவிற்கு மீன்வளத் துறைச் செயலர் தலைவராகவும், மாவட்ட அளவிலான குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைவராகவும் இருப்பார். தமிழகத்திலுள்ள இறால் பண்ணைகளுக்கான அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் வழங்குதல் மற்றும் பரிசீலனை செய்வதில் கடல்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமத்திற்கு உதவி புரிவது இக்குழுவின் முக்கிய பணியாகும்.

4. உரிய கட்டணம் செலுத்தி அச்சடிக்கப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் 1 (மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் மூலம் பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய முறையில் இறால் வளர்ப்பு மேற்கொள்வோர்) விலை ரூ.50 விண்ணப்பம் 3 (வரையறுக்கப்பட்ட கடலோரப் பகுதிக்கு அப்பால் ஏற்கெனவே இயங்கிவரும் மற்றும் புதியதாக அமைய உள்ள இறால் பண்ணைகள்) விலை ரூ.100 விண்ணப்பங்கள் பரிசீலனைத் தொகையாக விண்ணப்பம் 1-ன் அனுமதி வேண்டுவோர் ஒரு ஹெக்டேருக்கு ரூ.100ம், விண்ணப்பம் 3-ல் அனுமதி வேண்டுவோர் ஒரு ஹெக்டேருக்கு ரூ.200ம் செயலர், மீன் துறை கணக்கில் செலுத்த வேண்டும்.

5. இறால் வளர்ப்போர் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாநிலக் குழு உறுப்பினர்-செயலர்/மீன் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

6. பெறப்பட்ட விண்ணப்பங்களை மீன் துறை இயக்குநர் முதல் பரிசீலனைக்குப் பின்னர் சம்பந்தப்பட்ட மாவட்டக் குழுவிற்கு ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைப்பார்.

7. மாவட்டக் குழு பண்ணைகள் நேராய்வு செய்து உரிய பரிந்துரைகளுடன் 4 வாரத்திற்குள் மீண்டும் மாநிலக் குழு உறுப்பினர்-செயலர்/மீன் துறை இயக்குநருக்கு அனுப்பிவைக்கும்.

8. மாவட்ட குழுவின் பரிந்துரைகளோடு பெறப்பட்ட விண்ணப்பங்களை மாநிலக் குழு பரிசீலித்து இரண்டு வாரத்திற்குள் கடல்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமத்தின் அனுமதி/ஆணைக்காக அனுப்பி வைக்கும்.

9. மாநிலக் குழுவிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை கடல்வாழ் உயிரின வளர்ப்புக் குழுமம் பரிசீலித்து ஒரு வாரத்திற்குள் அனுமதி/ஆணை வழங்கும்.

## ஒன்பதாம் பட்டியல்

1—

### துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் திறத்தல்

**வினா 21258—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

2—

### காவல் நிலையங்களை இணைத்தல்

**வினா 21309—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம்—கோபி காவல் கோட்டத்திலுள்ள திங்களூர் மற்றும் குன்னத்தூர் காவல் நிலையங்களை ஈரோடு ஊரகக் கோட்டத்தில் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.



3—

### காவல் கைதி மரணம்

**வினா 23164—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையின் காவலில் மர்மமான முறையில் ஏற்படும் மரணத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரியைப் பொறுப்பாக்குவது குறித்து அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் துறையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் நபர்கள் காவல் பொறுப்பில் ஏற்படும் மரணம் தொடர்பாக கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன:—

சம்பவம் நிகழ்ந்தவுடன் இதுகுறித்து சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியரால் காவல் நிலை ஆணை 145-ன் கீழ் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. தேவை இருப்பின் சம்பவம் நிகழ்ந்தவுடன் அக்காவல் நிலைய பொறுப்பாளர்கள் உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படுகின்றனர். சம்பவம் குறித்த காவல் நிலை ஆணை 145-ன் கீழான வருவாய் கோட்டாட்சியரின் விசாரணை அறிக்கை, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் அரசால் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு, காவல் துறை அலுவலர்கள் குற்றவாளிகள் என அறியப்பட்டால் குற்றமிழைத்த காவல் அலுவலர்கள்மீது குற்றவியல் நடவடிக்கை/துறை நடவடிக்கை எடுக்கவும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது. அரசாணையின்படி குற்றமிழைத்த காவல் அலுவலர்கள் மீது எடுக்கப்படும் துறை நடவடிக்கையின் முடிவு காவல் துறை இயக்குநரால் அரசின் ஆய்விற்கு அனுப்பப்படுகிறது; மேற்படி துறை நடவடிக்கையின் தண்டனைப் பட்டியல்கள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படுகிறது. குற்றமிழைத்த காவலர்கள்மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்கின் முடிவு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது. காவல் பொறுப்பில் மரணங்கள் ஏற்படாமல் இருக்க காவல் துறை இயக்குநரால் அனைத்து மாவட்ட காவல்

[1999 நவம்பர் 19

கண்காணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் உடனுக்குடன் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

எனவே, காவல் நிலைய பொறுப்பில் ஏற்படும் மரணத்திற்கு காவல் துறை அலுவலர்களே காரணம் என்பது விசாரணையில் தெரியவந்தால், அக்காவல் நிலைய சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் மீது துறை நடவடிக்கை/குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளும் முறை ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வருகிறது.

4—

**திருட்டு வழக்கு விவரம்**

**வினா 23876—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1997-98, 1998 ஜூன் மாதம் முடிய எவ்வளவு திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? அதில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1997-98 ஜூன் மாதம் முடிய பதிவு செய்யப்பட்ட திருட்டு வழக்குகள் மற்றும் அதில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு:

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட திருட்டு வழக்குகள் | கைது செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1997 | 27,618 | 19,783 |
| 1998 ஜூன் வரை | 11,741 | 10,884 |

5—

**பெண் மற்றும் ஆண் காவலர்கள் நியமனம்**

**வினா 23886—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பெண் மற்றும் ஆண் காவலர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நடப்பாண்டில் (1999-2000) காவல் துறைக்குப் புதிதாக 4,000 ஆண் காவலர்களும், 1,000 பெண் காவலர்களும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இந்தக் காவலர் தேர்வுக்குப் பின்னரே சேலம் மாவட்டத்திற்கு எத்தனை ஆண் மற்றும் பெண் காவலர்கள் நியமிக்கப்படுவர் என்பது முடிவு செய்யப்படும்.

6—

**காவல் துறையில் உதவி ஆய்வாளர்கள் நியமனம்**

**வினா 23887—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்த நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு உதவி ஆய்வாளர்கள் காவல் துறையில் நியமனம் செய்யப்பட உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் சேலம் மாவட்டத்திற்கென மொத்தம் 29 நபர்கள் (ஆண்கள் 27 + பெண்கள் 2) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். முதுநிலை வரிசைப்படி 18 நபர்களுக்கு உதவி ஆய்வாளர்கள் பணியமர்வு ஆணை வழங்கப்பட்டு, அவர்கள் 16-4-1999 அன்று முதல் பிரிவில் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மீதமுள்ள 11 நபர்கள் இரண்டாவது பிரிவில் பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

7—

**கள்ளச் சாராயம்**

**வினா 23895—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு மற்றும் 1998 ஜூன் மாதம் வரை சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சியதால் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) கள்ளச் சாராயம் விற்றதால் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக கைது செய்யப்பட்டவர்கள்: | |
| 1997 ஆம் ஆண்டு | 3,252 |
| 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை | 1,068 |
| (ஆ) சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் விற்றதற்கு கைது செய்யப்பட்டவர்கள்: | |
| 1997 ஆம் ஆண்டு | 12,147 |
| 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை | 8,150 |

8—

### மதுவிலக்கு வழக்குகள்

**வினா 25996—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு (1998) மதுவிலக்கு தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

(ஆ) எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு (1998) மதுவிலக்கு தொடர்பாக 5,775 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) 5,623 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

9—

### நகரக் காவல் நிலையம் அமைத்தல்

**வினா 27799—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பட்டுக்கோட்டை நகருக்கு "நகரக் காவல் நிலையம்", அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

10—

### புதிய ஈப்பு வழங்குதல்

**வினா 28278—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் காவல் நிலையத்தில் புதியதாக ஈப்பு (ஜீப்) வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி ஒகேனக்கல் காவல் நிலையத்திற்கு ஜிப்சி ஈப்பு ஒன்று 11-8-1997-ல் தான் வழங்கப்பட்டுள்ளது. அது ஓடும் நிலையில், இயங்கியும் வருகிறது. எனவே, புதிய ஈப்பு வழங்க அவசியம் எழவில்லை.

11—

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி

**வினா 3555—திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இப்பள்ளிக்குக் குடிநீர், மின்சாரம், ஆய்வுக்கூடம் ஆகிய வசதிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அ மற்றும் ஆ கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சிறுசேமிப்பு நிதியின்மூலம் 4 வகுப்பறைகளும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 2 வகுப்பறைகளும் கட்டப்பட்டுள்ளன. அரசாணை (நிலை) எண் 355, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22-9-1998-ன்படி அறிவியல் ஆய்வுக் கூடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. குடிநீர் மற்றும் மின்சார வசதி செய்துத் தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12—

**மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வசதிகள்**

**வினா 3566—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டவும், விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் மற்றும் விளையாட்டுத் திடல் சமன் செய்தல் குறித்த இரு பணிகளும் ரூ. 4 இலட்சம் செலவில் பள்ளியின் பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் பங்குத் தொகையுடன் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



13—

**வகுப்பறைகள் சீர் செய்தல்**

**வினா 8855—திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகரம், அப்துல்-ஹகீம் உயர்நிலைப் பள்ளியில் சுமார் 30 வகுப்பறைகள் பழுதடைந்துள்ளதைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அப்துல்-ஹகீம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 30 வகுப்பறைகள் பழுதடைந்துள்ளதில் 2 வகுப்பறைகள் சீர் செய்யப்பட்டுவிட்டன. மீதமுள்ள வகுப்பறைகளை சீர் செய்ய ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு மராமத்துப் பணிக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பணிகளை மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

14—

**உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 15330—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அமரக்குந்தி அரசினர் உயர் நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா அமரக்குந்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 1998-99 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[1999 நவம்பர் 19

15—

**உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா 15346—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தை அரசுக் கட்டடத்தில் இயங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மதுரை மாவட்டம் தா. வாடிப்பட்டியில், தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தை அரசினர் உயர்நிலைப் பள்ளி (பெண்கள்) முன்பு இயங்கி வந்த ஊராட்சி ஒன்றிய பழைய கட்டடத்தில் இயங்குவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

**வெளவால் தோப்பூரில் கூடுதல் பள்ளிக்கூடம்**

**வினா 17656—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்திலுள்ள வெளவால் தோப்பூரில் கூடுதல் பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்திலுள்ள வெளவால் தோப்பூரில் உள்ள பள்ளிக்கு 1999-2000-ம் ஆண்டில் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின்



1999 நவம்பர் 19]

இசைவினைப்பெற்று கூடுதல் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

17—

**சுற்றுச் சுவர் அமைத்தல்**

**வினா 20757—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் எழுப்பும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைக்க அரசாணை நிலை எண் 581, கல்வி, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைத்துக் கொள்ளுமாறு கோவை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுப்பது, அரசு ஏற்றுக் கொண்ட கொள்கையல்ல.

18—

**கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்**

**வினா 21369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டியில் அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி இல்லை என்பது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் தேவை. அதனை சம்பந்தப்பட்ட பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செய்து கொடுக்க, சேலம் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**19—**

**மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி**

**வினா 21658—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்ட-அள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வாண்டு நிதி ஒதுக்கம் ஏதுமில்லாத காரணத்தால் தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதியை ஊரக வளர்ச்சி திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**20—**

**துப்புரவுப் பணியாளர் நியமித்தல்**

**வினா 21726—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு துப்புரவுப் பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சில்லரைச் செலவினப் பணியாளர்கள் நியமனம் செய்வது தற்போது நடைமுறையில் இல்லை.

**21—**

**இளநிலை உதவியாளர் நியமித்தல்**

**வினா 21728—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இளநிலை உதவியாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 23-7-1998 முதல் இளநிலை உதவியாளர் பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டது.

**22—**

**விளையாட்டு அரங்கம் கட்டுதல்**

**வினா 21921—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

(அ) உசிலம்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில், மாவட்ட விளையாட்டு அரங்கம் மற்றும் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் மாவட்ட விளையாட்டரங்கம் மற்றும் திறந்த வெளி விளையாட்டரங்கம் அமைப்பது அரசின் கொள்கையாகும். இதன்படி, மதுரையில் மாவட்ட விளையாட்டரங்கம் மற்றும் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், மாவட்ட தலைநகரில் மட்டுமே மேற்படி விளையாட்டரங்கங்கள் கட்டப்படும். ஆகவே, உசிலம்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் மாவட்ட விளையாட்டரங்கம் மற்றும் திறந்தவெளி விளையாட்டரங்கம் கட்டுவதற்கான கேள்வி எழ வாய்ப்பில்லை.

**23—**

**வகுப்பறை வசதி செய்தல்**

**வினா 22958—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக் கூடத்திற்குத் தேவையான வகுப்பறை கட்டடங்களையும், ஆய்வுக்கூடங்களையும் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு 1998-99 ஆம்



1999 நவம்பர் 19]

ஆண்டில் பகுதி-1 திட்டத்தில் கூடுதலாக இரு வகுப்பறைகள் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 3-7-1978ல் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட இப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் கட்டித் தரப்பட்டு நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது.

**24—**

**உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம், சுற்று சுவர் அமைத்தல்**

**வினா 23446—திரு.கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், கட்டளை குடியிருப்பு, அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தை பராமரிக்கவும், கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டவும், பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வாண்டு கட்டிடங்களுக்கான ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், கட்டளை குடியிருப்பு, அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தை பராமரிக்கவும், கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அரசாணை நிலை எண் 581, கல்வி, நாள் 14-7-1994-ன்படி வனத் துறை அலுவலருடன் தொடர்புகொண்டு பசுமை வேலி அமைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட

[1999 நவம்பர் 19

அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டிக்கொடுப்பது அரசின் கொள்கையல்ல.

**25—**

**கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்**

**வினா 24131—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் 1998-99-ஆம் ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் பகுதி 1 திட்டத்தின் கீழ் அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998ன்படி, 4 உயர்நிலை மற்றும் 9 மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் இரு வகுப்பறைகளும், அரசாணை நிலை எண் 356, பள்ளிக் கல்வி, நாள் 22-9-1998-ன்படி ஒரு உயர்நிலை மற்றும் 3 மேல்நிலைப் பள்ளிகளில், ஒவ்வொன்றிலும் 3 வகுப்பறைகளும் 2 உயர்நிலை மற்றும் 2 மேல்நிலைப் பள்ளிகட்கு ஒவ்வொன்றிலும் 4 வகுப்பறைகளும் கட்டித்தர நிதி ஒதுக்கப்பட்டு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**26—**

**பாடநூல்களின் எண்ணிக்கை**

**வினா 24138—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1998-99-ஆம் கல்வியாண்டில் 5 ஆம் வகுப்பிற்கு அச்சிட்டு வெளியிடப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) தற்போது கைவசம் உள்ள புத்தகங்கள் எவ்வளவு?*



1999 நவம்பர் 19]

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1998-99-ஆம் கல்வியாண்டில் 5 ஆம் வகுப்பிற்கு அச்சிட்டு வெளியிட்ட பாடநூல்களின் மொத்த எண்ணிக்கை 60,52,000 ஆகும்.

(ஆ) தற்போது கைவசம் உள்ள புத்தகங்கள் எண்ணிக்கை 2,35,397.

**27—**

**சுற்றுச் சுவர், வடிகால் வசதி செய்தல்**

**வினா 24573—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வில்லிவாக்கம் தொகுதி, முகப்பேர் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர், வடிகால் வசதி செய்து தரப்படுமா?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதி, முகப்பேர் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசாணை நிலை எண் 581, கல்வி, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைப்பது சார்பாக வனத் துறையுடன் தொடர்பு கொள்ளுமாறும், வடிகால் வசதி சார்பாக வடிகால் வாரியத் தலைவருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும், பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுப்பதை தவிர்ப்பது என கொள்கை முடிவு உள்ளது.

**28—**

**கலைக் கல்லூரிக்கு கூடுதல் கட்டடங்கள்**

**வினா 24905—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[1999 நவம்பர் 19

(அ) மன்னார்குடி இராசகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரியில் மாணவர்களின் தேவைக்கேற்ப புதிய கூடுதல் கட்டடங்கள் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மன்னார்குடி இராசகோபாலசுவாமி அரசினர் கலைக்கல்லூரியில் அரசின் உறுதிமொழிக்கு இணங்க அரசாணை எண் 523, உயர் கல்வித் துறை, நாள் 23-9-1998-ல் மூன்று கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்காக ரூ.10.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**29—**

**மன்சுராபாத் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 24951—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், மன்சுராபாத் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், மன்சுராபாத் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும், பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக்கொடுப்பது அரசின் கொள்கை அல்ல. பள்ளிகட்கு சுற்றுச்



1999 நவம்பர் 19]

சுவர் கட்டித்தர வனத்துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு பசுமை வேலிகளை அமைத்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி ஏற்கெனவே அரசாணை எண் 581, நாள் 14-7-1994-ன்படி அறிவுரைகள் தலைமை ஆசிரியர்கட்கும் வழங்கப்பட்டுள்ளது.

**30—**

**மாணவர்களின் மதிப்பெண்களை பதிவு செய்தல்**

**வினா 25747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களின் மதிப்பெண்களைப் பதிவு செய்யும் கம்ப்யூட்டர் தகவல் பதிவு மையங்களில் கோளாறுகள் நிலவுவதால் மாணவர்கள் பாதிப்படைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்தக் கேள்விக்கு ஆதாரம் ஏதுமில்லை.

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் பல்வேறு அரசுத் தேர்வுகளில் மிக முக்கியம் வாய்ந்த மேல்நிலை, எஸ்.எஸ்.எல்.சி மெட்ரிக், ஆங்கிலோ இந்தியன், ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு போன்ற தேர்வுகளைச் சார்ந்த அனைத்துவித தேர்வுப் பணிகளும் சென்னை அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையத்தில்தான் (G.D.C) செயல்படுத்தப் (Process) படுகிறது. தனியார் கம்ப்யூட்டர் மையங்களில் இப்பணிகள் செய்யப்படுவதில்லை. மேலும், மாணவர்களுக்கு அவர்கள் உண்மையாகப் பெற்ற மதிப்பெண்கள் பதிவு செய்த சான்றிதழ்கள் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் குறித்த கால வரையறைக்குள் வழங்கப்பட அரசுத் தேர்வுத் துறையும் அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையமும் இணைந்து செயல்படுகின்றன. எனவே, மேற்காண் வினாவில் குறிப்பிட்டுள்ள குறைபாட்டுக்கு ஆதாரம் ஏதுமில்லை.

31— [1999 நவம்பர் 19

**மாணவர்களுக்கு தொழிற் கல்வியில் 15 சதவிகித இட ஒதுக்கீடு**

**வினா 26659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூட மாணவர்களுக்கு தொழிற் கல்வியில் 15 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கப்படுவதுபோல் கிராமப்புறங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

32—

**இயற்பியல் ஆய்வுக்கூடம் அமைத்தல்**

**வினா 27540—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு இயற்பியல் ஆய்வுக்கூடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மாணவ, மாணவியர் பயன்பெற இயற்பியல் ஆய்வுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே அறிவியல் ஆய்வகம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் ஓர் அறை இயற்பியல் பாடப் பிரிவிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனியாக அறிவியல் ஆய்வகம் அமைக்கப்படுவதில்லை. ஒரு பள்ளிக்கு ஓர் ஆய்வுக்கூட கட்டடம் மட்டுமே கட்டுவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்டு வருகிறது.



1999 நவம்பர் 19]

33—

**நன்கொடைகளை வசூல் செய்தல்**

**வினா 29274—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடி நாள் நிதி போன்ற நன்கொடைகளை அரசு அதிகாரிகள் மூலம் வசூல் செய்யாமல் சேவை நிறுவனங்கள் மூலமாக வசூல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு அதிகாரிகள் மூலம் வசூல் செய்யாமல் சேவை நிறுவனங்கள் மூலம் கொடி நாள் நிதி வசூல் செய்ய நடவடிக்கை ஏதுமில்லை.

34—

**மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா 23201—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அரசு பொது மருத்துவமனையில் அனாதைப் பிணங்கள் வைக்கப்பட்டுள்ள பிணவறையிலிருந்து கடுமையான துர்நாற்றம் வீசுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு பொது மருத்துவமனையில் பிணவறை 80 சடலங்களைப் பாதுகாக்கத்தக்க நவீன வசதிகளுடன் குளிர் சாதான வசதி செய்யப்பட்ட பிணவறையாகும். இப்பிணவறையில், பிரதி தினமும் நகர எல்லைக்குள் மின்சார ரயில் வண்டியின் மூலம் விபத்திற்கு உட்படும் சடலங்களும், சாலை விபத்தின் மூலம் பெறும் சடலங்களும், உரிய முறையில் துர்நாற்றம் வீசாவண்ணம் மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், யாராலும் சொந்தம் கோரப்படாத அனாதை சடலங்கள் அவ்வப்போது சென்னை மாநகராட்சியின் வாயிலாக உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு சட்டம் சார்ந்த புலன் விசாரணைக்காக காவல் நிலையங்கள் மூலம் பாதுகாக்கப்பட்டு வரும் சடலங்கள் அவ்வப்போது காவல் துறை ஆணையர் மூலம் சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களுக்குத் தக்க அறிவுரை வழங்கச் செய்து உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பொது மருத்துவமனை சென்னை மாநகரின் மையத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய மருத்துவமனையென்பதால் ஒரு சில நேரங்களில் பிணவறையில் இட நெருக்கடி ஏற்படுதல் தவிர்க்க முடியாததாகிறது. இருப்பினும், எந்நிலையிலும், துர்நாற்றம் ஏற்பட்டு பொது சுகாதாரம் பாதிக்கா வண்ணம் இம்மருத்துவமனையில் பிணவறை மிகுந்த கவனத்துடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**35—**

### தாய்-சேய் நல விடுதி

**வினா 24109—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவிலில் தாய்-சேய் நலவிடுதி செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் எவ்வளவு பேர் உதவி பெறுகிறார்கள்?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் காஞ்சிக்கோவில் என்ற கிராமம் இல்லை. காஞ்சிக்கோவில்ரோடு கிராமம் தான் உள்ளது. இங்கு தாய்சேய் நலவிடுதி எதுவும் செயல்படவில்லை. காஞ்சிக்கோவில்ரோடு என்ற கிராமம் தரும்மாந்திசெல்வி பாளையத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தினை உள்ளடங்கிய கிராமம் ஆகும். காஞ்சிக்கோவில்ரோடு கிராமம் சார்ந்த தரும்மாந்தி செல்விபாளையம் துணை சுகாதார நிலையத்தின் மூலம் 5171 மக்கள் பயன்பெறுகின்றனர்.

**36—**

### தடையற்ற மின்சாரம் வழங்குதல்

**வினா 26849—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு சரகம் தத்துனூர், பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து மின்சாரம் வழங்க அரசு முயற்சிக்குமா:

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேத்துப்பட்டு சரகத்தைச் சேர்ந்த தத்துனூர் கிராமத்திற்கு கொழப்பலூர் 33 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் செம்மம்பட்டி 11 கி.வோ. ஊரக மின் தொடர் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இத்துணை மின் நிலையத்திற்கு சேத்துப்பட்டு 33 கி.வோ. மின்னூட்டியின் மூலம் ஆரணி 110 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 1999 ஆம் மாதம் தத்தனூர் கிராமத்திற்கு 31 தடவை கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக மின்தடை ஏற்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மின் தொகுப்பின் பளுவை சமன் செய்ய மின் நிறுத்தம் செய்யப்பட்டது. | 17 தடவை 4 மணி 30 நிமிடங்கள். |
| 2. | பராமரிப்பு மற்றும் மின் தடையினை சரி செய்ய மின் நிறுத்தம் செய்யப்பட்டது. | 6 தடவை 8 மணி 30 நிமிடங்கள் |
| 3. | ஆரணி துணை மின் நிலையத்தில் பழுதடைந்த மாம்பாக்கம் 33 கி.வோ. பிரிகலனை மாற்றி புதிய பிரிகலன் அமைப்பதற்காகவும் சேத்துப்பட்டு 33 கி.வோ. பிரிவுகலனில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யவும் மின் நிறுத்தம் செய்யப்பட்டது. | 8 தடவை 1 மணி 07 நிமிடங்கள் |

தற்போது புதிய பிரிகலன் அமைக்கப்பட்டுவிட்டதனாலும் மற்றும் முன் தொகுப்பின் முன்னேற்றம் காணப்பட்டதினாலும், ஏப்ரல் 1999 ஆம் மாதத்திற்கு பிறகு மேற்படி கிராமத்திற்கு தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

37—

### மின் பணியாளர்கள் விபரம்

**வினா 28626—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகம், சட்டமன்றம் ஆகிய இடங்களில் எத்தனை மின் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) அவர்கள் அனைவரும் நிரந்தரப்பணியாளர்களா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) செயலகம்/சட்டமன்றம் ஆகிய இடங்களில் பணிபுரியும் தமிழ்நாடு மின் வாரியத்தைச் சேர்ந்த பணியாளர்கள் எண்ணிக்கை—6.



(ஆ) அவர்கள் அனைவரும் தமிழ்நாடு மின்வாரிய நிரந்தரப் பணியாளர்கள்.

38—

### மின் பணியாளர்கள் எண்ணிக்கை

**வினா 28627—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது சென்னை மாநகரில் எத்தனை மின் பணியாளர்கள் இருக்கிறார்கள்?

(ஆ) அவர்களின் எண்ணிக்கை கடந்த 20 ஆண்டுகளில் குறைக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்பொழுது சென்னை மாநகரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 17908 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) கடந்த 20 ஆண்டுகளில் சென்னை நகரில் பணிபுரியும் மின்சார வாரிய ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

39—

### மின் இணைப்பு வழங்குதல்

**வினா 28780—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் 1996-97, 1997-98-ல் மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எத்தனை?

[1999 நவம்பர் 19

(ஆ) அவர்களுக்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் ஒரு வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின் இணைப்புக்கோரி வந்த மனுக்களும் அவற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளவை பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

தஞ்சை மின் பகிர்மான வட்டத்தின் நிலுவையில் உள்ள மொத்த விண்ணப்பங்கள் - 10,281.

| கேள்வியாளரின் தொகுதி. | அத்தொகுதியில் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள். | | நடப்பு ஆண்டில் விகிதாசாரப்படி பணி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள். |
|---|---|---|---|
| | 1996-97 | 1997-98 | |
| 1 திருவோணம் | 713 | 1,343 | 630 விண்ணப்பங்கள். மீதம் உள்ள விண்ணப்பங்கள் பின் வரும் ஆண்டுகளில் இலக்கீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு செய்து முடிக்கப்படும். |

40—

### மின்கோட்ட பொறியாளர், கணக்காயர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 28912—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் மின்கோட்ட பொறியாளர் மற்றும் கணக்காயர் அலுவலகங்கள் வாடகை கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?



1999 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், எப்போது சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் மின்கோட்ட பொறியாளர் மற்றும் கணக்காயர் அலுவலகங்களுக்கான கட்டடங்களின் கட்டுமான வேலை முடியும் தருவாயில் உள்ளது. இன்னும் மூன்று மாதங்களில் சொந்த புதிய கட்டடத்தில் மேற்கூறிய அலுவலகங்கள் இயங்கும்.

41—

### பட்டா வழங்குதல்

**வினா 13794—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், பாப்பினி கிராமத்தில் உபரி நில ஒதுக்கீட்டில் நில ஆணையரால் உறுதி செய்யப்பட்டும் உரியவர்களுக்கு நிலமும் பட்டாவும் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், பாப்பினி கிராமத்தில் 36.97 ஏக்கர் நிலங்கள் மிகையாக எடுக்கப்பட்டு 24 நபர்களுக்கு 26-12-1986 இல் ஒப்படை செய்யப்பட்டன. 13 நபர்கள் நில மதிப்புத் தொகை முழுவதும் செலுத்திவிட்டனர். 11 நபர்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைத் தொகைகளை உரிய காலத்திற்குள் கட்டாததால் அவர்கள் ஒப்படை 5-2-1992 இல் நீக்கரவு செய்யப்பட்டு, வேறு 7 நபர்களுக்கு 16-9-1992 இல் மறு ஒப்படையும்

[1999 நவம்பர் 19

செய்யப்பட்டுவிட்டன. 5-8-1992 தேதியிட்ட நீக்கரவு ஆணையில் ஆட்சேபணை இருந்தால் நிலத் தீர்ப்பாயத்தின் முன் உரிய காலத்திற்குள் முறையீடு செய்திருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நபர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தவில்லை. மேலும் அவர்கள் உள்ளூரில் குடி இருக்கவில்லை. மறு ஒப்படைபெற்ற ஏழு நபர்களும் நிலமதிப்புத் தொகை முழுவதும் செலுத்தி வரி ஆகியவற்றையும் ஒழுங்காகச் செலுத்தி 6 ஆண்டுகள் பயிர் செய்து வருகின்றனர். மேற்கண்ட சுழ்நிலையில் ஏற்கெனவே ஒப்படை பெற்ற 11 நபர்களுக்கு மீண்டும் ஒப்படை செய்ய வேண்டிய நிலை எழவில்லை. நில ஆணையர் அவர்கள் தன்னிச்சை சீராய்வு மனுவில் தக்க நடவடிக்கை எடுத்து, விசாரணை செய்து இதில் மேல் நடவடிக்கை தேவை இல்லை என 28-2-1999 இல் முடிவு எடுத்துள்ளார்கள்.

42—

## தனி நபர் ஆக்கிரமிப்பு

**வினா 29115—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரம் 31வது வார்டு வெடத்தலாங்காடு பகுதியில் நகரளவை எண் 216லுள்ள 23 சென்ட் ரிசர்வ் சைட்டை ஒரு தனி நபர் ஆக்கிரமித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் 31வது வார்டு வெடத்தலாங்காடு பகுதியில் நகரளவை எண் 216-ல் 23 சென்ட் ரிசர்வ் சைட்டில் இருந்த ஆக்கிரமிப்பு 15-2-1999 இல் நகராட்சி மூலம் அகற்றப்பட்டுவிட்டது.



1999 நவம்பர் 19]

43—

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா 4128—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம் காட்டூர் ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அம்மனாங்கோயில் ஊராட்சி அமைந்துள்ளது. காட்டூர் ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த் துறையினர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காட்டூர் ஏரி தூர் வாரும் பணி வரும் 1999-2000ம் நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

44—

## சாலை செப்பனிடல்

**வினா 4777—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை ஊராட்சி வேளாங்கோட்டிலிருந்து புலிமுகத்தான்குறிச்சி, கப்பியரை கற்சிகுழி வழியாக பள்ளியாடி செல்லும் சாலையை அரசு செப்பனிடுமா?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கப்பியறை பேரூராட்சிக்குட்பட்ட வேளாங்கோட்டிலிருந்து புலிமுகத்தான்குறிச்சி, கப்பியறை கற்சிகுழி வழியாக பள்ளியாடி செல்லும் சாலையில் மொத்த நீளம் 3,700 கி.மீ. வேளாங்கோடு முதல் கற்சிகுழி வரை 2,700 கி.மீ. தூரம் மண்சாலையாகவும் கற்சிகுழியில் இருந்து பள்ளியாடி செல்லும் சாலை 0.300 கி.மீ தார் சாலையாகவும் உள்ளது. செப்பனிடக்கோரும் சாலையினை சீரமைக்க மொத்தமாக சுமார் ரூ.25.00 லட்சம் செலவாகும். இதற்குத் தேவையான நிதி ஆதாரம் இப்பேரூராட்சியில் இல்லை.

மேற்படி சாலையில் கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீட்டில் ரூ.1.50 லட்சம் செலவில் கான்கிரீட் தளம் போடப்பட்டு உள்ளது. கப்பியறை குளம் முதல் பள்ளியாடி சாலை வரை தார் சாலையாக மாற்ற ரூ.1.09 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

45—

### நகராட்சித் திட்டப் பணிகள்

**வினா 14422—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில் நகராட்சித் தலைவருக்கும், ஒப்பந்ததாரர்களுக்குமுள்ள கருத்து வேறுபாடு காரணமாக கடந்த நான்கு மாதங்களாகப் பணிகள் தடைப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணிகள் நடக்க அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சியில் நகராட்சித் தலைவருக்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை.



1999 நவம்பர் 19]

பணிகள்யாவும் தடையின்றி நடைபெற்று வருகின்றன. மேலும் திட்டப்பணிகள் யாவும் முடிவுறும் நிலையில் உள்ளன.

46—

### வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுதல்

**வினா 14543—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில் பல வார்டுகளில் வளர்ச்சிப் பணி புறக்கணிக்கப்பட்டு, பாரபட்சமாக ஒரு சில வார்டுகளில் மட்டும் பணிகள் நிறைவேற்றப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அதைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சியில் எந்த ஒரு வார்டும் தனியாக ஒதுக்கப்படவில்லை. எல்லா பணிகளும், நகர மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளும் நகரமன்ற ஒப்புதலுடன் எடுத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது நிதிப் பணிகள் நிதிப்பற்றாக்குறை காரணமாக சற்றுத் தாமதமாக நிதி வசதிக்கேற்ப நடைபெற்று வருகின்றன. மேலும் தேவைக்கேற்ப நகராட்சிப் பகுதியில் எல்லா வார்டுகளுக்கும் சமமாக நிதி ஒதுக்கீடு செய்து, அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

47—

### கழிவு நீர்க் கால்வாய்

**வினா 14445—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

ஆம்பூர் நகராட்சி, எல்லையம்மன் கோயில் குளத்தில் கழிவுநீர் தேங்கி சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க கழிவு நீர் கால்வாய் கட்டி அக்கோயில் குளத்திற்கு கழிவுநீர் போவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்லையம்மன் கோயில் குளத்தில் கழிவுநீர் தேங்குவதை தடுக்கும் பொருட்டு முதல் கட்டமாக மேற்படி எல்லையம்மன் கோயில் தெருவில் ரூ.90,000 மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் பணியினை 1998-99-ம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுவிட்டது. மேலும் மேற்படி இடத்தில் கானாறு வரையில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணியினை மேற்கொள்ள தற்போது நகராட்சி பொது நிதியில் போதுமான நிதி வசதி இல்லாததால் 1999-2000 நடப்பாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் பணி மேற்கொண்டு முடிக்கப்படும்.

**48—**

**பாலாற்று நீரினைப் பாதுகாத்தல்**

**வினா 14574—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வேலூர் சத்துவாச்சாரி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக பாலாற்றில் தேர்வு செய்யப்பட்ட நீர் ஆதார பகுதியில் வேலூர் நகராட்சி கழிவுநீர் கிருத்துவ மற்றும் மருத்துவக்கல்லூரி (CMCH) மருத்துவமனையின் கழிவுநீர் நேரடியாக கலப்பதால் பாலாற்று நீர் மாசுப்படாமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகரில் இருந்தும் மற்றும் கிருத்துவ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்தும் தினசரி வெளியேறும் 27 இலட்சம்



1999 நவம்பர் 19]

லிட்டர் நகராட்சி பண்ணைக்கு விவசாயத்திற்காக கழிவுநீர் இறைவை செய்யும் நிலையத்தின் மூலம் பயிர்களுக்குப் பயன்படுகிறது. மீதமுள்ள கழிவுநீர் வாய்க்கால் மூலம், சத்துவாச்சாரி, அலமேலுரங்காபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்குச் செல்கின்றது. பாலாற்றில் நேரடியாக எந்தவித கழிவுநீரும் கலப்பதில்லை. மேலும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக நகரிலுள்ள 48 வார்டுகளிலும் ஒரே நேரத்தில் மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்த நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

**49—**

**கிணறுகள் தோண்டுதல் மற்றும் ஆழப்படுத்துதல்.**

**வினா 14576—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஓட்டேரி, கருகம்பத்தூர், பாலார் ஆகிய நகரின் குடிநீர் விநியோக இடங்களில் கிணறுகள் ஆழப்படுத்தல், புதிய கிணறுகள் வெட்டுதல் போன்ற பணிகளை வறட்சிக்கு முன் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

வேலூர் மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்து பாலாற்றில் வெள்ளம் ஏற்பட்டதால், வேலூர் நகருக்கு குடிநீர் வழங்கும் பாலாற்றில் உள்ள கிணறுகள் மற்றும் ஓட்டேரியில் உள்ள கிணறுகளில் முழு அளவில் குடிநீர் உள்ளதால் நகருக்குத் தேவையான அளவில் தினசரி 125 இலட்சம் லிட்டர் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. எனவே,

[1999 நவம்பர் 19

புதிய கிணறுகள் தோண்டுதல் மற்றும் ஆழப்படுத்துதல் ஆகிய பணிகளை தற்போது செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**50—**

**ஏரியில் ஆக்கிரமிப்பை அகற்றுதல்**

**வினா 14582—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை கிராமத்தில் பஸ் ஸ்டாண்டு அருகே ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பால் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகள் எப்போது அகற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை கிராமத்தில் பஸ் ஸ்டாண்டு அருகே ஏரியில் உள்ள ஆட்சேபணையுள்ளதும் பேருந்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் உள்ளதுமான ஆக்ரமணங்கள் அனைத்தும் 9-3-1999 அன்று அகற்றப்பட்டுவிட்டன.

**51—**

**குளங்களை தூர்வாருதல்**

**வினா 16880—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தில் நீர் ஆதாரத்தை வளப்படுத்த ராஜாங்குளம், தீர்த்தகுளம் ஆகிய குளங்களை தூர் வாரி கரைகளை பலப்படுத்தி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திண்டிவனம் நகரத்திலுள்ள ராஜாங்குளத்திற்கு தண்ணீர் வரத்திற்கான வெள்ளவாரிக் கால்வாய்க்குத் தடுப்புச் சுவர் கட்டும் பணி மட்டும் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்டப் பரவலாகத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதைத்தவிர ராஜாங்குளம் மற்றும் தீர்த்தக்குளங்களை தூர் வாரி கரைகளைப் பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதாக திண்டிவனம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

**52—**

**நமக்கு நாமே திட்டம்**

**வினா 19230—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 'நமக்கு நாமே' திட்டத்தில் பலனடைந்த ஊராட்சிகள் எத்தனை?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் நமக்கு நாமே திட்டத்தில் பலனடைந்த ஊராட்சிகள் எண்ணிக்கை 4 (சித்தூர், எடப்பாடி, குரும்பப்பட்டி, கண்டர்குல மாணிக்கம்).

(ஆ) பயனடைந்த ஊராட்சிகளின் விவரம் கீழ்வருமாறு—

| வ. எண் (1) | ஊராட்சியின் பெயர். (2) | பணியின் விவரம் (3) | மதிப்பு ரூபாய் இலட்சத்தில். (4) |
|---|---|---|---|
| 1 | சித்தூர் | வெடிக்காரன்பாளையம் முதல் எல்லகுட்டூர் வரை சாலை அமைத்தல் | 1.05 |
| 2 | எடப்பாடி | ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திற்கு தடுப்புச்சுவர் கட்டுதல் | 0.30 |
| 3 | சித்தூர் | சித்தூர் ஏரியின் கரையினை மேம்பாடு செய்தல் | 2.00 |
| 4 | குரும்பப் பட்டி | புங்கனேரி ஏரிமதகிலிருந்து தண்ணீர் வெளிச் செல்லும் வாய்க்கால் கட்டுதல் | 0.43 |
| 5 | குரும்பப் பட்டி | புங்கனேரி ஏரியில் தடுப்புச்சுவர் கட்டுதல் மற்றும் பழுது பார்க்கும் பணி | 0.50 |
| 6 | குரும்பப் பட்டி | புங்கனேரி ஏரி பழுதுபார்த்தல் | 0.40 |
| 7 | கண்டர் குல மாணிக்கம் | அரியம்பாளயர்கள் குடியிருப்பில் இருந்து தார்சாலை வரை கழிவுநீர் வடிகால் வாய்க்கால் கட்டுதல் | 1.33 |
| | | மொத்தம் | **6.01** |

53—

**நவீன பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 20217—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் நவீன பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

கொங்கணபுரம் பேரூராட்சி, எடப்பாடி நகராட்சியிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. நகராட்சி எல்லையில் பேருந்து நிலையம் உள்ளது. கொங்கணாபுரம் பேரூராட்சி எல்லையில் பேருந்து நிலையம் அமைக்கப் போதுமான இடவசதி இல்லை. மேலும் போதுமான நிதி ஆதாரமும் இல்லை. எனவே கொங்கணாபுரம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

54—

**விடுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல்**

**வினா 22146—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி நகரில் அமைந்துள்ள அரசு மாணவர் விடுதி, அரசு மாணவியர் விடுதிகளுக்கு பவானி நகராட்சி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

பவானி நகரில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் மாணவர் மாணவியர் விடுதிகளுக்கு, பொதுப்பணித் துறையின் கட்டடப் பராமரிப்புப் பிரிவின் விண்ணப்பத்தின் அடிப்படையில், குடிநீர் இணைப்பு வழங்க, நகராட்சியில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைப்புத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டவுடன் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

55—

**மேல்நிலை குடிநீர்த்தொட்டி கட்டுதல்**

**வினா 22379—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், சென்னிய விடுதி வடக்குத் தெருவில் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், சென்னிய விடுதி வடக்குத் தெருவிற்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**56—**

**ஆரம்பப் பள்ளி கட்டடம் செப்பனிடல்**

**வினா 23261—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மருதகுடி ஊராட்சி, திருவேங்கிட உடையான்பட்டி ஆரம்பப் பள்ளி கட்டடத்தை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் பழுதுபார்க்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்தினுடையதாகும். எனவே, தஞ்சாவூர் மாவட்டம், மருதக்குடி ஊராட்சி உடையான்பட்டி ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தைப் பழுது பார்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



**57—**

**கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்**

**வினா 23332—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புதூர் அரசு தொடக்கப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புதூர் அரசு தொடக்கப் பள்ளிக்கு 1999-2000 நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணியை மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்ட திட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**58—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 24822—திரு. மு. அப்பாவு,** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், ஊரல்வாய்மொழி ஊராட்சி மன்றம் அழகனேரி கிராம மக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டுமென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

[1999 நவம்பர் 19

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், அடங்கார்குளம் ஊராட்சியைச் சேர்ந்த அழகனேரி கிராமத்தின் மக்கள் தொகை, 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வின்படி 520 ஆகும். தற்பொழுது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு 20 லிட்டர் ஆகும். இக்கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) குடிநீர்த் திட்டம் நிறைவேற்றி செயலுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

59—

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 25064—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி தென்பாதி கிராம ஆதிதிராவிட தெருவாசிகள் வசிக்கும் நரினா கொல்லை தெருவிற்கும், சுப்பன்செட்டித் தெருவிற்கும் சேர்த்து மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி தென்பாதியைச் சேர்ந்த சுப்பன்செட்டித் தெரு மற்றும் நரினாகொல்லை ஆகிய பகுதிகளுக்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1999 நவம்பர் 19]

60—

### கொசு ஒழிப்புத் திட்டம்

**வினா 27242—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் நகரில் கொசுத் தொல்லை அதிகம் உள்ளதை ஒழித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

வல்லம் நகரில் கொசு ஒழிப்புத் திட்டம் செயல்பாட்டில் இல்லை. வல்லம் பேரூராட்சி மணற்பாங்கான பகுதியாக உள்ளபடியால் ஒரு சில இடங்களில் வடிகால்களில் கழிவுநீர் தேங்காமல் இருக்க உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

61—

### சாலை ஓரங்களில் மின் கம்பங்கள் நிறுவுதல்

**வினா 28923—திரு. வி. ஜி. தனபால்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"குடியாத்தம் நகராட்சி சாலைப் பகுதியில் இடையிலுள்ள மின்கம்பங்களை சாலை ஓரங்களில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

குடியாத்தம் நகராட்சி எல்லையில் அமைந்துள்ள ஜி.பி.எம். தெரு, அரசு மருத்துவமனை தெரு, சொச அண்ணாமலை தெரு, அம்பேத்கர் சிலை அருகில் உள்ள மின்கம்பங்கள் சாலையின் இடையில் உள்ளன. அவற்றை மாற்றியமைக்க மின்வாரியத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அனுமதி பெற்ற உடன் மின்கம்பங்களை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

62—

### சோடியம் விளக்குகள் அமைத்தல்

**வினா 29181—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியின் முக்கிய சந்திப்புகளில் சோடியம் விளக்குகள் அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் 1996-97 ஆம் ஆண்டில் 10-வது நிதிக்குழு பரிந்துரை மானியம் மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் ஆகியவற்றின்கீழ் 25 சோடியம் ஆவி விளக்குகள் பேரூராட்சியின் முக்கிய தெரு சந்திப்புகளிலும் மற்றும் நெடுஞ்சாலைப் பகுதியிலும் ஏற்கெனவே பொருத்தப்பட்டுள்ளது.

63—

### இடுகாட்டிற்கு எரிப்புக் கட்டட வசதி

**வினா 29271—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி லாலா குடியிருப்பு கிராம மக்கள் பயன்படுத்தும் இடுகாட்டிற்கு எரிப்புக் கட்டட வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி லாலா குடியிருப்புப் பகுதியில் கிராம மக்கள் பயன்படுத்தும் இடுகாட்டிற்கு தகரஷெட் அமைக்க பேரூராட்சியில் முடிவு செய்யப்பட்டு உள்ளது.

(ஆ) இப்பணிகள் 30-11-1999-க்குள் நிறைவேற்றப்படும்.

64—

### பேரூராட்சிகளைக் கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றுதல்

**வினா 29419—திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் எலத்தூர் பேரூராட்சி, காசி பாளையம் பேரூராட்சி, கெம்மநாயக்கன்பாளையம் போன்ற வருமானம் இல்லாத பேரூராட்சிகளை இரண்டாகப் பிரித்து கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

65—

### வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல்

**வினா 26134—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

தர்மபுரி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், புன்செய் நில விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும், தரிசு நில மேம்பாடு திட்டத்தின்கீழ் எவ்வளவு ஏக்கர் நிலம் எடுத்துக்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டத்தில் தரிசு நிலத்தை மேம்படுத்த 1000 ஹெக்டேருக்கு ரூ.80.048 இலட்சத்திற்கு ஒப்புதல் வேண்டி, கருத்துரு பெறப்பட்டுள்ளது. மேலும் நபார்டு கடன் உதவி பெறுவதற்கு 4000 ஹெக்டேருக்கு ரூ.133.360 இலட்சத்திற்கு ஒப்புதல் வேண்டி கருத்துரு பெறப்பட்டு ஆய்வில் உள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டின்கீழ் மத்திய அரசிடம் நிதிஉதவி கோரி, இரண்டு திட்டங்கள் 16105 எக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 600 இலட்சத்தில் மேற்கொள்ள அரசின் ஆய்வில் உள்ளது.

சேலம் மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டிற்கென கருத்துரு 5000 ஹெக்டேர் ஆலத்தூர் நீர்பிணைப்புப் பகுதிக்கு ரூ.200 இலட்சத்திற்கு ஊரக வளர்ச்சி முகமை மூலம் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின் திட்டம் செயல்படுத்தப்படும்.

**66—**

**எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரித்தல்**

**வினா 30128—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

(ஆ) எண்ணெய் வித்து பயிர்களை அதிகமாகப் பயிர் செய்திட அரசு புதிய யுக்தியை மேற்கொள்ள வழிவகை செய்திடுமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1. எண்ணெய் வித்துக்கள், விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

2. எண்ணெய் வித்துப் பயிர்களில் 10 எக்டேர் செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்து, அதில் அனைத்து உற்பத்தித் தொழில் நுட்பங்களும் கடைபிடித்து மற்ற விவசாயிகளுக்குக் காண்பிக்கப்படுகிறது.

3. எண்ணெய் வித்துக்களில் அதிக மகசூல் பெற நுண்ணுயிர் களான ரைசோபியம் கல்சர் மற்றும் பாஸ்போ பாக்டிரியா மற்றும் நுண்ணுரம் ஆகியவை விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் வழங்கப்படுகிறது.

4. நிலக்கடலையில் நல்ல திரட்சியான காய்கள் பெறவும் அதன்மூலம் மகசூல் அதிகரிக்கவும் ஜிப்சம் ஓர் எக்டேருக்கு மானியம் ரூ. 200 என்ற அளவில் விநியோகிக்கப்படுகிறது.

5. விவசாயிகள் நிலத்தில் எண்ணெய் வித்துக்கள் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கப் பண்ணை அமைத்து மற்ற விவசாயிகளும் கடைப்பிடிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. எண்ணெய் வித்துப் பயிர்களில் அதிக மகசூல் பெற அனைத்துத் தொழில் நுட்பங்களையும் கடைப்பிடிக்க எண்ணெய் வித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

7. மானிய விலையில் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

8. தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும்போது பயிர்களுக்கு நீர்ப்பாசனம் சீராகச் செய்ய தெளிப்பு நீர் கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

9. ஒவ்வொரு மாதமும் பையூர் வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையத்தில் பணிமனைக் கூட்டத்தில் எண்ணெய் வித்துப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க கடைப்பிடிக்கவேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விவாதித்து வேளாண்மை உதவி

[1999 நவம்பர் 19

இயக்குநர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் அனைத்து வேளாண்மை உதவி அலுவலர்களுக்கும் இதுகுறித்து பயிற்சி அளிக்கிறார்கள். பிறகு வேளாண்மை உதவி அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்குத் தொழில்நுட்பங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

10. இந்த ஆண்டு எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின் மூலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க ரூ. 41.400 இலட்சம் மானியமாக வழங்க திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) 1. சூரியகாந்தி பயிரில் அதிக பரப்பளவு பயிர் செய்ய வேளாண்மைத் துறையும் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகமும் இணைந்து வீரிய இரக சூரியகாந்தி விதைகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2. தெளிப்புநீர்க் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கி, கிடைக்கின்ற தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதன்மூலம் அதிக பரப்பளவு பயிர் செய்யத் திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது.

3. மகசூல் அதிகரிக்க புதிய உத்திகள் மாதாந்திர பணிமனையில் விவாதித்து முடிவு செய்யப்பட்டு, வேளாண்மைத் துறை அலுவலர்கள் மூலம் பரப்பளவை அதிகரிக்க விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**67—**

**எள் பயிரிடுதல்**

**வினா 30133—திரு. ஏ.வி.ஏ. நாசர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் எள் எத்தனை ஹெக்டேர் நிலங்களில் பயிரிடப்படுகிறது?

(ஆ) இதன்மூலம் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் எள்ளின் அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) புவனகிரி தொகுதியில் 24 ஹெக்டேரில் எள் பயிர் செய்யப்படுகிறது.



1999 நவம்பர் 19]

(ஆ) ஆண்டொன்றுக்கு 9 மெட்ரிக் டன் எள் உற்பத்தியாகிறது.

**68—**

**மணிலா பயிரிடுதல்**

**வினா 30135—திரு. ஏ.வி.ஏ. நாசர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் எத்தனை ஹெக்டேர் நிலத்தில் மணிலா பயிரிடப்படுகிறது?

(ஆ) இதன்மூலம் எவ்வளவு மணிலா உற்பத்தி செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் 1520 எக்டரில் மணிலா பயிரிடப்படுகிறது.

(ஆ) இதன்மூலம் 3420 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

**69—**

**ஏரியில் தூர் எடுத்தல்**

**வினா 4125—திரு. இரா. மகேந்திரன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை அக்ரகாரம் ஏரியில் தூர் எடுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்றம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை அக்ரகாரம் ஏரியில் தூர் எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை. இனிவரும் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்

பரிந்துரை செய்தால் தொகுதிக்கு ஒரு ஏரி தூர்வாரும் திட்டத்தின் கீழ் மேற்படி ஏரியைத் தூர்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

70—

**நாட்றம்பள்ளி தொகுதியில் ஏரியை மேம்படுத்துதல்**

**வினா 4126—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றம்பள்ளி தொகுதி, சந்திலி ஒன்றியம், காகங்கரை ஏரியை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்றம்பள்ளி தொகுதியில் 1998-99 ஆம் ஆண்டுக்கு அச்சுமங்கலம் ஏரியும், 1999-2000 ஆம் ஆண்டுக்கு கொரட்டி ஏரியும், தொகுதிக்கு ஒரு ஏரி தூர்வாரும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, காகங்கரை ஏரியை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால் இனிவரும் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்படும்.

71—

**ஏரியை ஆழப்படுத்துதல்**

**வினா 4130—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றம்பள்ளி தொகுதி, சந்திலி ஒன்றியம், குலிச்சி ஏரியை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தொகுதிக்கு ஒரு ஏரி தூர்வாரும் திட்டத்தின்கீழ் 1997-98-ல் குரும்பேரி, 1998-99-ல் அச்சுமங்கலம் ரிட்சாகிப் ஏரி, 1999-2000-ல்



கொரட்டி ஏரி ஆகிய ஏரிகளில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்துள்ளதால் இனிவரும் காலங்களில் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால் நிதி நிலைக்கு ஏற்ப குலிச்சி ஏரி தூர்வாரி ஆழப்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

72—

**குளம் அமைக்கும் திட்டம்**

**வினா 9752—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில், வெரியப்பூர், இ.வாடிப்பட்டி, ஜோதிப்பட்டி, சந்திரப்பட்டி, கொல்லப்பட்டி அருகே பொதுப்பணித் துறை மூலம் குளம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொல்லப்பட்டி அருகே ரூ.96.70 இலட்சம் மதிப்பீட்டில் ஏரி அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 284, பொதுப்பணித் துறை, நாள் 21-5-1999-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மற்ற நான்கு இடங்களில் அதாவது வெரியப்பூர், இ. வாழப்பாடி, இ. ஜோதிப்பட்டி, சந்திரப்பட்டி ஆகிய இடங்களில் கோரியுள்ள திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனி அதிகாரிகள் பரிசீலனையில் உள்ளது.

73—

**ஏரியை மேம்படுத்தல்**

**வினா 21233—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வளையமாதேவி ஏரி (ஆராபிரி ஏரி)யை ஆழப்படுத்தி அகலப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமையால் வளையமாதேவி ஏரி (ஆராபிரி ஏரி)யை ஆழப்படுத்தி அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது செயற்குறிப்பில் இல்லை. ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் இனிவரும் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்படுமானால் நிதிநிலைக்கு ஏற்ப இப்பணி எடுத்துக்கொள்ளப்படும்.

74—

### தடுப்பு அணைகள் கட்டும் திட்டம்

**வினா 24102—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தின் சித்தாறு ஆற்றின் குறுக்கே சிறு தடுப்பு அணைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தில், சித்தாறு ஆற்றின் குறுக்கே சிறு தடுப்பு அணைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

### பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துதல்

**வினா 24988—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எம்.டி.எச். ரோடும், செங்குன்றம் சாலையும் பிரியும் இடத்தில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எம்.டி.எச். ரோடும், செங்குன்றம் சாலையும் பிரியும் இடத்தில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதூர், புழல் மார்க்கமாக செல்லக்கூடிய வழித் தடங்களான 62, 62ஏ, 62ஏ வெட்டு, 62டி, 62ஈ, 62பி, 248, 20சி, 71டி ஆகிய தடங்களுக்குப் பேருந்து நிறுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

76—

### புதிய பேருந்து இயக்குதல்

**வினா 26203—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை-கறம்பக்குடிக்கு அதம்பை, பாதிரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், மேலக்கொள்ளுக்காடு, புதுநகர், வெட்டுவாக்கோட்டை, ராங்கியன்விடுதி வழியாகப் புதிய பேருந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தின் நீளம் 32 கி.மீ. ஆகும். நகரத்தடம் எண் 23-இல் பட்டுக்கோட்டையிலிருந்து கறம்பக்குடிக்கு அதம்பை, பாதிரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், புதுநகர் வெட்டுவாக்கோட்டை, ராங்கியன்விடுதி வழியாக தினசரி நான்கு நடைகள் இயக்கப்பட்டது. கடந்த மழைக் காலத்தில் (அக்டோபர்-டிசம்பர் 1998) பெய்த மழையினால் சாலை பழுதடைந்துவிட்டது. குறிப்பாக அனந்தகோபாலபுரம் முதல் மேலக்கொள்ளுக்காடு வரையிலான 3 கி.மீ. சாலை பழுதடைந்து, குண்டும் குழியுமாக ஆகிவிட்ட நிலையில் பேருந்து இயக்க இயலாமல் நிறுத்தப்பட்டது. சாலை பழுதுபார்க்கப்பட்ட பின் தடம் எண் 23 பட்டுக்கோட்டையிலிருந்து கறம்பக்குடிக்கு அதம்பை, பாதிரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், மேலக்கொள்ளுக்காடு, புதுநகர், வெட்டுவாக்கோட்டை, ராங்கியன் விடுதி

வழியாக மீண்டும் இயக்கப்படும். எனவே கோரிக்கை தடத்தில் புதிய பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**77—**

## மாதாந்திர பயணச் சீட்டு

**வினா 26273—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) மாநகர் போக்குவரத்துக் கழகம் மூலம் வெளியிடப்படும் "விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திர சலுகை பயணச்சீட்டு" தனி வண்ணத்தில் பச்சை நிறத்தில், கையடக்க வடிவில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருப்பம்போல் பயணம் செய்யும் மாதாந்திர பயணச்சீட்டு (ரூ. 375/-) முறையே, நீலம், ஆரஞ்சு, பிரவுன், மஜந்தா மற்றும் பச்சை வண்ணங்களில் அச்சடிக்கப்படுகின்றன. விற்பனைக்கு சில தினங்களுக்கு முன் அந்த மாதத்திற்கான நிறம் தீர்மானிக்கப்படுகிறது. இதன்மூலம் தவறான நடவடிக்கை ஏதும் ஏற்படாமல் தடுக்க இம்முறை பின்பற்றப்படுகிறது. இந்த அட்டை 11 செ.மீ. நீளத்திலும் 9 செ.மீ. அகலமும் மட்டுமே உள்ளதால் இதனை சட்டைப்பையில்கூட வைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். எனவே தனி வண்ணத்தில், பச்சை நிறத்தில் மட்டும் வெளியிடப்படும் சாத்தியக்கூறு இல்லை.

**78—**

## பேருந்து கோட்டப் பணிமனை அமைத்தல்

**வினா 26917—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் தமிழ்நாடு அரசு பேருந்து கோட்டப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம்-2) மூலம் திருநெல்வேலி மாவட்டம் சுரண்டையில் பணிமனை அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**79—**

## தார்ச் சாலை மற்றும் பாலங்கள்

**வினா 27676—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999-2000 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு தூரம் தார்ச்சாலை மற்றும் எத்தனை பாலங்கள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட வேலைகள் நபார்டு ஆர்.ஐ.டி.எப்.4 திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயல்பாட்டில் உள்ளன:—

| | வேலையின் பெயர்: | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| | சாலைப்பணிகள். | |
| 1. | எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை கி.மீ. 0/0-2/2 மேம்பாடு செய்தல். | ரூ. 44.30 இலட்சம் |
| 2. | (அ) காட்டுக்கோட்டை ராமானுஜபுரம் சாலையில் கி.மீ. 0/0-3/2 வரை மேம்பாடு செய்தல்.<br>(ஆ) மணிவிழுந்தான் வடக்குப் புதூர் ராமானுஜபுரம் சாலை கி.மீ. 0/0-2/8 வரை மேம்பாடு செய்தல்.<br>(இ) மணிவிழுந்தான் வடக்குப் புதூர் முதல் மணிவிழுந்தான் காலனி சாலை கி.மீ. 0/0-0/2 வரை மேம்பாடு செய்தல். | ரூ62.00 இலட்சம் |

| வேலையின் பெயர். பாலப்பணிகள். | மதிப்பீடு தொகை |
|---|---|
| 1. காட்டுக்கோட்டை ராமானுஜபுரம் கி.மீ. 0/6-ல் உயர்மட்டப்பாலம் கட்டுதல். | ரூ. 61.00 இலட்சம் |
| 2. காட்டுக்கோட்டை அணுகுசாலையில் கி.மீ. 1/2-ல் உயர்மட்டப்பாலம் கட்டுதல். | ரூ. 84.00 இலட்சம் |
| 3. பெரிய கல்ராயன் மலைச்சாலை கி.மீ. 0/10-ல் உயர்மட்டப்பாலம் கட்டுதல். | ரூ. 112.00 இலட்சம் |
| 4. எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையில் கி.மீ. 0/4-ல் சரபங்கா ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டுதல். | ரூ. 120.00 இலட்சம் |

**80—**

## மகளிருக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு

**வினா 24310—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தில் உள்ள ஆலயங்களில் வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30 சதவிகிதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

பொதுவாக திருக்கோயில் பணிகளில் உள் துறை பணிகளுக்கு பெண் பணியாளர்களை நியமனம் செய்ய ஆகம விதிகளில் இடமில்லை. வெளித் துறைப் பணியிடங்களில் (அலுவலகப்பணி) பெண் பணியாளர்கள் ஏற்கெனவே பல திருக்கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள். மேலும் திருக்கோயில் பணியாளர்கள் நியமனங்கள் அந்தந்த திருக்கோயில் அறங்காவலர் குழு மூலம் தேவைக்கேற்ப நியமனம் செய்யப்பட்டு வருகிறது. அரசுத் துறை நிறுவனங்கள்போல் குறிப்பிட்ட விதிமுறைகளின்கீழ் பட்டியல்படி திருக்கோயில் பணியாளர்கள் தேர்வு முறையில் நியமனம் செய்யப்படுவதில்லை.



ஆலயப் பணியாளர்களை அந்தந்த திருக்கோயில் அறங்காவலர் குழுவால் தேவைக்கேற்ப பணியிடங்களை ஏற்படுத்தி தற்காலிகமாக நியமித்து தேவையில்லாத காலங்களில் அப்பணியிடங்களை நீக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் 30 சதவிகிதம் பணியிடங்களை மகளிருக்கு ஒதுக்க ஆகம விதிகளில் வழிவகைகள் இல்லை. எனவே, ஆலயங்களின் வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய இயலாது.

**81—**

## மண்ணெண்ணெய் வழங்கச் செய்தல்

**வினா 23056—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரையொட்டியுள்ள இலக்கியம்பட்டி, தடங்கம், எ. ஜெட்டிஅள்ளி ஊராட்சிகளுக்கு, இவற்றில் உள்ள குடும்ப கார்டுகளுக்கு நகரில் வழங்குவதுபோல் மண்ணெண்ணெய் வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி நகரை ஒட்டியுள்ள இலக்கியம்பட்டி, தடங்கம், எ. ஜெட்டி அள்ளி ஆகிய ஊராட்சிப், பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு, நகரப் பகுதிகளுக்கு வழங்கும் அளவுகளின்படி மண்ணெண்ணெய் வழங்கிட வழி வகையில்லை.

**82—**

## கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

**வினா 25703—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 19

(அ) தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து 1998-99-ல் புனரமைப்பு நிதி பெற்று நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் எத்தனை மேம்படுத்தப்பட்டுள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து எந்த ஒரு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையும் புனரமைப்பு நிதி பெறவில்லை.

(ஆ) நலிந்த கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளைப் புனரமைப்பது தொடர்பாக முதல் கட்டமாக ஆறு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றிற்குத் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து உதவிகோரும் முன் மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. இவை தவிர நட்டத்தில் இயங்கும் 16 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளைப் புனரமைப்பது தொடர்பான முன்மொழிவுகளும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**83—**

**முத்திரை சீல் புதுப்பிக்கும் அலுவலகம் அமைத்தல்**

**வினா 27826—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில், வியாபாரிகள் வசதிக்காக எடப்பாடியில் முத்திரை சீல் புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்க அரசு ஆணை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அனைத்து வணிகர் சங்கத்தினர் கோரியதன் அடிப்படையில், எடப்பாடியிலுள்ள வணிகர்களின் எடையளவுகளை



1999 நவம்பர் 19]

ஒவ்வொரு ஆண்டும் 'அ' காலாண்டிலேயே முத்திரையிட்டுக் கொள்கிறோம் என தெரிவித்ததன் பேரில் 1995 'அ' காலாண்டு முதல் தொடர்ந்து எடப்பாடியில் முத்திரை முகாம் நடைபெற்று வருகிறது. எடப்பாடியில் 272 வணிகர்களும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் 241 வணிகர்களும், ஆக மொத்தம் இப்பகுதியில் 513 வணிகர்களே உள்ளனர். 2000-க்கும் மேற்பட்ட வணிகர்கள் இருக்கும் பகுதியில்தான் முத்திரை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க இயலும் என்பதாலும், எடப்பாடியில் 2000-க்கும் மிகக் குறைவாக வணிகர்களின் எண்ணிக்கை உள்ளதாலும், எடப்பாடியில் முத்திரை சீல் புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்கத் தேவையில்லை.

**84—**

**கைதிகள் அறை**

**வினா 23140—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கிளைச் சிறைச்சாலையின் அறைகளில் கைதிகளின் ஆரோக்கியத்தைப் பாதிக்கிற அளவு துர்நாற்றம் வீசுவதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் கிளைச் சிறையின் சுகாதாரம் நன்முறையில் பேணப்படுகிறது. திருப்பூர் கிளைச் சிறையின் சிறைவாசிகளின் அறைகள் தினந்தோறும் பினாயில் கொண்டு சுத்தப்படுத்தப்படுகின்றன. மேலும், இந்தச் சிறை அறைகள் 12-2-1999 அன்று சுண்ணாம்பு அடிக்கப்பட்டு சுத்தமான நிலையில் உள்ளது. இக்கிளைச் சிறையில் உள்ள 24 சிறை அறைகளிலும் மொத்தம் 24 நீரடிக் கழிப்பிடங்கள் தண்ணீர் வசதியுடன் உள்ளன. மேலும், ஆண் மற்றும் பெண் சிறைவாசிகளுக்கு தனித்தனியே போதுமான குளியலறைகள் உள்ளன. இக்கிளைச் சிறையின் கழிவு நீர் அகற்றும் கால்வாய் மற்றும் நச்சு நீர் கழிவுத் தொட்டி (Septic Tank) நன்றாக

இயங்கி வருகிறது. கிளைச் சிறையின் எந்த இடத்திலும் தண்ணீர் ஏதும் தேங்கி நிற்கவில்லை. ஆகவே, கிளைச் சிறை, திருப்பூரில் துர்நாற்றம் ஏதும் வீசவில்லை. இக்கிளைச் சிறையின் மேல்நிலை நீர்த்தொட்டி தற்போது பழுதுற்றுள்ளது. இதனை மாற்றிட பொதுப்பணித் துறையினர் கோரப்பட்டுள்ளனர்.

**85—**

**தமிழகத்தில் சிறைச்சாலைகள்**

**வினா 23890—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் எத்தனை கைதிகள் இறந்தார்கள்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 110 கைதிகள் இறந்துள்ளனர்.

(ஆ) சிறைவாசிகளின் இறப்பு குறித்து விதிமுறைகளின்படி பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, உரிய வருவாய்க் கோட்டாட்சியரால் விசாரணை செய்யப்பட்டு, உரிய மாவட்ட ஆட்சியரால் விரிவான உசாவல் அறிக்கை பெறப்பட்டு, அரசால் ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு 1997-98 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய தமிழ்நாட்டிலுள்ள சிறைகளில் இறந்த 110 சிறைவாசிகளில், 53 சிறைவாசிகளின் இறப்பு குறித்து மேற்கண்டவாறு விசாரணை செய்யப்பட்டு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**86—**

**நெசவாளர்களுக்கு தறிக் கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித் திட்டம்**

**வினா 28220—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தமிழக நெசவாளர்கள் 1998-99-ல் தறிக் கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித் திட்டத்தினால் பயனடைந்தோர் எத்தனை பேர்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறி துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் நிதி ஆண்டில் தறிக் கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித் திட்டத்தில் 920 நெசவாளர்கள் பயனடைய உள்ளனர்.

(ஆ) 796 நெசவாளர்களுக்கு கிராமப்புறத்திலும் 124 நெசவாளர்களுக்கு நகர்புறத்திலும் வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டு உள்ளது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய நிதி உதவியைக் கொண்டு 920 வீடுகளின் கட்டுமானப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

**87—**

**கைத்தறிக் கண்காட்சி**

**வினா 28222—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சி மூலமாக விற்பனையான துணிகள் மதிப்பீட்டுத் தொகை என்ன?

(ஆ) அதை இவ்வாண்டு அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற 44-வது அகில இந்திய கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 104 இலட்சம் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

(ஆ) இவ்வாண்டு 45-வது அகில இந்திய கைத்தறிக் கண்காட்சியை சேலத்தில் 28-4-1999 முதல் 12-5-1999 முடிய 15 நாட்களுக்கு நடத்த

அனுமதி வழங்கப்பட்டது. சேலம் நகரில் தொடக்க நாட்களில் மழை பெய்து விற்பனை பெருமளவில் பாதிக்கப்பட்டதால் மேலும் 5 நாட்களுக்கு அதாவது 17-5-1999 முடிய நடத்த அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும் மழையினால் ஏற்பட்ட தடங்கல் காரணமாக இவ்வாண்டு ரூ. 50.74 இலட்சம் மதிப்புள்ள துணிகளே விற்பனையாகியது. எனவே, இவ்வாண்டு விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு கண்காட்சியை நீடிப்பு செய்தும், இயற்கையின் சீற்றத்தால் விற்பனை தடைப்பட்டது.

88—

**கைத்தறி நெசவாளர்கள்**

**வினா 29229—திரு. ஐ. கணேசன்**: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் 60 வயது அடையும்முன் எத்தனை கைத்தறி நெசவாளர்கள் இறந்தார்கள் என்று அரசு கணக்கெடுத்துள்ளது?

(ஆ) இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு காப்பீட்டுத் தொகை எவ்வளவு ரூபாய் மொத்தம் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் 60 வயது அடையும்முன் 341 உறுப்பினர்கள் இயற்கை எய்தியுள்ளனர்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகை ரூ. 106.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

89—

**வயது முதிர்ந்த நெசவாளர்கள் ஓய்வூதியத் திட்டம்**

**வினா 29231—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்கள் வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 1998-99-ல் பயனடைந்தோர் எத்தனை பேர்?





(ஆ) அதில் எடப்பாடி தொகுதியில் பயனடைந்தோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998-99 ஆம் நிதியாண்டில் பயனடைந்த நெசவாளர்கள் எண்ணிக்கை 137 ஆகும்.

(ஆ) அவற்றில் எடப்பாடி தொகுதியில் 10 நெசவாளர்கள் பயனடைந்தனர்.

90—

**வனச் சங்கங்கள் அமைத்தல்**

**வினா 7983—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற மக்களுக்கு வனங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த கிராமப்புற வனச் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனங்கள்/வன வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வும், திட்டமிடுதல், செயல்படுத்தல், பாதுகாத்தல் போன்ற பொறுப்புகளையும் ஏற்க கடந்த இரண்டாண்டுகளில் 400 கிராம வனக் குழுக்கள் அமைத்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 600 வனக் குழுக்கள் அடுத்த மூன்றாண்டுகளில் அமைக்கப்படும். 15 விரிவாக்க மையங்கள் மூலம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யும்.

மேலும் களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகங்களை ஒட்டிய 113 கிராமங்களில் 250 குடும்பங்களுக்கு ஒரு வனக் குழு வீதம் அமைக்கப்பட்டுள்ளது.

[1999 நவம்பர் 19

91—

### ஏரி கட்டுதல்

**வினா 19564—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி கொல்லப்பட்டிக்கு கிழக்கில், மலையூர்மலை மேற்கில் உள்ள ஓடையில் ஏரி ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி கொல்லப்பட்டிக்கு கிழக்கில், மலையூர்மலை மேற்கிலுள்ள ஓடை, மணல் பாதை பள்ளம் பகுதியில் 1997-98-ல் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டப் பகுதியின்கீழ் மேற்படி ஓடையில் ரூ. 1.8 இலட்சம் செலவில் ஒரு கசிவுநீர் குளம் மார்ச் 1998-ல் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அதே ஓடையின்கீழே கசிவுநீர் குளத்தில் ரூ. 30,000 செலவில் 1998, மே மாதத்தில் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

92—

### கனிம வளங்களை குத்தகைக்கு விடுதல்

**வினா 21476—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பெரும்புதூர் வட்டம்-சோமங்கலம் முந்திரிக் காட்டிலுள்ள கனிம வளங்களை (மலைப் பாதைகள்) தனி நபர்களுக்கு குத்தகைக்குவிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பெரும்புதூர் வட்டத்தில் சோமங்கலம் பகுதியில் வனத் துறையின் பொறுப்பில் முந்திரிக் காடுகள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

93—

### சாலை அமைத்தல்

**வினா 23360—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பீமரப்பட்டி கீழ்வலசை கிராமத்திற்கு வனத் துறை மூலம் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

பீமரப்பட்டி கீழ்வலசை சாலை, திருவண்ணாமலை வனக் கோட்டத்தைச் சார்ந்த வலசமலை காப்புக்காட்டின் மலை உச்சியில் அமைந்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை 10.10 கி.மீ. நீளத்திற்கு காப்புக்காட்டிற்குள்ளும் 1.50 கி.மீ. நீளத்திற்கு காப்புக்காட்டிற்கு வெளியிலும் அமைகிறது. தற்பொழுது 1.0 மீட்டர் அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட பாதையாக கிராம மக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. புதிய சாலை அமைக்க 5.05 ஹெக்டேர் வன நிலம் வேண்டும். இதற்கு 1980 ஆம் ஆண்டைய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். கீழ்வலசை கிராமம் வலசமலை காப்புக்காட்டின் மலை உச்சியில் அமைந்துள்ள சிறிய கிராமம் ஆகும். இக்கிராமத்தில் மிகக்குறைந்த அளவிலான மக்கள் தொகையே உள்ளது. 5.05 ஹெக்டேர் அடர்ந்த வனப் பகுதியை அழித்து புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

94—

## மிருகக்காட்சி சாலைகளில் பார்வையாளர்கள்

**வினா 25201—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மிருகக்காட்சி சாலைகளில் 1998-99 ஆம் ஆண்டு எவ்வளவு பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்?

(ஆ) இந்த பார்வையாளர்களால் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கப் பெற்றது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மிருகக்காட்சி சாலைகளில் 1998-99 ஆம் ஆண்டு பார்வையாளர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:—

| வ.எண் | மிருகக்காட்சி சாலையின் பெயர் | பார்வையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, சென்னை-48 | 7,25,524 |
| 2. | கிண்டி சிறுவர் பூங்கா | 9,26,376 |
| 3. | முதலைப் பண்ணை, சாத்தனூர் | 2,80,548 |
| 4. | அமிர்தி மிருகக்காட்சி, வேலூர் | 18,989 |
| 5. | குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்கா, சேலம் | 22,773 |
| 6. | ஒகனேக்கல் மிருகக்காட்சி சாலை, தருமபுரி | 26,372 |
| 7. | முதலைப் பண்ணை, தருமபுரி | 1,22,422 |

பார்வையாளர்களால் 1998-99-ல் அரசுக்கு கிடைக்கப்பெற்ற வருமானம் கீழ்க்கண்டவாறு:



| வ.எண் | மிருகக்காட்சி சாலையின் பெயர் | கிடைக்கப் பெற்ற வருமானம் (ரூபாய்) |
|---|---|---|
| 1. | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, சென்னை-48 | 38,87,318.00 |
| 2. | கிண்டி சிறுவர் பூங்கா | 16,38,378.00 |
| 3, | முதலைப் பண்ணை, சாத்தனூர் | 1,40,274.00 |
| 4. | அமிர்தி மிருகக்காட்சி சாலை, வேலூர் | 82,654.00 |
| 5. | குரும்பப்பட்டி வன உயிரின பூங்கா, சேலம் | இலவச அனுமதி |
| 6. | ஒகனேக்கல் மிருகக்காட்சி சாலை, தருமபுரி | 13,186.00 |
| 7. | முதலைப் பண்ணை, தருமபுரி | 61,211.00 |
| | கூடுதல் .. | **58,22,991.00** |

95—

## பத்திரப் பதிவுகளை கணினி மயமாக்குதல்

**வினா 28307—திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்தில் பத்திரப் பதிவுகளை கணினி மயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில் கணிப்பொறி 27-6-1994-ல் அமைக்கப்பெற்று சென்னை, மயிலாப்பூர், பெரியமேடு மற்றும் மத்திய சென்னை 1 நிர் & 2 நிர் இணை சார்பதிவகங்களில் கணிப்பொறி வில்லங்கச்சான்று வழங்கப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக 21

[1999 நவம்பர் 19

அலுவலகங்கள் கணினி மயமாக்கப்படவுள்ளன. படிப்படியாக 300 சார்பதிவகங்கள் கணினிமயமாக்கப்படவுள்ளன. பென்னாகரம் சார்பதிவகமும் காலப்போக்கில் கணினி மயமாக்கப்படும்.

96—

### தமிழ் கையேடுகள்

**வினா 30649—திரு. ஐ. கணேசன்**: மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய கூட்டாட்சி தத்துவத்தை விளக்கும் தமிழ் கையேடுகளை அரசு வெளியிடுமா?

(ஆ) ஆம் எனில், அதை எல்லோரும் தெரிந்து கொள்ளும் விதத்தில் இலவசமாக அரசு வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

97—

### சமூகநலக் கூடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு

**வினா 16178—திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் ஆதிதிராவிடர் காலனிகளில் கட்டப்பட்ட சமூகநலக் கூடங்கள் முழுமை பெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?



1999 நவம்பர் 19]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் தொகுதியில் சுல்தான்பேட்டை, பல்லடம், சூலூர் ஆகிய வட்டாரங்களில் உள்ள ஆதிதிராவிடர்களின் குடியிருப்புகளில் 14 சமூகக் கூடங்கள் ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இச்சமூகக் கூடங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு கோரும் பிரேரணை எதுவும் பெறப்படவில்லை.

98—

### மயான வசதி அளித்தல்

**வினா 29378—திரு. நா. பெரியசாமி**: மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை சட்டமன்றத் தொகுதி பெருந்துறை கிராமம், பணிக்கம்பாளையம் ஆதிதிராவிடர் சமுதாய மக்களிடமிருந்து மயான வசதி கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை, பெருந்துறை சட்டமன்றத் தொகுதி பெருந்துறை கிராமம் பணிக்கம்பாளையம் ஆதிதிராவிடர்கள் மேற்படி கிராமத்தில் 100 குடும்பங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி ஆதிதிராவிட மக்கள், கிராமம் க.ச. 701-ல் வண்டிப்பாதை

[1999 நவம்பர் 19

புறம்போக்கில் அகலமான இடத்தில் சுமார் 0.12 ஏக்கர் விஸ்தீர்ணத்தை மயானமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி ஆதிதிராவிடர்களுக்கு இந்த இடம் மயானத்திற்கு போதுமானதாக உள்ளது. மேற்படி மயானமாகப் பயன்படுத்தும் இடம் வண்டிப்பாதை என இருந்த போதிலும், வண்டி வாகனங்கள் எதுவும் செல்வதில்லை. மயானத்திற்கு பயன்படுத்த எவ்வித இடைஞ்சலும் இல்லை. எனவே தனியாக மயான வசதி அளிக்க அவசியம் ஏற்படவில்லை.

**99—**

### சோப்பு உற்பத்தி

**வினா 26170—திரு. ஏ.வி.ஏ. நாசர்**: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கதர் மற்றும் கிராமத் தொழிற் துறை மூலம் தயாரிக்கப்படும் சோப்புகள் வணிக ரீதியாக விற்பனையை உயர்த்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தயாரிக்கப்படும் சோப்புகள் மாநிலம் முழுவதும் உள்ள கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அரசு மருத்துவமனைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு சோப்பு விநியோகம் செய்யப்படுவதுடன் கேரள மாநிலத்தின் சில மாவட்டங்களிலும் மற்றும் பெல் நிறுவனம் ஆகியவற்றிற்கும் சோப்புகள் விற்பனை செய்யப்படுகிறது. பொது மக்களால் வாங்கப்படும் சோப்புகளுக்கு விற்பனை வரி தள்ளுபடி அளிக்கப்படுகிறது.



1999 நவம்பர் 19]

**100—**

### கட்டட கட்டுமானப் பணி

**வினா 26408—திரு. கே. ரவி அருணன்**: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் மற்றும் கிராமத் தொழில்கள் திருச்சி அலுவலக உதவி இயக்குநர் அலுவலகத்தில் முதல் மாடியில் கட்டட கட்டுமானப் பணி ஏப்ரல் 1996-ல் முடிக்கப்பட்டும் இதுநாள் வரை வாடகைக்கு விடாததால் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

(ஆ) இழப்பான தொகையை பொறுப்பான நபர்களிடம் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கதர் மற்றும் கிராமத் தொழில்கள் திருச்சி அலுவலக உதவி இயக்குநர் அலுவலகத்தில் முதல் மாடி கட்டடப்பணி 9/92-ல் முடிக்கப்பட்டு கதர் அங்காடிக்கான கிடங்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருவண்ணாமலை மாவட்டம்....

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே உட்காருங்கள். நான் அறையிலேயே சொல்லிவிட்டேன். உட்காருங்கள்.

அடுத்து, திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலையம் மீது நடைபெற்ற தாக்குதல் குறித்து....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் உட்காருங்கள். நான் சொல்லிவிட்டேன், எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துக்கொண்டுவிட்டார். அவர் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் குறிப்பிட்ட அந்தச் சம்பவம் ஏற்கெனவே விரிவாக விவாதிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் வந்து, அங்கே சகஜ நிலை உருவாகிவிட்டது. (குறுக்கீடு) அப்படி எதுவும் இல்லை. உட்காருங்கள்.





## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலையத்தின் மீது நடைபெற்ற தாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலையம் மீது நடைபெற்ற தாக்குதல் குறித்து பல்வேறு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானமும் கவன ஈர்ப்பு அறிவிப்பும் கொடுத்து இருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக ஏற்றுக்கொண்டு, கட்சிக்கு ஒருவர் என்ற அடிப்படையில், முதலிலே திரு. க. மணிவர்மா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

முற்பகல் 11-25

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், தூசி காவல் நிலையத்திலே கடந்த 9 மாதங்களுக்கு முன்பாக உதவி ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த ஹரிதாஸ் என்பவர் அந்தப் பகுதியிலே இருக்கின்ற, அந்தக் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பல்வேறு கிராம மக்களுக்காகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்ததாகப் பொதுமக்கள் கருதுகின்றார்கள். கடந்த 9 மாதங்களுக்கு முன்பாக பொறுப்பேற்ற அவர், அந்தப் பகுதியிலே கள்ளச்சாராயம் ஆறாக ஓடிய தெருக்களில் எல்லாம் — ஒரு தெருவுக்கு 4 கடைகள், 5 கடைகள் என்ற நிலையிலே இருந்த பகுதிகளில் எல்லாம் — சுத்தமாக சாராயத்தை ஒழித்து, கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை நிகழாமல் உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். குறிப்பாக சூதாட்டம், பெண்கள் கற்பழிப்பு, பல்வேறு அடிதடி போன்ற, கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்களுடைய வழக்குகளையெல்லாம் சிறப்பாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.

அரசியல் தலையீடு இல்லாமல், மிகச் சிறந்த முறையிலே கடந்த 9 மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்தக் காவல் நிலையத்தில் இருந்து கடந்த 20 ஆம் தேதிக்கு மேல் கடலூர் மாவட்டத்திற்குப் பாதுகாப்புக்காக ஹரிதாஸ் அவர்கள் மாற்றப்பட்டு இருக்கிறார்கள். ஹரிதாஸ் அவர்கள் கடந்த 30-10-1999 அன்று மீண்டும் தூசி காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளராகப் பணியாற்ற வருகை தந்தபோது, அந்தப் பகுதியிலே இருந்த கள்ளச்சாராய வியாபாரிகள் மீண்டும் கள்ளச்சாராயத்தைத் தொடங்கி அதிக அளவிலே நடத்திக்கொண்டு

இருந்தார்கள். அந்தக் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவலர்களையும், மற்ற அதிகாரிகளையும் அவர் கேட்டபோது, நீங்கள் என்ன கேட்பது என்று அவரோடு தகராறு செய்து இருக்கிறார்கள். 30 ஆம் தேதி காலையிலே உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் சுமார் 10, 15 கள்ளச்சாராய வியாபாரிகளைக் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து அங்கே விட்டுச் சென்று இருக்கிறார்கள். அவர் வேறு பணிக்குச் சென்றுவிட்டு, இரவில் திரும்பி வந்து பார்த்தபோது, அந்தக் கள்ளச்சாராய வியாபாரிகளை விட்டுவிட்டதாக காவலர் சொல்லிய உடனே, "ஏன் 'அந்தக் கள்ளச்சாராய வியாபாரிகளை விட்டீர்கள்" என்று அவர்கள் கண்டித்தபோது, அங்கே இருந்த காவலர்கள் உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் அவர்களை அடித்து உதைத்து, எதிரே ஒரு R.I.M.P. டாக்டர் வரதராஜன் என்பவர் மூலம் மயக்க மாத்திரைகளைக் கொடுத்து, குறிப்பாக ஊமத்தங்காய் என்ற விஷக்காயை அவர் வாயிலே திணித்து சாப்பிடச் செய்து இருக்கிறார்கள். அந்தக் காவலர்கள் அடித்து உதைத்தது மட்டுமல்லாமல், காஞ்சிபுரம் மருத்துவமனையிலே ஹரிதாஸ் அவர்களைச் சேர்த்து, ஹரிதாஸ் அவர்கள் இரவு 3 மணியளவிலே விழித்துப் பார்த்தபோது, மருத்துவமனையிலே இருப்பதை அறிந்த அவர், தமக்கு மேலும் அதிகமான அளவிலே தொந்தரவு வந்துவிடும் என்று கருதி, 3, 4 மணியளவிலே அங்கிருந்து புறப்பட்டு தூசிக்கு வந்து இருக்கிறார். தூசியிலே இருக்கிற பொதுமக்களிடம் அவர் நடந்த விவரங்களைச் சொன்னபோது, தூசி, மாமண்டூர் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் 31 ஆம் தேதி காலை 8 மணியளவிலே சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான பேர் ஒன்றுகூடி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள், அந்த உதவி ஆய்வாளர் பணியில் சேர்ந்த பிறகு நிம்மதியாக வாழ்ந்த ஒரே காரணத்தினால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றுசேர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். காலை 8 மணி முதல் நடந்த அந்த நிகழ்ச்சியில், அந்தப் பகுதியில் இருக்கின்ற சட்டம் ஒழுங்கு D.S.P. காலை 9 மணிக்கு வந்து, காவல் நிலையத்தில் அமர்ந்து கொண்டிருந்தும், அவர் பொது மக்களை அழைத்து மற்ற அதிகாரிகளோடு கலந்து பேசி சமாதானப்படுத்த எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்காமல், ஹரிதாஸ் அவர்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்து அவரைக் கைது செய்வதாக அறிவித்து இருக்கிறார்கள். R.D.O. அவர்கள் அந்தக் காவல் நிலையத்திற்கு 12 மணியளவிலே வந்து இருக்கின்றார்கள். தூசியிலே இருந்து செய்யாறு R.D.O. அலுவலகம் சுமார் 18, 20 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கும். ஆனால், 3, 4 மணி நேரம் கழித்து அவர்



காவல் நிலையத்திற்கு வந்து, எந்தவிதமான சமாதான முயற்சிகளிலேயும் அதிகாரிகள் ஈடுபடாமல் இருந்து இருக்கின்றார்கள்.

சுமார் 3 மணிக்கு மேல் கள்ளச்சாராய வியாபாரிகளினுடைய அடியாட்கள் அங்கே வந்து பொதுமக்களோடு புகுந்து, காவல் நிலையத்தைத் தாக்கி இருக்கிறார்கள். காவல் நிலையத்திற்குண்டான ஜீப்பையும் கொளுத்தி இருக்கின்றார்கள். இதையறிந்த அந்த காவல் நிலைய அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கின்றார்கள். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் 5 மணிக்கு மேல் வந்ததாகச் சொல்கின்றார்கள். பொறுப்பிலே இருந்த மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் விழுப்புரத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் கொஞ்சம் காலதாமதமாக வந்திருந்தாலும், முழுமையான ஒழுங்கான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், மக்கள் கொந்தளிப்போடு அவதிப்பட்டார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-30

மேலும் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியிலே வாழ்கின்ற மக்கள் — நடைபெற்ற அந்தத் துப்பாக்கிச் சூட்டில் யாரும் காயம் அடையாமலிருந்த நிலையிலேயும் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் மீது — ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மீது — வழக்குப் பதிவு செய்து, 107 பேரைக் கைது செய்திருக்கிறார்கள். உதவி ஆய்வாளர் அவர்களையும் கைது செய்திருக்கிறார்கள். உதவி ஆய்வாளருக்கு மன நோயாளி என்ற பட்டத்தையும் அதிகாரிகள் சூட்டியிருக்கிறார்கள். காவல் துறையிலே பணியாற்றிய நல்ல நேர்மையான ஓர் அதிகாரிக்கு மன நோயாளி என்ற பட்டத்தைச் சூட்டியிருக்கிறார்கள். பொது மக்கள் மீது அவதூறு வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்துக் கட்சி பிரமுகர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும், ஒட்டுமொத்தமாக ஹரிதாஸ் அவருடைய பணியை, அவர் ஆற்றிய பணியைச் சிறப்பாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

மேலும் ஹரிதாஸ் அவர்கள் கடந்த 9 மாத காலமாக நேர்மையாக, லஞ்சம் வாங்காமல் சிறப்பாகப் பணியாற்றினார். காவல் துறையைப் பொறுத்தவரையில் உயர் அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றினாலும், கீழ்மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் ஒழுங்கான முறையிலே பணியாற்றுவதில்லை. மேலும் ஹரிதாஸ் அவர்கள் இதுவரையிலே ஒரு

சல்லி காசுகூட லஞ்சம் வாங்காமல் பணியாற்றியிருக்கிறார். காவல் நிலையத்திலே ஒரு புகார்ப் பெட்டி வைத்திருக்கிறார். பொது மக்கள் தங்களுடைய புகார்களை நேரே சொன்னால் காவலர்கள், அங்கேயிருக்கின்ற மற்ற அதிகாரிகள் புகார் கொடுத்தவரை அழைத்து, அவர்களுக்கு ஏதாவது தொந்தரவு கொடுப்பார்கள் என்ற காரணத்தால், அங்கே புகார்ப் பெட்டி வைத்து சிறப்பாகப் பணியாற்றிய அதிகாரி ஹரிதாஸ் அவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் அந்த மாவட்ட நிருவாகமும், காவல் துறையும் வேண்டுமென்றே பல வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறது. அந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற வேண்டும்.

மேலும், தூசி காவல் நிலையம் பூட்டப்பட்டிருக்கிறது. காவல் நிலையத்திற்கு பாதுகாப்பு இல்லாததால் பூட்டப்பட்டுள்ளது. அங்கே அந்தக் காவல் நிலையத்தினை மீண்டும் தொடங்கினால் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படுமோ என்ற அச்சத்தினாலோ என்னவோ தெரியவில்லை; இன்றைய வரையில் — 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காவல் நிலையம் — பூட்டப்பட்டு இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்தினைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஹரிதாஸ் மீது போடப்பட்ட வழக்கையும், மற்ற வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும். பொது மக்கள் அங்கே அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பொது மக்களுக்குப் பாதிப்பு அளிக்கிற வகையிலே மீண்டும் காவல் துறையினர் தேடுதல் வேட்டையிலே அதிகமான அளவிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையும் நிறுத்த வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல தடவை நமது சட்டமன்றத்திலே "கள்ளச் சாராயத்தை ஒழித்துக்கட்டுவோம், கள்ளச்சாராயப் பானைகள் மீது குண்டு பாயும்" என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். காவல் துறையிலே மேல் மட்டத்திலே இருக்கின்றவர்கள் சிறப்பாகப் பணியாற்றினாலும், கீழ் மட்டத்திலே இருக்கின்றவர்கள் கள்ளச் சாராயத்திற்குத் துணை போகிறார்கள். எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயத்தை அதிக அளவிலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நீங்கள் முழு முயற்சி எடுத்து கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான். கீழ் மட்டத்திலே இருக்கின்ற, ஏழ்மையில் வாழ்கின்ற தாய்மார்களின் தாலி, மற்ற எல்லாவற்றையும் அடகு வைத்துக்



குடிக்கின்ற இவர்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரியாகச் செயல்பட்ட ஹரிதாஸ் அவர்கள்மீது எடுத்திருக்கின்ற நடவடிக்கை காவல் துறைக்கே ஒரு களங்கத்தை ஏற்படுத்துகிறது. (மணியடிக்கப்பெற்றது)

காவல் துறையிலே நேர்மையாகப் பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு இந்த நிலைமை என்ற நிலை இருக்கின்றபோது இனிமேல் காவல் துறையிலே நேர்மையாக, லஞ்சம் வாங்காமல் பணியாற்றுகின்ற அதிகாரிகள் உருவாவார்களா, செயல்படுவார்களா என்பது எங்களுக்கு அச்சமாக இருக்கிறது. பொதுமக்கள் அஞ்சுகிறார்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அந்த அதிகாரிக்கு மன நோயாளி என்ற பட்டத்தையும் சூட்டியிருக்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம் ஜாமீனிலே அவரை விடுதலை செய்த நீதிபதி அவர்கள், அவர்கள் நல்ல நிலையில் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இரண்டாவதாக மாண்புமிகு முதலமைச்சர்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஏதாவது ஒரு முடிவிற்கு சீக்கிரம் வாருங்கள். (குறுக்கீடு) முதலிலேயே எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்.

**திரு. க. மணிவர்மா:** தூசி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியிலே நடந்த மக்கள் எழுச்சி— இலஞ்சம், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக நடந்த எழுச்சியாகும். இதை மனதிலே கொண்டு, எதிர்காலத்திலே- எங்கும் லஞ்சம் லாவண்யத்தை, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு, நாங்கள் துணையாக இருப்போம் என்ற நிலையை எடுத்துச் சொல்கிறேன். பொது மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். உண்மையாகவே 107 பேரிலே சிலர், ஜாமீன் எடுக்கக்கூட பணம் இல்லாமல் அல்லல்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்து மக்களும் ஒன்றாகச் சேர்ந்து சொல்கிறார்கள். முழுமையாக வழக்குகளை வாபஸ் வாங்குவதோடு நீதி விசாரணைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, ஹரிதாஸ் அவர்களை மீண்டும் பணி நியமனம் செய்வதாக அறிவித்து, தூசி காவல் நிலையத்திலேயே மீண்டும் உதவி ஆய்வாளராகப் பணியாற்றச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கின்ற.....

[1999 நவம்பர் 19

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம் (குறுக்கீடு) திரு. மணிவர்மா, நீங்கள் நீதி விசாரணை வேண்டும்; திரும்பவும் அவரைப் பணியில் அமர்த்த வேண்டும்; அதுவும் தூசியிலேயே பணியமர்த்த வேண்டும் என்று இவ்வளவும் கேட்டாயிற்று. உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) சரி சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** சாதாரணமாக அரசியல்வாதிக்குக்கூட இல்லாத அளவுக்கு மக்கள் ஆதரவு உள்ளவர் ஹரிதாஸ் அவர் நேரடியாக உதவி ஆய்வாளராகப் பணியில் அமர்ந்த காரணத்தால் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். அவருக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும். அந்தப் பகுதியிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற துணைக் கண்காணிப்பாளர் L.&.O., கலால் இன்ஸ்பெக்டர் போன்றவர்களையெல்லாம் தயவுசெய்து மாற்றிவிடுங்கள். கலால் பொறுப்பில் வந்த D.S.P. ஒருவர்தான் முழுக்காரணம் என்று அரசியலிலே முக்கிய தலைவர்களெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக அவர்களையெல்லாம் மாற்றவேண்டும். காவல் துறையில் உள்ள நல்ல அதிகாரிக்கு இந்த நிலைமையா? காவல் துறையின் மீது படிந்த கறையை, களங்கத்தைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல தீர்ப்பினை வழங்க வேண்டும். அந்த உதவி ஆய்வாளரை பணியில் அமர்த்தி, பொதுமக்கள் மீது உள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலையத்தில் ஏற்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் மிகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தூசி காவல் நிலைய சம்பவம் பற்றி அரசியல் கட்சிகள் கருத்து சொன்னபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'தூசியைத் தூணாக்கப் பார்க்கிறார்கள்' என்று அறிக்கை விட்டிருந்தார்கள். குறிப்பாக இந்தப் பிரச்சினையில் உள்ள சம்பவங்களையெல்லாம் ஆய்ந்து பார்க்கிறபோது, வந்திருக்கிற செய்திகளை, கருத்துக்களையெல்லாம் பார்க்கிறபோது உண்மையிலேயே தூசி சம்பவம் என்பது தூணாகத்தான் இருக்கிறது. ஆனால் அதைத்



1999 நவம்பர் 19] [திரு. வை. சிவபுண்ணியம்]

தூணாக்கப் பார்க்கிறார்கள் என்று சொன்ன நிலையைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக அந்தக் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றிய ஹரிதாஸ் என்பவர் சாராய சாம்ராஜ்யத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். அந்தக் காரியத்திலே ஈடுபட்டாலே அது எதிர்ப்பாக மாறும் என்பதற்கு நம்முடைய தமிழகத்திலே கண்கூடாக நாம் பல காட்சிகளைக் கண்டிருக்கிறோம். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பல ஊர்களிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் நடைபெற்றதை நாம் எடுத்துப் பேசியிருக்கிறோம். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பற்றி காவல் துறைக்கும், அரசுக்கும் தெரிவித்தார்கள். என்ற காரணத்தாலேயே பலபேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்..... அதேபோல இந்தக் கள்ளச் சாராயப் பேர்வழிகளைக் காட்டிக் கொடுத்தவர்களின் சூழ்நிலைகளைக் கொன்று, குற்றுயிரும், குலையுயிருமாக, கண்களைப் பிடுங்கிக்கூட மணலிலே புதைத்த கொடுமைகளெல்லாம் தமிழகத்திலே நடைபெற்றதைப் பார்த்திருக்கிறோம். அதையெல்லாம் இந்தச் சட்டசபையிலே நாம் எடுத்து வைத்திருக்கிறோம். ஆகவே இப்படிக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான அப்படிப்பட்ட சூழ்நிலை அதாவது கள்ளச் சாராயத்திற்கு எதிர்நிலை என்று இருந்த நிலை மாறி, இப்பொழுது அதை ஒழிப்பதற்குரிய முயற்சி எடுத்த காவல் துறை S.I. அவர்களுக்கே இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஏதோ அபாயகரமான சூழ்நிலை வந்திருக்கிறதோ என்ற அச்சம் நிலவுகிறது. காரணம், எதைத் தடுப்பதற்கு, எதைச் செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அவ்வாறு முயன்ற காவல் துறைக்கே இப்படிப்பட்ட கேள்விக்குறி வந்ததால் அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

குறிப்பாக ஹரிதாஸ் அவர்கள் S.I.-ஆகப் பணியேற்ற காலத்திலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்பது எல்லோராலும் சொல்லப்படுகிற ஒரு கருத்து. ஆகவே அப்படிப் பணியாற்றியதாலேயே சில பொதுமக்கள் மத்தியில் இருந்தோ அல்லது கள்ளச் சாராயப் பேர்வழிகள் மத்தியில் இருந்தோ இப்படி எதிர்ப்பு வருகிறது என்று சொன்னால் அது அவர்கள் வரையில் நியாயமான ஒன்றாக இருக்க முடியும். ஆனால் அதற்கு அந்தக் காவல் நிலையத்திலேயே இருக்கின்ற காவலர்களாலேயே, அதாவது அங்கே பணிபுரியக் கூடியவர்களாலேயே அங்கே இருக்கக்கூடிய

Inspector, D.S.P. போன்றவர்களாலேயே எதிர்ப்பு ஏற்படுகிறது என்று சொன்னால் அது விந்தையாக இருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளைக் கடுமையாக எடுத்துக் கொண்டிருக்கிற வேளையில், அந்தக் கருத்துக்களை வலுவாகச் சொல்கின்ற நேரத்தில், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று உத்தரவாதம் கொடுத்த நேரத்தில், காவல் துறையிலேயே இந்தப் பிரச்சினைக்கு எதிரான நிலைமையை எடுத்து, உதவி ஆய்வாளரே தாக்குதலுக்கு உள்ளாகிற மோசமான நடவடிக்கை நடந்திருக்கிறது என்று சொன்னால் அது வேதனையாக இருக்கிறது. காவல் நிலையத்திலேயே அவர் தாக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. இப்படிச் செய்தார் என்ற காரணத்தைக் காட்டி, இப்படி ஒரு நிலைமையை வெளிப்படுத்தினார் என்ற காரணத்தினாலேயே அவர் மனநோயாளி என்று நாட்டு மக்கள் மத்தியிலே அம்பலப்படுத்தி, அவரை ஒரு மனநோயாளியாகவே சித்தரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றதாகச் செய்திகள் வருகின்றன. பத்திரிகைச் செய்திகளையும், மற்றவற்றையும் பார்க்கிறபோது, நேற்றுகூட அவர் விடுதலை செய்யப்படுகிறபோது, மருத்துவரிடம் கேள்வி கேட்கிறபோது மருத்துவர் 'அவர் இப்பொழுது நல்லமுறையில் இருக்கிறார்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால், இந்த ஒரு வார காலத்திற்குள்ளாக, 10 நாட்களுக்குள்ளாகவே ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளியாக இருந்து, உடனடியாகச் சரிசெய்யப்பட்டு விட்டதா என்ற அச்சமும், கேள்வியும் வெளியே நிலவிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-40

இந்தப் பிரச்சினைகளைப் பற்றி, காவல் துறையினுடைய ஒரு Sub-Inspector சிறப்பாகப் பணியாற்றினார் என்ற காரணத்திற்காகவே, காவலர்களாலும் அங்கே இருக்கிற உயர் அதிகாரிகளாலும் இப்படிப்பட்ட பெயர் சூட்டப்பெற்று அவருடைய நடவடிக்கை தடுக்கப்பட்டிருக்கிறது. வெளியில் பார்க்கிறபோது மக்களாலே அவருடைய செயல்பாடு அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினாலேதான், மக்கள் மிகப்பெரும் அளவிலே திரண்டு போராட்டத்தை எழுச்சியோடு நடத்தியிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் நடைபெறுகிறபோது, இது ஆளுங்கட்சியா, எதிர்க்கட்சியா என்ற கருத்துகள் இல்லாமல் எல்லாப் பகுதி மக்களுமே இந்தப் போராட்டத்திலே பங்கு கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மிக முக்கியமான ஒன்று. அப்படி இந்தக் கருத்துகளைப்





செயல்பட்டிருக்கிறார்; பார்க்கின்றபோது பொதுமக்களுக்கு ஆதரவாகச் சிறப்பாகச் பொதுமக்கள் எதிர்பார்க்கிற காரியங்களைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். அப்படிச் சிறப்பாகச் செய்த அதிகாரியின்மீது தேவையில்லாமல் மனநோயாளி என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி, அவர்மீது களங்கத்தைப் பிறப்பித்து, அவருடைய உரிமையைப் பறிக்கிற நிலைமையிலே, இப்படிப்பட்ட காரியம் நடைபெற்றிருக்கிறது. அவர் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். அவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. வெளியே வந்திருக்கிறார் என்று சொன்னாலும் இந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட விளைவுகள்; அந்தக் கலவரத்தினால் பொதுமக்கள் கிட்டத்தட்ட 107 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர்களிலே 51 பேருக்கு மேலே சிறைச்சாலையிலே இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்தச் சம்பவத்தைப் பார்க்கிறபோது, பொதுமக்களுக்குரிய காரியத்தைச் செய்ததற்காக, சமூக விரோதக் காரியங்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுத்ததற்காக இப்படிப்பட்ட காரியம் நடைபெற்றிப்பதை, வேதனையாகக் கருத வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்டிருக்கிற உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். அதேபோல், பொதுமக்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெறவேண்டும். ஹரிதாஸ் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்து, அவரைப் பணியில் அமரத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லிய அந்த உயர் அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள்மீது மான நஷ்ட வழக்கைக் கூடத் தொடருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்தச் சம்பவம் தமிழகத்திலே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது; அதற்குரிய நடவடிக்கைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூசி காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளர், ஒரு நேர்மையான அதிகாரி. அந்தப் பகுதியிலே உள்ள சாராயத்தை ஒழித்தார்; சாராய வியாபாரிகளை ஒழித்தார்

[திரு. இரா. தாமரைக்கனி] [1999 நவம்பர் 19

என்று எல்லாத் தரப்புப் பத்திரிகைகளும், அந்தப் பகுதியிலே உள்ள எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் சொல்கிறார்கள். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு குழு அங்கே சென்றது. பழைய உள்துறைச் செயலாளர், மலைச்சாமி, I.A.S. தலைமையிலே ஒரு குழு சென்றது. அதேமாதிரி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலேயும், மற்ற கட்சிக்காரர்களின் சார்பிலேயும் குழுவெல்லாம் போய், அந்த உதவி ஆய்வாளர் எப்படிப்பட்டவர், என்ன, ஏது என்று விசாரித்ததில், அவர் நல்ல உதவி ஆய்வாளர் என்று சொல்லி சான்றிதழ்களெல்லாம் வந்திருக்கிறது. எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சர்வ கட்சியைக் கலந்து ஆலோசனை செய்துதான் சொல்வதாகச் சொல்கிறார்கள். அதேமாதிரி, சட்டசபையிலே உள்ள பெருங்கட்சியிலே உள்ள தலைவர்கள் எல்லாம், பொதுமக்களெல்லாம் சேர்ந்து அவர் நல்ல உதவி ஆய்வாளர் என்று சொல்கிறார்கள். ஆனால், அங்கேயுள்ள சாராய வியாபாரிகள், சாராயத்தை உதவி ஆய்வாளர் ஒழித்ததனால், அவரை trasfer பண்ண வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால், அது முடியவில்லை. முடியவில்லை என்று சொன்ன உடனே – அங்கே ஒரு ஆய்வாளர் இருக்கிறார். அங்கே ஒரு தலைமைக் காவலர் இருக்கிறார். இவர்கள் சாராய வியாபாரிகளிடம் மாமூல் வாங்குகிறார்கள். கீழ்மட்டத்து போலீஸ் எல்லாம் மாமூல் வாங்குகிறார்கள்—இவர் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று பாடுபடுகிறார். அதனால் மூன்று நாட்களுக்கு முன்னாலேயே இவரை ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே சேர்த்தது மாதிரி ஒரு சான்றிதழை வாங்கி, set up பண்ணி, D.S.P. முதற்கொண்டு, எல்லாம் set up பண்ணி, நன்றாக இருந்த மனிதனை பைத்தியக்காரன் என்று சொல்லி பட்டமும் சூட்டிவிட்டார்கள். உதவி ஆய்வாளர் யார்? நம்முடைய முதலமைச்சரின் கீழ் இயங்குகிற ஓர் அதிகாரி. மேலேயுள்ள அதிகாரிகள், கீழேயுள்ள அதிகாரிகளெல்லாம் சரியில்லாமல் இருக்கிறார்கள். இடையிலே உள்ள உதவி ஆய்வாளர் மட்டும் சரியாக இருக்கிறார். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அந்த உதவி ஆய்வாளர் எப்படி என்று சொல்லி, இவர்களே ஒரு set up பண்ணுகிறார்கள், போலீஸ்காரர்கள். Video எடுக்கிறார்கள். Video எடுத்து, 'இவரைப்



1999 நவம்பர் 19] [திரு. இரா. தாமரைக்கனி]

**பைத்தியக்காரர் மாதிரி படம் எடுய்யா' என்று சொல்கிறார்கள். காவல் நிலையத்திலே அடைத்து, கட்டி உதைக்கிறார்கள். மண்டையை உடைக்கிறார்கள். 10 போலீஸ்காரர்கள் ஒரு உதவி ஆய்வாளரை அடிப்பதைப் பார்த்திருக்கிறோமா? Inspector ,D.S.P. எல்லாம் set up பண்ணி அடிக்கிறார்கள். அடித்து, ஊமத்தங்காயைப் போடுகிறார்கள். மாத்திரையைப் போடுகிறார்கள். என்ன மாத்திரையோ புதுமைப் பித்தன் படத்திலே எம்.ஜி.ஆர்.-ஐப் பைத்தியக்காரன் ஆக்கியது மாதிரி ஆக்குகிறார்கள். திரைப்படம் பார்க்கிற மாதிரி இருக்கிறது. நிஜமாக இருக்கிற மாதிரி இல்லை. உடனே பைத்தியக்காரன் ஆக்கிவிடுகிறார்கள். அப்புறம் என்ன நடந்தது? ஒரு Video எடுக்கிறார்கள். எடுத்து, D.G.P. இடம் போட்டுக் காட்டுகிறார்கள். அவர் என்ன சொல்கிறாராம்; கடவுள், கடவுள் என்று சொல்கிறாராம். அந்த வார்த்தையை மட்டும் கேமராவில் எடுக்கிறார்கள். அதை உள்துறைச் செயலாளரிடம் போட்டுக் காண்பித்திருக்கிறார்கள். D.G.P.-யிடமும், முதலமைச்சரிடமும் மட்டும் போட்டுக் காண்பித்திருக்கிறார்கள். கடவுள் பார்த்துக் கொள்வார் என்று அவர் சொல்லியிருக்கிறார். மற்ற வார்த்தைகளை எல்லாம் cut பண்ணுகிறார்கள். கடவுள், கடவுள் என்று சொல்லு என்று சொல்லி அடித்திருக்கிறார்கள். அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே உள்ள ஆய்வாளர் அவரை உதவி ஆய்வாளர் மாதிரியா நடத்தினார். 'நீ மாடு மேய்க்கப் போய்யா' என்றெல்லாம் திட்டியிருக்கிறார். சாதியைச் சொல்லி எல்லாம் திட்டியிருக்கிறார்கள். பொது மக்களிடம் கேளுங்கள். அந்தப் பகுதியிலே உள்ள எல்லா சாதி மக்களும் எல்லாப் பொது மக்களும், எல்லாக் கட்சிக்காரர்களும் அந்த உதவி ஆய்வாளரை நல்ல உதவி ஆய்வாளர் என்று நினைக்கிறார்கள். அதை முதலமைச்சர் கூப்பிட்டு விசாரிக்க வேண்டும். உள்துறைச் செயலாளர் நேரடியாக விசாரிக்கட்டும். சபாநாயகர் அந்த உதவி ஆய்வாளரைக் கூப்பிட்டுக் கேள்வி கேளுங்கள்.**

முற்பகல் 11-45

**சும்மா இருந்த மனிதனை ஒரு டாக்டர் 'பைத்தியம்' என்று சொல்கிறான். உயர்நீதிமன்றத்தில் ஏன் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டவுடனே 'தெளிஞ்சு போச்சு' என்று சொல்கிறார்கள். ஏன் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டவுடனே தெளிந்துபோச்சா? அப்படியென்றால் அதற்கு முன்னால் Certificate கொடுத்த அதிகாரி**

[திரு. இரா. தாமரைக்கனி] [1999 நவம்பர் 19

மேலே நடவடிக்கை எடுங்கள். இந்த ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துகிறவர்கள் அவர்கள். பெரும்பான்மையான கட்சிகள், நல்ல உதவி ஆய்வாளர், நேர்மையானவர் என்று சொல்லும்போது அந்த போலீஸ் அதிகாரிகள் ஏன் பைத்தியம் என்று பட்டம் சூட்டினார்கள்? டாக்டர் ஏன் பைத்தியம் என்று சொன்னார்? அவர்கள் மேலே நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த உதவி ஆய்வாளருக்கு நீங்கள் பதவி உயர்வு கொடுங்கள். ஆய்வாளராகப் பதவி உயர்வு கொடுங்கள். பதவி உயர்வு மட்டுமல்லாமல் ஜனாதிபதி பதக்கத்திற்குப் பரிந்துரை செய்யுங்கள். முதலமைச்சர் பதக்கம் கொடுங்கள். ஒரு நல்ல மனிதனை, ஒரு ஏழையெளிய ஆதிதிராவிடரை இந்தமாதிரி இந்த ஆட்சியிலே இப்படியெல்லாம் செய்யலாமா? முதலமைச்சர் சிந்திக்கிறார்கள். சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதனாலே சட்டசபையிலேயே நீங்கள் அவர் நல்ல உதவி ஆய்வாளர் என்று certificate கொடுங்கள். மேலதிகாரிகள் மீது எல்லாம் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லுங்கள்.

தூசி காவல் நிலையம் 100 வருடமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே தூசி காவல் நிலையத்திலே சாராய வியாபாரத்தை ஒழித்த ஒரு உதவி ஆய்வாளர், நேர்மையாகப் பணிபுரிந்த ஒரு உதவி ஆய்வாளருக்காகக் காவல் நிலையத்தை மூடினீர்கள். அதைத் திறக்க வேண்டும். அந்த உதவி ஆய்வாளரைக் கட்டி வைத்து உதைக்கும்போது அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் எல்லாம் கூடி அவரை மீட்க வேண்டுமென்று சொல்லும்போது உடனே அவர்கள் set up பண்ணிவிட்டார்கள், போலீஸ்காரனே அடிக்கிறான். போலீஸ்காரனைப் பற்றித் தெரியாதா? இவர்களே காயத்தை உண்டுபணிக்கொள்வார்கள். கட்டுப் போட்டுக் கொள்வார்கள். கட்டுப் போட்டுக்கொண்டு நடிப்பார்கள். நீங்களும் எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறீர்கள். இந்த மாதிரி போலீஸ் ஸ்டேஷனை இவர்களே நொறுக்கிவிட்டு பொதுமக்கள் ஆயிரம் பேர் நொறுக்கிவிட்டார்கள் என்று சொல்லி, ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் மேலே வழக்குப் போட்டிருக்கிறார்கள். 108 பேர் உள்ளே இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விடுதலை செய்யுங்கள். (மணியடிக்கப்பெற்றது) என்ன உண்மையைப் பேசவிடமாட்டேன் என்கிறீர்களே? விடுதலை செய்யுங்கள். 108 பேரையும் accused ஆகச் சேர்த்திருக்கிறார்கள். 26-வது, 28-வது accused ஆக நம்முடைய உதவி ஆய்வாளர் ஹரிதாசைச் சேர்த்திருக்கிறார்கள். அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குங்கள்.



1999 நவம்பர் 19] [திரு. இரா. தாமரைக்கனி]

எல்லோரையும் விடுதலை செய்யுங்கள். சாராயத்தை ஒழித்ததற்கு ஓர் அடையாளமான நேர்மையான அதிகாரி அவர்.

100 சதவிகிதத்தில் 75 சதவிகிதம் போலீஸ்காரர்களுடைய இதயம் கெட்டுப் போச்சு என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) ஈரலா? எல்லாம் ஒன்றுதான். கெட்டுப்போச்சு என்று சொன்னீர்கள். 25% சரியாக இருக்கிறது என்று சொன்னீர்கள். அந்த 25 சதவிகிதத்திலே ஆயிரத்தில் ஒருவர் மாதிரி இந்த ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளர். ஆகவே நேர்மையான அந்த அதிகாரிக்கு இந்த punishment கொடுப்பதா? இந்தப் பட்டம் கொடுப்பதா? நன்றாகவே இல்லை. ஆகவே, எங்களுடைய தலைவி சொன்ன மாதிரி நாங்கள்தான் அந்த உதவி ஆய்வாளரை ஜாமீனில் எடுத்தோம். இன்னும் பொதுமக்களை நாங்கள் ஜாமீனில் எடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கமே அவர்களை ஜாமீனில் விட வேண்டும். இல்லையென்றால் அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டும். அந்தப் பொதுமக்கள் அப்பாவி ஜனங்கள். 100 வருடத்திற்கு எந்தவிதப் பிரச்சினையும் கிடையாது. அந்த அப்பாவி ஜனங்கள் மீது உள்ள வழக்குகளை வாபஸ் வாங்குங்கள். உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் மேலே உள்ள வழக்கை வாபஸ் வாங்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு அப்படிச் சந்தேகம் இருந்தால் மாவட்ட ஆட்சியர் தலைமையில்— நேர்மையான அதிகாரி யார் இருக்கிறார்கள். ஒருவரும் கிடையாது. இந்த அரசாங்கம் சொல்வதைத்தான் கேட்பார்கள். -- ஒரு நேர்மையான அதிகாரியை வைத்து அந்த இடத்திலேயே Enquiry Commission போடுங்கள். அந்த ஊரிலேயே Enquiry Commission போட்டு, அவர்கள் அதை உங்களுக்கு, அரசாங்கத்திற்குக் கொடுக்கின்ற அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த தூசி காவல் நிலையத்திலேயே அந்த உதவி ஆய்வாளர் பணிபுரிவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒன்று.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவைமுன் விவாதத்திலுள்ள பொருள் தொடர்பானதைப் பற்றி மட்டும் பேச வேண்டும். கடைசியாக அவர் சொன்ன பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத்தலைவரவர்களே அந்த உதவி ஆய்வாளரை அவர் ஆதிதிராவிடர் என்ற காரணத்தால் சாதியைக் குறித்துத் திட்டினார்கள் என்று தாமரைக்கனி சொன்னார் இந்த மாதிரி குற்றச்சாட்டு தாமரைக்கனிக்கு எப்போதும் சகஜமானது ஏனென்றால் அவருடைய தலைவியே அவரை சாதியைக் குறித்துத் திட்டியதாகப் பத்திரிகைகளில் எல்லாம் அறிக்கை விடுத்து தேர்தல் நேரத்தில் அந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் அவர். அதனால் சாதியைக் குறித்து யாரும் திட்டவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்மீது குற்றச்சாட்டுச் சொல்லும்போது நான் பதில் சொல்லியாக வேண்டும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். திரு. ஜி.கே .மணி.

**திரு. இரா. தாமரைக்கனி:** என் மீது குற்றச்சாட்டுச் சொல்லும்போது நான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றச்சாட்டு இல்லை நீங்கள் சொல்வதைத்தான் அவர்கள் சொல்லி, அதை நினைவூட்டினார்கள். அவ்வளவுதான். நீங்கள் உட்காருங்கள். திரு ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டதைச் சேர்ந்த தூசி காவல் நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினையைப் பல்வேறு அரசியல் கட்சிகள் அரசிலாக்க வேண்டுமென்று, தூசி பிரச்சினையைத் தூணாக நினைத்து அது விஸ்வரூபம் எடுக்க வேண்டுமென்று நினைத்த நேரத்திலே, தூசி பிரச்சினையைத் தூணாக நினைக்க வேண்டுமென்றும், அது விஸ்வரூபம் எடுக்க வேண்டுமென்றும் நினைத்தாலும்கூட தூணாக நினைத்த அந்தப் பிரச்சினையைத் தூள்தூளாக்கி, தூசிப் பிரச்சினையைத் தூசாகத்





துடைத்தெறிந்த பெருமை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தூசி பிரச்சினையை வைத்து அரசை மாசுப்படுத்த வேண்டுமென்று நினைத்தாலும்கூட தேசநலன் கருதி, மாசுபடுத்த நினைத்ததை, தூசியைத் தூசியாக நினைத்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் மீண்டும் ஒருமுறை நன்றியைச் சொல்லி, அந்தக் காவல் நிலையத்திலே உதவி ஆய்வாளராகப் பணியாற்றிய மரியாதைக்குரிய அந்த உதவி ஆய்வாளர் அவர்கள், ஒரு நல்ல அதிகாரி, என்றும், சிலர், கள்ளச் சாராயத்தை ஒழிக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளைத் தடுக்க, அவர் மீது அவப்பெயர் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அவ்வாறு செய்ததாகவும் செய்தி சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் அங்கே நடந்த சம்பவங்கள் என்பது, பொதுமக்கள் எல்லாம் சேர்ந்து தாக்கப்பட்ட நிகழ்ச்சியை நினைக்கும்போது மிகவும் வருத்தமாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

எந்தப் பிரச்சினை எப்படி இருந்தாலும், அந்தப் பிரச்சினையை நடுநிலைமையோடு நின்று, சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற முயற்சியிலே நமது அரசு செயல்பட்டு இருப்பதை நான் இந்த நேரத்திலே மீண்டும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட காரணத்தினால், அந்தச் சம்பவத்திலே நடுநிலைமையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து, அதிலே யார் தவறு செய்திருந்தாலும், நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டும்: தண்டிக்கப்பட்டு அங்கே நீதி நிலைநாட்டப்பட வேண்டிய வகையிலே எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வேண்டி விரும்பிக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூசி காவல் நிலையத்திலே உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த ஹரிதாஸ் என்ற அந்த உதவி ஆய்வாளர், மிகவும் நேர்மையான அதிகாரி. அவர் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக மிகவும் அரும்பாடுபட்டு வந்தார். அப்படி அவர் செய்ததனால், அந்தக் காவல் நிலையத்திற்கு வரவேண்டிய வருமானங்கள் எல்லாம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், போலீஸ்காரர்களுக்கு 'மாமூல்'

வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால், அவர் தாக்கப்பட்ட நிலையின் காரணத்தினால், அவர் பொதுமக்களைத் திரட்டி, போராட்டம் நடத்தியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதன் காரணமாக காவல் நிலையமே தாக்கப்பட்டு அங்கு ஒரு அசாதாரண நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று ஒரு பக்கத்திலே சொல்லப்பட்டாலும், பொதுமக்கள் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் அல்ல என்று சொல்கிறார்கள். இருந்தாலும், அவருடைய உறவினர் ஒருவர் அவர் மனநிலை பாதிக்கப்பட்டு, தொடர்ந்து மாத்திரைகளைச் சாப்பிட்டுக் கொண்டு வந்தார் என்பதையும் ஒரு பத்திரிகையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். எது எப்படியிருந்தாலும், கள்ளச்சாராயப் பிரச்சினை என்பது எங்குமே தலைதூக்கி இருக்கிற ஒரு பிரச்சினைதான். அந்த நிலையிலே, நேர்மையாகச் செயல்படுகிற அதிகாரிகளுக்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நடுநிலைமையோடு நல்ல ஒரு தீர்வை இந்த விஷயத்திலே காண வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 11-55*

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூசி காவல் நிலையத்திலே நடந்த வன்முறைச் சம்பவங்கள், அதையொட்டி, பத்திரகைகளிலே, எதிர்க்கட்சி வரிசைகளிலே எழுந்திருக்கிற நிலைமைகளைப் பார்க்கும்போது, அங்கு உதவி ஆய்வாளராகப் பணியாற்றிய திரு. ஹரிதாஸ் என்பவர் மிகுந்த நேர்மையான அதிகாரியாகவும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற கள்ளச் சாராயம், சமூகத் தீமைகள் போன்றவற்றை ஒடுக்குவதிலும், அடக்குவதிலும் வல்லவராகவும் இருந்திருக்கிறார் என்கிற நிலையை வெளி உலகத்திற்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆனால், நம்மைப் பொறுத்தளவிலே சற்று முன்பாகத்தான் அனைத்துக் கட்சியினரும் வெளியிலே சென்று தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு வந்திருக்கின்றோம். அந்த உறுதிமொழியை ஏற்கின்ற நேரத்திலே, எந்தக் காரணத்தைக் கொண்டும் என்னை நான் வன்முறையில் ஆட்படுத்திக்கொள்ள மாட்டேன், எனக்கு ஏற்படுகின்ற எந்தக் கஷ்டநஷ்டங்களையும் அரசமைப்புச் சட்டரீதியாக, நேர்மையான முறையிலே தீர்த்துக் கொள்வதற்கு முற்படுவேன் என்கின்ற





உறுதிமொழியை இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம் என்கின்ற நிலையை நாம் அனைவரும் சிந்தித்துப் பார்த்து ஒரு நல்லவருக்கு, நேர்மையானவருக்கு துயர் வருகின்றபோது, அதற்கு உறுதுணையாகக் குரல் கொடுக்க வேண்டுமென்பது மரபுதான் என்று சொன்னாலும்கூட, அதை வன்முறையாக ஆக்குகின்ற நேரத்திலே, அதனை அத்தனை பேரும் கண்டிப்பதற்கு முன்வரவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் உங்களுடைய சிந்தனைக்கு எடுத்து வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே பணியாற்றிய காவலர்களே ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளரைத் தாக்கியிருக்கிறார்கள் என்றும் அங்கே இருக்கின்ற மேலதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்றும் சொல்லப்படுகின்ற அந்தக் கூற்றுகளையெல்லாம் காவல் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்மைதானா என்பதனை ஆராய்ந்து அறிந்து, நல்லவிதத்திலே விசாரணை செய்து, உண்மையாகவே மேலே இருக்கின்ற அதிகாரிகள் அப்படிப்பட்ட ஒரு தவறுக்கு தங்களை ஆட்படுத்திக்கொண்டு நேர்மையான ஒருவருக்கு தீங்கிழைத் திருப்பார்களேயானால் அந்த மேலதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதோடு ஹரிதாஸ் என்பவர் உண்மையிலேயே மனநிலை பாதிக்கப்பட்டவர்தானா என்பதனையும் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு பரிசோதனை செய்து அறிந்து அந்த உண்மை நிலையையும் முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டிற்கு அறிவிக்க வேண்டும். அதோடு, பொதுமக்கள் அந்தக் காவல் நிலையத்தைத் தாக்கி, அங்கிருந்த ஊர்திகளையெல்லாம் தீ வைத்துக் கொளுத்தியிருந்தாலும்கூட, சட்டரீதியாக அது தவறாக இருந்தாலும் கூட, அதைப் பொதுமக்கள் செய்திருக்கிறார்கள் என்கின்ற சீரிய எண்ணத்தோடு, முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்தும் பரிசீலனை செய்து அவர்கள்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அது இந்த அரசினுடைய கடமை, பொறுப்பு என்றும் கூறி அமைகின்றேன். நன்றி.

[1999 நவம்பர் 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. டி.மணி அவர்கள். இதற்கு அடுத்ததாக மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் நடைபெறவிருக்கிறது. எனவே, அதனைக் கருத்தில் கொண்டு அனைவரும் சுருக்கமாகக் கருத்துகளைச் சொல்ல வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன? உங்கள் கட்சியின் சார்பாக திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசி விட்டார்கள். திரு. டி. மணி அவர்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூசி சம்பவம் தொடர்பாக கடந்த 16-ந் தேதி அன்று நானும் திருவட்டார் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமாக, அந்தப் பகுதியில், கிட்டத்தட்ட 13 கிராமங்களுக்குச் சென்று, நேரிலே விசாரணை செய்தோம். அந்தக் காவல் நிலையம் இருக்கின்ற அந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலையை எல்லாம் புரிந்து கொண்டோம். அதுகுறித்து சில விவரங்களை இந்தச் சபையிலே வைப்பதற்கு முனைகின்றேன். குறிப்பாக, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் ஏறத்தாழ 1944-ல் அரசியலில் அடியெடுத்து வைத்தவன். அந்த 13 கிராமத்து மக்களும் ஒரேமுனையாக நின்றுகொண்டு அந்த ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளர் நல்லவர் என்று சொல்லுகின்ற ஒரு குரலை அங்கே கேட்க முடிந்தது. கள்ளச்சாராயத்தை நிறுத்துவதற்கும், கள்ளச்சாராயத்தினால் இலஞ்சலாவண்யம் பெருத்துப் போய் இருப்பதைத் தடுப்பதற்கும் அந்த உதவி ஆய்வாளர் உறுதுணையாக நின்று உரிய நடவடிக்கையை மேற்கொண்டார் என்ற செய்திதான் அந்த 13 கிராமத்து மக்களும், ஆண்களும் பெண்களுமாக ஒரே குரலில் சொன்ன கருத்தாகும். அதுமட்டுமல்லாமல், எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களையும், குறிப்பாக ஆளுகின்ற கட்சியைச் சார்ந்த பல நண்பர்களையும் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவர்களும் இதைத்தான் சொல்கிறார்கள். அந்த உதவி ஆய்வாளர் சிறந்தவர், நல்லவர், அவர் இலஞ்சத்திற்கு எதிரானவர், கள்ளச்சாராயத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டவர் என்ற கருத்தைத்தான் அந்தக் கிராமத்து மக்கள் தெளிவாகச் சொன்னார்கள். அங்கே கள்ளச்சாராயத்தையும் அதனால் வந்த இலஞ்சத்தையும் ஒழிப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் ஹரிதாஸ்மீது, அவருக்கு மேலாக இருக்கின்ற ஆய்வாளர், அவருக்கும் மேலாக இருக்கின்ற D.S.P. இவர்களுக்கு மிகக் காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டு, இவரை எப்படியாவது மட்டம்தட்ட



1999 நவம்பர் 19] [திரு. டி. மணி]

வேண்டுமென்று நோக்கோடுதான் இந்தச் செய்தி அல்லது இந்தச் சம்பவம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆய்வாளருக்கு முன்னால் ஒரு உதவி ஆய்வாளர் தாக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், அது என்ன நியாயம்? எந்தத் தன்மையில் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தவகையிலே அந்தக் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவதற்கும், விற்பனை செய்வதற்கும், அதிலே இலஞ்சத்தைப் பெறுவதற்கும் உடந்தையாக இருந்த ஆய்வாளர் மற்றும் D.S.P. மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

நண்பகல் 12-00

அதுமட்டுமல்ல, நான் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு காவல் நிலையத்திலே ஒரு முற்றுகையோ அல்லது ஒரு தகராறோ ஏற்பட்டுவிட்டால், நாம் காவல் நிலையத்தை மூடிவிடுவது என்பது எந்தவிதத்திலேயும் நியாயமானதாக இருக்காது. அந்த வட்டாரத்தில் இருக்கின்ற எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், அங்கே கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்களையும் அழைத்து வைத்து, வருவாய்த் துறை அதிகாரிகளையும், காவல் துறை அதிகாரிகளையும் வைத்து ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்து அந்தக் காவல் நிலையம் இயங்குவதற்குரிய நடவடிக்கையை நாம் மேற்கொண்டிருக்க வேண்டும். அது காலந்தாழ்ந்து விட்டது என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். ஆகவேதான், அதனுடைய பின்னணியில் அந்த ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளரை மனநோயாளி என்று சொல்லி, இப்போது அவரை நீதிமன்றத்தில் இருந்து ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். டாக்டருடைய பரிந்துரையின்பேரில்தான் அவர் மனநோயாளி இல்லை என்று சொன்னதற்குப் பின்னாலேதான் ஜாமீனிலே விட்டிருக்கிறார்கள். ஆகவே, மனநோயாளி பட்டம் சூட்டி—அவர்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். அந்தக் கிராமத்து மக்கள் ஆத்திரமடைந்திருக்கிறார்கள்; கொதிப்படைந்திருக்கிறார்கள். எனவே, அதையும் நாம் மனதிலே ஏற்றுக்கொண்டு, அவர்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். ஏற்கெனவே, சாராய வியாபாரிகளால் தூண்டப்பட்ட ஒரு சிறிய சாரார் இருக்கின்றார்கள். அந்தக் காவல் நிலையத்தினுடைய ஜீப்பைக் கொளுத்தியிருக்கிறார்கள். இல்லை என்று மறுக்க முடியாது. ஏனென்றால், காவல் நிலையத்திற்குப் பின்னாலே அந்த ஜீப் கொளுத்தப்பட்டிருக்கிறது. எனவேதான், அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். இந்த ஹரிதாஸ் என்று

சொல்லப்படுகின்ற உதவி ஆய்வாளருக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை; அவரை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கும் அந்த வழக்குகளை முழுமையாக வாபஸ் வாங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்று இன்நொரு காவல் லையத்தில் ஒரு தலைமைக் காவலர் தாக்கப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், கண்டிப்பாக இரண்டு மிடங்கள் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. டி. மணி:** ஒரே மிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஒரு தலைமைக் காவலர் தாக்கப்பட்டிருக்கிறார். ஆநிால், வழக்கு இல்லை. சமூக விரோதிகள் இப்படி ஈத்தாமொழியிலேயுள்ள காவல் லையத்திலேயும் ஒரு கழ்ச்சியை நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, இவற்றையெல்லாம், இந்தக் காவல் துறை மேல்மட்ட அதிகாரிகள் ஆழமாகப் பரிசீலநிை செய்து, நல்லக் காரியங்கள் நடப்பதற்கு இந்த நல்ல நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்தப் பிரச்சிநியில் அரசு தன்னுடைய நல்ல முடிவைச் சொல்ல வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், இரண்டு மிடங்கள் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியும் வாழலாம் என்றிருந்தால், வாழ்க்கையில் பிரச்சிநி ஏற்படாது. இப்படித்தான் வாழ வேண்டுமென்று முடிவு எடுத்துக் கொண்டால், பிரச்சிநியைச் சந்திக்க வேண்டியதுதான். அப்படி, நம்முடைய ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளர் அவர்கள் நேர்மையாக இருக்க வேண்டும் என்ற முடிவை எடுத்து, தன்னுடைய பணியைத் தொடங்கிய காரணத்தால், அவருக்குப் பலவிதமாநி பிரச்சிநிகள் ஏற்பட்டிருக்கின்றநி. அவற்றைச் சந்தித்து இருக்கின்றார் என்பதுதான் உண்மை என்று நான் கருதுகின்றேன். இதுவரை பேசிய தலைவர்களுடைய பேச்சுகளைக் கேட்கும்போதும், பத்திரிகையில் வந்த செய்திகளும் அதைத்தான் உணர்த்துகின்றநி.

உண்மையில், அந்தக் காவல் லையத்தைச் சுற்றியுள்ள 14 கிராமங்களும் ஏழை மக்கள் வாழக்கூடிய மிகச் சிறிய கிராமங்கள். அங்கு சாராயம் காய்ச்சுவது என்பது சர்வ சாதாரணமாக இருந்திருக்கின்றது. அரசினுடைய கட்டுப்பாட்டையும் மீறி அதிகாரிகள் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அந்த லையை மாற்ற



வேண்டுமென்ற ஒரு முடிவோடு நேர்மையாக உழைத்த அந்த உதவி ஆய்வாளரை எப்படியாவது இடமாற்றம் செய்ய வேண்டும்; நம்முடைய வருமாநித்தை இவன் இல்லாமல் ஆக்குகின்றாநே என்று நித்த சில உயர் அதிகாரிகளும், அவர்களின்கீழ் இருக்கக்கூடிய சில காவலர்களும் சேர்ந்து இந்தச் சதியைச் செய்திருப்பார்கள் என்றுதான் பத்திரிகையிலே செய்திகள் வருகின்றநி. எநிவே, நான் அரசைக் கேட்டுக்கொள்வது, பத்திரிகையில் வருகின்ற பல செய்திகள் எந்த அளவுக்கு உண்மை என்பதை விசாரித்து, அறிந்து உண்மையிலே அரசினுடைய நேர்மையாநி, நல்ல கொள்கையை அமல்படுத்தத்தான் இந்த உதவி ஆய்வாளர் முயற்சித்து இருக்கிறார் என்பது உண்மையாக இருந்தால், அந்தப் போராட்டத்தைக்கூட நாம் எப்படிக் கருத்தில்கொள்ள வேண்டுமென்று சொன்நிால், ஒரு நல்ல நோக்கத்திற்காகச் செய்யப்பட்ட போராட்டம்; இது எந்தவிதமாநி அரசியல் நோக்கத்தோடோ அல்லது உள்நோக்கத்தோடோ வந்த போராட்டம் அல்ல; எநிவே, இந்த நல்ல நோக்கத்தோடு வந்த போராட்டத்தை, அதன்மூலம் வந்த சாலை மறியல், அதன்மூலம் ஏற்பட்ட வழக்குகள் இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டு அந்த உதவி ஆய்வாளர்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் பாமர மக்கள் நல்ல நோக்கத்திற்காகப் போராடியிருக்கின்றார்கள். அந்தப் பாமர மக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

உண்மையிலேயே சில அசம்பாவிதங்கள், தீவைப்புச் சம்பவங்கள் நடந்ததுகூட, என்நிப் பொறுத்தமட்டில், இந்தச் சாராய வியாபாரிகளும், சில தகாத அதிகாரிகளுமாகச் சேர்ந்து செய்ததாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம்கூட ஏற்படுகின்றது. எநிவே, இவற்றை எல்லாம் விசாரித்து — மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதவிக்கு வந்தவுடநே காவல் துறையில் இருக்கக்கூடிய தவறுகளைப் புரிந்துகொண்டு, காவல் துறையிலுள்ள கறுப்பு ஆடுகளை மாற்ற வேண்டுமென்று சொல்லி, காவல் துறையில் அவர் பதவிக்கு வரும்போது எப்படி இருந்தது என்பதைப் புரிந்துகொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அந்தச் செயல் மூலம் நல்ல வெற்றிகள் கிடைத்திருந்தாலும்கூட — அதில் ஆங்காங்கு இதுபோன்ற சில பிரச்சிநிக்குரியவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து, காவல் துறையை மேலும் புனிதப்படுத்த ஆவநி செய்யுமாறு கேட்டு அமைகின்றேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

[1999 நவம்பர் 19

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தூசி காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் அவர்கள், தான் பணியாற்றிய காவல் நிலைய சரகத்திற்குள் இருந்த கள்ளச் சாராயத்தையும், விபச்சாரத்தையும் ஒழிப்பதிலே தீவிரமாகப் பணியாற்றியிருக்கிறார். கள்ளச்சாராயத்தாலும், அதேபோல் பெண்களைத் தவறாகப் பயன்படுத்தி பொருள் ஈட்டியவர்களாலும் அவருக்குப் பலமுறை அச்சுறுத்தல் வந்திருக்கிறது. அதையும் மீறி, அந்தச் சமூக அநீதியை எதிர்த்து தன் கடமையை ஆற்றியதற்காக ஏதோ கள்ளச் சாராய வியாபாரிகளால் மட்டுமல்ல; அந்தக் காவல் நிலையத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளாலும் அவருக்குக் கீழ் பணிபுரிந்த காவலர்களாலும் தாக்கப்பட்டு, இறுதியாக அவர் ஒரு மன நோயாளி என்ற ஒரு பட்டம் சூட்டப்பட்டு அவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டு, இப்போது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நேர்மையாகப் பணிபுரியக்கூடிய ஒரு சில அதிகாரிகளுக்கு அரசு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையிலே, அதேபோல் கள்ளச் சாராயம், கலப்படம், விபச்சாரம், இன்னும் பல சமூகக் கொடுமைகளைத் துணிந்து ஒழிக்க முன்வரக்கூடியவர்களையும் ஊக்குவிக்கக்கூடிய வகையிலே அரசு செயல்பட வேண்டுமென்று நான் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதவி ஆய்வாளர், ஹரிதாஸ் அவர்களைத் திட்டமிட்டுத் தாக்கிய உயர் அதிகாரிகள், காவலர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அவர் ஆற்றிய பணிக்காக அவரோடு துணைபுரிந்து, அவரை ஒரு மனநோயாளியாக அறிவித்து, அவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டதைக் கண்டு கொந்தளித்த பொதுமக்கள், அவருக்கு ஆதரவாகத் திரண்டு வந்து அந்த மக்கள்மீது பல வழக்குகளையும் இப்போது போட்டிருக்கிறார்கள். அதன் மூலமாக பல பேர் இன்னும் சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல எண்ணத்தோடு, நல்ல நோக்கத்தோடு சென்ற அந்த மக்கள் மீது போடப்பட்டிருக்கக்கூடிய அத்தனை வழக்குகளையும் வாபஸ் பெற்று, அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும். அதேபோல் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் அவர்கள்மீது போடப்பட்ட





வழக்குகளையும் வாபஸ் பெற்று, அவர் உண்மையிலேயே நல்ல நோக்கத்தோடு பணிபுரிந்ததற்காக அவருக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்றால் அதையும் கொடுத்து, ஒட்டுமொத்தமாக யார் அதிலே தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய ஒரு விசாரணை கமிஷனையும் நியமிக்குமாறு வேண்டி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

பிற்பகல் 12-10

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூசி காவல் நிலையத்தினுடைய உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் அவர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவருக்கு மேலிருந்த அதிகாரிகளாலே பழிவாங்கப்பட்டு, அவருக்காக மக்கள் கொந்தளித்து எழுந்து போராடக்கூடிய அளவுக்கு ஒரு நேர்மையான, தூய்மையான அதிகாரியாக இருந்திருக்கிறார் என்பது மக்களுடைய கருத்து மட்டுமல்ல; ஆளும் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுடைய கருத்துகளும் அதுதான்.

காஞ்சிபுரம் என்றாலே பட்டுக்குப் பெயர்போனது என்று சொல்வார்கள். அதுபோல அந்தத் தூசி பகுதி பட்டு சாராயத்திற்கு பெயர்போன பகுதியாக இப்போது ஆகிவிட்டது. பட்டு என்றால் தூசிக்குப் பக்கத்திலே ஒரு பகுதி; அதைச் சுற்றியிருக்கின்ற 14,18 ஊர்களிலே கள்ளச் சாராயம் மிக ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதிகாரிகளும் அந்தக் கள்ளச்சாராயப் பேர்வழிகளும் கூட்டாக இருந்து நடத்திக் கொண்டிருக்கின்ற சம்பவம் இது. இதைக் கண்டித்த காரணத்தினாலே இலஞ்சம் வாங்க மறுத்த காரணத்தினாலேதான் ஹரிதாஸைப்பற்றி அதே காவல் நிலையத்தில் இருக்கக்கூடிய மேலதிகாரி, ஆய்வாளராக இருக்கக்கூடியவர் அவர், இன்னும் 7 பேர் காவலர்கள்; இவர்கள் எல்லாம் தங்களுடைய வீட்டிலே இருக்கின்ற பெண்களை விட்டுக்கூட இவரைக் கிண்டல் செய்வார்களா, 'இவன்தான் பிழைக்கவில்லை என்றால் நம்ம பிழைப்பையும் எதற்காகக் கெடுக்கிறான்' என்று சொல்லி அந்த அளவிற்கு இந்தப் பிரச்சினையிலே அந்த ஆய்வாளரைப்பற்றி மக்கள் கேவலமாகப் பேசக்கூடிய அளவிற்கு என்று சொல்வார்களாம் என்றால் அந்த ஆய்வாளர் வருகின்றபோது 'வரதப்பா, வரதப்பா இலஞ்சம் வருதப்பா' என்றே பாடுவார்களாம். ஆனால் இந்த ஹரிதாஸ் என்ற உதவி ஆய்வாளர் வருகின்றபோது 'வருதப்பா,

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 நவம்பர் 19

வருதப்பா நேர்மை வருதப்பா' என்று பாடக்கூடிய அளவிற்கு அந்தப் பகுதியிலே அவர் ஒரு நல்ல பெயரை எடுத்திருக்கிறார். ஹரிதாஸ் செய்வதெல்லாம் சரிதாஸ் என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் அந்த நேர்மையான அதிகாரி இருந்து இருக்கிறார். ஆனால் அவருக்கு மேலிருந்த அதிகாரி செய்யாற்றிலேயே ஒரு வசதியான பங்களாவைக் கட்டியிருக்கிறார் என்றால் அவர் எந்த அளவிற்குக் கள்ளச்சாராயப் பேர்வழிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். இப்போது உயர்நீதிமன்றமானது அவர் மனநிலை சரியாக இருக்கிறார் என்று சொல்லியிருக்கிற காரணத்தினாலே தயவுசெய்து அவருக்குப் பைத்தியக்காரப் பட்டம் சூட்டிய மேலதிகாரிகளையும் அந்த மருத்துவர்களையும் அரசு உடனடியாகத் தண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அந்தப் பகுதிவாழ் மக்கள் ஒருவார காலமாக அந்தப் பகுதியிலே வீடுகளிலே படுக்கமுடியவில்லை. பக்கத்திலே இருக்கக்கூடிய வெம்பாக்கம் போன்ற கிராமங்களில் எல்லாம் சென்று தங்கக்கூடிய ஒரு அவல நிலை இருந்து கொண்டு இருக்கிறது. அந்த அளவிற்கு காவல்துறை அவர்களுக்குக் கெடுபிடி கொடுத்து இருக்கிறது. அன்றைக்குக்கூட அந்த மக்கள் நியாயம் கேட்கத்தான் போய் இருக்கிறார்கள். ஆனால், அதில் இடையிலே கள்ளச்சாராயப் பேர்வழிகள் புகுந்து கொண்டு அந்தக் காவல்நிலையத்தைத் தாக்கியிருக்கிறார்கள் என்பதை அந்தப் பகுதியிலே பரவலாக மக்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மக்கள் இதை எதிர்த்தார்கள் என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும்கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாலைவன ரோஜாக்களிலே என்ன தீட்டியிருக்கிறார்கள்? தவறு செய்கிற அதிகாரிகளை, பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு மக்களே கொதித்து எழுந்து தண்டிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்றுதான் அவர்கள் அதிலே தீட்டியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலேகூட மக்கள் கொந்தளித்து எழுந்திருக்கலாம். ஆனால், எது எப்படியிருந்தாலும் நியாயம் கேட்கச் சென்ற அந்த மக்களால் இன்றைக்கு ஜாமீனிலேகூட வெளியே வரமுடியாத அளவிற்கு அதிகாரிகள் தடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே தயவுசெய்து அந்த வழக்குகளையெல்லாம் — ஹரிதாஸ் மீதான வழக்குகளை. மட்டுமல்ல; அந்தப் பொது மக்கள்மீது இருந்த வழக்குகளையும் — உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். தவறு செய்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஹரிதாஸ் அவர்களுக்குப் பதவி



1999 நவம்பர் 19] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

உயர்வு வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இன்னொரு வேண்டுகோளை நான் சொல்லி முடிக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தயவுசெய்து தூசிபோல கருதி ஒதுக்கி விடாதீர்கள். காலிலே பட்ட தூசியாக இருந்தால் சாதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இது கண்ணிலேபட்ட தூசியாக ஆகிவிடக்கூடாது என்ற காரணத்தினாலே நான் சொல்கிறேன். தயவுசெய்து இதை எளிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இன்றைக்குக்கூட ஒரு பிரச்சினையை திண்டிவனம் பகுதியிலே கிளியனூர் காவல் நிலையத்திற்குட்பட்ட உப்பு வேலூர், கிளியனூர் போன்ற பகுதிகளுடைய கள்ளச்சாராயப் பிரச்சினைபற்றி நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அங்கே சாலை மறியல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படிப் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. எதற்காக நான் சொல்கிறேன் என்றால் பானைகள் மீது அந்தத் துப்பாக்கி குண்டுகள் பாயும் என்று சொன்ன காரணத்தினாலே இப்போது packet சாராயங்களாக ஆக்கி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு நேர்மையான அதிகாரி ஹரிதாஸ் அவர்களுக்கு இந்த அரசு பாராட்டும் பதவி உயர்வும் வழங்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தூசி காவல் நிலையச் சம்பவம் குறித்தும் அங்கே பணியாற்றிய ஹரிதாஸ் என்ற காவல்துறை அதிகாரி குறித்தும் பல்வேறு கட்சிகளின் சார்பிலே பல கருத்துகள் இங்கே சிறப்புக் கவன ஈர்ப்பின் அடிப்படையிலே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பேசியவர்களிலே பலபேர் பத்திரிகைச் செய்திகளை இங்கே எடுத்துக்காட்டி அவையெல்லாம் உண்மையிலேயே நடந்த சம்பவங்கள் என்று அவர்கள் நம்பி—வேண்டுமென்று அல்ல—அந்தச் செய்திகள் எல்லாம் உண்மையானவை என்ற கருத்துப்பட இங்கே அவர்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நான் பொதுவாக, பத்திரிகைகளைக் குறைகூற விரும்பவில்லை. ஆனால், சில நேரங்களில்

• பரபரப்பான செய்திகளை வெளியிடுவதில் - நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போடுகின்ற அளவிற்கு இப்போது பத்திரிகை உலகம் வந்திருக்கின்றது என்பதைத் தயவுசெய்து யாரும் மறந்து விடக் கூடாது.

*பிற்பகல் 12-15*

இது ஆளுங்கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தை மாத்திரமல்ல, எதிரே அமர்ந்திருக்கின்ற பல்வேறு எதிர்க்கட்சிகள் உட்பட எல்லாக் கட்சிகளுக்கும் இத்தகைய ஒரு அனுபவம் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. நான் எல்லா பத்திரிகைகளையும் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு சில பத்திரிகைகளில் இதுபோன்ற செய்திகளின் உண்மை, உண்மையல்லாத நிகழ்வு இவை இரண்டையும் வெளியிடுவதற்குப் பதிலாக உண்மைக்குப் புறம்பான செய்திகளையே சில நேரங்களில் வெளியிட்டு விடுகின்ற காரணத்தால் இத்தகைய சூழல் ஏற்பட்டுவிட்டது.

நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோதும் சரி, எதிர்க்கட்சித் தலைவனாக இருந்தபோதும் சரி, நானாக இருந்தாலும் நம்முடைய பேராசிரியராக இருந்தாலும் இதுபோன்ற செய்திகள் வரும்போது அதை ஒரு முறைக்கு இருமுறை ஆழ்ந்து பார்த்து அவை பற்றிப் பலரிடம் விசாரித்து அதிகாரிகள் மட்டத்திலேகூட அதைப்பற்றிக் கேட்டறிந்து அதன் பின்னர் ஆதாரபூர்வமாகத்தான் இந்த அவையிலே எதிர்க்கட்சியாக இருந்தபோது எங்களுடைய கருத்துகளை அல்லது அரசின் மீதுள்ள குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதற்கான நிவாரணங்களையும் பெற முடிந்திருக்கின்றது.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையிலே வந்துள்ள செய்திகளிலே பல ஐயப்பாடுகள் உண்டு என்பதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் செய்திகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய எல்லாவித வசதி வாய்ப்புகள் இருந்தும்கூட அவர்களாலேயே முழுமையான உண்மைகளை அறிந்து கொள்ள முடியாதபோது தூசி கிராமத்துப் பகுதிகளிலே உள்ள பாமர மக்கள், பொதுமக்கள், அந்த உண்மைகளைச் சரியாக உணர முடியாததில் ஆச்சிரியம் எதுவும் இருக்க முடியாது. எனவே, நீங்கள் யாரும் வேண்டுமென்று இந்த அரசின் மீது குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே கருத்துகளை எடுத்துக் கூறியதாக நான் தவறாகக் கருதவில்லை. நீங்கள் அறிந்ததை நீங்கள் கேள்விப்பட்டதை, உங்களுக்கு வந்த செய்தியை





அடிப்படையாக வைத்துத்தான் இப்படியிருந்தால் இது அநியாயமல்லவா என்று அந்த அடிப்படையில்தான் இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பின்மீது உங்கள் கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றீர்கள்.

நான் சில விவரங்களை இப்போது எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

உதவி ஆய்வாளர் திரு. ஹரிதாஸ் 1995 ஆம் ஆண்டு அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1995 என்பதை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். பயிற்சி முடிந்து 1997 ஆம் ஆண்டு உதவி ஆய்வாளரகா நியமனம் பெற்றார். போளூரில் செயல்முறைப் பயிற்சி நடைபெற்று அதற்குப் பிறகு 18-12-1998 முதல் தூசி காவல் நிலையத்தில் தனிப் பொறுப்பில் உதவி ஆய்வாளராகப் பணியமர்த்தப்பட்டார்.

இவர், காஞ்சிபுரம் மாவட்டம், தாழம்பூரைச் சேர்ந்த ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவர் என்றும் அவருடைய தாயார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வெற்றி பெற்று தாழம்பூர் என்ற கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார் என்றும் செய்திகள் உள்ளன. அவை உண்மையான செய்திகளாக இருக்கக்கூடும்.

26-10-1999, 27-10-1999 ஆகிய தேதிகளில் மதுவிலக்கை இவர் சரியான முறையில் அமல்படுத்தத் தவறிவிட்டதாகவும், கள்ளச் சாராய வியாபாரிகளுடன் இவருக்கு இரகசியத் தொடர்பு உள்ளதாகவும், அநாமதேயக் கடிதம் ஒன்று இவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கடிதம், இவரது அணுகுமுறையில் மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்தது என்று எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

27-10-1999 மற்றும் 28-10-1999 அன்று ஒரு சில கள்ளச் சாராய வியாபாரிகளைக் கைது செய்து கைதி அறையில் அடைத்து வைத்ததாகவும் காவல் நிலையத்தில் அவருடைய நடவடிக்கைகள் அவ்வப்போது முறையற்று இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

28-10-1999 அன்று இவர் சித்தலப்பாக்கம் மற்றும் நரசமங்கலம் கிராமங்களுக்கு கைத்துப்பாக்கி, அரிவாள் ஆகியவற்றுடன் சென்று, கள்ளச் சாராயம் விற்றுக் கொண்டிருந்த ஒருசில கள்ளச் சாராய வியாபாரிகளைக் கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஒரு நேர்மையான காரியத்திற்காக அவர் சற்று முரட்டுத்தனமாக அந்த நடவடிக்கையிலே ஈடுபட்டார் என்றாலும்கூட,

அவர்களை மிகக் கொடுமையாக நடத்தினார் என்பதும் ஒரு புகார். பின்னர், அரசு மோட்டார் சைக்கிள் ஒன்றில் முன்பக்க விளக்குகளைக் காரணம் ஏதுமின்றி உடைத்திருக்கிறார். உதவி ஆய்வாளர் ஹரிதாசின் மூத்த சகோதரர் தேவதாஸ் மற்றும் ஹரிதாசின் தாயார் ஆகியோரை ஆய்வாளர் சந்தித்துப் பேசியபோது, போலீஸ் பயிற்சிக்கு முன்பே ஹரிதாஸ் மனநிலை சார்பில்லாமல் இருந்தார் என்றும், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலும், பின்னர் வேறு சில மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறது.

பிற்பகல் 12-20

29-10-1999 அன்று, செய்யாறு D.S.P. உதவி ஆய்வாளர் ஹரிதாசிடம் பேசி அறிவுரை கூறியுள்ளார்கள். ஆனால், ஹரிதாஸ், அவரது அறிவுரையை ஏற்றுக்கொள்ளாமல், தான் ஒரு குற்றவாளியாகவோ அல்லது வழக்கறிஞராகவோ மாறிவிடுவேன் என்றும் பதிலளித்துள்ளார்.

ஹரிதாசின் நடவடிக்கையைக் கண்ட D.S.P., அவரை சொந்த ஊரான தாழம்பூருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இதற்கிடையில், ஹரிதாஸ், காவல் நிலையம் முன்பு ஆஜராகி, தான் விஷம் அருந்தப் போவதாக மிரட்டியதோடு, அனைவர் மீதும் S.C./S.T. வன்கொடுமையை தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்ப போவதாகவும் எச்சரித்துள்ளார்.

பின்னர், உணர்ச்சிவயப்பட்டு, மயக்கமுற்ற ஹரிதாசை 30-10-1999 அன்று காஞ்சிபுரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்து, அவருக்குப் பாதுகாப்பாக இரு காவலர்களும் பணியமர்த்தப்பட்டார்கள். ஆனால், ஹரிதாஸ் 31-10-1999 விடியற்காலையில் மருத்துவமனையிலிருந்து தப்பி, தூசி கிராமத்திற்கு வந்து சேர்ந்து, தனது நண்பர்களைச் சந்தித்து, தன்னைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்து விட்டதாகவும் — பணிநீக்கம் செய்யப்படவில்லை இருந்தாலும் தற்காலிகப் பணிநீக்கம் செய்து விட்டதாகவும் — காவல் துறையினர் தன்னை அடித்துத் துன்புறுத்தி விஷ ஊசி போட்டதாகவும் வதந்தியைப் பரப்பி, தனக்கு ஆதரவாக ஒரு கும்பலைத் திரட்டியுள்ளார். ஆனால், அப்போது ஹரிதாஸ் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படவேயில்லை.



இன்னும் சொல்லப் போனால், 31-10-1999 அன்று நடந்த கிளர்ச்சிக்காக 3-11-1999 அன்றுதான் இவர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டாரே தவிர, அவர் பிரச்சாரம் செய்து மக்களைத் திரட்டியபோது suspend செய்யப்படவில்லை. 3 ஆம் தேதி பிறப்பித்த அந்த suspension ஆணையைக்கூட, அவர் மருத்துவமனையிலே இருந்த காரணத்தினால் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மருத்துவமனையிலே இருந்த டாக்டர், அவரால் அந்த ஆணையைப் புரிந்துகொள்ள முடியாத நிலை இருப்பதால் அதனை அவரிடம் ஒப்படைக்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளார். தூசி கிராமத்திற்குச் சென்று இவர் செய்த தவறான பிரச்சாரத்தால் பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட, சுமார் 300 கிராமவாசிகள் தூசி காவல் நிலையம் முன்பாகக் கூடினார்கள். தகவலறிந்தும், செய்யாறு கோட்டாட்சியர் மற்றும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தூசி காவல் நிலையம் வந்து, அங்கு கூடியிருந்தவர்களிடம் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். ஆனால், கூட்டத்தினர், ஹரிதாசை இந்த நிலைக்குக் கொண்டு வந்த காவல் துறை அதிகாரிகளைக் கைது செய்ய வேண்டும் என்றும், ஹரிதாசை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளனர். பணியிலேயிருந்து நீக்கப்படாதபோதே பணியிலே அவரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று முழக்கமிட்டிருக்கிறார்கள். கோட்டாட்சியரும், காவல் துறை அதிகாரிகளும், அவர்களது கோரிக்கைகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்துள்ளனர். அதிகாரிகளின் அறிவுரைகளை மக்கள் செவிமடுக்காததுடன், ஹரிதாசும் வருவாய் மற்றும் காவல் துறை அதிகாரிளைத் கீழ்தரமாகத் திட்டிப் பேசியுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தினர் தூசி காவல் நிலையத்திலுள்ள தொலைபேசி இணைப்பு மற்றும் வானொலி (wireless) இணைப்பையும் துண்டித்துவிட்டார்கள். ஹரிதாஸ் அவரிடம் பேச முயற்சித்த செய்யாறு Inspector முகத்தில் குத்தியுள்ளார். கூடியிருந்த மக்கள் கற்களை வீசி, காவல் துறையினரைத் தாக்கினர். தூசி காவல் நிலையம் தாக்கப்பட்டதில், காவல் நிலையத்தின் சுற்றுச்சுவரும் கதவு,

ஜன்னல்களும் சேதமடைந்தன. காவல் நிலையத்தின் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. Wireless கருவியின் antenna கட்டடத்தின் மேலிருந்து கீழே இழுத்துத் தள்ளப்பட்டு, நொறுக்கப்பட்டது. ஒரு Trax jeep தீயிட்டு முற்றிலும் கொளுத்தப்பட்டது. மற்றொரு jeep-ம் சேதமடைந்தது. மொத்தம் அரசு சொத்துகள் ரூ. 5 இலட்சம் மதிப்பிற்குச் சேதமாயின என்று கணக்கிடப்பட்டுள்ளது.

*பிற்பகல் 12-25*

செய்யாறு வட்டாட்சியர் அளித்த புகாரின்பேரில், தூசி காவல் நிலையத்தில், ஹரிதாஸ் மற்றும் கிராமவாசிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 31-10-1999 அன்று ஹரிதாஸ் உட்பட 107 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்தில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உட்பட 14 காவல் துறையினர் காயமடைந்துள்ளனர். தூசி காவல் நிலையச் சம்பவத்தில் (குற்ற எண் 486/99) உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் ஈடுபட்டதால், 3-11-1999 அன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். நான், அந்த ஆணையை அவர் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை என்று முன்பே சொன்னேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பே மனநிலை பாதிக்கப்பட்டிருந்த ஹரிதாஸ் முறையற்ற வகையில் நடந்து, தான் பணிபுரிந்துவந்த காவல் நிலையத்தைத் தாக்க வழி செய்துள்ளார். ஆய்வாளரும், துணைக் கண்காணிப்பாளரும், அவருடைய நடத்தையில் மாற்றத்தைக் கண்டு அவருக்கு அறிவுரை கூறியும், இறுதியில் சிகிச்சைக்கு அனுப்பியும் உள்ளனர். ஆனால் இதையே ஹரிதாஸ் தவறாக எடுத்துக்கொண்டுள்ளார். அவருக்குக் குறைகள் ஏதும் இருந்திருந்தால், S.P.யிடமோ, I.G.யிடமோ முறையிட்டிருக்கலாம். அதை விடுத்து, கும்பலைக் கூட்டி, வன்முறையில் ஈடுபட்டதற்காகத்தான் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனநோயாளி என்று அவர் மீது வேண்டுமென்றே இட்டுக்கட்டி பொய் கூறப்பட்டிருக்கின்றது என்று எல்லா உறுப்பினர்களும் இங்கே பேசியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சி உணர்வோடு பேசியவர்கள், ஆளுங்கட்சிக்குச் சார்புடையவர்களாகப் பேசியவர்கள் அனைவருமே, அவர் மனநோயாளி என்று அவர் மீது ஒரு தவறான அவதூறு கூறப்படுகிறதென்று குறிப்பிட்டார்கள். நான் அதைப்பற்றி சில விளக்கங்களை அளிப்பதற்கு முற்படுவதற்கு முன்பு, அவர் வந்த பிறகுதான்





அந்தக் காவல் நிலையத்திலே மதுவிலக்கு, கள்ளச்சாராய வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டன என்பதைப்பற்றி ஒன்று கூற விரும்புகின்றேன்.

அவர் தூசி காவல் நிலையத்திற்கு வந்தது, 18-12-1998-இல். அவர் அந்தக் காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பு, 1-1-1998 முதல் 18-12-1998 வரை, தூசி காவல் நிலையத்தின் சார்பில் பதிவான மதுவிலக்கு வழக்குகள் 401. இவர் வந்தபிறகு, 1-1-1999 முதல் இதுவரை பதிவான மதுவிலக்கு வழக்குகள் 341. எனவே, இவர் பொறுப்பேற்ற காரணத்தால் கள்ளச்சாராய வழக்குகள் அங்கே பெருகிவிடவில்லை, பிடிபட்டுவிடவில்லை என்பதற்கு இந்தப் புள்ளிவிவரம் ஒரு சான்றாகும்.

அவர் மிகவும் நல்லவர், ஆனால் வேண்டுமென்றே அவர்மீது மன நோயாளி என்று குற்றஞ்சாட்டப்பட்டுவிட்டது என்று பேசப்பட்டது. அவர் எப்படி இருக்கிறார் என்பதை அறிந்துவர நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும், மத்திய சிறைச்சாலைக்கே இரண்டு நாட்களுக்கு முன்பு சென்று, அவரை நேரடியாகவே பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் Jail Superintendent இடத்திலே என்ன சொன்னார்கள், என்ன பேசினார்கள் என்ற தகவலும் அரசுக்கு வந்திருக்கின்றது. வேண்டுமென்றே அவரை இந்த ஆட்சியிலே மன நோயாளி என்று குற்றஞ்சாட்டவில்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். அவர் இந்த நிகழ்ச்சியிலே கைது செய்யப்பட்ட பிறகு அவரைச் சோதனை செய்து பார்க்க, கீழ்ப்பாக்கம், மனநல மருத்துவமனைக்கு அவர் அனுப்பப்பட்டு, அறிக்கை கேட்டபோது, அவர்கள் கொடுத்த அறிக்கையில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்—

"On Interview, Mr. J. Haridoss gave history of previous admission and treatment in the Institute of Mental Health, Chennai on two occasions. Previous Case Records indicate that he was admitted as a voluntary boarder - non paying case from 20-6-1994 to 11-7-1994 (In-patient No.2620/94). This was the first admission. He was admitted by his parents for the following complaints:—

1. Sleeplessness;

2. Excessive talking;

3. Aggressive and assaultive behaviour;

4. Claiming himself with vast powers; and

5. Obstructing traffic."

பிற்பகல் 12-30

இதெல்லாம், அவருடைய பெற்றோர்களே மருத்துவர்களிடம் தெரிவித்தது. அதை அப்படியே 1994 ஆம் ஆண்டே பதிவு செய்திருக்கிறார்கள். அப்போது தி.மு.க. ஆட்சியே வரவில்லை. பிறகு 1996 இல்தான் தி.மு.க. ஆட்சி வந்தது. பழைய ஆட்சி நடைபெற்றபோதே 1994 இல் அவர் தவறாக நடந்துகொள்வதைப் பார்த்து மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டபோது, அவருடைய பெற்றோர்கள் என்ன சொன்னார்கள் என்பதை, தற்போதுள்ள அந்த record-களைப் பார்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சில ஆதாரங்களையும் கூறுகிறேன். அப்போதைய மருத்துவமனைப் பதிவிலே மேலும் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதையும் படிக்கிறேன்:—

" These complaints were of one and a half months duration. A diagnosis of acute psychotic episode affective form was made then and he was treated with major tranquilizers, mood stabilizers and psycho-therapy.

After treatment his mental condition improved and he was discharged on 11-7-1994 and sent home along with his brother, with the advice of regular out patient treatment and periodic follow up.

He was admitted for the second time on 23-10-1996 at the Institute of Mental Health, Chennai with the following conditions:—

1. Sleeplessness;

2. Abusive and assaultive behaviour;

3. Talking excessively;

These complaints were of 3 months duration. He was treated as an in-patient (Inpatient No.5048/96) with major transquilizers and mood stabilizers.

He was discharged on 5-12-1996 along with his brother Devadoss. He was advised regular outpatient treatment and periodic follow up at Institute of Mental Health. After discharge, he was attending outpatient



treatment regularly, till 26-5-1999. After that his brother reported on 21-8-1999 and 23-9-1999 to collect drugs for the patient."

இதன் தமிழாக்கத்தையும் சொல்லிவிடுகிறேன்:

'' விசாரணையின்போது, உதவி ஆய்வாளர் ஹரிதாஸ், சென்னை மனநோய் மருத்துவ நிறுவனத்தில் ஏற்கெனவே இரண்டு முறை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகத் தெரிவித்தார். பழைய மருத்துவ record-களில், ஹரிதாஸ் 20-6-1994 முதல் 11-7-1994 வரை உள் நோயாளியாக (உள்நோயாளி எண் 2620/94) அனுமதிக்கப்பட்டு இலவச சிகிச்சை பெற்றுள்ளார் என்று குறிக்கப்பட்டுள்ளது. மனநோய் மருத்துவ நிலையத்தில் இதுதான் இவர் முதன்முதலாகச் சேர்க்கப்பட்ட நிகழ்வு. அவருடைய பெற்றோரால் பின்வரும் காரணங்களுக்காக ஹரிதாஸ் அப்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்:—

1. தூக்கமின்மை;

2. பேசிக்கொண்டே இருத்தல்;

3. மூர்க்கத்தனமாக மற்றவர்களைத் தாக்குகின்ற தன்மை;

4. தனக்கு ஏராளமான சக்தி இருப்பதாகக் கூறிக்கொள்ளல்;

5. சாலையை மறித்தல்.

இந்தத் தொந்தரவுகள் அவருக்கு ஒன்றரை மாதங்கள் நீடித்தன. அவர் மிதமிஞ்சிய மனநோயால்— acute psychotic episode— பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டு, அவருக்கு சக்தி வாய்ந்த தூக்க மருந்துகளும், மனநிலையைச் சீராக்கும் மருந்துகளும் சைக்கோ தெரபியும் தரப்பட்டன.

சிகிச்சைக்குப் பின், அவரது மனநிலை சீரடைந்ததால், அவர் 11-7-1994 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருடைய சகோதரருடன் அனுப்பப்பட்டார். தொடர்ந்து மருத்துவமனைக்கு அவ்வப்போது வந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுச் செல்ல வேண்டுமென்றும் அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.''

இது நடைபெற்றது 1994-இல். அதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். நான் எந்த ஆட்சியையும் குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. உண்மை நிலவரத்தைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன்.

''ஹரிதாஸ் இரண்டாவது முறையாக 23-10-1996 அன்று, சென்னை மனநோய் மருத்துவமனையில் பின்வரும் தொந்தரவுகளுக்காகச் சேர்க்கப்பட்டார்:

1. தூக்கமின்மை;

2. பிறரைத் தரக்குறைவாகத் திட்டி, தாக்குதல்;

3. தொடர்ந்து அதிகமாகப் பேசுதல்.

இந்தத் தொந்தரவுகள் அவருக்கு மூன்று மாத காலம் நீடித்தன. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு (உள்நோயாளி எண் 5048/96) சக்தி வாய்ந்த தூக்க மருந்துகளும், மனநிலையைச் சீராக்கும் மருந்துகளும் அவருக்குத் தரப்பட்டன.

5-12-1996 அன்று அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருடைய சகோதரர் தேவதாசுடன் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். தொடர்ந்து வெளிநோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையும் அவருக்கு வழங்கப்பட்டது.

மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், ஹரிதாஸ் தொடர்ந்து 26-5-1999 வரை வெளிநோயாளியாகச் சிகிச்சை பெற்றுள்ளார். அதன் பின்னர், அவருடைய சகோதரர் 21-8-1999 மற்றும் 23-9-1999 ஆகிய நாட்களில் நோயாளிக்கான மருந்துகளை நேரில் வந்து பெற்றுச் சென்றுள்ளார்.''

இதைத் தவிர, டாக்டர் சாரதா மேனன், மனநல மருத்துவர் தனியாக ஹரிதாசைப் பார்த்து, அவர் தந்த சான்றிதழிலும் ஒரு பகுதியைப் படிக்கிறேன்:

பிற்பகல் 12-35

"This is to certify that Sri Haridoss, aged 22 Years, was brought by his brother Devadoss for treatment of abnormal behaviour on 1-7-1994 after a financial loss in tender coconut business.''

சாரதா மேனனை எல்லோருக்கும் தெரியும். எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும். அவர் எவ்வளவு மூத்த மருத்துவர், எவ்வளவு நேர்மையானவர் என்பது தெரியும். அவர்கள் கொடுத்த சான்றிதழ் இது.



ஏதோ இளநீர் வியாபாரத்திலே ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக அசாதாரணமான நடவடிக்கைக்கு ஆளானார் என்று சொல்லியிருக்கிறார். மேலும் சாரதா மேனன் கூறும்போது, "He was Hyperactive, talking too much and insomnic" — அவர் துருதுருப்பாக நடந்து கொண்டார், அதிகமாகப் பேசினார், தூக்கமின்றிக் காணப்பட்டார்— அவருக்கு மனநல மருத்துவர் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு பிறகு அவர் மருந்து சாப்பிடுவதை நிறுத்தியதால் ஜூன் 1994-இல் மனநல மருத்துவ நிலையத்திலே உள்நோயாளியாகச் சேர்க்கப்பட்டார்'' என்றெல்லாம் சாரதா மேனன் எழுதியிருக்கிறார்.

அவ்வப்போது மருந்து சாப்பிடுவதும், அதன்மூலமாகக் குணமாவதும், மருந்தை நிறுத்தினால் மறுபடியும் அந்த நோய் வருவதுமாகத்தான் அவருடைய வாழ்க்கை கடைசி காலத்திலே இருந்திருக்கின்றது. நான் கடைசி காலம் என்று இங்கே கூறுவது, கைது செய்யப்படுகின்ற காலம் வரை என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். வேறொன்றும் அவருக்கு கடைசி காலம் வரக்கூடாது, நல்ல நேர்மையான ஒரு அதிகாரி என்ற காரணத்தினால். அவருக்குத் தரப்பட்ட மருந்துகள் என்னென்ன என்பதும் சாரதா மேனன் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. நேரம் கருதி நான் அவற்றையெல்லாம் எடுத்துக்காட்ட விரும்பவில்லை.

அதுமாத்திரமல்ல. பேரவைத் துணைத் தலைவரிடம் அனுமதி பெற்று, சில ஆதாரங்களை இங்கே காட்ட விரும்புகிறேன். இது 20-6-1994 அன்று ஹரிதாசைப் பற்றி கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனைப் பதிவிதழில் டாக்டரால் எழுதப்பட்டுள்ள ஆதாரமாகும்:—

''One and a half months ago, patient was said to have attended Sub-Inspector, interview. Following that patient has started exhibiting abnormal behaviour by saying that he is a Sub-Inspector. Used to talk much about his Sub-Inspector position. Would obstruct the traffic.''

இந்த நிலைக்கெல்லாம் பிறகும்கூட, 13-11-1999 அன்று மனநல மருத்துவர்கள் அவரைச் சோதிப்பதற்காக எழுதச் சொல்கிறார்கள். அவர் என்ன எழுதுகிறார் தெரியுமா? ''எனக்கு உதவி ஆய்வாளர் பதவி மட்டுமே போதும்'' — ஒரு சூரியன், அதைச் சுற்றி ஏதேதோ அம்புக் குறிகள் எல்லாம், கேடயம் எல்லாம் போடப்பட்டுள்ளது — அவரே எழுதியிருக்கிறார் — ''எனக்கு என் அம்மா மட்டும் போதும்,

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 நவம்பர் 19

அம்மா போதும், அம்மா போதும்" என்று எழுதப்பட்டுள்ளது. அவர் அவருடைய அம்மாவைக் கூறுகிறார் (சிரிப்பு). நம்முடைய முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இதெல்லாம் மனநோயாளிகளைப் பரிசோதிக்கின்ற முறை என்கிறார். பிறகு அவரை ஆங்கிலத்திலே எழுதச் சொல்கிறார்கள்.

எழுதியிருக்கிறார், எப்படித் தெரியுமா?

"I am very fear now. Why? I don't — ? I am all-?''— நானே எல்லாம் '' I want S.I. K.2 post only at Thiruvannamalai at DUSI.''

(முதலமைச்சர் அவர்கள் அந்த ஆதாரங்களை எதிர்க்கட்சித் தலைவரிடம் கொடுத்தார்கள்.)

அதைப்பற்றியெல்லாம் அவருடைய தாயார் லோகம்மாள், தலைவர், தாழாம்பூர் ஊராட்சி மன்றம், திருப்போரூர் ஒன்றியம் அவர்களை சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் தொகுதியிலே அந்த அம்மையார் வாழ்கிறார்கள் என்பதால், அழைத்துக் கொண்டு வந்தார்கள். அந்த அம்மையார் என்னிடம் ஒரு கடிதத்தை, தன் மகனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று கொடுத்தார்கள். தன் குடும்பமே திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பம் என்றெல்லாம் அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். 40 ஆண்டு காலமாக, தான் உறுப்பினராக இருப்பதாகவும், தற்போது ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்று, பணியாற்றி வருவதாகவும் எழுதியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-40*

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இந்த அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் தி.மு.க.வாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, செய்த குற்றம் என்ன என்பதைப் பார்த்து சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது என்பதை நீங்கள் நன்றாக உணர்வீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே எந்த நேரத்திலும் நான் தயவுதாட்சண்யமோ, பாரபட்சமோ காட்டியதில்லை என்பதையும் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். தி.மு.க. என்பதற்காக மனநோய் கொண்ட ஒருவரை, மனநோய்க்கு அடிக்கடி ஆட்படுகின்ற 'ஒருவரை — நிரந்தர மனநோயாளி அல்ல, — கொண்டுபோய் ஒரு முக்கியமான பணியிலே வைத்தால் என்னவாகும்?



1999 நவம்பர் 19] [கலைஞர் மு. கருணாநிதி]

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கு ஞாபகமிருக்கும் என்று கருதுகிறேன். எனக்குக் கொஞ்சம் அதிக நினைவாற்றல் உண்டு. என்னைப்போல அவருக்கும் நினைவாற்றல் உண்டு. நான் இதே அவையிலே இந்த இடத்திலே அமர்ந்திருந்தபோது, அவரும் இங்கே அமர்ந்திருக்கிறார். கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது — திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது நடைபெற்றபோது — நாடு கொந்தளித்த நேரத்தில் ஒரு போலீஸ்காரர் மதுராந்தகம் பகுதியிலே காவலுக்காகக் காவல் நிலையத்திலே நின்றவர், திடீரென்று, 'இந்தி ஒழிக, இந்தி ஒழிக' என்று சப்தம் போட்டுக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன் என்ற போர்டைப் பார்த்து நான்கு முறை சுட்டார் என்பதற்காக அவர் கைது செய்யப்பட்டார் என்று செய்தி வந்தது. பக்தவத்சலம், அவருடைய மொழிப் பற்றுக்காக அவரை விடுவித்துவிடவில்லை. யாரும் அவரை விடுவிக்கவேண்டுமென்றும் சொல்ல முடியாது. ஏனென்றால், மன நோயாளிகளின் கையிலே துப்பாக்கியிருந்தால் — நல்ல முறையிலே இருக்கிற நேரத்திலே துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு, யாரும் அறியாத நேரத்திலே நோய் வந்துவிட்டால்— அந்தத் துப்பாக்கி எப்படியெல்லாம் பயன்படுத்தப்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். "இந்த ஆளு (ஹரிதாஸ்) கையிலே ஒரு கம்பைக் கொடுத்தால் எல்லோரையும் அடித்தே விரட்டி விடுவான்யா" என்று ஜெயிலிலே சொல்லிவிட்டு (சிரிப்பு) வந்ததாக நான் கேள்விப்பட்டேன். இவ்வளவையும் மறைத்துவிட்டு, இத்தனை பேரும் பேசும்போது எதிர்க்கட்சித் தலைவர் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கலாமா? இப்படிப்பட்ட ஒருவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியிலே நீதி விசாரணையெல்லாம் தேவையில்லை. நான் இவ்வளவு விசாரித்துச் சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு என் மீது நம்பிக்கை உண்டு. ஏனென்றால், எனக்கு உங்கள் மீது நம்பிக்கை உண்டு. பற்று, பாசம் உண்டு. அரசியல் கொள்கை காரணமாகச் சண்டை போட்டுக்கொள்கிறோம், அது வேறு விஷயம். இந்த மாதிரி விஷயங்களில் நான் சொல்வதை நம்புவீர்கள் என்று நினைக்கிறேன். அதனால் இந்த விசாரணையே போதும்.

இதற்கு மேலே நடவடிக்கை எல்லாம் கேட்டீர்கள், எல்லோரையும் விடுவிக்க வேண்டுமென்று. அங்கே பொதுமக்கள் 100 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்வதைப்பற்றி இந்த

அரசு யோசிக்கும். அங்கே காவல் நிலையத்தை மீண்டும் கொண்டு வருவது பற்றி அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன் பல முறை என்னிடம் முறையிட்டிருக்கிறார். அதைப்பற்றியும் நிச்சயமாகக் கவனிக்கப்படும். இங்கேயும் உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் கவனிக்கப்படுமென்று சொல்லி, இந்த அளவில் என்னுடைய இந்தக் கருத்துகளை ஏற்க வேண்டுமென்று கூறி, சிறப்புக் கவன ஈர்ப்பிலே நீங்கள் காட்டிய உணர்வுகளை நான் மதிக்கிறேன் என்றுரைத்து அமைகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் போதிய விளக்கம் கொடுத்துவிட்டார்கள். அதற்கு மேல் நீங்கள் கேட்பதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். போதிய விளக்கம் கொடுத்துவிட்டார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த உதவி ஆய்வாளர், ஒரு நல்ல பெரிய அதிகாரி துணையோடு தொடர்ந்து பணியாற்றுவதற்கும், அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்ற, கைது செய்யப்பட்டிருக்கின்ற பொதுமக்களை விடுதலை செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா அலுவல்களையும் முடித்துவிட்டு 12-30 மணி அளவிலே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால், இவ்வளவு பிரச்சினைகளைப் பேசி முடிப்பதற்கே 12-43 மணி ஆகிவிட்டது.

**(ஆ) பணிநீக்கம் செய்யப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே அளித்த உறுதிமொழி அடிப்படையில் பணி நியமனம் கோரி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் உண்ணாவிரதம்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து ஒரே வரியிலே கேட்டுவிடுகிறேன், அதற்கு அமைச்சர் அவர்களும் ஒரே வரியிலே பதில் சொன்னால் போதும்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அனைவரின் சார்பாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.





**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் மூன்று நாட்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே C.L. என்று சொல்லக்கூடிய 98 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக மூன்று மாதங்களுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்து ஒரு உறுதிமொழி வாங்கியிருக்கிறார்கள். இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய உண்ணாவிரதத்தை முடித்து, சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்திற்கு வருகின்ற வகையில் தொழிலாளர்களை எல்லாம் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய உத்தரவாதத்தைக் கொடுக்குமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பே உண்ணாவிரதம் இருந்து போராட்டங்களிலே ஈடுபட்டபோது ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இனி அந்தப் போக்குவரத்துக் கழகத்திலே வேலை காலி ஏற்பட்டு நியமிக்கப்படுகிறபோது இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உறுதி அளிக்கப்பட்டதற்குப் பிறகு இதுவரை ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை. அவர்களுக்கு முதலிலே அளித்த வாக்குறுதியின்படியே நிச்சயமாக அங்கே காலியிடங்கள் ஏற்படுகிறபோது அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்ற உறுதியை மீண்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நடுவிலே, 6 ஆவது மாதம் அவர் உண்ணாவிரதம் இருந்தார். இப்போது 11 ஆவது மாதம். இந்த 5 மாத அளவில் யாராவது நியமிக்கப்பட்டிருந்து, அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தால் மீண்டும் போராடுவதில் பொருள் இருக்கிறது. ஆனால், யாருமே நியமிக்கப்படாத இந்தச் சூழலில் அவர்களை நியமிக்க வேண்டுமென்று சொன்னால்—இப்போது இருக்கின்ற போக்குவரத்துக்

[டாக்டர் க. பொன்முடி] [1999 நவம்பர் 19

கழகங்களிலே அதிகமாக ஆட்கள் எடுக்கின்ற வாய்ப்புக் குறைவு. ஆகவே—மீண்டும் பணியாளர்களை நியமிக்கின்றபோது அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நான் முன்பு கொடுத்த வாக்குறுதியை மீண்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்டு, அவர் உண்ணாவிரதத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லதாக இருக்கும்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மனுக்கள் குழுவின் தலைவர் திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 20 ஆவது, 21 ஆவது மற்றும் 22 ஆவது அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.



1999 நவம்பர் 19]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[1999 நவம்பர் 19

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



1999 நவம்பர் 19]

### (ஈ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1999-2000 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1998-99, அளித்தலும், அவற்றின் மீது விவாதமும்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் தொடர்கிறது. திரு. சி. ஞானசேகரன்.

*பிற்பகல் 12-50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசு யாரும் எதிர்பாராத வகையில் திடீரென்று 16-10-1999 ஆம் தேதி ஒரு ஆணையைப் பிறப்பித்து, மின் இணைப்புக் கட்டணத்தையெல்லாம் 50 சதவீதத்திற்கு மேல் உயர்த்தி இருப்பதை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நாங்கள் கடுமையாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். திடீரென்று இப்படி 50 சதவீதத்திற்கு மேல் உயர்வு ஏற்படுத்துவதற்கு எந்தவிதமான முகாந்திரமோ, காரணமோ இல்லை. அப்படிப்பட்ட காரணங்கள் ஏதும் இல்லாத ஒரு சூழ்நிலையில், அதுவும் குளிர்காலக் கூட்டத் தொடர் தமிழகத்திலே இப்போது கூடுகிறது என்கிற ஒரு நிலை இருந்தபோதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை எல்லாம் வைத்துக்கொண்டு இந்தச் சட்டமன்றத்தில் ஜனநாயக முறைப்படி ஒரு விவாதத்தை வைத்துக்கொள்ளாமல், திடீரென்று மக்கள் மீது ஒரு பளுவைச் சுமத்தி இருப்பது என்பது, திராவிட முன்னேற்றக் கழகம், வாக்களித்த மக்களுக்கு ஒரு மாபெரும் துரோகத்தை இழைத்து இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, நான் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மக்கள் சார்பாகவும், என்னுடைய இயக்கத்தின் சார்பாகவும் மின் இணைப்புக் கட்டணத்தை உடனடியாக நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மின் வெட்டு. தமிழகத்திலே மின் வெட்டு இல்லை என்கிற ஒரு நிலையை உருவாக்குவதில் தமிழக அரசு முனைப்போடு செயல்படுகிறது என்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்



இந்த அவையிலே அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே மின் வெட்டு எப்பொழுது வரும் என்று யாருக்குமே தெரியாது. மின்சாரம் எப்போது வரும், அது எப்போது போகும் என்று தெரியாத ஒரு நிலை பல கிராமங்களிலே இருப்பதோடு மட்டுமல்லாமல், நகரங்களிலும் அப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. நேற்றைக்கு முந்தைய நாள், 17-11-1999 ஆம் தேதிகூட நம்முடைய அரசினர் தோட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி மற்றும் அதிகாரிகள் இருக்கக்கூடிய வீடுகளையெல்லாம் பார்த்தால், திடீரென்று 8½ மணிக்கு current off ஆகிவிட்டது. ஒரு மணி நேரம் மின்சாரம் வரவில்லை. தொலைபேசியிலே மின் துறையைச் சேர்ந்த அலுவலகங்களோடு தொடர்புகொள்ள முயன்றால், அவர்கள் அங்குள்ள தொலைபேசியின் Receiver-ஐயே வெளியே எடுத்து வைத்துவிடுகிறார்கள். அது சென்னையில் மட்டும் இருக்கக்கூடிய நிலை அல்ல. தமிழகத்தில் இருக்கக்கூடிய Junior Engineer அலுவலகங்களையோ அல்லது வேறு அலுவலகங்களையோ எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், மின்வெட்டு என்று வந்த உடனேயே, அவர்கள், யார், இவனுக்கெல்லாம் பதில் சொல்வது என்று பேசாமல் Receiver-I off செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை தவிர்க்கப்பட்டு, முழுமையாக, இந்த அறிவிக்கப்படாத மின் வெட்டு அடிக்கடி வந்து மக்களை வாட்டிக்கொண்டு இருப்பதிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மின் வெட்டே இல்லாத ஒரு மாநிலம் என்று நீங்கள் சொல்வதற்கு இணங்க, அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய பம்புசெட்டுகளுக்கெல்லாம் 1-4-1999 முதல் மின் விநியோகத்தை 10 மணி நேரமாக நீங்கள் குறைத்து இருக்கிறீர்கள். ஏற்கெனவே 16 மணி நேரம் கொடுத்து இருக்கிறீர்கள்; 24 மணி நேரம் கொடுத்தாலும்கூட, மின்சாரம் அடிக்கடி வந்து போகிற காரணத்தினாலே, விடுபட்டுப் போகிற காரணத்தினாலே, தங்களிடம் இருக்கக்கூடிய நிலங்களுக்கு முழுமையாக நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில் 10 மணி நேரம் மின் விநியோகம் என்பது அவர்களுக்குப் போதவில்லை. நீங்கள் மின்சார விநியோகம் என்பது உங்களுடைய கட்டுக்கோப்புக்குள் வந்து இருக்கிறது என்று கூறுகிறீர்கள். அப்படி இருக்கிறபோது, நீங்கள் பழையபடி 16 மணி நேரம் அந்த விவசாயிகளுக்கு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 7, 8 ஆண்டுகளாகத் தொடர்ந்து விவரங்களைத் தேடிப் பார்ப்பார்களேயானால், கோடை காலங்களிலே 10 மணி நேரமும், மழை பெய்தவுடன் அல்லது ஜூன் மாதத்திற்குப் பிறகு 14 மணி நேரமும் தொடர்ந்து விவசாயிகளுக்கு விவசாயத்திற்காக மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். புதிதாக இந்த அரசு எதையும் மாற்றவில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், கடந்த காலங்கள் என்பது வேறு; கடந்த காலங்களிலே முறைகேடுகள் நடந்து இருக்கின்றன; சரியான மின் விநியோகம் இல்லை என்கிற காரணத்தினாலேதான் உங்களுக்கு வாக்களித்து மக்கள் உங்களை ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் துறையின் மூலமாக நீங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாக பல திட்டங்களைத் தனியாருக்குக் கொடுத்து இருக்கிறீர்கள். இப்படி இவ்வளவு முனைப்போடு பலவகைகளிலே முயற்சி செய்தும்கூட, கடந்த காலத்தை ஒப்பிட்டு, கடந்த காலத்திலே 10 மணி நேரம்தான் கோடை காலத்திலே கொடுத்து இருக்கிறோம்; இப்போதும் நாங்கள் அப்படித்தான் கொடுப்போம் என்று சொல்வதைவிட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாரை ஊக்குவித்து, இப்போது மின்சாரத்தை நீங்கள் தயாரிப்பதற்கு அதிகமான அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், மின் உற்பத்தியை அந்த அளவிற்கு ஏன் நீங்கள் பெருக்கவில்லை? மின் உற்பத்தியைப் பெருக்கி நீங்கள் இதுபோன்ற இடர்பாடுகளைத் தவிர்த்திருக்கலாமே என்பதுதான் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய கருத்தாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை — 14 மணி நேரம் கொடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள்—பழையபடியே, விவசாயிகள் வயிற்றில் பாலை வார்ப்பதைப் போலச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அதைப்போல விநியோகக் நகர்ப்புறத்திலே 8-4-1999 முதல் நீங்கள் 1½ மணி நேரம் மின் வினியோகக் கட்டுப்பாடு என்ற ஒன்றைக் கொண்டு வந்து, சீரான மின் விநியோகம் இல்லாத காரணத்தினாலே



அப்படிப்பட்ட ஒரு நிலையைக் கொண்டு வந்ததாகச் சொல்கிறீர்கள். அதையும் நீங்கள் முழுமையாகத் தவிர்க்க வேண்டும். மின் வெட்டே இல்லாத ஒரு மாநிலம் என்று நீங்கள் இந்த அவையிலே பேசிக் கொண்டு—ஆளுநர் உரையின்போதே திடீரென்று இந்த அவையிலேயேகூட மின்சாரம் cut ஆனது உங்களுடைய நினைவிற்கு வரும்— அமைச்சர் எவ்வளவுதான் முனைப்போடு செயல்பட்டாலும்கூட, அந்தத் துறை, அமைச்சருடைய வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லையோ என்கிற ஒரு ஏக்கம் எனக்கிருக்கிறது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வெட்டு என்ற வார்த்தை, அதனுடைய பொருளைச் சரியான முறையில் உணர்ந்து, பேசப்படுவதில்லை, நான் உட்பட. அவ்வப்போது மின்சாரம் எதிர்பாராமல் நின்று போவதற்கும், மின்சார வெட்டு என்பதற்கும் வேறுபாடு உண்டு. 'இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும்தான் மின்சாரம் கிடைக்கும், இன்னின்ன நேரத்தில் மின்சாரம் கிடைக்காது', என்று அறிவித்துச் செய்வது மின்சார வெட்டு. இது மின்சாரத் தட்டு. (சிரிப்பு) மின்சாரத் தட்டு ஏற்படுகிறபோது, முதலமைச்சர் அறையாக இருந்தாலும் விளக்கு அணையத்தான் செய்யும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஓரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசிற்கு அவப்பெயர் வந்துவிடும் என்பதற்காக, அதிகாரபூர்வமாக மின் வெட்டு என்று அறிவிக்காமல், ஆனால் தொடர்ந்து பல்வேறு பகுதிகளிலே மின்சாரம் துண்டிக்கப்படுகிறது என்று சொன்னால், அதற்கு என்ன பெயர் என்று தெரியவில்லை. எனவே, அதையும் அமைச்சர் விளக்கினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, transformers-க்கெல்லாம் அரசியல் கட்சி நோக்கம் கிடையாது. (சிரிப்பு) வருகிற மின்சாரத்தினுடைய அழுத்தம் அதிகமாக இருக்கிறபோது ஆற்றல் அதிகமாக இருக்கிறபோது செயல்படுகிற அந்த transformer, அந்த மின் அழுத்தம் குறைகிறபோது சில நேரத்தில் செயல்பாடு இழக்கிறது. எதிர்பாராமல் செயல்பாட்டை இழக்கிற நிலைமையை மின்சாரத் துறையில் அவ்வளவு எளிதாக மாற்றி அமைத்திட முடியாது. அவ்வளவு highly technical apparatus இன்னும் வரவில்லை.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐயா, உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். உங்கள் கட்சியிலே ஒவ்வொருவராக எழுந்து point of order என்றால் விவாதம் நீண்டுகொண்டே போகும்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக்குச் சரியான தகவல் வர வேண்டும் என்ற கருத்தில்தான் நான் இதைக் கூற விரும்புகிறேன். Transformer-ல் பழுது ஏற்படுவது அல்ல. power generation-ல். Excess load trip. ஆகிறது என்று சொன்னால், அதனால் மின்சாரம் நின்று போனால் பரவாயில்லை. ஆனால் மின் தேவைக்குத் தகுந்த அளவிற்கு உற்பத்தியாகாமல், பகுதிவாரியாக இந்தந்தப் பகுதிகளில் காலை 6 மணி முதல் 9 மணி வரை வராது. இந்தப் பகுதியில் 10 மணி முதல் 2 மணி வரை வராது, இந்தப் பகுதியில் 2 மணி முதல் 6 மணி வரை வராது என்று பிரித்து அந்த வெட்டு அமல்படுத்தப்படுகின்றது. அதை வெட்டு, தட்டு என்று எந்தப் பெயரில் சொன்னாலும்கூட, whatever the name yoy may call, ass is an ass. மின்சாரம் நம்மிடம் போதுமான அளவிற்கு இல்லை. அதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, எங்கள் சார்பிலே அவர் சொல்லக்கூடியது, போதுமான அளவில் மின்சாரம் இல்லை, அதை உற்பத்தி செய்ய நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்பதுதான். ஆகவே மின் வெட்டு என்பது வேறு பெயரில் அமல்படுத்தப்படுகிறது என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இப்படி எல்லாம் மின் தட்டு அப்போதைக்கப்போது ஏற்படுத்தி, மக்களுக்கு இடையூறு செய்ய வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் செயல்படுத்துவது இல்லை. தேவை அதிகமாகி, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அதற்கான உற்பத்தியினுடைய தரம் மிக அதிக அளவிற்கு உயர்த்தப்படாத நிலையில், எப்படியும் சம பங்கீடு செய்து, எல்லோருக்கும் ஏதாவது ஒரு முறையில் நியாயமாக வழங்க வேண்டுமென்று வழங்குகிற முறையிலே, விநியோக முறையிலேதான் இந்தச் சிக்கலை ஓரளவிற்குத் தீர்க்க முடிகிறது. எனவே, ஒரு பகுதிக்கு இல்லை, ஒரு பகுதிக்குத்தான் என்று சொல்வதோ, கோடைகாலத்தில் அடியோடு மின்சாரத்தை ஒரு வட்டாரத்திற்கு இல்லாமல் செய்வதோ, ஒரு தொழிலுக்கு இல்லாமல் செய்வதோ



இயலாது. ஆகவே, இருப்பதை, maximum utility என்ற வகையில் முழு அளவில் பயன்படுத்த வழி செய்யப்படுகிறதா என்ற அந்தக் கண்ணோட்டத்திலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இதனைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சார வாரியம் தரக் குறைவான நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடிய காரணத்தாலே நம்முடைய வாரியத்திற்கு கிட்டத்தட்ட 318 கோடி ரூபாய் அளவிற்கு இப்பொழுது நட்டம் ஏற்படுகிறது. இதிலே தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கு, அதேபோல மேட்டூர், எண்ணூர், வடசென்னை ஆகிய அனல் மின்நிலையங்களுக்கு மேற்கு வங்கம், பீகார், ஒரிஸ்ஸா, Eastern Coal Fields Limited, Bharat Coking Coal Limited, Mahanadhi Coal Fields Limited என்கிற நிறுவனங்களிடமிருந்து நிலக்கரியை நீங்கள் வாங்குகிறீர்கள். அப்படி வாங்குகிறபோது தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கு வாங்கக்கூடிய நிலக்கரியில் 14-லிருந்து 23 சதவிகிதம் சாம்பல் சத்துள்ள நிலக்கரியாகவும், அதேபோல மேட்டூர் அனல் மின்நிலையத்திற்கு நீங்கள் வாங்குகிற நிலக்கரி (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு) ......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடமா? பேசி முடித்ததாகக் கருதிக் கொள்ளுங்கள். அடுத்து, திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துகளைக் கூற வாய்ப்புத் தந்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நீரின்றி அமையாது உலகு' என்று சொல்வதைப் போல, 'மின்சாரம் இன்றி அமையாது' என்ற நிலை இப்பொழுது இருக்கிறது. இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களிலேயே தமிழ்நாடு மின்சார வாரியம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. (குறுக்கீடு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்கள் நானே முடித்துக்கொள்கிறேன் என்று சொன்னார், (குறுக்கீடு) நான் 10 நிமிடங்கள் ஆகிவிட்டன என்று சொன்னேன். (குறுக்கீடு) இந்த மாதிரி அவர் இஷ்டத்திற்கு, அவர் நோக்கத்திற்குப் பேசுவதற்கெல்லாம் அனுமதி

[பேரவைத் துணைத் தலைவர்] [1999 நவம்பர் 19

கொடுக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் என்ன சொல்ல வந்தேன்? பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது என்று சொல்ல வந்தேன். ஏற்கெனவே இன்றைக்கு நிறைய அலுவல்களை எடுத்துக்கொண்டு, 12-30 மணியளவில் அமைச்சர் பேசவேண்டியிருந்தது. (குறுக்கீடு) அதனால் ஒரு நாள் extend பண்ண வேண்டியிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** Extend பண்ணியிருக்கிறோம். அதனால் இன்னும் 5 நிமிடங்கள் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரின் வேண்டுகோளை ஏற்று, பேச அனுமதி தரப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சிக்குக்கூட 10 நிமிடங்கள் என்று கொடுத்தால் எப்படி நாங்கள் subject பற்றி......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஒதுக்குவது நான் இல்லை. அலுவல் ஆய்வுக் குழுவில் தலைவர்கள் பேசித்தான் ஒதுக்குகிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பிரதான எதிர்க்கட்சியைக் குறைவுபடுத்துகிற நோக்கத்திலே செய்யப்படுகிற காரியமல்ல. ஆளும் கட்சியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் விரைவில் பேசி முடிக்க வேண்டுமென்ற வேகத்தில் அவர் சொல்லிவிட்டார். எதிர்க்கட்சித் தலைவரே சொல்கிற அடிப்படையில் இன்னும் 5 நிமிடங்களில் பேசி முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிச் சாம்பல் சத்துள்ள......

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேரவைத் தலைவர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் 5 நிமிடங்கள் கூடுதலாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கு விட்டால் உங்களைப் பேசவே விடமாட்டேன். ஆனாலும் பேசவிடுகிறேன். பேசுங்கள். (சிரிப்பு)



1999 நவம்பர் 19]

**திரு. சி. ஞானசேகரன்:** சாம்பல் சத்து அதிகமாக இருக்கக்கூடிய நிலக்கரியை வாங்குகிறபோது, அந்தத் துறையிடம் அதாவது எந்த கம்பெனியிடமிருந்து நீங்கள் வாங்குகிறீர்களோ, அந்த கம்பெனியிடமிருந்து நீங்கள் ஓரளவுக்கு ஏதாவது பணத்தைப் பெறுவதற்கு, அதாவது விலையைக் குறைத்து, இவ்வளவு நட்டம் ஏற்படுகிறதே என்று சொல்லிக் குறைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போதே 'தரக்குறைவான நிலக்கரியை இறக்குமதி செய்த காரணத்தால்' என்று சொன்னார். ஏனென்றால் நிலக்கரி இறக்குமதி செய்வதிலே கடந்த காலத்திலே ஒரு தவறு ஏற்பட்டது. நீதிமன்றத்திலே வழக்கும் இருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் நிலக்கரியை எந்த நாட்டிலே இருந்தும் நாம் இறக்குமதி செய்யவில்லை. மத்திய அரசினுடைய நிறுவனமான Coal India வழங்கக்கூடிய நிலக்கரியைத்தான் நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே தவறு இருக்கிறது, அதைப் போக்க வேண்டுமென்று நாங்களே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசிக் கொண்டு இருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் ஜெயங்கொண்டத்தில் இருக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி தொடங்குவது பற்றிப் பல ஆண்டுகளாக அறிவித்து வருகிறீர்கள். அந்த மின் உற்பத்தித் திட்டம் தொடங்குவது பற்றி ஏற்கெனவே அரசு உத்தரவு அளிக்கப்பட்டு இருந்தும்கூட, இன்னும் Power Purchase Agreement போடுவதிலே காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது ஏன் என்று எனக்கு இன்னும் புரியவில்லை. சுருக்கெழுத்தில் மட்டும் ஏதோ initial-ஆக அந்த P.P. Agreement மட்டும் வந்திருப்பதாகக் கூறுகிறீர்கள். Initial ஆக நீங்கள் போடக்கூடிய அந்த Agreement-ஐ ஏன் நீங்கள் conclude செய்யாமல் இருக்கிறீர்கள்? ஏன் அந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அவைக்கு அறிவிக்கவேண்டும். நீங்கள் ரிலையன்ஸ் கம்பெனிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அது எப்பொழுது வேலையைத் தொடங்கும்? எப்பொழுது மின்சாரம் அங்கிருந்து நமக்குக் கிடைக்கும் என்பதை விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேர்த்து, அதாவது ஏற்கெனவே அனுமதி பெற்று வைத்திருக்கக்கூடிய மூன்று குதிரைத் திறனுக்கும் கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஓர் ஆணையை இப்போது பிறப்பித்திருக்கிறார்கள். அப்படி ஆணை பிறப்பித்த காரணத்தால் பல விவசாயிகள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, நீங்கள் வேண்டுமானால் எத்தனை கூடுதல் குதிரைத் திறனை அவர்கள் கேட்கிறார்களோ அந்தச் சக்திக்கு மட்டும் கட்டணத்தைக் கேளுங்கள். ஏற்கெனவே அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிற மூன்று குதிரைத் திறன் சக்தியாக இருந்தாலும் சரி, ஐந்து குதிரைத் திறன் சக்தியாக இருந்தாலும் சரி, அதற்கு நீங்கள் கட்டணத்தைக் கேட்க வேண்டாம் என்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் இருக்கிற மாநிலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியம்தான் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. துறையினுடைய அமைச்சர் ஆலோசனையின் பேரிலும், அந்த வாரியத்தினுடைய தலைவருடைய விடாமுயற்சியின் காரணமாகவும் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று கேள்விப்படும்போது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

தேசிய அளவில் மின் இழப்பு 21 சதவிகிதம் என்று இருக்கும்போது தமிழ்நாட்டில் மட்டும் 16.9 விழுக்காடுதான் இருக்கிறது என்று நினைக்கும்போது, உண்மையிலேயே சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்றுதான் விளங்குகிறது.

*பிற்பகல் 1-15*

தாராளமயமாக்கப்பட்ட கொள்கையின்படி, தமிழ்நாட்டில் 2038 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 6 மின் உற்பத்தித் திட்டங்களைத் தனியாரிடம் அரசு ஒப்படைத்து இருக்கிறது என்று சொல்லும்போது, தனியாரும் அரசும் சேர்ந்து தமிழகத்தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதும் விளங்குகிறது.

மின் பகிர்மானத்தைப் பொறுத்த வரையில், ஒருசில கருத்துகளை மட்டும் காலத்தின் அருமை கருதி சுருக்கமாக நான் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக, கிராமங்களில் விவசாயப் பம்புசெட்டுகளுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கிற மதிப்பீட்டுத் தொகைக்கு, ரூ.10 ஆயிரம் கட்டினால் போதும் என்று இருக்கிறது. அதேசமயம், 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு உள்ளவற்றிற்கு



விட்டீர்கள் என்று சொன்னால், நாளைக்கு மின்வாரியமே அந்த இடத்தில் இருக்காது; பொது மக்கள் தலையில் நீங்கள் எவ்வளவு பளுவைச் சுமத்தப் போகிறீர்களோ என்ற ஓர் அச்சம் எங்களுக்கு அதிகமாக இருக்கிறது. காலித் கமிஷனுடைய அந்த அறிக்கையில்கூட, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேகூடச் சொல்லியிருக்கிறார்கள். "அந்த ஒப்பந்ததாரர்களை அதே அளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். இனி வரக்கூடிய அத்தனை recruitment-ஐயும் நீங்கள் employment exchange மூலம் செய்ய வேண்டும்" என்று அப்படிச் சொல்லி இருந்தும்கூட, உச்ச நீதிமன்றத்திற்கு விரோதமாக, இப்போது 40,000, 50,000 தொழிலாளிகளை வைத்துக்கொண்டு, அவர்கள் உள்ளே வரக் காத்திருக்கக்கூடிய ஒரு நிலை இன்று உருவாகியிருப்பதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இப்போதுகூட என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அரக்கோணத்திலே இருக்கக்கூடிய அனந்தநாயகி என்ற ஒரு பெண்மணியை இளநிலை உதவியாளர் பதவிக்கு நீங்கள் Interview-க்கு அழைத்து இருக்கிறீர்கள். அவர் Medical Check Up செய்து, அந்த அறிக்கையையும் பெற்றுவிட்டார். ஆனால், Contract Labourers எல்லாம் உள்ளே வந்ததன் காரணமாக யார் யாரையெல்லாம் நீங்கள் Interview-க்கு அழைத்தீர்களோ அவர்களை இளநிலை உதவியாளர் பதவியில் நியமிக்கவில்லை. அதேபோல, Assessor பதவிக்கு நியமிக்கவில்லை. Technical Assistant பதவி போடப்படவில்லை. எல்லாவற்றையும் அப்படியே நிறுத்திவிட்டு, Contract Labourers-ஆக வந்தவர்களை மட்டும், ஏதோ Internal Selection என்கிற பெயரிலே எடுத்து, இட ஒதுக்கீடு உட்பட எதிர்காலத்திலே வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருக்கக்கூடிய பெரிய பெரிய நல்ல படிப்பு படித்தவர்களெல்லாம் Skilled Labourers உள்ளே வரமுடியாமல், Un-skilled Labourers-ஐ வைத்துக்கொண்டே நீங்கள் மின்வாரியத்தை நடத்துவீர்களென்று சொன்னால், நிச்சயமாக இந்த மின்வாரியம் உருப்படாது. இது ஒரு பெரிய ஆபத்திலே கொண்டுபோய் நம்மை விட்டுவிடும் என்று நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே நீங்கள் யார் யாருக்கெல்லாம் Interview அனுப்பி இருக்கிறீர்களோ அவர்களுக்கெல்லாம் தயவுசெய்து நீங்கள் வேலை போட்டுக்கொடுங்கள். ஏனென்றால், அதை நம்பி எத்தனையோ பேர் கடன் பட்டு, எப்படி எப்படியோ செலவழித்து இருக்கிறார்கள். அதிலும், நான் அனந்தநாயகி என்று சொன்னதைப்போல, முதலமைச்சருடைய cell-க்கு அவர்கள் மனு எழுதிப்போட்டால், அதற்கு ஒரு பதில் வருகிறது. 'உங்களுக்கு Interview வரவில்லை. உங்களை நாங்கள் நேரிலே அழைக்கவில்லை. ஆகவே, உங்களுக்கு வேலை இல்லை, என்று துறை

எந்த அளவிற்கு இதில் மெத்தனமாக இருக்கிறது? ஏற்கெனவே Interview-க்கு வந்திருந்து, அவருக்குப் பணி நியமன உத்தரவு வழங்குவதற்கு, Medical Checkup-க்கு அழைத்து, அவருக்கு உடனடியாகப் பணி கொடுக்கப்படும் என்று சொன்னதற்குப் பிறகு, அவரை Interview-க்கு அழைக்கவில்லை என்று பதில் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்கிற காரணத்தினாலே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து இந்த Internal Selection முறையை ஒழிக்க வேண்டும். Internal Selection என்ற adjustment காரணமாக, Technical People, Skilled Labourers உள்ளே வர முடியாமல் போய் விடுகிறது. அப்படி Skilled Labourers உள்ளே வரமுடியவில்லை என்று சொன்னால், இன்னின்ன பணிகளை இன்னார்தான் செய்ய முடியும் என்ற நிலையெல்லாம் போய்விடும். இன்னொன்றுகூட, யாராவது ஒரு Junior Engineer என்பவரிடம் ஒருவர் பணி செய்ததாகக் கூறி என்னிடம் ஒரு சான்றிதழ் இருக்கிறது. அந்தச் சான்றிதழில் Junior Engineer, Electricity Board, Maduranthagam, எதையுமே பூர்த்தி செய்யாமல் ஒரு கையெழுத்தை மட்டும் போட்டிருக்கிறார். Contract Labourer ஆக யாரையாவது நான் உள்ளே நுழைக்க வேண்டுமென்று நினைத்தால், அந்தப் பெயரை நான் பூர்த்தி செய்து அப்படியே கொடுத்துவிட்டால் அவர் Contract Labourer ஆகிவிடுவார். பிறகு அவர் அந்த Internal selection adjustment வந்த பிறகு, அந்த internal selection-ல் அவர் உள்ளே வந்து, ஒரு skilled labourer ஆகக்கூட வந்துவிடுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. இப்படி.....

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரோ ஒரு Junior Engineer certificate கொடுத்துவிட்டால் உடனே அவருக்கு வேலை கொடுத்துவிடுவதில்லை. உயர் நீதிமன்றம் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதையெல்லாம் நாங்களாகச் செய்யவில்லை. இந்த அரசாங்கமே ஏதோ தானாகச் செய்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் எண்ணிக்கொள்ளக்கூடாது. உயர் நீதிமன்றம் என்ன உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்றால் 480 நாட்கள் அனல் மின் நிலையங்களில் தொடர்ந்து பணியாற்றி



இருப்பார்களேயானால் அவர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்தது. அந்த ஆணை பிறப்பித்த உடனே அதிகாரிகள், 11,000 பேர் கொண்ட பெயர்ப் பட்டியலை அரசுக்கு அனுப்பி இவர்கள் எல்லாம் 5 ஆண்டு காலத்திலே 480 நாட்கள் தொடர்ந்து பணியாற்றி இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகும் சில புகார்கள் அரசுக்கும் வந்தன, வாரியத்திற்கும் வந்தன. அதிலே இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருக்கின்றன, சிலபேர் தவறான ஆவணங்களை மின்சார இலாகாவிற்கு அனுப்பி நிரந்தரமாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள் என்ற புகார் வந்தவுடனேயே உடனடியாக ஒவ்வொரு அனல் மின் நிலையத்திலேயும் மூவர் குழு ஒன்று நியமிக்கப்பட்டு எல்லா Contract Labourers-என்போரிடம் ஆவணங்களையும், அதாவது அவர்கள் பணி செய்த இடம் இருக்கக்கூடிய பெயர்ப் பட்டியல், அதற்குப் பிறகுதான் அவர்கள் இவற்றை எல்லாம் பரிசீலனை செய்து அப்படி 11,000 பேரிலே இப்போது பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். என்றால் 7,500 பேர்தான் எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போன்ற வந்திருக்கிறார்கள். போலிச் சான்றிதழை யாராவது கொடுத்திருப்பார்களேயானால் அவர்கள் எல்லாம் select செய்யப்படவில்லை என்று அர்த்தம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை விரைவில் முடியுங்கள். நான் சொல்வதை என்றைக்கும் கேட்பதே கிடையாது. நான் இவ்வளவு நேரத்தில் முடிக்க வேண்டுமென்றால் அதற்குள் பேசி முடிக்க முடியாவிட்டால் நீங்கள் பெரிய பேச்சாளர் என்று கணக்கு இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** இரண்டு நிமிடத்தில் பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள். நான் இரண்டு நிமிடம் என்று சொல்லி மூன்று நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தத் துறை ஒரு புரியாத புதிராகப் போய்க் கொண்டிருக்கின்ற காரணத்தாலே நீங்கள் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும்

[திரு. சி. ஞானசேகரன்] [1999 நவம்பர் 19

கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டும் (என்பது போன்று என்கிற என்ற) - காரணம், அந்த 'alias name' அதாவது, ஞானசேகரன் என்கிற பெயரைப் போட்டு சில பேர் வயது வரம்பு கடந்தவர்கள் எத்தனையோ பேர் உள்ளே நுழைந்துவிட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்—இப்படிப்பட்டவர்களை எல்லாம் நீங்கள் களை எடுத்தீர்கள் என்று சொன்னால், Skilled Labourers கொஞ்சம் உள்ளே வந்தால் துறை உருப்படும் என்ற காரணத்தினாலேதான் நான் கூறுகின்றேன். இதிலே உங்கள் துறையேகூட ஒரு Order போட்டிருக்கிறது. ``Those Contract Labourers who are absorbed as regular helpers will not be considered for the other posts through internal selection before completion of a period of one year" என்றிருக்கிறது. ஆனால் இந்த Internal selection-ல் இப்போது பல குளறுபடிகள் நடந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அதையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே சாதாரண அரவைக்கு tariff 3-A என்பதை 3-B என்று நீங்கள் மாற்றிவிட்டிருக்கிற காரணத்தாலே, Khadhi Board-மூலமாக 3500 அல்லது 4000 ரூபாயிலே சிறு சிறு அரவை இயந்திரம் வாங்கி அரைத்துக் கொண்டிருக்கிற சிறிய அரவை மில்லை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்களுடைய பகுதியிலே மாதனூர், அதேபோல கே.வி. குப்பம் போன்ற ஒன்றியங்களை மட்டும் dark area என்றும், Grey area என்றும் நிர்ணயித்து அங்கே எந்தெந்த இடங்களுக்கு மின் இணைப்பே கொடுக்கக் கூடாது என்று அரசாங்கத்தின் பொதுப் பணித் துறை மற்றும் மின்சார வாரியம் இவை இரண்டும் சேர்ந்து differentiate செய்து கொடுக்காத காரணத்தால் இப்போது எங்களுடைய பகுதியிலே மின் இணைப்பையே பெறமுடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருப்பதையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை எல்லாம் அரசு தளர்த்தி மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு Subject 5 குதிரை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 5 குதிரைத் திறன், 10 குதிரைத் திறன் என்று என்ன இப்போது சொல்லப் போகிறீர்கள்? முக்கியமானது என்றால் முதலிலேயே பேச வேண்டும் (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மூன்று குதிரைத் திறனை ஐந்து குதிரைத் திறனாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், எல்லாவற்றிற்கும்



1999 நவம்பர் 19] [திரு. சி. ஞானசேகரன்]

சேர்த்து, அதாவது ஏற்கெனவே அனுமதி பெற்று வைத்திருக்கக்கூடிய மூன்று குதிரைத் திறனுக்கும் கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஓர் ஆணையை இப்போது பிறப்பித்திருக்கிறார்கள். அப்படி ஆணை பிறப்பித்த காரணத்தால் பல விவசாயிகள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, நீங்கள் வேண்டுமானால் எத்தனை கூடுதல் குதிரைத் திறனை அவர்கள் கேட்கிறார்களோ அந்தச் சக்திக்கு மட்டும் கட்டணத்தைக் கேளுங்கள். ஏற்கெனவே அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிற மூன்று குதிரைத் திறன் சக்தியாக இருந்தாலும் சரி, ஐந்து குதிரைத் திறன் சக்தியாக இருந்தாலும் சரி, அதற்கு நீங்கள் கட்டணத்தைக் கேட்க வேண்டாம் என்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் இருக்கிற மாநிலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியம்தான் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. துறையினுடைய அமைச்சர் ஆலோசனையின் பேரிலும், அந்த வாரியத்தினுடைய தலைவருடைய விடாமுயற்சியின் காரணமாகவும் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று கேள்விப்படும்போது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

தேசிய அளவில் மின் இழப்பு 21 சதவிகிதம் என்று இருக்கும்போது தமிழ்நாட்டில் மட்டும் 16.9 விழுக்காடுதான் இருக்கிறது என்று நினைக்கும்போது, உண்மையிலேயே சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்றுதான் விளங்குகிறது.

*பிற்பகல் 1-15*

தாராளமயமாக்கப்பட்ட கொள்கையின்படி, தமிழ்நாட்டில் 2038 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 6 மின் உற்பத்தித் திட்டங்களைத் தனியாரிடம் அரசு ஒப்படைத்து இருக்கிறது என்று சொல்லும்போது, தனியாரும் அரசும் சேர்ந்து தமிழகத்தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதும் விளங்குகிறது.

மின் பகிர்மானத்தைப் பொறுத்த வரையில், ஒருசில கருத்துகளை மட்டும் காலத்தின் அருமை கருதி சுருக்கமாக நான் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக, கிராமங்களில் விவசாயப் பம்புசெட்டுகளுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கிற மதிப்பீட்டுத் தொகைக்கு, ரூ.10 ஆயிரம் கட்டினால் போதும் என்று இருக்கிறது. அதேசமயம், 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு உள்ளவற்றிற்கு

முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகள் வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். சாதாரணமாக, ஒரு விவசாயி ஒரு பம்புசெட்டு போட வேண்டுமென்றால், 15 ஆயிரம் ரூபாய் ஆகிறது; இது 25 ஆயிரம் ரூபாய்; ஆக, 40 ஆயிரம் ரூபாய், அதுவும் கிராமத்திலே வாழ்கிற ஒரு விவசாயி, கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலே இறந்து கொண்டிருக்கிற அந்த விவசாயினால், 40 ஆயிரம் ரூபாய் நிச்சயமாக ஈடுசெய்ய முடியாது. அதனால், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் இதிலே மிகுந்த கவனம் செலுத்தி 25 ஆயிரம் ரூபாயை, 4 தவணைகளாக விவசாயிகள் கட்டுவதற்கு உத்தரவு அளித்தால், கிராமத்திலே இருக்கிற விவசாயிகளைக் கைதூக்கிவிடுவதற்குச் சமமாகுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளிலே இருக்கின்ற தெரு விளக்குகள். தெரு விளக்குகள் என்று பார்க்கும்போது, 1998-99 ஆம் ஆண்டு 61,255 தெரு விளக்குகள் கொடுக்கப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு 1999-2000 ஆண்டு 50 ஆயிரமாக அது குறைக்கப்பட்டது. அதுவும் 30-9-1999 வரை, 40,335 தெரு விளக்குகள் மட்டும்தான் அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன. மீதி தெரு விளக்குகளையும் உடனடியாகத் தந்தால்தான், கிராமங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் போகும்போது, 'எங்களுக்கு அந்தப் பகுதியிலே தெரு விளக்கு வேண்டும்; இந்தப் பகுதியிலே தெரு விளக்கு வேண்டும்' என்று கேட்கிற அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அதற்கு இத்துறையினுடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் நாங்கள் சந்திக்கின்ற இன்னொரு குறை, ஜீவன்தாரா கிணறுகள் பற்றியது. ஜீவன்தாரா கிணறுகள் என்று சொல்லும்போது, ஆதிதிராவிட மக்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும், மின் இணைப்பு தரப்படுகின்றன. அதேபோல், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அதே அளவில் ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்பு தர இந்த அரசு முன்வர வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு மின் அழுத்தம் பல கிராமங்களில் சரியாக இல்லை. அதனால்தான், இத்துறையினுடைய அமைச்சர் அவர்களை அடிக்கடி சந்தித்து, பல கிராமங்களுக்குத் துணை மின் நிலையங்கள் வேண்டுமென்று நாங்கள் கோரி வருகிறோம். குறிப்பாக, ஜவ்வாது மலைப் பகுதியில் கலசப்பாக்கம்



தொகுதி, போளூர் தொகுதி, பக்கத்திலே இருக்கிற செங்கம் தொகுதி ஆகியவற்றிலே இருக்கின்ற அந்தத் தொகுதி வாழ் மக்களுக்கெல்லாம் பல இடங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு மேநிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கூட இயக்க முடிவதில்லை. காரணம், அங்கு மின் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதுகுறித்து துறையினுடைய அமைச்சர் அவர்களிடத்தில் நாங்கள் குறைகளாகச் சொல்லியிருக்கிறோம்.

ஜமுனாமருதூரில், மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டிற்காக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதேசமயம், போளூருக்குப் பக்கத்திலே வில்வாரணி என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரிலும் ஒரு துணை மின் நிலையம் அமைத்தால் போளூர் பகுதிக்கு வருகின்ற மின் அழுத்தம் சரியாக இருக்கும். ஆகவே, அதையும் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல், திருவண்ணாமலை மாவட்டத்தில் பல இடங்களில், சேவூர், புரசை, ஆனைபோகி, சோமாஸ்பாடி, பெருங்களத்தூர், புதுப்பாளையம், பரமனேந்தல், ராவந்தவாடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் துணை மின் நிலையங்கள் வேண்டுமென்று மக்கள் கோரி வருகிறார்கள். அவற்றை அந்த இடங்களில் உடனடியாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பெரிய குறையை நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்கள் வீடுகளில் fuse போய்விட்டது என்றால், அதைக் கவனிப்பதற்கு Helpers அந்த ஊரிலே தங்குவதில்லை. வெளியூரிலிருந்து 5 மைல், 10 மைல் தொலைவில் சென்று அவர்களை அழைத்து வருவது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. அந்தந்த ஊரிலுள்ள Helpers அந்தந்த ஊரிலேயே தங்குவதற்கு உத்தரவளித்து, அவர்களை மேலதிகாரிகள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

சென்னையைப் பொறுத்தவரையில், ஒரு சில குறைகள் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும், Over-head lines செல்கின்றன. அதனால், அவை மரங்களின் மேலே படுகின்றன.

மரத்தின் மேல் பட்டவுடன் மின்சாரம் தடைபடுகின்றது. இந்த நிலையை மாற்றி Under Ground-ல் போடுவதற்கு, அந்தத் துறை ஏற்பாடு செய்தால் சென்னையைப் பொறுத்தவரையில் மிக நல்ல முறையில் இருக்கும். அதே சமயத்தில் மகாராஷ்டிராவில் இருப்பதைப் போல fuse call attend பண்ணுவதற்கு Computerised system வேண்டும். ஏதாவது ஒரு வீட்டில் fuse போய்விட்டது என்றால், அவர்கள் தொலைபேசியில் சொன்னால் அதனைக் கணினியில் பதிவு செய்து அது உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டதா, இல்லையா என்பதை மேல் அதிகாரிகள் கவனிப்பதற்கு ஏற்ற முறையில் ஆவன செய்ய வேண்டும் அப்படிக் கவனித்து செய்தால் நிச்சயமாக இங்கே சென்னையிலிருக்கின்ற குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்யலாம்.

கிராமத்தைப் பொறுத்தவரையில் இன்னும் பல எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அதையும் இந்த அரசு, கலைஞருடைய அரசு நிச்சயமாகச் செய்யும் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், வருங்காலத்திலே தமிழகத்திலே அமையப் போகின்ற ஆட்சி புரட்சித் தலைவி ஆட்சிதான் என்பதற்குக் கட்டியம் கூறும் வகையிலும், அதை உறுதிப்படுத்துகின்ற வண்ணமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட்ட என்னை, நத்தம் தொகுதியிலேயிருந்து எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த எனது நத்தம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதலிலே எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு மின்வாரியத்தின் 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இரண்டு நாட்களுக்கு முன்பு, நான் தங்கியிருந்த விடுதியிலே கொடுத்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் படிப்பதற்காக முதல் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தேன். அதிலே, நமது மாநிலத்தில் மின்வெட்டு இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறோம் என்ற அந்த வரியைப் படித்துக்கொண்டிருந்தபோதே மின்வெட்டு வந்துவிட்டது. அந்த வரியைப் படித்துக்கொண்டிருக்கும்போதே Hostel-லேயே அங்கே மின்தடை





மாண்புமிகு அமைச்சர் அவர்கள். சொன்னது போல, அது மின்வெட்டோ அல்லது மின்தடையோ என்றாலும்கூட, இந்த மின்தடையே, அடிக்கடி ஏற்படுவதே அறிவிக்கப்படாத மின்வெட்டு இருப்பதால்தான், அடிக்கடி அறிவிக்கப்படாமல் மின்தடை ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற சில செய்திகள் எல்லாம் நடைமுறையிலே உண்மைக்கு மாறாக இருக்கின்றன என்பதை உங்களுக்குப் பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே மின்சாரத்தைத் தொட்டால்தான் shock அடிக்கும். ஆனால், உங்கள் அறிக்கையையும், கட்டணத்தையும் பார்த்தாலே shock அடிக்கின்ற வண்ணம் நீங்கள் அறிக்கையிலே பல தவறான செய்திகளை, நடைமுறைக்குப் புறம்பான செய்திகளைக் கொடுத்திருக்கின்றீர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதோடு மட்டுமல்ல, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஜீவன்தாரா கிணறுகளுக்கு ஆதிதிராவிடர் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே முன்னுரிமை கொடுத்திருக்கிறோம் என்ற அடிப்படையிலே 400-க்கு மேற்பட்டவர்களுக்கு கொடுத்திருப்பதாகப் புள்ளிவிவரங்களில் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, ஜீவன்தாரா கிணறு வெட்டிய விவசாயிகளுக்கு, பிற்படுத்தப்பட்ட விவசாயிகள் ஒருவருக்குக்கூட இன்னும் அந்த விவசாயத்திற்கு மின் இணைப்புக் கிடைக்கவில்லையென்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகாரிகளிடம் சென்று கேட்டால், அப்படிப்பட்ட ஒரு திட்டமே அரசாங்கத்திடம் இல்லையென்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட உத்தரவு எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கின்றார்கள். ஜீவன்தாராவிலே ஆதிதிராவிட மக்கள் மட்டும்தான் பயனடைய முடியுமே தவிர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மின் இணைப்பு கொடுப்பதற்கு எந்த விதிமுறையும் அனுமதியும் அரசாங்கத்திலிருந்து கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நீங்கள் நிதிநிலை அறிக்கையிலே 162 பயனாளிகளுக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படியென்றால், மாவட்டத்திற்கு மாவட்டம் இந்த உத்தரவு வேறுபடுகிறதா? மாநிலம் முழுவதும் ஒரே உத்தரவு அமலில்

இருக்கும்போது ஒரு மாவட்டத்திலே மட்டும் அப்படி உத்தரவு இல்லையென்று சொல்கிறார்களே என்று இதையெல்லாம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-25*

அதோடு மட்டுமல்ல, இங்கு இருக்கின்ற வீட்டு மின் இணைப்பு மற்றும் தொழில் துறைக்காக இருந்தாலும் சரி, சிறு வணிகர்களுக்காக இருந்தாலும் சரி, புதிய மின் இணைப்புக் கேட்கும்போது, இங்கிருக்கின்ற நமது சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதுபோல, பல மடங்கு புதிய மின் இணைப்பிற்குக் கட்டணத்தை ஏற்றுவதற்குப் பதிலாக மிக நாசூக்காக மக்கள் தலையிலே அந்தச் சுமையை ஏற்றியிருக்கிறார்கள். அதாவது, பல மடங்கு, 50 சதவிகிதம் என்றுகூட சொன்னார்கள். சில இடங்களிலே 50 சதவிகிதத்திற்கு மேலாகவும், புதிய மின் இணைப்புக்கு கட்டணத்தைக் கூட்டியிருக்கிறீர்கள். அதையெல்லாம், பரிவோடுப் பரிசீலனை செய்து அந்தக் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்று எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இங்கிருக்கின்ற நமது மின் துறையைப் பொறுத்தளவிலே ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தொழிலாளர்களைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அந்த நேரத்திலே அவையிலே இல்லை என்றாலும்கூட, பத்திரிகை வாயிலாக அறிந்த வகையிலே 25-11-1998 அன்று இங்கு I.T.I. படித்த மாணவ இளைஞர்களுக்கு, மின்சார வாரியத்திலே 5,000 பேருக்கு வேலை அளிக்கப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவித்திருப்பதாக நான் செய்தித்தாளிலே படித்திருக்கின்றேன். ஆனால், இன்றுவரை அவர்களில் ஒருவருக்குக்கூட, I.T.I. படித்த மாணவர்களுக்கு வேலை அளிக்கப்படவில்லை. அந்த உத்தரவாதத்தை, சட்டசபையிலே சொன்ன அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, ஏற்கெனவே ஒப்பந்தத் தொழிலாளர்கள் 13,000-11,000 பேருக்கு வேலை நிரந்தரம் செய்துவிட்டு, மீதி 2,000 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. நட்டாற்றிலே விட்டது போல இன்று அவர்கள் பாதிப்பு அடைந்திருக்கிறார்கள். அவர்கள்கூட எங்களிடம் வந்து முறையிட்டிருக்கிறார்கள்.



நீதிமன்றத்திற்கெல்லாம் சென்றிருந்தாலும்கூட, அரசு அவர்கள் மீது கருணை காட்டி, அந்த விட்டுப்போன 2,000 தொழிலாளர்களுக்கும் மின் துறையிலே வேலையைக் கொடுத்து உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு 4 மாவட்டங்களைப் புதியதாகப் பிரித்திருக்கிறார்கள். திருவள்ளூர், நாமக்கல், பெரம்பலூர், திருவாரூர் மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள். ஆனால், வருவாய்த் துறையிலே பிரித்ததைப்போல, மின் துறையிலே நிர்வாக வசதிக்காகவும் அந்த மாவட்டங்களில் மேற்பார்வைப் பொறியாளர் Superintending Engineer என்ற அளவிலே அந்த மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தை அந்த மாவட்டங்களுக்கும் புதியதாக உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, மின் துறையைப் பற்றி இங்கே பேசுகின்ற இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியைப் பற்றியும் ஒரு சில வேண்டுகோள்களை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடத்தில் வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், இந்த அவையிலே மற்றவர்கள் எல்லாம் நீண்ட நாட்கள், 3 ஆண்டு காலமாக உறுப்பினராக இருந்ததன் காரணமாக அவர்கள் எல்லாம் பல்வேறு வாய்ப்பினைப் பெற்றிருப்பார்கள். அவர்களுக்குத் தங்களுடைய தொகுதியைப் பற்றிச் சொல்வதற்குரிய நிறைய வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆனால், எனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், இந்த மின் துறை பட்ஜெட்டில் உரையாற்றும்போது, என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளைப் பற்றிச் சொல்வதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சிலே தலையிடக்கூடாது. நீங்கள் ஏற்கெனவே இருக்கின்ற உறுப்பினர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றக்கூடாது. உங்கள் தொகுதிப் பிரச்சினை முக்கியம் என்றால், அதை முதலிலே பேசிவிட்டு, பிறகு பொதுப் பிரச்சினைக்கு வாருங்கள். தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவிலே கடந்த 30 ஆண்டு காலமாக மற்ற தொகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வளர்ச்சிப் பணியிலே மிக, மிகப் பின்தங்கிய நிலையிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே அரசுக்கு அன்போடு தெரிவித்து, குறிப்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்த

[திரு. இரா. விசுவநாதன்] [1999 நவம்பர் 19

அளவிலே என்னுடைய தொகுதியிலே 400-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருந்தாலும்கூட, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும்கூட இன்னும் 200-க்கும் மேற்பட்ட கிராமங்களிலே அடிப்படை வசதியான பாதுகாக்கப்பட்ட சுகாதாரமான நீர் கிடைக்கவில்லை என்ற நிலையிருக்கிறது. ஆகவே, குடிநீர்த் தட்டுப்பாடு 200-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருக்கின்ற காரணத்தினால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, என்னுடைய தொகுதிக்குச் சிறப்பு நிதியொதுக்கிக் கொடுத்து, கூடுதல் கிராமங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** அதற்கு அடுத்தபடியாக, பொதுப் பணித் துறை மூலமாக நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற சிறிய நீர்ப்பாசன விவசாயிகள் பலன் அடைகின்ற வண்ணம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமல்படுத்த வேண்டிய இயற்கையான சூழ்நிலைகள் என்னுடைய தொகுதியில் நிறைய இருக்கின்றன. கரந்தமலை, சிறுமலை போன்ற மலைப் பிரதேசங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே கண்ணைக் கவருகின்ற இயற்கையான அருவிகள், ஓடைகள், ஆறுகள் போன்ற பல்வேறு வசதிகள் இருந்தாலும், அந்த நீரெல்லாம் வீணாகிக் கொண்டிருக்கின்றது. அதையெல்லாம் தடுத்து, சிறு விவசாயிகள் பலன் அடைகின்ற வண்ணம் அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு ஏராளமான இடங்கள் இருக்கின்றன. நேரத்தின் அருமை காரணமாக அந்த ஊர்களையெல்லாம் சொல்ல முடியவில்லை.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. திரு. இரா. விசுவநாதன், பேசி முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** இருந்தாலும்கூட, பொதுப்பணித் துறையின் மூலமாக அவற்றை ஆய்வு செய்து......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ஊர்களை எல்லாம் ஒரு பட்டியலாக எழுதி, பொதுப்பணித் துறை அமைச்சரிடம் மனு கொடுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** சரி. பட்டியல் போட்டு பொதுப்பணித் துறை அமைச்சரிடம் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு நன்றி. இன்னும் ஓரிரு நிமிடங்கள் மட்டும் பேச அனுமதி கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1999 நவம்பர் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மணி 1-30 ஆகிவிட்டது. நான் ஏற்கெனவே உங்களுக்கு 10 நிமிடங்கள் கொடுத்து விட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** கன்னிப்பேச்சு என்பதால் இரண்டு நிமிடங்கள் பேச அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப்பேச்சு என்பதால் அதிகம் பேசக்கூடாது. கன்னிப் பேச்சில்தான் ஒழுங்காகப் பேச வேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர்களை ஆறு நிமிடங்களில் உட்காரச் சொன்னேன். உங்களுக்கு 10 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். நீங்கள் இந்தப் பழக்கத்தை உண்டாக்காதீர்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** அடுத்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரிடம் இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகின்றேன். நத்தம் தொகுதி தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டு, 20 ஆண்டு காலத்திற்கு மேலாக தனி வட்டமாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால், அங்கு இன்னும் எந்த ஒரு நீதிமன்றமும் அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மாவட்ட முன்சிப் கோர்ட்டாவது, குறைந்தபட்சம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, எங்கள் பகுதியிலே உயர் கல்விக்கு வாய்ப்பே இல்லை. உயர் கல்வி படிக்க வேண்டுமென்று சொன்னால், திண்டுக்கல்லுக்கும், மதுரைக்கும் மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பின்பு எங்களுடைய மாவட்டத்திலே, நிலக்கோட்டையிலே ஒரு மகளிர் கல்லூரி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் எங்களுக்கும், நத்தம் தொகுதியிலுள்ள மக்கள் பலன் அடைகின்ற வண்ணம், மிகவும் ஏழ்மையான மக்கள் வசிக்கின்ற அந்த நத்தம் தொகுதி மக்கள் பலன் அடைகின்ற வண்ணம் அரசுத் துறையின் சார்பாக ஒரு புதிய கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1999 நவம்பர் 19

## 1. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஆ) பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் மற்றும் பதிலுரை 22-11-1999 திங்கட்கிழமை அன்றும் தொடரும். 22-11-1999 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த 1999-2000 ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு 23-11-1999 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும். 24-11-1999 புதன்கிழமை அன்று நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு விவாதமின்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஏனைய அரசினர் சட்டமுன்வடிவுகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-11-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

72. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 9-3-1999 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

73. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலீஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 1-4-1999 ஆம் நாளிட்ட 81 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



1999 நவம்பர் 19]

74. இம்மாநிலத்திலுள்ள பதின்மூன்று தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களில் மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்து அடிச்சட்டங்கள்மீது 334 பேருந்து மேற்கூடுகள் கட்டப்படுவது தொடர்பான பணி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 15-7-1999 ஆம் நாளிட்ட 163 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் [1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

75. மின்சாரத்தின் உதவியின்றி தயாரிக்கப்படும் தகரக் கொள்கலன்களின் விற்பனைமீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், வரி வீதத்தை எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 29-7-1999 ஆம் நாளிட்ட 178 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

76. 1997-98 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).]

77. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. (தமிழ்நாடு சாராவி கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை உள்ளிட்டது) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்.]

78. 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).]

79. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி - அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. 1999-2000 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்.)

18. 1999-2000 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்.)

19. 1999-2000 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்.)

20. மனுக்கள் குழுவின் இருபதாவது அறிக்கை, 1999-2000.

21. மனுக்கள் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை, 1999-2000.

22. மனுக்கள் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை, 1999-2000.

23. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை.)

24. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை.)

25. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை.)

26. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 100 வரை.)

2, 21, 204
D V211,31 N 99
NGG. 85.1

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.